
உதயன்
சுடர் 30 கதிர் 214 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 13,ஞாயிற்றுக்கிழமை 28.06.2015

## ஜுலை 3 -14 தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பம்

கொழும்பு, ஜுன் 28
நாடாளுமன்றத் தேர்தலில் தபால் மூல வாக்காளர்களின் விண்ணப்பங்கள் ஜுலை 3 முதல் ஜுலை 14 வரை ஏற்றுக்கொள்ளப்படும் என தேர்தல்கள் பக்.25

# ஓரணியில் திரண்டு உரிமை வெல்வோம்

## திருமலையில் நேற்று சம்பந்தன் அறைகூவல்



திருமலை, ஜுன் 28
தமிழர் பிரச்சினை இன்று ஐ.நாவில் ஒலித்துக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் நாடாளுமன்றத் தேர்தலை எதிர் கொண்டுள்ளோம். எனவே, தமிழர் உரிமைகளை வென்றெடுக்க - தமிழர் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க நாம் இந்தத் தேர்தலில் ஓரணியில் திரளவேண்டும். இதன்மூலம் தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் நாம் வரலாறு காணாத சாதனையைப் படைக்க வேண்டும்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.
திருகோணமலையில் நேற்று நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-
தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசாலும் அதன் படைகளினாலும் இழைக்கப்பட்ட கொடூரங்கள் மனித உரிமை மீறல்களாக -போர்க்குற்றங்களாக இன்று சர்வதேச அரங்கில் - ஐக்கிய நாடுகள் சபையில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசுக்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. பக்.25

## பொதுத் தேர்தலுக்கு ரூபா 4000 மில்லியன்

### ஒதுக்கீடு என்கிறார் ஆணையாளர்



கொழும்பு, ஜுன் 28
நடைபெறவுள்ள எட்டாவது நாடாளுமன்றத் தேர்தலுக்கு 4 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார். ஒவ்வொரு மாவட்டத்திலும் பக்.25

## இரு கட்டங்களாக உயர்தரப் பரீட்சை

### பொதுத் தேர்தலால் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜுன் 28
நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளதனால் ஜீ.சீ.ஈ உயர்தரப் பரீட்சை இம்முறை இரு கட்டங்களாக நடத்தப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.
உயர்தரப் பரீட்சைக்கான கால அட்டவணையை பரீட்சைகள் திணைக்களம் முன்னரே தயாரித்திருந்தது. நாடாளுமன்றம் நேற்று முன்தினம் பக்.25

## 32 வருடங்களின் பின்னர் சிறை மீண்ட குடும்பஸ்தர்

யாழ்ப்பாணம், ஜுன் 28
வெளிநாட்டுக்குச் சென்றிருந்த நிலையில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்த குடும்பஸ்தரை 32 வருடங்களின் பின்னர் அவரது பிள்ளைகள் இனங்கண்டு நேற்றுமுன்தினம் சிறையிலிருந்து மீட்டு வந்துள்ளனர்.
வெளிநாட்டில் இருக்கும்போதே அவருக்கும் குடும்பத்தினருக்கும் இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டதனால் பக்.25

## 7 லட்சத்து 82 ஆயிரம் பேர் வடக்கில் வாக்களிக்கத் தகுதி

யாழ்ப்பாணம், ஜுன் 28
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் போது வடக்கு மாகாணத்தில் 7 லட்சத்து 82 ஆயிரம் பேர் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர் என்று தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 5 லட்சத்து 29 ஆயிரம் பேரும், வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 2 லட்சத்து 53 ஆயிரம் பேரும் வாக்களிக்கவுள்ளனர்.
8ஆவது நாடாளுமன்றத்துக்காக தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் 17 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதற்கு தற்போது நடைமுறையிலுள்ள 2014 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியலே பயன்படுத்தப்படவுள்ளது.
2014 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியலின் பிரகாரம், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 5 லட்சத்து 29 ஆயிரத்து பக்.25

## இன்புளுவன்சா தொற்று யாழில் 100 பேருக்கு மேல்

யாழ்ப்பாணம், ஜுன் 28
'இன்புளுவன்சா' எச் 1 என்1 வைரஸினால் யாழ். குடாநாட்டில் இதுவரை 100 இற்கும் மேற்பட்டோர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
கடந்த ஏப்ரல் தொடக்கம் இந்த வைரஸ் தொற்று இருந்தபோதும் கடந்த சில வாரங்களாகவே 'இன்புளுவன்சா'வின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது. அதனால் மன்னாரைச் சேர்ந்த பெண் ஒருவர் குழந்தை பிரசவித்த பின்னர் உயிரிழந்துள்ளார். குழந்தை காப்பாற்றப்பட்டிருந்ததாகவும் பக்.25

## வன்முறையில் ஈடுபடுபவர்கள் கைதாவார்கள்

கொழும்பு, ஜுன் 28
நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் வன்முறையில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்படுவார்கள் எனவும், அவர்களுக்கு 3 வருட கால சிறைத் தண்டனை வழங்கப்படும் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய தெரிவித்தார்.
அதேவேளை, எதிர்வரும் ஜுலை மாதம் 6 ஆம் திகதியில் பக்.25

## தண்ணீரில் கலந்த ஒயிலை அகற்ற பொறிமுறை தயார்

### 2 மாதத்தில் பயன்பாட்டுக்கு வரும்

யாழ்ப்பாணம், ஜுன் 28
சுன்னாகம் உள்ளிட்ட பல பகுதிகளிலும் நிலத்தடி நீருடன் கலந்துள்ள ஒயில், கிரீஸ் என்பனவற்றை அகற்றுவதற்கான உயிரியல் மண் வடிகட்டி ஒன்றைத் தயாரித்துள்ளதாக யாழ். மருத்துவர் சங்கம் மற்றும் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் ஆகியன தெரிவித்துள்ளன.
அதனைப் பயன்பாட்டுக்கு விடுவதற்கான சில ஆராய்வுகளை மேற்கொள்ளவுள்ளதாகவும், 2 மாதங்களில் அந்த வடிகட்டியைப் பயன்படுத்துவதற்கு அது ஒயில், கிரீஸ் என்பனவற்றை அகற்றுகிறது என்ற உத்தரவாதத்தை வழங்குவதாகவும் நேற்றைய பக்.25

## மஹிந்த,கோத்தா,பஸில் மீது ஐ.நா. போர்க் குற்றச்சாட்டு

### மனித உரிமை அறிக்கை ஓகஸ்ட் 21 இல் மைத்திரிக்கு



கொழும்பு, ஜுன் 28
இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக அறிக்கை ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்படும் என்றும், குறித்த அறிக்கையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அவரது சகோதரர்களான பக்.25




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நாடாளுமன்று கலைப்பால் இரண்டு பிரேரணைகள் அவுட்

கொழும்பு, ஜுன் 28
நாடாளுமன்றம் நேற்று முன்தினம் நள்ளிரவு கலைக்கப்பட்டதனைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டிருந்த முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் தொடர்பான விசாரணை அறிக்கை என்பன இரத்தாகியுள்ளன.
இதேவேளை, நாடாளுமன்றப் பதவிகளான சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித் தலைவர், சபை முதல்வர், எதிர்க் கட்சித் தலைவர், ஆளுங்கட்சி – எதிர்க்கட்சி அமைப்பாளர்கள் பதவிகளும் இரத்தாகியுள்ளன என்று நாடாளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம் நீல் இத்தவெல தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:–
அரசமைப்பில் ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களின் பிரகாரம் நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர், நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சகல சட்டமூலங்கள், பிரேரணைகள் மற்றும் வினாக்கள் இரத்தாகும்.
இதன் பிரகாரம், 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆரம்பமான ஏழாவது நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் முடிவுக்கு வந்துள்ளதுடன், நாடாளுமன்றப் பதவிகளான சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித் தலைவர், சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், ஆளுங்கட்சி – எதிர்க் கட்சி அமைப்பாளர்கள் என்பன இரத்தாகியுள்ளன. அத்துடன் நாடாளுமன்ற செயற்குழுக்கள், உப குழுக்கள் ஆகியனவும் செயலிழந்துள்ளன.
ஆயினும், தற்போதுள்ள அமைச்சரவை அவ்வாறே நடைமுறையில் உள்ளதுடன், இடைக்கால அரசின் கீழ் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது–என்றார். (த)

## சிவத் தமிழ்ச் செல்வியின் குருபூசை வைபவம் இன்று

அளவெட்டி, ஜுன் 28
அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 7ஆவது ஆண்டு குருபூசை வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.
காலை 9மணிக்கு ஆலயத்தில் விசேட பூசைகள் இடம்பெற்று நினைவாலயத்தில் அன்னையின் உருவச் சிலை வழிபாடு இடம்பெறும். தொடர்ந்து காலை 9.30 மணியளவில் துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் விசேட பூசைகள் வாழிபாட்டுடன் திருமுறை மடத்தில் திருமுறை பாராயணம் இடம்பெறும். தொடர்ந்து 9.45 மணிக்கு திருமதி யசோதா ஸ்ரீகுமரனின் பண்ணிசை அரங்கமும், சிவஸ்ரீ. வா.அகிலேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ.இ.சுந்தரேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞான சம்பந்தபரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோரின் பிரார்த்தனை உரைகளும் இடம்பெறும்.
தொடர்ந்து 10.30 மணிக்கு மூத்த சிவாச்சாரியர்களான சிவஸ்ரீ தா. மகாதேவாக் குருக்கள் (அதிபர் குருகுலம் இணுவில்), சிவஸ்ரீ சு.நடராஜக் குருக்கள் (பிரதம குரு சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் தேவஸ்தானம்) ஆகியோர் விருது வழங்கி கௌரவிக்கப்படுவர். 11 மணிக்கு திருமுறை வெளியீடு இடம்பெறும்.
(த–36)

## விபத்தில் 11 பேர் காயம்

பொத்துவில், ஜுன் 28
டிப்பர் வாகனம் விபத்துக்குள்ளானதில் அதில் இருந்த 11 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.
இந்த சம்பவம் நேற்றுப் பொத்துவில் பெரிய உல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.
விபத்துக்குள்ளான 11 பேரும் பொத்துவில் மற்றும் அம்பாறை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.
கதிர்காமத்துக்கு யாத்திரைக்காக டிப்பர் வாகனத்தில் சென்றவர்களே இவ்வாறு விபத்தில் சிக்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
(த)

## வீட்டுக் கடன் வழங்கல் நேற்று யாழ்ப்பாணத்தில்



யாழ்ப்பாணம், ஜுன் 28
தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வீட்டுக்கடன் திட்டக் கொடுப்பனவுக் காசோலைகள் நேற்று சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டது.
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் ரவீந்திரன் தலைமையில் தேசிய வீடமைப்பு அதிகார சபை மண்டபத்தில் இது நடைபெற்றது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மகளிர் விவகார முன்னாள் பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கலந்துகொண்டு பயனாளிகளுக்கான காசோலைகளை வழங்கினார்.
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால், வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, மானிய அடிப்படையிலான குறைந்த வட்டி வீதத்தில் வீட்டுக் கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.
இதனடிப்படையில், யாழ். மாவட்டத்தில் உள்ள 10 தொகுதிக்கும் 3000 வீடுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதில் முதற்கட்டமாக நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 125 பேருக்கு வீடு கட்டுவதற்கான வீட்டுக்கடன் உதவிகள் வழங்கி வைக்கப்பட்டது.
அதேநேரம், 50 பேருக்குக் காணி உறுதிப்பத்திரம் வழங்கி வைக்கப்பட்டது. 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீட்டுக்கடன் திட்டத்தில் முதற்கட்டமாக நேற்று 1 லட்சம் ரூபாவுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன. ஏனைய தொகுதிகளைச் சேர்ந்த வீட்டுத்திட்ட கடனாளிகளுக்கான வீட்டுக் கடன் உதவிகள் தொகுதி வாரியாக வழங்கப்படுமென்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் தெரிவித்தார்.
(த–106)

## ஓய்வூதியர்கள் 28,000 பேர் 90 வயதைக் கடந்தவர்கள்

கொழும்பு, ஜுன் 28
ஓய்வூதியக் கொடுப்பனவுகளைப் பெறும் 90 வயதைக் கடந்துள்ளோரின் தொகை 28,000 என ஓய்வூதியத் திணைக்களம் தெரிவிக்கிறது.
85 வயதுக்கும் 90 வயதுக்கும் இடைப்பட்ட ஓய்வூதியம் பெறுவோரின் தொகை 42,000 எனவும், 80 வயதுக்கும் 85 வயதுக்கும் இடைப்பட்டோரின் தொகை 53,000 எனவும், 70 வய துக்கும் 80 வயதுக்கும் இடைப்பட் டோரின் தொகை ஒரு இலட்சத்து 25,000 பேர் எனவும், 65 வயதுக் கும் 70 வயதுக்கும் இடைப்பட்டோரின் தொகை 82,000 எனவும் ஓய்வூதியத் திணைக்களம் கூறுகிறது.
கடந்த போர்க் காலத்தில் முப்படைகள் மற்றும் பொலிஸ் துறைக்கு ஒரே தடவையில் பல நூற்றுக் கணக்கானோரைச் சேர்த்துக் கொள்ள வேண்டி ஏற்பட்டமையால் ஒரே தடவையில் நூற்றுக் கணக்கானோர் ஓய்வு பெற்றுச் செல்லும் சந்தர்ப்பங்களுக்கும் ஓய்வூதியத் திணைக்களம் முகம் கொடுக்கவேண்டி நேர்ந்துள்ளதாக ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சுனில் யஹட் டியா ராச்சி தெரிவித்தார்.
(த–22)

## பல்கலைச் சங்கத்துக்கு புதிய நிர்வாக தெரிவு

யாழ்ப்பாணம், ஜுன் 28
யாழ்.பல்கலைக்கழக ஆசியர் சங்கத்துக்குப் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த 18 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக நூலகத்தின் கேட்போர் கூடத்தில் இந்தத் தெரிவு நடைபெற்றது. புதிய நிர்வாகத்தின் தலைவராக கலாநிதி திருக்குமரனும் செயலாளராக கே.ரீ.கணேசலிங்கமும் பொருளாளராக என்.சிவகரனும் உப தலைவராக கலாநிதி ஏ.சரவணபவனும் உப செயலாளராக கலாநிதி சி. ராஜ்உமேசும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று தலைவர் தெரிவித்தார். (த–4)

## பஸ் சேவை நடத்துமாறு கோரிக்கை

பளை , ஜுன் 28
பளை புல்லாவெளி புனித செபஸ்தியார் தேவாலய திருநாளையொட்டி விசேட பஸ் சேவைகளை நடத்துமாறு மக்கள் கேட்டுள்ளனர்.
தேவாலய நவநாள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி ஜுலை ஐந்தாம் திகதி முடிவடையவுள்ளன.
நவநாள் திருவிழாவையொட்டி பெருந் தொகையான கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள்–பயணிகள் வாகனங்களில் வந்து இயக்கச்சிச் சந்தியில் இறங்கி சுமார் 5 கிலோ மீற்றர் தூரம் வரை நடந்து செல்ல வேண்டியுள்ளது.
இதனால் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலிருந்து தேவாலயம் வரை விசேட பஸ் சேவை நடத்துமாறு மக்கள் கோரியுள்ளனர்.
(த–9)

## இராணுவ ஜீப் மோதி முதியவர் படுகாயம்

கிளிநொச்சி, ஜுன் 28
வேகமாக வந்த இராணுவ ஜீப் வாகனம் வேகக்கட்டப்பாட்டை இழந்து குடிதண்ணீர் எடுக்கச் சென்ற முதியவரை மோதித் தள்ளியதில் பலத்த காயமடைந்த முதியவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.
இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் காலை பரந்தன்–முல்லைதீவு வீதியில் விசுவமடுவில் இடம்பெற்றுள்ளது.
விசுவமடுவை சேர்ந்த செல்லையா பரராசசிங்கம் (வயது 70) என்ற முதியவரே இவ்வாறு காயமடைந்தவராவார்.
விசுவமடுவில் உள்ள தனது வீட்டில் இருந்து குடிதண்ணீர் எடுப்பதற்காகச் சைக்கிளில் ஏ–35 வீதியைக் கடந்து சென்றபோது வேகமாக வந்த இராணுவ ஜீப் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து முதியவரை மோதித் தள்ளிப் பின்னர் வீதியை விட்டுவயல் காணிக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.
ஆயினும் அதில் பயணித்த இராணுவச் சிப்பாய்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. ஆனால் வீதியில் மஞ்சள் கோட்டில் கடந்த முதியவர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இவ் விபத்து தொடர்பான விசாரணைகளை புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த–21)

## முருங்கைக்காய் விலை உயர்வு

யாழ்ப்பாணம், ஜுன் 28
யாழ்.குடாநாட்டில் முருங்கைக்காயின் விலை திடீரென அதிகரித்துள்ளது.
அண்மையில் பெய்த கோடை மழையினால் முருங்கை மரங்களில் இருந்த முருங்கைக் காய்கள் பாதிக்கப்பட்டன. இதனை அடுத்து சந்தைகளில் அவற்றின் வருகை குறைந்துள்ளது. இதனால் விலையும் அதிகரித்துள்ளது.
திருநெல்வேலி சந்தையில் நேற்று ஒரு கிலோ முருங்கைக்காய் 600 ரூபாவாக விற்கப்பட்டது. (த–17)

## ரவிராஜ் உருவச் சிலைக்கு சாவகச்சேரியில் அடிக்கல்



தென்மராட்சி, ஜுன் 28
நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் நடராஜா ரவிராஜ் நினைவு உருவச் சிலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுக் காலை 8 மணிக்குத் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு முன்பாக இடம் பெற்றது
வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவாஜிலிங்கம், சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை மற்றும் சாவகச்சேரி நகரசபை சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
(த–9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தேர்தலுக்கான திடீர் அறிவிப்பு ஜனாதிபதியின் சாணக்கியம்

தேர்தல் ஒன்று விரைவில் வரப்போகிறது என்பதை எல்லோருமே உணர்ந்துதான் இருந்தார்கள். ஆனால் அது எப்போதுவரும் என்பதே தெரியாமல் இருந்து வந்தது.

தேர்தல்முறை திருத்தத்துக்கான 20ஆவது சட்ட முன்வரைவு எவ்வாறேனும் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விருப்பம் கொண்டிருந்தார் என்பது உண்மைதான். மக்களுக்குத் தாம் வழங்கியிருந்த வாக்குறுதிகளில் முக்கியமான ஒன்றான 19ஆவது திருத்தம் விக்கினமின்றி நிறைவேறியிருந்த நிலையில், அதேபோன்ற முக்கியமான 20 ஆவது திருத்தமும் நிறைவேறினால் அது தமது ஆளுமைக்கு மேலும் வலுச் சேர்ப்பதாக இருக்கும் என்று அவர் கருதியிருந்தால், அதில் நியாயமுண்டு.

அசைக்க முடியாத ஆல விருட்சம்போல் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்த மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியாளர்களை மிகத் துணிச்சலோடு உயிர் ஆபத்தையும் பொருட்படுத்தாமல் எதிர்த்து நின்று, நாட்டின் சகல தரப்பு மக்களதும் மனமுவந்த ஆதரவோடு அவர்களைத் தோற்கடித்துப் பதவிக்கு வந்தவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமக்கு வெற்றியைத் தேடித் தந்த மக்களுக்கு தாம் செய்ய வேண்டிய முக்கிய கடமைகளில் ஒன்றாகவும் 20ஆவது திருத்தத்தைக் கருதியிருக்கக்கூடும்.

துரதிருஷ்டவசமாக அவர் முன்மொழிந்த 20ஆவது திருத்தத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரையும் அவர்களுடன் இணைந்தவர்களையும் தவிர ஏனைய சிறுபான்மையின மற்றும் சிறிய கட்சிகள் கடுமையான எதிர்ப்பை முன்வைத்தன. குறிப்பாக அவர் பதவியில் அமர்வதற்குப் பெரும் பங்களிப்பை வழங்கியிருந்த சிறுபான்மை இனமக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் கடும் எதிர்ப்பு வலுப்பெற்றிருந்தது.

பதவியில் அமர ஏணியாக உதவியவர்களையே சிறிசேன உதறித்தள்ளும் நிலைக்குச் சென்றுவிட்டாரோ என்று எண்ண வேண்டிய நிலைக்கு பலர் ஆட்பட்டிருந்தார்கள். ஆனால் சிறிசேன மிக ஆழமான ஒரு மனிதர். அவரது மனதில் இருந்த விடயம் எவருக்கும் தெரிந்திருக்கவில்லை.

20ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக சிறிசேன தங்கள் பக்கம் சாய்ந்துவிடுவார், அதன் மூலம் ஒரே கல்லினால் இரண்டு மாங்காய்களை வீழ்த்திவிடலாம் என்று சிலர் கருதினார்கள்.

அதாவது தங்களுக்குச் சாதகமான 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவது ஒன்று. அதற்கான மறைமுக நிபந்தனையாக மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக களம் இறக்க வாய்ப்பளிக்க நிர்ப்பந்திப்பதென்பது இரண்டாவது. இன்னும் சிலர், நிதி அமைச்சர், பிரதமர் ஆகிய இருவர் மீதுமான நம்பிக்கை இல்லர்த் தீர்மானங்களை நிறைவேற்றுவதன் மூலம் ரணில் விக்கிரமசிங்கவின் சிறுபான்மை அரசைக் கவிழ்த்து அதன் வாயிலாகத் தங்களின் பெரும்பான்மை அரசை நிறுவுவதற்கு ஜனாதிபதியை நிர்ப்பந்திக்கவும், அதன்மூலம் ஏற்படும் தர்மசங்கடமான சூழ்நிலையில் நாடாளுமன்றம் கலைக்கப்படு மானால் சிறிசேனவுக்கு இருக்கும் ஆளுமைத்திறனைக் கேலிக்கூத்தாக்கி பரப்புரை செய்யவும் திட்டமிட்டிருந்தனர். அத்தகையதொரு நிலையில் சிறிசேன், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை விட ஐ.தே.கவின் பக்கமே சாய்ந்து நிற்கிறார் என்று காட்டவும் அவர்களுக்கு வாய்ப்புக் கிட்டியிக்கும். இம்மாதிரியாக ஏற்படக்கூடிய நெருக்கடியான சந்தர்ப்பத்தை ராஜபக்ஷ தரப்பினர் எவ்வளவு சுலபமாக பயன்படுத்திக் கொண்டிருப்பார்கள் என்பதைக் கூறத்தேவையில்லை.

ஆகவே, இவை எல்லாவற்றையும் கருத்தில் வைத்துத்தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றக் கலைப்பை திடீரென அறிவித்துள்ளார் என்று கொள்ளலாம். சிறுபான்மையினரையும் பகைக்காமல், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் பாதகமில்லாமல், ஜனாதிபதித் தேர்தலில் தம்முடனிருந்து பங்களிப்புச் செய்த ஐ.தே.க வும் குறை கூறாதபடி நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார். இப்போதைய நிலையில் பழைய முறையிலேயே நாடாளுமன்றத்துக்கான தேர்தல் நடைபெறும் என்பது கண்கூடு.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் போட்டியிட மஹிந்த ராஜபக்ஷவுக்கு இடமில்லை என்ற நிலையில், அவரும் அவரைச் சார்ந்தவர்களும் இனி என்ன நிலைப்பாட்டை எடுத்து தேர்தலை எதிர்கொள்ளப் போகிறார்கள் என்பது இனிமேல்தான் தெரியவரும்.

# சைவ மக்களின் மனங்களில் நீங்காத இடங்கொண்ட அன்னை சிவத்தமிழ்செல்வி

## இன்று அன்னையின் ஏழாவது குருபூசைத்தினம்

■ திருமதி தவனேஸ்வரி சிவகுமார்



*நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்*
*நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்*
*திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்*
*செம்மை மாதர் திறம்புவதில்லையாம்*
*அமிழ்ந்த பேரிருளாயறியாமையில்*
*அவலமெய்திக் கலையின்றி வாழ்வதை*
*உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணறமாகுமாம்*
*உதயகன்னி உரைப்பது கேட்பீரோ"*

என்ற பாரதி பாடலுக்கேற்ப பெண்களுக்கேயுரிய அறவாழ்க்கையில் மேம்பட்டவராக ஏனைய பெண்களுக்கு வழிகாட்டியாக விளங்கியவர் அம்மையார் அவர்கள். ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்த இவர் ஆயிரமாயிரம் மாணவர்களுக்கு வழிகாட்டியாக விளங்கினார். தனது ஆசிரியப் பணியின் அனுபவத்தோடு 1965 ஆம் ஆண்டு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தனாதிகாரியாகப் பணியைத் தொடர்ந்து 1977 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி தலைமைப்பொறுப்பை ஏற்று இறைவனடி சேரும்வரையும் தனது வாழ்வை ஆலயப்பணிக்கே அர்ப்பணித்தார்.

1927 ஆம் ஆண்டு மகாத்மா காந்தியடிகள் யா/இராமநாதன் கல்லூரிக்கு வருகை தந்து பெண்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுத்தார்.

"பள்ளிப் பருவம் முடிந்ததும், பெரும்பாலான பெண்கள் பொதுநலத் தொண்டு வாழ்விலிருந்தும் மறைந்து விடுகின்றனர். சைவசமயிகள்' என்று கூறிக்கொள்ளும் இந்தக் கல்லூரியில் பயிலும் மாணவிகளாகிய நீங்கள் அப்படியாக மறைந்துவிடாது, தொண்டு வாழ்வில் பெருமை பெற்றுயர்ந்த உங்கள் குலத்துதித்த உத்தமப் பெண்மணிகள் போல் உலகூட்டும் நல்ல பொதுப் பணிகளாற்றிச் சமூகத்தில் மகளிர் திலகங்களாக ஒளிபரப்ப முன்வர வேண்டும்"

என்பதே அந்த வேண்டுகோள் ஆகும். அவரது இந்த வேண்டுகோள் வீண் போகாது வந்துதித்தவரே அம்மையார் எனலாம்.

சைவ ஆலயம் ஒன்றை ஒரு சமூக நிலைக்களமாக – கலைக்கோயிலாக – ஆதுலர்சாலையாக – ஆதரவற்ற பெண்களின் இருப்பிடமாக மாற்றிய பெருமை அம்மையார் ஒருவருக்கே உண்டு என்றால் மிகையாகாது. அவர் தனது ஆலய வெள்ளிவிழா மலரில்,

கோயிலை மையமாக வைத்து வாழ்பவர்களின் வாழ்வு புனிதமடைகிறது. அவர்களது செயல்கள் அனைத்தும் ஈசுவர அர்ப்பணமாகிப் பரந்து செறிந்து பயன் கொடுக்கிறது"

எனக் கூறியுள்ளமை இந்த இடத்தில் சிந்திக்கத் தக்கதாகும்.

இற்றைக்கு நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு சமூக மேம்பாட்டை நோக்கிய சிந்தனைக்கு வித்திட்டவர் அன்னை அவர்கள். தனது சொல்லும், செயலும் ஒன்றுபட்டு நிற்கும் துணிவும், நேர்மையும், அன்பும், கருணையும், ஆளுமையும் கொண்ட அழகான பெண்மணியாக அவர் காட்சி தந்தார். பொருளாதார நெருக்கடிகள், போர்ச் சூழ்நிலைகள், சமூக அழுத்தங்கள் போன்ற பல நெருக்கடிகளுக்குள்ளும் மனம் தளராது, தான் எடுத்த பணிகளைக் கைவிடாது சோர்வில்லாமல் மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் தனது வாழ்வை துர்க்காதேவி தேவஸ்தான வளர்ச்சிக்கும் அதனோடியைந்த துர்க்காபுரம் மகளிர் இல்ல வளர்ச்சிக்கும் வித்திட்டவர் இவர்.

தனது கணீரென்ற குரலினால் பிரசங்கப் பணியை முன்னெடுத்தார். அவரது காலடிபடாத இடங்களே இல்லை என்னும் அளவுக்கு அவரது சொற்பொழிவு அமைந்திருந்தது. கேட்டார் பிணிக்கும் தகையனவாய் பாடல்களைப் பாடி அதற்குப் பொருள்கூறி அவர்ஆற்றிய உரைகள் படித்தவர்க்கும், பாமரர்க்கும் இன்பம் ஊட்டுவதாய் அமைந்திருந்தது. சொல்லின் செல்வியாக இவர் விளங்கி ஆற்றிய பிரசங்கங்கள் எல்லோரையும் வாழ வழிப்படுத்தியனவாயும், தொண்டு வாழ்வில் ஈடுபடும் மனநிலையை ஏற்படுத்தியனவாயும் நின்றன என்றால் மிகையில்லை.

ஆதரவற்ற பெண்பிள்ளைகளுக்காக 03.02.1982ஆம் ஆண்டில் துர்க்காபுரம் மகளிர் இல்லம் என்ற இல்லத்தை ஒன்பது பெண்பிள்ளைகளுடன் ஆரம்பித்து, சகல வசதிகளுடனும் கூடிய மாடிக்கட்டடம் ஒன்றையும் அமைத்து பிள்ளைகளுக்கு வேண்டிய கல்வி, கலை, கலாசாரம், பண்பாட்டு அம்சங்கள் அனைத்திலும் அறிவுத்திறன் உடையவர்களாக ஆக்கி சமூகத்தில் அவர்களும் தலைநிமிர்ந்து வாழக் கூடிய வகையில் வளர்த்த உத்தமி ஆவார். இவரது தன்னலமற்ற சேவையாலும், சமூக மேம்பாட்டு சிந்தனைத் திறத்தாலும், ஏழைகள் மீது காட்டிய பரிவினாலும் இன்று ஆயிரமாயிரம் பெண் பிள்ளைகள் தலை நிமிர்ந்து வாழக்கூடிய வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுத்தார். ஆலயத்திலேயே முழுநேரமும் தங்கியிருந்து ஆலயப்பணிக்காகவும், துர்க்காபுரம் மகளிர் இல்லத்துக்காகவும் தன் வாழ்நாளை அர்ப்பணித்து இறைவனடி சேர்ந்தவர் இவர். புலம் பெயர் தமிழர்கள், வசதி படைத்தோர், சமூக நோக்குடையவர், வள்ளல்கள் யாபோரையும் ஒன்றிணைத்து தமது செல்வத்தின் ஒரு பகுதியை தர்மகாரியங்களுக்குப் பயன்படுத்த வழிகாட்டிய பெருமை இவருக்கே உண்டு. இவர்களும் தமது செல்வத்தை இவ்வாறான சமூக காரியங்களுக்குப் பயன்படுத்தி இறைவனின் அருளுக்குப் பாத்திரமானார்கள்.

தனது எந்தக் கடமைகளிலும் தவறாத – நேர்மையான வழியில் நிறைவேற்றக்கூடிய ஆளுமை மிக்க பெண்ணாக இவர் காட்சி தந்தார். ஒரு பெண்ணால் எதையும் சாதிக்க முடியும் என்று வாழ்ந்து காட்டினார்.

கட்டடங்களால் வளர்ச்சி பெற்றதிலும் பார்க்க அறக் கடமைகளினாலும், அன்னம் பாலிக்கும் சிறப்பினாலும், உதவி வேண்டி நிற்கும் சமூக நிறுவனங்களுக்குதவும் சிறப்பினாலும் பெருமை பெற்றது இந்த ஆலயம்." கண்ணீர் துடைக்கும் சமூகப்பணிகளினாலும் என இவர் கூறும் வாசகங்கள் ஆலயத்தின் பணிகளை விரித்துரைக்கவல்லனவாகும். இன்று இந்தப் பணிகளைத் தொடர்ந்தும் மிகவும் சிறப்பான முறையில் நிறைவேற்றும் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் அவர்களும், ஆலய தர்மகர்த்தா சபையினரும், நிர்வாக சபையினரும் இணைந்து ஆற்றும் பணிகளை அமரருலகில் இருந்து ஆசீர்வதித்துக் கொண்டிருப்பார் அம்மையார் அவர்கள்.

அம்மையாரின் குருபூசைத்தினத்தை துர்க்காதேவி தேவஸ்தானமும், அம்மையாரின் நாமத்தைக் கொண்ட யா/ கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயமும், சைவ நிறுவனங்களும், புலம் பெயர் சைவத்தமிழர் அமைப்புக்களும் இன்று கொண்டாடி மகிழ்கின்றனர். இன்றைய தினம் அம்மையார் அவர்கள் போசகராக இருந்து வழிநடத்திய தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் பொன்விழா நிகழ்வுகளும் இடம்பெறுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அம்மையாரின் பணிகள் யாவற்றுக்கும் உறுதுணையாக இருந்து கைகொடுத்தவர்கள் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தினர் என்றால் மிகையில்லை. அம்மையாரின் மறைவின் இறுதி ஊர்வலத்தின் போது இந்து இளைஞர் சங்கம் ஆற்றிய சேவை கண்டு சைவத் தமிழ் மக்கள் அனைவரும் மெய்சிலிர்த்த காட்சியே எம் நினைவில் வருகின்றது. அம்மையார் அவர்களின் ஆத்மா இவ்வுலகத்தை வழி நடத்தட்டும் என்று எம்பெருமாட்டி துர்க்காதேவியைப் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தரப்பு மோதலாக வெடித்துள்ள தேர்தல்

கொழும்பு, ஜூன் 28

எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி நிறுவப்படவுள்ள புதிய நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக மைத்திரி, ரணில், மஹிந்த ஆகிய முத்தரப்பும் கடும் போட்டிக்கு மத்தியில் தேர்தலுக்கான தயார்படுத்தல்களில் மும்முரமாக களமிறங்கியுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியும் போட்டியிடவுள்ளது. அதேவேளை, சு.கவுடனான பேச்சுகள் வெற்றியளிக்காமையினால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதிய கூட்டணி அமைத்து பொதுத் தேர்தலில் களமிறங்கவுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் வாபஸ் பெறப்படாவிட்டால் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்திற்கு ஆதரவு வழங்கப்போவதில்லை என்ற நிலைப்பாட்டில் ஐ.தே.க. உறுதியாக இருந்த நிலையில், நாடாளுமன்றப் பெரும்பான்மையை நிரூபிக்க நம்பிக்கையில்லாப் பிரேரணை அவசியமற்ற வழிமுறை' என ஜனாதிபதி சுட்டிக்காட்டியும் அதற்கு மஹிந்த ஆதரவு ஐ.ம.சு.மு. உறுப்பினர்கள் ஒத்துழைக்க மறுத்திருந்த நிலையிலேயே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களைச் சந்தித்த மைத்திரிபால நாடாளுமன்றம் கலைப்பு தொடர்பான தனது இறுதி முடிவை அறிவித்துள்ளார்.

மைத்திரி – மஹிந்தவை இணைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவினரின் பலவேறு முயற்சிகள் தோல்வியில் முறிவடைந்துள்ளமையினால் மஹிந்த தனித்துத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளதுடன் அவருடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட சிறிய கட்சிகள் பல இணைந்து போட்டியிடவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அதேவேளை, மஹிந்தவுக்கு ஆதரவாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் விமல், வாசுதேவ, கம்மன்பில உள்ளிட்டவர்களினால் முன்னெடுக்கப்பட்ட கூட்டத் தொடரில் அடுத்த கூட்டம் எதிர்வரும் ஜூலை மாதம் முதல் வாரத்துக்குள் அநுராதபுரத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும், அதில் மஹிந்த உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொள்வார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கமைய, தேர்தலுக்கான ஆயத்தங்களை முக்கட்சிகளும் ஆரம்பித்துள்ளன. அதன் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் தலைமையில் வெள்ளிக்கிழமை சிறிகொத்தவில் இடம்பெற்ற கட்சி ஏற்பாட்டாளர் கூட்டத்தில் நாடாளுமன்றம் கலைப்பு தொடர்பில் பேசப்பட்டதாகவும், அதற்கமை ஜூலை 5ஆம் திகதி ரணில் தலைமையில் மாநாடு ஒன்றை ஐ.தே.க. ஒழுங்கு செய்துள்ளது. இதில் தேர்தல் வெற்றி கொள்வதற்கான வியூகங்கள் வகுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரதமர் வேட்பாளராக களமிறங்கும் முயற்சியில் பின்புலத்திலிருந்து செயற்பட்ட மஹிந்தவுக்கு மைத்திரி அணியுடன் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சந்திப்பு திருப்திகரமானதாக அமையவில்லை. பின்னர் மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் வீட்டுக்கு வந்துள்ள மஹிந்த, மைத்திரி அணியுடனான சந்திப்பில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பிலும் நாடாளுமன்றம் கலைக்கப்படக்கூடிய வாய்ப்பு உள்ளமை மற்றும் தமது அடுத்த கட்ட நடவடிக்கை என்பன தொடர்பிலும் சு.க. முக்கிய புள்ளிகளுடன் பேச்சு நடத்தியுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இதற்கமையவே அநுராதபுரக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பு மனுக்களை ஏற்கனவே கோரியிருந்த நிலையில் தேர்தல் நடவடிக்கைகளைக் கவனிக்கவென 12 பேர் கொண்ட குழுவொன்றையும் நியமித்துள்ளது.

இதேவேளை, கட்சிப்பிளவைத் தடுத்து மஹிந்த – மைத்திரியினை இணைத்து தேர்தலுக்கு செல்வதற்கான முயற்சிகளில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தீவிர மாக ஈடுபட்டுள்ளது.

தினேஷ் குணவர்த்தனவின் வேண்டுகோளுக்கு இணங்க ஐ.ம.சு.மு. நிறைவேற்றுக்குழு இவ்வாரத்துக்குள் அவசரமாக கூடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது மஹிந்தவுக்கு ஆதரவாக பேச்சுகளில் ஐ.ம.சு.மு. மஹிந்த தரப்பினர் ஈடுபடவுள்ளதுடன் இதில் தீர்மானம் எட்டப்படவில்லை என்றாலே மஹிந்த தரப்பினர் தனியாக போட்டியிடத் தீர்மானிப்பார்கள் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது. (த)

## கஞ்சா வைத்திருந்த ஒருவர் மறியலில்



தென்மராட்சி, ஜூன் 28

போதைப் பொருளான கஞ்சா வைத்திருந்த தனங்களப்பு வாசியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரிப் பொலிஸாருக்குக் கிடைத்த ரகசியத் தகவலையடுத்து தனங்களப்புப் பகுதி வீடொன்றைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்திய பொலிஸார் 10 கிராம் கஞ்சாவைக் கைப்பற்றியதுடன் அதனை வைத்திருந்த நபரையும் கைது செய்தனர்.

இந்த நபரை நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்தியபோது எதிர்வரும் ஒன்பதாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இதேவேளை இந்த நபர் வேறொரு வழக்குச் சம்பந்தமாக நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுத் தேடப்பட்டு வந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## பிள்ளைகளின் ஆரம்ப வயது அபிவிருத்திக்கு கட்டமைப்பு

கொழும்பு, ஜூன் 28

பிள்ளைகளின் ஆரம்ப வயது அபிவிருத்தி குறித்து தேசிய கொள்கையொன்று கட்டமைக்கப்படுமெனவும், அதன் கீழ் முன்பள்ளிக் கல்வியை முறைப்படுத்தும் செயற்றிட்டமொன்று உலக வங்கியின் 50 மில்லியன் டொலர்கள் நிதியுதவியின் கீழ் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்திலிருந்து செயற்படுத்தப் படுமெனவும் சிறுவர் விவகார ராஜாங்க அமைச்சரான ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன் கீழ் அனைத்து முன்பள்ளி ஆசிரியைகளுக்கும் ஒரே பாடத் தொகுதியின் கீழ் ஆசிரிய பயிற்சியை வழங்கி டிப்ளோமா சான்றிதழொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்காக முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் நிறுவப்படவுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், அனைத்து முன்பள்ளிகளினதும் தரத்தை உறுதிப்படுத்தும் நியதியொன்றை அறிமுகப்படுத்துவதற்கு துறை சார்ந்த நிபுணர்களுடன் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

முன்பள்ளிகளுக்குச் செல்லும் வயதிலுள்ள நூற்றுக்கு 30 வீதமான சிறார்கள் வறுமை மற்றும் வேறு சிக்கல்கள், சிரமங்கள் காரணமாக முன்பள்ளிகளுக்குச் செல்லாதிருப்பதைச் சுட்டிக்காட்டிய அமைச்சர், முன்பள்ளிக் கல்வியைப் பெற வேண்டிய வயதிலுள்ள அனைத்து சிறுவர்கள், சிறுமியர்கள் அந்தக் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை உறுதிப்படுத்துவதே தமது குறிக்கோள் எனவும் தெரிவித்தார். (த-22)

## ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையும் 3 தமிழ் கட்சிகள்

கொழும்பு, ஜூன் 28

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிக் கட்சியுடன் இணைந்து போட்டியிட மூன்று தமிழ்க் கட்சிகள் தீர்மானித்துள்ளதாகச் சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ள இந்தக் கூட்டணி தீர்மானித்துள்ளது.

மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, சாந்தினி சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி, பழனி திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய முன்னணி ஆகிய கட்சிகளே ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடவுள்ளன.

மத்திய, ஊவா, மேல் மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களை இலக்கு வைத்து, இந்த கட்சிகள் போட்டியிடவுள்ளதாக அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (த)

## மஹிந்த தலைமையில் களமிறங்கும் விமல்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டணியில் இணைந்து எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட உள்ளதாக விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

தேசிய சுதந்திர முன்னணி உட்பட பல கட்சிகள் இம்முறை பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டணியில் போட்டியிடத் தயாராக இருப்பதாக அதன் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸ்ஸாமில் கூறியுள்ளார்.

இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தயார்படுத்தப்பட்டுள்ளன. இந்தச் சந்தர்ப்பம் கிடைக்கும் வரையே நாங்கள் காத்திருந்தோம். 100 நாள்களில் நாட்டின் பயணத்தை பின்னோக்கி திருப்பி, ஈழ தேசிய வாதத்தைப் போஷித்து, நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைத்து, நல்லாட்சியை முற்றாக இல்லாமல் செய்து, நாட்டை சீரழிக்கும் இந்தப் பயணத்தை மாற்றியமைப்பதற்காக அனைத்துச் சக்திகளையும் ஒன்றிணைப்போம்.

அனைத்துச் சக்திகளையும் ஒன்றிணைத்து மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கி, ஓகஸ்ட் 18 ஆம் திகதி நாட்டில் அரசு ஒன்றை ஏற்படுத்தும் எதிர்ப்பார்ப்பில் தேசிய சுதந்திர முன்னணி இந்த தேர்தலில் போட்டியிடும் எனவும் மொஹமட் முஸ்ஸாமில் கூறியுள்ளார். (த)

## மனைவியை எரித்துக் கொன்ற கணவனுக்கு சாவுத் தண்டனை

### மட்டக்களப்பு மேல்நீதிமன்றம் தீர்ப்பு

அம்பாறை, ஜூன் 28

தனது மனைவியுடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தின் போது, மனைவியின் மீது விளக்கை எறிந்து, மண்ணெண்ணெயைப் பரவ விட்டதுடன் தீக்குச்சியைக் கொளுத்தி அவர் மீது வீசித் தீப்பற்றி எரிய வைத்த கணவன் ஒருவருக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சட்டமா அதிபரால் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் குறித்த கணவன் மீது கொலைக்குற்றஞ்சாட்டி தொடரப்பட்டிருந்த வழக்கிலேயே மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம், எதிரியான கணவனுக்கு சாவுத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினார்.

மட்டக்களப்பு கதிரவெளி, பால்சேனை என்னுமிடத்தைச் சேர்ந்த தங்கராசா வனிதா(வயது 33) என்னும் பெண் தனது முதல் கணவன் இறந்ததால், கணவனின் தம்பியான கனகசபை சதானந்தன் என்பவரை இரண்டாவது கணவராகத் திருமணம் செய்திருந்தார்.

சம்பவ தினமான 2008ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 22ஆம் திகதி இரண்டாவது கணவர் கனகசபை சதானந்தன், முதல் கணவருக்குப் பிறந்த பெண் பிள்ளை தொடர்பாக மனைவி தங்கராசா வனிதாவுடன் வாய்த்தர்க்கமொன்றில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது ஆத்திரமுற்ற நிலையில் மண்ணெண்ணெய் நிரப்பப்பட்டிருந்த விளக்கு ஒன்றை மனைவி மீது வீசி எண்ணெயை அவர் மீது பரவவிட்டு தீக்குச்சியையும் கொளுத்தி எறிந்து கணவர் கனகசபை சதானந்தன் தீப்பற்றி எரிய வைத்ததாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து வாகரை வைத்திய சாலைக்கு தீக்காயங்களுடன் எடுத்துச் செல்லப்பட்ட குறித்த மனைவியான தங்கராசா வனிதா பின்னர் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டதுடன், எட்டு நாள்களின் பின் உயிரிழந்தார்.

அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது பேசக்கூடிய சுயநினைவுடன் சம்பவம் தொடர்பில் வாக்குமூலமளித்து ஒப்பமும் இட்டிருந்தார்.

குறித்த வாக்குமூலத்தில் தனது இரண்டாவது கணவர் கனகசபை சதானந்தமே தம்மைத் தீவைத்துக் கொளுத்தி தீக்காயங்களேற்படக் காரணமாகவிருந்தாரெனத் தெரிவித்திருந்ததுடன், சாட்சியங்கள், தடயங்களும் கிடைத்திருந்தன.

மட்டக்களப்பு மேல்நீதிமன்றத்தில், மேல்நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் இது தொடர்பான கொலைக்குற்றச்சாட்டு வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது.

இறுதியாக குறித்த பெண்ணின் வாக்குமூலத்தை, மரண வாக்கு மூலமாகவும், நம்பக்கூடிய சாட்சியமாகவும் மன்று ஏற்றுக்கொண்டதுடன், எதிரி மீதான கொலைக்குற்றம் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதன்படி எதிரியான கணவர் கனகசபை சதானந்தனுக்கு, சாவுத் தண்டனை விதித்து நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் கடந்த வியாழக்கிழமை தீர்ப்பு வழங்கினார். (த-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**விற்பனைக்குண்டு**

Bottle cooler, Display fridge, Ice cream corn machine, Compressor, A/C, Name Board, Glass almaras விற்பனைக்குண்டு.

(61423) தொடர்பு:- 077 596 7083

**மாடி வீடு வாடகைக்கு உண்டு**


வேம்படி மகளிர் பாடசாலைக்கு முன்பாக 7 அறைகள் கொண்ட கீழ்த்தளம் மாபிள் பதித்த மாடி வீடு அரச, தனியார் நிறுவனங்களிற்கு வாடகைக்கு விடப்படும்.

இல. 154,
1ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (c 16244)

தொடர்பு:- 021 222 4128
077 220 9592

## கண்ணீர் அஞ்சலி

நாதஸ்வர மேதை, இசைப்பேரறிஞர்



### கலாநிதி
### எம்.கே. பஞ்சாபிகேசன்

அவர்கள் 26.06.2015 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு இசை உலகில் ஏற்பட்ட இடைவெளியை நினைத்து வருந்துகிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபையினர்,**
**திருநெல்வேலி பழங்கிணற்றடி-**
**ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்.**

**திருநெல்வேலி.** (C/16251) (10.6.1)

## யாழ்ப்பாணம் மாநகரசபை.
## உழவு இயந்திரங்கள், சிறியரக வாகனங்களினை வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறுவிலை கோரல்

1) யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் இருந்து பணிக்கப்படுகின்ற வட்டார ஆதனங்களிலிருந்து வெளியேற்றப்படும் திண்ம கழிவுகளினினை வகைபிரித்து எடுத்துச்சென்று கல்லுண்டாய் மற்றும் காக்கைதீவு வெளியிலுள்ள ஒதுக்கப்பட்ட இடத்தில் பறிப்பதற்கு உழவு இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.


2) யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் இருந்து பணிக்கப்படுகின்ற வட்டாரங்களின் கடைகள், சந்தைகளில் வெளியேற்றப்படும் பிளாஸ்ரிக் மற்றும் இறைச்சி எலும்புகளினை எடுத்துச்சென்று கல்லுண்டாய் மற்றும் காக்கைதீவு வெளியிலுள்ள ஒதுக்கப்பட்ட இடத்தில் பறிப்பதற்கு சிறியரக வாகனம் தேவைப்படுகின்றது.

இச்சேவையினை வழங்கக்கூடிய வழங்குநர்கள் 29.06.2015ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் சபையின் கொள்வனவுப்பகுதியுடன் தொடர்பு கொண்டு இதற்குரிய கூறுவிலைப்படிவத்தினை பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை (03.07.2015) பி.ப 2.00 மணிக்கு முன்னதாக அதற்குரிய கூறுவிலைப்பெட்டியினுள் சேர்ப்பித்தல் வேண்டும். மேலதிக விவரங்களினை பெற்றுக்கொள்வதற்கு 071 862 8580 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(செ. பிரணவநாதன்)
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

(c 16239)

30 ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்
1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ் கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- Nail art
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- மெஹந்தி போடுதல்
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,



மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

- (B) பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 05-07-2015
ஞாயிறு காலை 9.30 மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 06-07-2015
திங்கள் காலை 9.30 மணி
மேலும் விபரங்களை நேரில் அறிந்துகொள்ளலாம்.
-இயக்குநர்-

## கண்ணீர் அஞ்சலி

S.V. முருகேசு நிறுவன முன்னாள் முகாமையாளர் தியாகலிங்கம் அவர்களின் அன்புத் தாயாரும், கொழும்பு S.V.M. (Pvt) Ltd காசாளர் ஜெயக்குமார் அவர்களின் பேர்த்தியுமான

### தம்பையா நாகம்மா



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

S.V. முருகேசு
S.V.M. (Pvt) Ltd
உரிமையாளரும், ஊழியர்களும்.

154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (C/16522) (10.6.3)

## மரண அறிவித்தல்

### வல்லிபுரநாதன் தீபராஜ்
(கணக்காளர் லண்டன்)

(உரிமையாளர் Rising sun hotel and restaurant harrow, Goldman Estate Agent & accounts southall,V.V.N & sons Ltd Southall)

பிறப்பு : 19.04.1973 — இறப்பு : 25.06.2015



யாழ்ப்பாணம் புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் இலண்டன் South Ruislipஐ வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரநாதன் தீபராஜ் (25.06.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் யாழ்.இந்துக்கல்லூரியின் பழையமாணவரும், யாழ்.இந்துக்கல்லூரி UK ஒன்றியத்தின் நிறைவேற்று அங்கத்தவரும் (trustee) Jolly Stars UK, Southhall Lankians Cricket club ஆகியவற்றின் இடது கை துடுப்பாட்டவீரரும் Cricket Chairman of bessborough-CC (ESTD 1908) ஆவார்.

அன்னார் அல்லைப்பிட்டி புளியங்கூடலைச்சேர்ந்த வல்லிபுரநாதன் (பிரபல வர்த்தகர் 96, சிறீகதிரேசன் வீதி, கொழும்பு13) பாக்கியலட்சுமி தம்பதியரின் சிரேஸ்ட புதல்வரும் வேலணை மேற்கைச்சேர்ந்த கணபதிப்பிள்ளை (பிரபல வர்த்தகர், சிறீகதிரேசன் வீதி, கொழும்பு13) காலஞ்சென்ற உலகபரமேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் சுபோதினியின் அன்புக் கணவரும் , வருண், வர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தீபா (ஆசிரியை பிரமண்டு வித்தியாலயம், வவுனியா), திலீபா(ஆசிரியை நுகேகொட தமிழ் மகாவித்தியாலயம்), தீபதாஸ் (அப்பன்- பொறியியளாளர், உரிமையாளர் Abi fast food London) ஆகியோரின் அன்புச்சகோதரனும், கோபிநாத்(PHFO)-AMC வவுனியா, தனேந்திரன்(விரிவுரையாளர் தேசிய கல்வியியற் கல்லூரி தர்க்காநகர்), மிதிலினி (லண்டன்), சுதேஸ்குமார் (கனடா), சுபாஜினி(லண்டன்), சிவாஜினி (ஆஸ்திரேலியா), சதீஸ்குமார் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் அனி(கனடா), ஜெகதீசன் (லண்டன்), சுரேஸ்குமார் (ஆஸ்திரேலியா), சுபாஜினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.07.2015 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-
வி.வல்லிபுரநாதன் :- 0044 742 335 3434 ,
வ.தீபதாஸ் (அப்பன்) :- 0044 781 843 3828
தீ.கோபிநாத் :- 077 082 7662.
த.தனேந்திரன் :- 077 768 6713

(61420)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடனடி வேலை வாய்ப்பு**

யாழ்ப்பாணம் , வன்னி பிராந்தியங்களில் இயங்கும் 'Deaf Link' நிறுவனத்திற்கு Marketing Coordinator ஒருவர் தேவை.
தகைமை - A/L வர்த்தகப்பிரிவு அல்லது ஏதாவது ஒரு துறையில் 2 வருட சந்தைப் படுத்தல் அனுபவம்.

தொடர்பு : 077 226 4064
திட்ட இணைப்பாளர்,
மெதடிஸ்த திரு அவை,
கொழும்பு.

**யா/புற்றளை மகாவித்தியாலயம் பழைய மாணவர் சங்கம் வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2015**

எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமானது எதிர்வரும் 04.07.2015 சனிக்கிழமை மு.ப 9.00 மணிக்கு புற்றளை மகாவித்தியாலய சின்னத்தம்பி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கழக அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வி.க.சண்முகநாதன்
தலைவர்
(61225)(9.3)
இ.நிர்மலன்
செயலாளர்.

**ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி மாரி அம்மன் பண்டிதர் ஸ்ரீ ராமலு**

மெய்யன்பர்களே! T.P 076 770 0820

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிடர் வல்லுநர் கைரேகை மூலம் துல்லியமான நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை, சாதகம், கல்வி, உத்தியோகம், திருமணயோகம், குழந்தைப்பாக்கி யம், வெளிநாட்டுப்பயணம் பற்றிய விவரங்களை, பலன் களை குறைந்த செலவில் கூறுவார்.

இல 185, கஸ்தூரியார் வீதி ,யாழ்ப்பாணம்.
(திரு, லலிதா மாளிகை) மீனாட்சிதங்கமாடம் (ராஜா தியேட்டருக்கு அருகில்)
நேரம் காலை 7.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை பார்க்கப்படும்.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற விமானப் பயணச்சீட்டு முகவர் நிறுவனமான
IATA Accredited Agent
**METRO**
Travels & Tours (Pvt) Ltd.

எமது சேவைகள்.....
- மிகக் குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்.
- விசேடமான விலைக்கழிவில் கொழும்பிலிருந்து லண்டன் சென்று வருவதற்கான விமானப் பயணச் சீட்டு ரூபா 128,500/= மட்டுமே (06 Months)
- விசேடமான விலைக்கழிவில் கொழும்பிலிருந்து கட்டார் செல்வதற்கான பயணச் சீட்டு ரூபா 20,500/=
- இந்தியா, மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான விசா சேவைகள்.

★ வெளிநாட்டு கடவுச் சீட்டுகளுக்கான இலங்கை விசா புதுப்பித்தல்...

இவை அனைத்தையும் நீங்கள் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்...

**METRO TRAVELS & TOURS (Pvt) Ltd,**
# 272/1, Stanley Road, Jaffna, Sri lanka.
Tel: 021 221 9424, 0212224647, 0212217199,
Mobile : 077 379 8767, 0777881115
Email: Bartheeban@metrotravels.lk

நல்லூர்
**சரவணா ரெக்ஸ்**
Saravana Tex



Office Ware Silks Sarees 500/=
Office Ware Cotton Sarees 500/=

வேறெங்கும் கிளைகள் இல்லை.

இல.526,529, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(பின்வீதி, சிவன்கோயிலுக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1984இல் பிறந்த அனுச நட்சத்திரம், விருச்சிக ராசி, கிரகபாவம் 26¼ உடைய, ஆஸ்திரேலிய பட்டதாரியான தற்பொழுது சொந்த தொழில் புரிபவரான மணமகனுக்கு பெற்றோர் படித்த அழகிய 25-26 வயதுடைய மணமகளை எதிர்பார்கின்றனர்.
தொடர்பு. 077 959 9527

**நேர்முகத்தேர்வு பிற்போடப்பட்டுள்ளது**

எமது நிறுவனத்தில் நடத்தப்படவிருந்த கட்டட மேற்பார்வையாளர்களுக்கான பதவி வெற்றிடம் தொடர்பான நேர்முகத்தேர்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதனையும் அந் நேர்முகத்தேர்வு எதிர்வரும் (01.07.2015) புதன்கிழமை 9 மணிக்கு எமது அலுவலகத்தில் நடத்தப்படும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

contact no :
076 615 5385
021 226 1400

Hari Engineering,
Malaisanthi,
Alvai road,
Alvai.

**31ஆம் நாள் நினைவஞ்சலி**

அமரர் லெட்சுமண ஆச்சாரியார்
பக்கிரிசாமி (சிங்கர்)
(முன்னாள் பொருளாளர் ,உபதலைவர் பழைய மாணவர் மன்றம் வைத்தீஸ்வரா கல்லூரி)

கடந்த 08ஆம் திகதி காலமான அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (28.06.2015) ஞாயிற்றுக்கிழமை கடையில் நடைபெறுகின்றது.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பழைய மாணவர் மன்றம் எல்லாம் வல்ல வைத்தீஸ்வரப் பெருமானை வேண்டி நிற்கின்றது.



பழைய மாணவர் மன்றம்
வைத்தீஸ்வராக்கல்லூரி.

**இலவச அழகுக் கலைப் பயிற்சி**

(* நிபந்தனைக்குட்பட்டது)
Nivithra
நிவித்ரா அழகுக்கலை நிலையத்தின்
இலவச அழகுக்கலை புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன



Basic Course, Advance beauty therapy, Diploma எனும் 3 பிரிவுகளாக வகுப்புக்கள் நடைபெற உள்ளன

முதல் 10 பதிவுகளுக்கு கேக் ஐசிங் பயிற்சி இலவசம்!!!

உங்கள் பெயர், தொலைபேசி இலக்கத்தை கீழ்வரும் இலக்கத்துக்கு SMS அனுப்பி பதிவுகளுக்கு முந்துங்கள்.

**Nivithra Beauty Parlour & Training Academy**
340, K.K.S. Road, Jaffna.
0766 919 277
(61332)(10.6.3)

**மரண அறிவித்தல்**

**திருமதி நவமணி(கிறேஸ்) (இராசக்கா) நாகலிங்கம்**



யாழ்ப்பாணம், கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் பூம்புகார், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட நவமணி நாகலிங்கம் 26.06.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை செல்லமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு திருமதி வேலுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நாகலிங் கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்புச் சகோதரியும் சரஸ்வதியின் மைத்துனரும் வசந்தி (சாவகச் சேரி ஆதார வைத்தியசாலை), வசந்தகுமார் (சேட்டிஸ் லங்கா - யாழ்ப்பாணம்), சியாமளா, சுபாசினி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவஞானமூர்த்தி, தேவகி, காலஞ்சென்றவர்களான பானுதேவன், பாலேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் பிந்துஷன், மதுமிலா, நிருஷன், மதுநிதா, மதுஷா, கௌசிகா, காயத்திரி, விஜிதரன், கண்ணன், நிலா, டக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.06.2015) ஞாயிற்றுக் கிழமை பி.ப 2.00 மணியளவில் இல.90, பூம்புகார், அரியாலை கிழக்கு எனும் முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைமுனங்கு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.90, பூம்புகார்,
அரியாலை கிழக்கு, அரியாலை.

தகவல்:
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவை. அரசடி மாரியம்மன் அலங்கார உற்சவம் நாளை நிறைவு

மாவிட்டபுரம் அருள்மிகு மாரியம்மன் ஆலய அலங்கார உற்சவத்தின் இறுதிநாள் நாளை திங்கட் கிழமையுடன் நிறைவு பெறவுள்ளது.
கடந்த 18 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடை பெற்றுவரும் இவ் உற்சவத்தின் 12 ஆம் நாளான நாளையும் வழமை போல் மாலை 6 மணிக்கு ஸ்நபனா அபிஷேகமும், இரவு 7 மணிக்கு விசேட பூசையும் நடைபெறவுள்ளன.

# வருடாந்த திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 28
புலோலி வடமேற்கு வில்லிபாதி முருகன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை திங்கட் கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறும்.தினமும் காலை 10.30மணியளவில் அபிஷேகமும் மாலை 6.30 மணியளவில் வசந்த மண்டப பூசையும் இடம்பெற்று சுவாமி வீதி உலாவும் இடம்பெறும். (த)

# கைதி ஒருவர் தப்பியோட்டம்

கொழும்பு, ஜூன் 28
கைதி ஒருவர் சிறைச்சாலையில் இருந்து தப்பி ஓடியுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ரோஹண புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 3.30மணியளவில் மட்டக்களப்பு சிறைச்சாலையில் இடம்பெற்றுள்ளது.
கைதி தப்பியோடியமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள கொழும்பில் இருந்து புலனாய்வு அதிகாரியும்,உதவி அத்தியட்சகர் ஒருவரும் நேற்று மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகச் சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.
இதேவேளை, இவர்களின் விசாரணைகளை அடுத்து தப்பியோடிய கைதி தொடர்பில் சிறைச்சாலை அதிகாரிகளுக்குத் தொடர்பு இருப்பின் அவர்கள் விசாரணைக்காகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கபடுவார்கள் எனவும் அவர் கூறினார்.
தப்பியோடிய கைதியை மீண்டும் பிடிப்பதற்கான நடவடிக்கைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)

**வீடு வாடகைக்கு**

நல்லூர் சட்டநாதர் வீதியில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
071 727 3531, 077 664 8656

**வாகனம் வாடகைக்கு**

திருமண சேவைக்கான கார் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
077 407 2299, 077 226 9935

**தேவை**

எமது அச்சகத்திற்கு அனுபவம் வாய்ந்த
* புத்தகம் கட்டுநர், ஸ்கிறீன் பிறிண்டிங் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.
பழக ஆர்வமுள்ளவர்களும் விரும்பத்தக்கது

நேரில் வரவும்
(கதிரேசன் கோவில் அருகாமை)
மேனகா பிறிண்டேர்ஸ்
இல 367, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**

நல்லின கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 999 4655
திருநெல்வேலி

**விற்பனைக்கு**

WASHING MACHINE, DRESSING TABLE, ARPICO CUSHION SETTIES, RICE COOKERS, BREAD TOASTERS, ETC FOR SALE
தொடர்பு: 077 2425 509

**காணி விற்பனைக்கு உண்டு**

திருநெல்வேலி விவசாய பண்ணை பிரதான பலாலி வீதிக்கு மேற்குப் புறமாக 100 மீற்றர் தூரத்திற்குள் கலைவாணி மில் லேன் சமீபமாக கருணாலயத்திற்கு பக்கத்தில் நான்கு பரப்பு தோட்டக்காணி உடன் விற்பனைக்குண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு : 075 767 6739

**காணிகள் தேவை**

வடக்கு கிழக்கு மாகாணங்களில் 50 ஏக்கருக்கு மேற்பட்ட மேட்டுக் காணிகள் அல்லது வயல்காணிகள் தேவை.
எவ்வகையான உறுதிப்பத்திரங்கள் இருப்பினும் ஏற்றுக் கொள்ளப்படும்.
(61105)(9.3)
தொடர்பு: 076 688 9008
E.mail - nnjackshane@gmail.com

VACANCIES@

**Blue Ocean** GROUP OF COMPANIES | LINK ENGINEERING

எமது நிறுவனத்தின் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்புக் கிளைகளுக்குப் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- CIVIL ENGINEERS
- QUANTITY SURVEYORS
- OFFICE ADMINISTRATORS
- PROJECT ACCOUNTANTS
- MANAGEMENT TRAINEES

PROJECT ACCOUNTANTS, MANAGEMENT TRAINEES ஆகிய பதவிகளுக்கு CA Sri Lanka, ACCA மற்றும் CIMA ஆகிய பாடநெறிகளுக்குரிய Practical Training தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படும்.

- சிறந்த தொடர்பாடல் திறன்கள், நட்புறவுடன் பழகும் தன்மை வாய்ந்த ஆளுமை மிக்க ஆண், பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம
- தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தொடர்பாடக் கூடிய திறமையைக் கொண்டிருப்பதுடன் சிங்கள மொழிப் புலமை மேலதிக தகமையாகக் கருதப்படும
- தேவையான கணணி அறிவு மற்றும் சிறந்த ஒழுங்கமைப்புத் திறன்களுடன் சொந்தமாகக் கருமங்களை ஆற்றக் கூடிய ஊக்கப்பாடு என்பன அவசியமாகும்
- விண்ணப்பிக்கப்படும் அதே வகையான அல்லது அதற்கு ஈடான பதவிகளில் முன்னர் பணியாற்றி இருத்தல் மேலதிக தகமையாகக் கருதப்படும்.

உறவினர் அல்லாத இரு தொடர்பாளர்களின் தகவல்களுடன் கூடிய புகைப்படம் இணைக்கப்பட்ட உங்களது சுய விபரங்களைக் கீழ்வரும் எமது முகவரிக்கு இந்த விளம்பரப் பிரசுரத்திலிருந்து 7 நாட்களுக்குள் எம்மை அடையக் கூடிய வகையில் அனுப்பி வைக்கவும் அல்லது என்ற எமது மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும். info@kbbssl.com

Blue Ocean Group of Companies, No. 281, KKS Road, Jaffna
மேலதிகத் தகவல்களுக்கு: hr@blueocean.lk

No. 32, 2nd Floor, Galle Road, Dehiwala, Sri Lanka Tel : 011) 2 722 217
www.blueocean.lk / www.link.lk

**LONDON STANFORDS COLLEGE KBBS CAMPUS**

Blue Ocean Group is a diversified conglomerate with over 15 subsidiary companies under a single solid wing which caters specialized in-depth industry experience and expertise on various portfolios. Knowledge Base Business Studies is subsidiary of Blue Ocean Group, a pioneer educational institue in conducting CIMA , ACCA, CA and AAT professional accountancy courses.

We are looking for dynamic, result oriented individuals who are team players with the ability to perform with the minimum supervision. A chosen candidate will be exposed to an environment conducive to career development. An attractive remuneration package along with the fringe benefits is also available to the selected candidate



**Post of IT LECTURERS**

- Applicants must have an experience in lecturing IT and Multimedia related courses.
- Previous lecturing experience is a pre-requisite of this role
- Successful candidates will have good command of the English language
- Challenging ideas, encouraging students to develop skills in critical and rational thinking
- Communicating complex information to a range of diverse students, both orally and in writing

Please forward your **CV (with Photo)** addressed to the following with the contact details of two non – related referees to reach us within **7 working days** of the advertisement or e-mail to **tayyebqureshi@gmail.com**

www.kbbssl.com

**KBBS CAMPUS**
( A SUBSIDIARY OF BLUE OCEAN GROUP OF COMPANIES )
Head Office - No: 75, Galle Road, Dehiwala / Jaffna Branch - No: 281, K. K. S Road, Jaffna
Tel : 011 2717902 | Email : info@kbbssl.com / gm@kbbssl.com


# முருங்கன், நானாட்டான் பகுதி
# மாணவர்களுக்கான தரம் 5 இலவசக் கருத்தரங்கு

**முன்னணி பத்திரிகையான உதயன் IMSESO அமைப்புடன் இணைந்து புலமைச்சுடர் மூலம் மன்னார் வலயக்கல்வி அலுவலகத்தின் அனுமதியுடன் நடத்தும் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு**

**இடம் : மோட்டக்கடை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை**

**காலம் : 01.07.2015 புதன்கிழமை காலை 8.30 மணி**

**வளவாளர்கள் :** வவுனியா மாவட்ட முன்னணி ஆசிரியர்
**என்.எஸ்.தீபன்**
மன்னார் மாவட்ட முன்னணி ஆசிரியர்
**ஜி.கயன்**

மேலதிக தொடர்புகளிற்கு :
0778874221
0714273035
(கருத்தரங்கு இணைப்பாளர்கள்)

**அனைத்து மாணவர்களையும் பங்குபற்றி பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

ஊடக அனுசரணை :
தொலைக்காட்சி வசந்தம் TV
பத்திரிகை சுடர் ஒளி
இணை அனுசரணை : ஒளிஅரசி
பிரதான ஏற்பாடு : புலமைச்சுடர்
பிரதான அனுசரணை : உதயன் தமிழ் தேசிய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## வேலை வாய்ப்பு

✱கணிய அளவையியலாளர் (Quantity Surveyor)
HND/NDTதகைமைச்சான்றிதழ் மற்றும் இரண்டு வருடம் முன்னனுபவம்.

✱நிதி முகாமையாளர்(Finance Manager)
HNDA அல்லது அதற்கு சமனான தகைமையும், குறித்த துறையில் இரண்டு வருடம் முன்னனுபவம்.Quick book package தொடர்பான அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.

தகைமையுடையோர் முழு விவரங்களும் அடங்கிய விண்ணப்பத்தை 06.07.2015 ஆம் திகதிக்கு முன்பாக கிடைக்கக்கூடியதாக பின்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

மனிதவள முகாமையாளர்
இல. 45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(61423) hreuroville@gmail.com

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய பரிபாலன சபை உறுப்பினரும் கைலாய வாகனத் திருவிழா உபயகாரருமாகிய **பொன்னுத்துரை கருணாகரன்** அவர்களது அன்புத் தாயார்

திருமதி
**சோதி பொன்னுத்துரை**

அவர்கள் அம்பாள் அடியில் சரணடைந்த செய்தி எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்துகிறது. அவரின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தவர்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

**உரும்பிராய் பர்வதவர்த்தனி**
**அம்மன் கோயில் பரிபாலன சபை, உரும்பிராய்.** (61349) (10.3)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கனகேந்திரன் அன்னலிங்கம்**

தோற்றம்
28.08.1948

மறைவு
28.06.2012

இமைகள் மூடித்திறப்பதற்குள்
வருடங்கள் மூன்றாகி விட்டன
நாம் வாழும் நாள்களில்
உங்கள் நினைவுகள் எம்முடன் என்றென்றும்
வாழும்.... வாழும்.... வாழும்....

No : 106,
இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம். (61337) (9.7.3)

உங்கள் பிரிவால் துயருறும்;
குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் மலர்வு
11.02.1940

விண்ணில் ஒளிர்வு
28.06.2012

**அமரர் செல்லப்பா திருஞானயோகநாதன்**

மூவாண்டுகள் ஆனதுவோ உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை எம் இதயம் அன்பும் பாசமும்
நிறைந்த பொக்கிஷம் எங்கள் தந்தை
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இராசவீதி, தோப்பு,
அச்சுவேலி. (61338) (15.6.3)

உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**தியாகராசா கதிரவேல்**
திதி: பூர்வபக்க துவாதசி

பிறப்பு
22.10.1941

இறப்பு
09.07.2014

ஆண்டு ஒன்று ஆனதுவோ! ஆனால்
அன்பு முகம் மாறவில்லை
சென்ற இடம் நிழல் போல தெரியுது
அன்று சொன்ன வார்த்தை அலைபோல மோதுது
வாழ்வே மாயம் என்று வாழ்ந்து காட்டி விட்டீர்கள்
இனிப்பிறப்பு ஒன்று இருந்தால் உங்கள்
மனைவியாகவும், நீங்கள் எனது கணவராகவும்
வரவேண்டும் என்று இறைவனைப்
பிரார்த்தித்து ஈரவிழிகளுடன் காத்து
இருக்கும் அன்பு மனைவி

9D, மல்லாவி,
போகபுரம்.

இந்திராவதி கதிரவேல்.
மக்கள்,மருமக்கள், பேரக்குழந்தைகள்.

## மரண அறிவித்தல்

**இளையதம்பி இராசையா**
(இளைப்பாறிய இ.போ.ச சாரதி)



மந்துவிலைப் பிறப்பிடமாகவும் கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி இராசையா நேற்று (27.06.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இளையதம்பி சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற கந்தையா சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் கனகம்மாவின் பாசமிகு கணவரும் சாரதா, சர்வானந்தன்(குகன் சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகம்மா, கந்தையா(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தவச் செல்வியின் (சுவிஸ்) அன்பு மாமனாரும் தினோத்தமன் (சுவிஸ்), குபேஸ்நாத் (ஜேர்மனி), சுகந்தா(சுவிஸ்), ஹன்சி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு பேரனும் றைசாவின்(ஜேர்மனி) அன்பு பூட்டனும் கனக பாக்கியத்தின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.06.2015) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊற்றல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி வடக்கு,
கைதடி.
021 320 1525 (41199)

தகவல் :-
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**கந்தையா பாலகுமார்**

தோற்றம் 27.02.1953 மறைவு 26.06.2015



யாழ்ப்பாணம் கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாக கொண்ட கந்தையா பாலகுமார் 26.06.2015 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா இராசம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற வர்களான மார்க்கண்டு சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் அம்பிகாதேவியின் கணவரும் அம்ரிதாவின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2015) ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible],
கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (61419)

தகவல் :-
மனைவி.

## துயர் பகிர்கின்றோம்

**கலாநிதி கே.எம் பஞ்சாபிகேசன்**



எமதுபிரதேசமாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக உதவும் நோக்குடன் கலாநிதி முருகப்பா பஞ்சாபிகேசன் என்ற மாணவர் நிதி யத்தை 2011 ஆம் ஆண்டு எமது மன்றில் ஆரம்பித்து எமக்கு பெரும் ஊக்கத்தை தந்த அன்னாரின் பிரிவு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. தென்மாராட்சியின் பெரும் சொத்தான இக்கலைஞனின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் கலைக்குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

சாவகச்சேரி கைத்தொழில்
வணிகர் மன்றம் (c 46387)

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
1934.12.25

இறப்பு
2015.06.20

எமது காரைநகர் பிரதேசசபையில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
**திருமதி க. றொபினி** அவர்களின்
அன்புத்தாய்

**பேபிநாயகி நல்லதம்பி**

அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம். (16215) (3.9)

**ஊழியர் நலன்புரி சங்கம்,**
**பிரதேசசபை, காரைநகர்.**

## மரண அறிவித்தல்

**மேர்வின் பிலிப்**
**கமலபூசணி (Merwiyns)**



இல.39, புதிய செம்மணி வீதி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மேர்வின் பிலிப் கமலபூசணி நேற்று (27.06.2015) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அன்ரனி சின்னத்துரை-சாந்தநாயகி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அன்ரனி மேர்வின் பிலிப்பின் அன்பு மனைவியும், ஸ்கந்தராஜா (இலண்டன்), யோகரஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கஜேந்திரன், கௌசிகி (இலண்டன்), கலைவாணி (பிரான்ஸ்), பராபரன் ஆகியோரின் அன்புத் தாயும், கிரிதரன் (இலண்டன்), பிரதீபன் (பிரான்ஸ்), கார்த்திகா ஆகியோரின் அன்பு மாமியும், பிரவீன், லயா, ஷமீன், யஸ்ரின், ஜஸ்றியா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

39, புதிய செம்மணி வீதி, (61424) (10.6.1)
நல்லூர் வடக்கு, கல்வியங்காடு.
T.P: 0774010633, 077 400 3780


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சுற்றாடல் தினத்தை கொண்டாடும் லங்கெம்

லங்கெம் ரொபியலக் நிறுவனமானது, இயற்கையின் வர்ணங்களை ஆராதிக்கும் வகையிலமைந்த ஒரு அற்புதமான புகைப்படப் போட்டியை நடத்துவதன் மூலம் உலக சுற்றாடல் தினத்தை இம்மாதம் கொண்டாடுகின்றது. 'இயற்கை புகைப்படப் போட்டி' என்று அழைக்கப்படும் இப் போட்டியானது ரொபியலக் பேஸ்புக் பக்கத்தில் 2015 ஜூன் 30ஆம் திகதிக்கு முன்னர் தமது புகைப்படங்களை தரவேற்றம் செய்யுமாறு அனைத்து இலங்கையர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றது.

ஒவ்வொரு பங்குபற்றுனரும் மொத்தமாக ஐந்து புகைப்படங்களை சமர்ப்பிக்க முடியும். அனைத்து புகைப்படங்களும் இயற்கையுடன் தொடர்புபட்டதாக இருப்பதுடன், இயற்கையின் வர்ணங்களை ஆராதிப்பதாகவும் அமைய வேண்டும். இலங்கை புகைப்படவியலாளர்களின் தேசிய ஒன்றியத்தைச் சேர்ந்த தகுதிவாய்ந்த நடுவர்கள் குழுவினரால் முதல் மூன்று அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். அவர்கள் நற்சான்றிதழ்கள் மற்றும் ரொபியலக் வர்ணப்பூச்சை கொள்வனவு செய்வதற்கான பெறுமதிவாய்ந்த வவுச்சர்களை பரிசாகப் பெறுவார்கள்.

இப்போட்டிக்காக சமர்ப்பிக்கப்படும் புகைப்படங்கள் கணினி மென்பொருள்களைப் பயன்படுத்தி மோசடியான முறையில் மாற்றியமைக்கப்பட்டதாக இருக்கக் கூடாது என பங்குபற்றும் விண்ணப்பதாரிகளுக்கு அறிவுறுத்தப்படுகின்றது. அதேவேளை சமர்ப்பிக்கப்படும் புகைப்படங்களில், பங்குபற்றுனர்களின் பெயர்கள் அல்லது ஏனைய விவரங்கள் காணப்படக் கூடாது. போட்டிக்காக சமர்ப்பிக்கப்படுகின்ற புகைப்படங்களின் ஒட்டுமொத்த பதிப்புரிமை அதனை தரவேற்றம் செய்கின்றவர்களுக்கே உரியதாகும். பதிப்புரிமை தொடர்பான எந்தவொரு விடயத்துக்கும் லங்கெம் நிறுவனம் பொறுப்பாளியாக மாட்டாது.




லங்கெம் சிலோன் பி.எல்.சி. நிறுவனத்தின் பணிப்பாளர் றுவான் ரீ. வீரசிங்க கூறுகையில், 'இயற்கை எனும் தாய் மனிதகுலத்துக்கு நன்கொடையாக அளித்த வர்ணத்தட்டுடன் இணைந்து பணியாற்றுவதே எமது வணிகத்தின் ஒரு முக்கிய பகுதியாக காணப்படுகின்றது. உலக சுற்றாடல் தினம் இம்மாதம் கொண்டாடப்படுகின்ற சூழ்நிலையில், இயற்கையின் வர்ணங்களை ஆராதிக்கவும் சுற்றாடலுக்கு பொருத்தமான கௌரவ அந்தஸ்தை வழங்குவதற்கும் நாம் தீர்மானித்தோம். இந்தப் போட்டியின் மூலம், எதிர்கால தலைமுறையினருக்காக சுற்றாடலை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதிலும் நாம் கூடிய கவனம் செலுத்துகின்றோம். இதனை எமது பொறுப்பாக நாம் கருதுகின்றோம். தேசிய மட்டத்திலான இப் போட்டி தொடர்பாக எமக்கு கிடைக்கப் பெற்றுள்ள பிரதிபலிப்புக்கள் எம்மை மிகவும் ஊக்கப்படுத்துவதாக காணப்படுகின்றன. இப்போட்டிக்காக ஏற்கனவே நாம் அதிகளவிலான நுழைவு விண்ணப்பங்களை பெற்றுக்கொண்டுள்ளோம்' – என்றார். (த)




# களனி கேபிள்ஸ் உயர் இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளருக்கு சான்றிதழ்

இலங்கையில் முதல் தர பாதுகாப்பான இலத்திரனியல் வயர்கள் மற்றும் தொடர்பாடல் வயர்கள் உற்பத்தியில் ஈடுபடும் களனி கேபிள்ஸ் பிஎல்சி, தனது சமூக பொறுப்புணர்வு செயற்றிட்டமான களனி சவிய திட்டத்தை பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்துடன் இணைந்து 2007 ஆம் ஆண்டு முதல் முன்னெடுத்து வருகிறது.

களனி கேபிள்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி மஹிந்த சரணபால மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் அதுல சேனாரத்ன ஆகியோர், அண்மையில் களனி கிளாரியன் ஹோட்டலில் இடம்பெற்ற களனி சவிய திட்டத்தின் மூலம் வெற்றிகரமாக தமது கற்கைகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்களை கையளிக்கும் வைபவத்தில் பங்கேற்றிருந்தனர். இலத்திரனியல் பொறியியலாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் பேராதனை பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடத்துடன் இணைந்து 2007 ஆம் ஆண்டில் களனி சவிய சமூக பொறுப்புணர்வு திட்டம் ஆரம்பித்திருந்தது.

களனி கேபிள்ஸ் பிஎல்சி பிரதம நிறைவேற்று அதிகாரி மஹிந்த சரணபால கருத்து தெரிவிக்கையில்; பாடசாலை கல்வியை பூர்த்தி செய்தவர்களும், ஆரம்ப நிலையிலுள்ள இலத்திரனியல் பொறியியலாளர்களுக்கும் சுய தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு களனி சவிய பெரிதும் உதவியாக அமைந்துள்ளது. இலத்திரனியல் பொறியியல் பயிற்சி திட்டம் சமூக பொறுப்புணர்வு செயற்றிட்டமாக அமைந்துள்ளதுடன், இது வரையில் நாடு முழுவதையும் சேர்ந்த 250க்கும் அதிகமானவர்களுக்கு பயிற்சிகளை வழங்கியுள்ளது. இதில் பெருமளவானோர் தற்போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களில் பணியாற்ற இணைந்துள்ளனர், தமது வாழ்க்கையில் உயர்ந்த நிலையை எய்தியுள்ளனர். இந்த பயிற்சித் திட்டங்களை முன்னெடுக்கின்றமைக்காக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்துக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். க.பொ.த. சாதாரணதர கல்வித் தகைமையைக் கொண்ட மாணவர்களுக்கு சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக் கழக சான்றிதழை பெற்றுக் கொடுக்கும் ஒரே பயிற்சித் திட்டமாக களனி சவிய அமைந்துள்ளது– என்றார்.

நாட்டின் வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் உள்ளடங்கலாக ஏனைய பகுதிகளுக்கும் களனி சவிய திட்டத்தை விஸ்தரிப்பதற்கு களனி கேபிள்ஸ் திட்டமிட்டுள்ளதாக பிரதம நிறைவேற்று அதிகாரி மேலும் குறிப்பிட்டிருந்ததுடன், களனி சக்தி எனும் தொனிப்பொருளில் கடந்த ஆண்டில் நாம் இந்தத் திட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து வடக்கு, கிழக்கில் முன்னெடுத்திருந்தோம் – என்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர். அதுல சேனாரத்ன கருத்து தெரிவிக்கையில்; களனி சவிய என்பது, மாணவர்களுக்கு சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொடுக்கும் வகையிலமைந்த திட்டமாக அமைந்துள்ளது. இந்த கற்கையை பூர்த்தி செய்து, இன்றைய தினம் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்ட மாணவர்கள் நாட்டின் கல்வித் துறையில் விசேட நிலையில் உள்ளவர்களாக அமைந்துள்ளனர். இந்த சான்றிதழ் பெற்றவர்களிடம் நான் ஒரு தாழ்ந்த வேண்டுகோளை விடுக்கிறேன், பேராதனைப் பல்கலைக் கழகம் நாட்டின் கல்வித்துறையில் முன்னிலையாளராக திகழ்கிறது. தொழில்நுட்ப அறிவை வழங்குவது, மக்கள் மத்தியில் சிறந்த தொடர்பாடல்களை பேணுவது என்பவற்றை பொறுத்தமட்டில், இந்த பல்கலைக்கழகம் ஏனைய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் உயர்ந்த நிலையில் காணப்படுகிறது. இந்த உத்வேகத்தை முன்நோக்கி கொண்டு செல்வதற்கான பொறுப்பை நீங்களும் கொண்டுள்ளீர்கள் என உபவேந்தர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் தலைமை அதிகாரி பேராசிரியர் எல். ராஜபக்ஷ, களனி சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் பணிப்பாளர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ, களனி கேபிள்ஸ் பிஎல்சி விற்பனை பிரிவின் பொது முகாமையாளர் அனில் முனசிங்க, பிரதம நிதி அதிகாரி ஹேமமாலா கருணாசேகர, செயற்பாடுகளுக்கான பொது முகாமையாளர் உபுல் மஹாநாம; மனித வளங்கள் பிரிவின் முகாமையாளர் கிஹான் விதானகே மற்றும் வர்த்தக நாம அபிவிருத்தி முகாமையாளர் சன்ன ஜயசிங்க ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

களனி சவிய கற்கையை பூர்த்தியை செய்த ஆறாம் தொகுதி மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், களனி கேபிள்ஸ் விற்பனை பிரிவின் பொது முகாமையாளர் அனில் முனசிங்க உரையாற்றியிருந்தார். கடந்த ஆண்டுகளில் இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேவை அதிகரித்திருந்தது. போதியளவு அனுபவமின்மை காரணமாக, இந்த தேவையை நிவர்த்தி செய்ய முடியாத காணப்பட்டது. எனவே, களனி சவிய சான்றிதழ் வைத்திருப்போர், தமது அறிவை தொடர்ச்சியாக மெருகேற்றம் செய்து கொள்ள வேண்டியது முக்கிய தேவையாக அமைந்துள்ளது – என்றார். (த)

# லைவ்போயின் ஏற்பாட்டில் சிறுவர் கிரிக்கெட் பயிற்சிகள்

இந்த ஆண்டின் சிலிம் நீல்சன் மிகச் சிறந்த விரைவாக நகரும் நுகர்வோர் வர்த்தக நாமமான லைவ்போய், கிரிக்கட் விற்பன்னரான குமார் சங்ககார அவர்களிடமிருந்து கிரிக்கட் நுணுக்கங்களைக் கற்றுக்கொள்வதற்காக ஏற்பாடு செய்யப்படவுள்ள கிரிக்கட் பயிற்சி முகாம் ஒன்றில் இணைந்து கொள்ள முன்வருமாறு நாடெங்கிலுமுள்ள சிறுவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

வாழ் நாளில் அரிதாகக் கிடைக்கும் இந்த வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கு பின்புறத்தில் குமார் சங்ககார அவர்களின் படம் பொறிக்கப்பட்டுள்ள 3 லைவ்போய் ரோட்டல் 100 கிராம் சவர்க்கார மேலுறைகளை த.பெ 2920, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். ஜூலை 12 மற்றும் ஓகஸ்ட் 14 ஆகிய திகதிகளில் இடம்பெறவுள்ள இரண்டு அதிர்ஷ்டக் குலுக்கல் சீட்டிழுப்பு மூலமாக 60 அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்த சிறுவர்கள் கிரிக்கட்டின் எதிர்காலச் சிற்பிகள் மட்டுமல்லாது, எமது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளும் கூட. இதை நான் ஒரு பாக்கியமாகக் கருதுகின்ற அதேசமயம், அவர்களது வளர்ச்சிப் பயணத்தில் நான் பெற்றுக்கொண்ட அனுபவங்களை அவர்களுக்கு கற்றுத்தர வேண்டியது எனது கடமையென்றே நான் எண்ணுகின்றேன் என்று குமார் சங்ககார அவர்கள் குறிப்பிட்டார்.

கிருமிகளிடமிருந்து பாதுகாப்பளிப்பதில் நம்பிக்கைக்கு பாத்திரமளிக்கும் சவர்க்காரமான லைவ்போய், காய்ச்சல், சளி போன்ற நோய்த்தொற்றை ஏற்படுத்தும் 10 வகையான கிருமிகளிடமிருந்து பாதுகாப்பளிக்கின்றது. கடந்த 3 ஆண்டுகளாக குமார் சங்ககார அவர்களுடன் இணைந்து நாடெங்கிலும் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் தொடர்பான செய்திகளை மக்கள் மத்தியில் லைவ்போய் எடுத்துச் சென்றுள்ளது.

உலகப் புகழ் பெற்ற, அனுபவம் வாய்ந்த கிரிக்கட் நட்சத்திரமான குமார் சங்ககார அவர்களிடமிருந்து இந்த முகாமில் 7 முதல் 15 வயதுக்குகிடைப்பட்ட வளர்ந்து வரும் இளம் கிரிக்கட் வீரர்கள் பல நுணுக்கங்களைக் கற்றுக்கொள்ள முடியும். 100 சம்சுங் கலக்ஸிரப்கள் மற்றும் ஏனைய பலவியப்பூட்டும் பரிசுகளையும் லைவ்போய் இதன் மூலம் வழங்கவுள்ளது. நுழைவுகளை அனுப்புவதற்கு எந்த விதமான கட்டுப்பாடுகளும் கிடையாது. ஒருவர் தமக்கு வேண்டிய எத்தனை



நுழைவுகளையும் அனுப்பிவைக்க முடியும். இதன் மூலமாக வெற்றி பெறுவதற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட வாய்ப்புக்கள் உள்ளன. நுழைவுகளை ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி ஜூலை 30 ஆகும்.

நேர்மையும், கனவான் பண்பும் கொண்ட ஒரு தலைவராகவும், நாட்டின் மிகச் சிறந்த விளையாட்டு நட்சத்திரங்களுள் ஒருவராகவும் திகழும் குமார் அவர்களின் அனுபவமும், ஆற்றலும் களத்துக்கு உள்ளே மட்டுமன்றி வெளியேயும் முன்னுதாரணமாகக் கொள்ளக்கூடியவை. இது அடுத்த தலைமுறையினருக்கு மிகவும் பெறுமதி மிக்க ஒரு வாய்ப்பாகவும், கற்றுக்கொள்ளும் அனுபவமாகவும் அமையும். இலங்கையிலுள்ள இளம் கிரிக்கட் ஆர்வலர்களுக்கு அவரிடமிருந்து பயிற்சி பெறும் வாய்ப்பை வழங்குவதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளோம். தனித்துவமான இந்த அனுபவமானது அவர்களின் வாழ்வு பிரகாசிப்பதற்கு வழிகோலுவதுடன், இதில் அங்கம் வகிப்பதையிட்டு லைவ்போய் மிகவும் பெருமை கொள்கின்றது என்று லைவ்போய், வர்த்தக நாமமுகாமையாளரான சாலிக அழகக்கோன் அவர்கள் குறிப்பிட்டார்.

உலகில் கோடிக்கணக்கான மக்கள் மத்தியில் ஆரோக்கியத்தையும், சுகாதாரத்தையும் ஊக்குவிக்கும் நோக்குடன், கிருமிகளிடமிருந்து பாதுகாப்பளிக்கும் சவர்க்கார வர்த்தக நாமங்கள் மத்தியில் உலகில் அதிகளவில் விற்பனையாகும் சவர்க்காரமாக லைவ்போய் திகழ்ந்து வருகின்றது. அந்த வகையில் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக கைகளைக் கழுவும் பழக்க வழக்கத்தை மக்கள் மத்தியில் விழிப்புணரச் செய்யும் செயற்பாடுகளை லைவ்போய் முன்னெடுத்து வருகின்றது. நாடெங்கிலும் ஆரோக்கியத்தையும், சுகாதாரத்தையும் மேம்படுத்தும் செய்திகளைபரப்பும் வகையில் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியம் போன்ற பல்வேறு அமைப்புக்களுடன் பங்குடமைகளை லைவ்போய் ஏற்படுத்தியுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையாளர் பற்றாக்குறை; பதிவுத் தபால்கள் தேக்கம்

கொழும்பு, ஜூன் 28


மத்திய அஞ்சல் பரிமாற்றத்தில் நிலவும் சேவையாளர் பற்றாக்குறையை அடுத்து தற்போது சுமார் 2லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான பதிவுத் தபால்கள் விநியோகிக்கப்படாமல் தேங்கி கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை அஞ்சல் திணைக்களத் தொழிற் சங்கம் தெரிவித்துள்ளது.

விசேடமாக பல்கலைக்கழக அனுமதிக்கான கடிதங்கள் மற்றும் முதலாம் தரத்துக்கு மாணவர்களை உள்வாங்குதல் தொடர்பிலான ஆவணங்கள் இதில் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை– தபால் திணைக் களத்தில் காணப் படும் சேவையாளர் வெற்றிடமே கடித விநியோகத் தாமதத்துக்கான பிரதான காரணம் என அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பு அதிகாரிகள் சங்க தலைவர் சீ.கீர்த்திரத்ன தெரிவித்துள்ளார். (த)





## மூலிகைகளின் அரசன்
### தற்போது இலங்கையில்



ஜப்பான், கொரியா மற்றும் சீனா ஆகிய தென் கிழக்கு ஆசிய நாடுகள் ஆரோக்கியம் மற்றும் நீண்ட ஆயுள் பொறுத்தவரையில் வரலாறு முழுவதும் ஓர் உயர்ந்த ஸ்தானத்தை பேணி வருகின்றன. மாட்டிறைச்சி, பன்றியிறைச்சி முதலிய கொழுப்பு மிகுந்த உணவுகளும் மொனோசோடியம் குளுட்டமேட் (MSG) ஆகியவையும் உட்கொள்வதன் மூலம் அவர்கள் நீண்ட ஆயுளைப் பெற முடிந்தது. மேற் குறிப் பிட்டதற் கு காரணம் என்னவென ஆராய்ந்து பார்க்கையில் பல துறைகளை ஆராய வேண்டிவரும். ஒரு தெளிவான காரணமாக அண்மைக் காலங்களில் ஏற்பட்ட சுகாதாரத் துறையில் மலர்ச்சியைக் குறிப்பிடலாம். உயர்ந்த மற்றும் அதிநவீன மருத்துவ வசதிகளுடன் கூடிய மேற்கத்தேய வைத்திய முறையினால் ஏன் அவ்வாறான உயரத்தை தொட முடியவில்லை என்பது இன்னும் விடை காணாத ஒரு புதிராகத் தான் உள்ளது. நீண்ட ஆயுள் மற்றும் தரமான வாழ்வுக்காக அவர்கள் கடைபிடிக்கும் முறைமைகளிலுள்ள வேற்றுமையே இதற்குக்காரணமாக அமைந்துள்ளது. இது வரை தீர்வுகாணாத நீண்ட புதிருக்காக தற்போது விடை காண்பதற்கு உலகு முழுவதும் ஆழமாக ஆராய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மன்சூரியா எனும் மேட்டு நிலங்களில் வளரும் ஒரு தாவரத்தின் சாற்றில் உள்ள பதார்த்தங்களே பல்லாயிரமாண்டுகளாக நீண்ட ஆயுள் மற்றும் தரமான வாழ்க்கைக்காக பயன்படுத்துள்ளது. பல்வேறு நோய்களை குணப்படுத்தும் அற்புத இயல்பைக் கொண்ட இத்தாவரத்தின் விஞ்ஞானப் பெயர் Panax ஆகும்.

Panacea என்ற வார்த்தையில் "அகில குணப்படுத்தல்" என்று பொருளாகும். இது கிரேக்க மொழியிலிருந்து உருவானதாகும். கிரேக்க மொழியில் "Pan" என்பது "எல்லாம்" என்ற அர்த்தம் தருவதுடன் "akos" என்பது "குணப்படுத்தல்" ஆகும். இத் தாவரத்தை வளரும் நாட்டின்


[illegible]

மனித உடலில் எந்த பாகத்திலும் ஏற்படும் நோய்களை குணப்படுத்தும் அற்புத சக்தி கொண்டுள்ளது இது.

மூல காரணத்திற்கு சிகிச்சை அளிக்காமல் அறிகுறிகளிற்கே சிகிச்சை அளிக்கும் மேற்கத்திய வைத்திய முறையைக் காட்டிலும் ஜின்செங்கானது இயற்கை உடற் செயற்பாடுகளை மேம்படுத்தி ஊக்குவிக்கின்றது. கொழுப்பு அமிலங்கள் உடலுக்குள் உறிஞ்சுவதும், சேமிப்பதும் ஜின்செங்கினால் தடுக்கப்படும். எனவே உடலில் உயர் கொலெஸ்டரோல் அளவை குறைத்து இருதய நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கும். அது இரத்தத்திலுள்ள சர்க்கரையின் அளவையும் அதிகப்படாமல் வைக்கின்றதுடன் நீரிழிவு நோயை வராமல் தடுக்கும். ஊண்ம ஆக்கச் சிதைவு வீதத்தை உயர்ந்த அளவில் வைப்பதுடன் ஹோர்மோன்களை சமநிலைப் படுத்தி உடல் உறுப்புகளை சரியாக இயக்க வைக்கப் படுகின்றது. இதனால் மனத் திருப்தி ஏற்படுவதுடன் நீண்ட ஆயுளும் பெறலாம். மாதவிடாயின் போது ஏற்படும் வலியை தனிக்கும் அற்புத ஆற்றல் கொண்டுள்ளது. ஜின்செங். உணர்ச்சி மண்டலம் சார்ந்த உறுப்புகளை ஏற்புத்திறமையுடையதாக்குவதுடன் அதனூடாக ஒரு இளைஞன் போல் எச்சரிக்கையாயிருப்பதும் எதிர்ச் செயலாற்றுவதும் இலகுவாக இருக்கும்.

ஜின்செங் மிகவும் உயர் விலையுள்ள மற்றும் செயற்றிறன் மிக்கது " கொரியன் பனக்ஸ் ஜின்செங்க்" ஆகும். அது உலக சந்தைக்கு "ஜின் சொமிங்க்" என்ற பெயரின் கீழ் வருகின்றது. ஜின்சொமிங்க் உலக தரங்களிற்கேற்ப சிறந்த உற்பத்தித் தரங்களிற்கமைய அவுஸ்திரேலியாவில் மற்றும் தாய்லாந்தில் உற்பத்தி செய்யப்படுகின்றது. உலகில் 30 க்கும் மேற்பட்ட நாடுகளில் பெறமுடிவதுடன் தற்போது இலங்கை பார்மசிகள் மற்றும் சிறப்பங்காடிகளிலும் ஜின்சொங்கை கொள்வனவு செய்யலாம்.

**மேலும் விபரங்களிற்கு**
**075-9014490, 0114-366609**
**அல்லது**
**www.megavecare.lk**
**மற்றும் ஜின்சொமிங்க் பேஸ்புக் இரசிகர்கள் பக்கத்தினூடாகவும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக விரிவுரையாளர் –
யாழ். பல்கலைக்கழகம்

# வரலாறாகிவிட்ட மெலிஞ்சிமுனை

ஊர்காவற்துறை மெலிஞ்சிமுனை தனிக் கிராமமாகி கிறிஸ்து அரசர் ஆலய பங்கான வரலாறு பதியப்பட வேண்டிய வரலாறாகும். தீவுப் பகுதியில் ஊர்காவற்துறைப் பிரதேசத்தில் கரம்பொன் பங்கின் துணைப் பங்கான மெலிஞ்சிமுனைப் பங்கு, தனது பாதுகாவலர் கிறிஸ்து அரசர் பெருவிழாவை யூன் மாதம் இறுதி வாரத்தில் கொண்டாடி மகிழ்கிறது.

கரம்பொன் பங்கின் தெற்குப் புறமாக உள்ள பரந்த வெளியில் கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ள ஒரு கத்தோலிக்கக் கிராமமே மெலிஞ்சிமுனைக் கிராமம் ஆகும்.

ஈச்சை மரக்காடுகளும் – தாழம்பற்றைகளும் – பூவரச மரங்களும் நிறைந்த மெலிஞ்சிமுனைக் கிராமத்தின் நடுவே ஊர் மக்களின் ஆழ்ந்த கத்தோலிக்க விசுவாசத்துக்கும் – நிறைந்த கூத்துக்கலை வளத்துக்கும் சான்று பகரும் விதமாக வானுயர கம்பீரமாக உயர்ந்து நிற்கிறது விழாக் கொண்டாடும் கிறிஸ்து அரசர் ஆலயம்.

மெலிஞ்சிமுனைக் கிராமத்தின் வரலாறு முழுக்க முழுக்க கத்தோலிக்க விசுவாசத்தோடு பின்னிப் பிணைக்கப்பட்ட ஒரு வரலாறு ஆகும்.

மெலிஞ்சிமுனை ஊரில் வாழ்கின்ற ஓரளவு விடயம் தெரிந்த முதியவர்களைக் கேட்ட போது கடற்றொழிலை பிரதான தொழிலாகக் கொண்ட எமது மூதாதையர் ஒரு தனிப்பட்ட ஊர் இன்றி கரம்பொன் – நாரந்தனை – சரவணை போன்ற இடங்களில் பரந்து வாழ்ந்தார்கள். புனித செபஸ்தியார் ஆலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் என்பதால் செபஸ்தியார் ஆலய கட்டுமானப் பணிகள் நடைபெற்ற போது தமது அன்றாட கடற்றொழிலின் ஒரு பகுதியை ஆலய கட்டிட நிதிக்காக வழங்கி வந்தார்கள்.

கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயப் பங்கு மக்களோடு தாமும் எல்லா விடயங்களிலும் இணைந்து ஒற்றுமையாக செயற்பட்ட போதிலும், ஆலயக் கட்டுமானப் பணிகள் முடிந்த பின்னர் புனித செபஸ்தியார் ஆலயப் பங்கு மக்கள் தமது மூதாதையருக்கென ஒதுக்கப்பட்ட ஏழாம் நாள் நோவினையைக் குழப்பியும் – ஆலய அடிப்படை உரிமைகளை வழங்காமலும் – ஆலய பங்குச் சபைகளில் இடம் தராமலும் வந்துள்ளதாகத் தெரிவித்தனர்.

காலப்போக்கில் இந்த இரண்டு சமூகத்தினரிடையேயும் ஏற்பட்ட முரண்பாடுகள் கைகலப்புக்களாக மாறியபோது, கரம்பொன் வீடுகளில் இருந்த தமது மூதாதையர் அடித்து விரட்டப்பட்டு நாவாந்துறையில் சிறிது காலம் வாழ்ந்ததாகத் தெரிவித்தனர்.

அந்தக் காலப்பகுதியில் கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயப் பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்ட பி.ஏபிரகாம் அடிகளார் (1942–1946) இவர்களை நாவாந்துறையில் இருந்து அழைத்து வந்து இரு பகுதியினரையும் சமாதானப்படுத்தி வைத்துள்ளார்.

பின்னரும் முரண்பாடுகள் தொடர்ந்தமையால், பங்குத்தந்தை அப்போதைய யாழ் ஆயரான எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையிடம் முறையிட்டபோது தனியாக சிறு வழிபாட்டுத்தலம் அமைத்துத் தருவதாக உறுதி கூறப்பட்டது.

இடம்பெயர்ந்து நாவாந்துறையில் தங்கியிருந்த பின் திரும்பி வந்த இவர்கள் தமக்குத் தெரிந்தவர்களோடு அவர்களது காணியில் தற்காலிகமாக குடிசைகள் அமைத்து வாழ்ந்ததாக தெரிவிக்கின்றனர்.

இந்தக் காலப்பகுதியில் முற்போக்கு எண்ணம் கொண்ட இளையோரும் முதியோரும் அடங்கிய பத்துப் பேர் கொண்ட ஒரு குழு கரம்பொன் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்துடன் தொடர்புகொண்டு தம்மை சங்க அங்கத்தவர்களாகப் பதிவு செய்ததோடு தமது சமூகத்தினர் வாழ்வதற்குச் சொந்தமாகக் காணிகள் வழங்கப்பட வேண்டும் என ஊர்காவற்துறை பிரதேச செயலரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இதன்படி ஏழு பேர் கொண்ட ஒரு குழு ஊர்காவற்துறை பிரதேச செயலரால் நியமிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்க கோரப்பட்டது.

இதன் பயனாக 1946 ஆம் ஆண்டு கரம்பொனில் இருந்து தெற்குப் புறமாக அமைந்துள்ள அரச காணிகளில் ஒரு குடும்பத்துக்கு நான்கு பரப்புக்காணி என்ற விகிதம் 53 குடும்பங்களுக்குக் காணிகள் வழங்கப்பட்டன.



கிறிஸ்து அரசர் ஆலயம்



இவர்கள் அங்கு ஓலைக் குடிசைகள் அமைத்து வாழத் தொடங்கியமையே மெலிஞ்சிமுனைக் கத்தோலிக்க கிராமத்தின் ஆரம்ப வரலாறு ஆகும்.

1958 ஆண்டு சிறு வழிபாட்டுத்தலம் அமைக்கப்பட்டு முதல் திருப்பலி எம். சூசைநாதன் நல்லையா அடிகளாரால் (1956 – 1960) ஒப்புக்கொடுக்கப்பட்டது.

1958 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி இந்தச் சிறிய வழிபாட்டுத்தலத்தில் தோமஸ் – எலிசபேத் (மலர்) என்பவர்களின் திருமணம் நிறைவேற்றப்பட்டது. குறிப்பிட்ட மேற்படி தம்பதியினரில் எலிசபேத் (மலர்) என்பவர் இன்றும் உயிருடன் இருக்கின்றார்.

1960 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி எம். சூசைநாதன் நல்லையா அடிகளாரால் கிறிஸ்து அரசர் ஆலயத்துக்கான அடிக்கல் நடப்பட்டது.

பாடசாலை – ஆலயம் என்பன அமைப்பதற்கு காணி பெற்றுத்தரும்படி எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகையிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் அரச அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அவற்றுக்கான காணியைப் பெற்றுக் கொடுத்தார்.

1953 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆம் திகதி பாடசாலை கட்டி முடிக்கப்பட்டது. இந்தப் பாடசாலையின் முதல் அதிபராக செல்லத்துரை – உப அதிபராக யோசவ் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

சூசைநாதன் நல்லையா அடிகளாரின் மாற்றத்தின் பின்னர் எஸ். பீற்றர் அடிகளார் (1964–1965) கிறிஸ்து அரசர் ஆலயத்தைக் கட்டி முடித்தார்.

புதிய ஆலயத்தில் நோபேட் இராசநாயகம் (நோவா தாத்தா) – மேரி பெனடிற்றா தம்பதியினரின் திருமணச் சடங்கு 1961 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இவர்கள் இன்றும் உயிருடன் இருக்கின்றனர்.

இந்த ஆலயத்தின் முதல் பங்குச் சபை உறுப்பினராக கி.இன்னாசி – அ.லுக்கேஸ் – அ.பத்திநாதர் – ம.வைத்தியான் – கி.செபமாலை – ச.அருளானந்தம் – அ.சவரிமுத்து – ச.சுவக்கின் ஆகியோர் பணியாற்றினர். இவர்களுள் முதல் திருப்பண்டக் காப்பாளராக (சக்கிறிஸ்ரியன்) ச.சுவக்கின் பணியாற்றினார்.

எமது மூதாதையரின் அர்ப்பணம் மிக்க தியாகங்களும் – ஆற்றல் மிக்க ஆரம்ப செயற்பாடுகளும் – கட்டுப்பாடு மிக்க கிறிஸ்தவ வாழ்க்கை நெறிமுறையுமே இன்று நாம் கிறிஸ்து அரசர் ஆலயத்தைச் சுற்றிக் குடியமர்ந்து ஒரு கத்தோலிக்க கிராமமாக மிளிர வழிவகுத்துள்ளது. இந்த வகையில் எமது மூதாதையருக்கும் மறைந்து போன பழைய பங்குத் தந்தையர்களுக்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம் என நன்றிப் பெருக்குடன் இந்த விடயங்களைத் தெரிவித்த இருவரும் தெரிவித்தனர்.

மெலிஞ்சிமுனை கிறிஸ்து அரசர் ஆலய பங்குத் தந்தையாக எஸ்.ஈ.என்.குணசீலன் அடிகளார் பணியாற்றியபோது (1966 – 1971) நரயாம்பிட்டி புனித அந்தோனியார் யாத்திரைத்தலத்தை கட்டியெழுப்பப்படுவதற்கான முயற்சி எடுக்கப்பட்டு புனித அந்தோனியார் சொரூபம் அங்கு நிறுவப்பட்டது. அன்பில் மலர்ந்த மன்றம் மெலிஞ்சிமுனை கிறிஸ்து அரசர் ஆலய வளவினுள் அமைக்கப்பட்டது.

ஆலயத்தில் அமைந்துள்ள மணிக்கோபுரம் எஸ்.ஏ.சுவாம்பிள்ளை அடிகளாரின் (1971 – 1976) காலத்தில் கட்டியெழுப்பப்பட்டது. இதற்கான மணிக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் – பெயர் ஒன்று சொல்லுங்கள் என்று மக்களிடம் கேட்ட போது பாதர் சுவாம்பிள்ளை என்றே பெயர் கொடுங்கள் என்று மக்கள் எல்லோரும் சொல்லி அவ்வாறே பெயர் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

1976 –19 79 ஆண்டு காலப்பகுதியில் பங்குத் தந்தையாக அன்ரன் இராஜகாரியர் அடிகளார் பணியாற்றியுள்ளார்.

பி.கிளறன்ஸ் கூஞ்சே அடிகளார் (1979 – 1981) இங்கு பணியாற்றிய காலத்தில் கண்ணா ஓடைப்பாலம் கட்டப்பட்டதோடு கிராமத்தின் உள் வீதிகள் செப்பனிடப்பட்டன.

எஸ்.லோறன்ஸ் சேவியர் அடிகளார் (1981 – 1988) இங்கு பணியாற்றிய போது ஆலயத்தின் முன்றலும் மணிக்கூட்டுக் கோபுரமும் கட்டி முடிக்கப்பட்டது.

ரூபன்மரியாம்பிள்ளை அடிகளார் (1988 – 1991) பணியாற்றிய போது இளைஞர்களுக்கான வெல்டிங் பயிற்சி நிலையம், மகளிருக்கான தையல் பயிற்சி நிலையம் என்பன அமைக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இங்கு பணி புரிந்த இளைஞர்களின் ஆக்கத்திலேயே ஆலயத்தின் முன் முகப்பு கிறில் கதவு அமைக்கப்பட்டது. ஆலயத்தைச் சுற்றி மதிலும் இக்காலப்பகுதியில் கட்டி முடிக்கப்பட்டது. திருப்பாடுகளின் காட்சி பீடப்பணியாளரைக் கொண்டு மேடை ஏற்றப்பட்டது.

பங்குத் தந்தையர்களாக சி.ஜே.அன்ரனிபால அடிகளார் (1997 – 1999) – ஏ.யேசுதாசன் அடிகளார் (2003 – 2009) – ஏ.யூட் நிக்சன் அடிகளார் (1999 – 2000) – ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் (2000 – 2002) ஆகியோர் பணியாற்றிய காலத்தில் இரவு வகுப்புக்கள் நடத்தப்பட்டு மேலும் பல முன்னேற்றப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி ஆலயத்துக்கென தனியான பங்குப் பணிமனை அமைக்கப்பட்டமை பங்கின் வளர்ச்சியின் ஒரு முழுமை என்றே கூற வேண்டும்.

ஏ.சி.கிறிஸ்தோபர் அடிகளார் (2009 மே – 2010 ஒக்டோபர்) காலத்தில் கடற்கரையில் தொழில் துறைமுகத்துக்கு அருகே பெரியபார் அந்தோனியார் ஆலயம் கட்டப்பட்டது. சந்திர போஸ் அடிகளார் (2011 டிசம்பர் – 2012 மார்ச்) – காலத்தில் கிறீஸ்து அரசர் ஆலயத்தின் கூரைக்கு சீற் போடப்பட்டது.

போரின் தாக்கத்தால் மெலிஞ்சிமுனைக் கிராமம் முழுமையாக இடம்பெயர்ந்து – வன்னிப் பிரதேசத்தில் தற்காலிகமாக குடியேறி –பலரின் உயிர்களை பறிகொடுத்து – அகதி முகாம் வாழ்வு வாழ்ந்து திரும்பவும் ஒரே குடும்பமாக மெலிஞ்சிமுனைக் கிராமத்தில் குடியமர்ந்துள்ளனர். இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், முன்னர் கரம்பொன் காணிகளில் தற்காலிகமாக தங்கியிருந்த போது அடித்து விரட்டப்பட்டவர்களில் சிலர் இன்று கரம்பொன் காணிகளையே சொந்தமாக வாங்கி வசதியாக குடியமர்ந்துள்ளனர் என்பதாகும்.

2012 ஏப்ரல் மாதம் முதல் பணியாற்றும் தற்போதைய பங்குத் தந்தை ஈ.எஸ்.சி.மரியதாஸ் அடிகளார் தற்போது மெலிஞ்சி முனைக் கிராம குருமனையிலேயே தங்கியிருந்து பணியாற்றுவது ஊரின் வளர்ச்சிக்கு மேலும் துணை புரியும் ஒரு வரப்பிரசாதமாகும். இவரது காலத்தில் வீட்டுக்கு ஒரு விவிலியம் – குணமாக்கல் வழிபாடுகள் – திருவிழிப்பு வழிபாடுகள் என ஆன்மிகத்தில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. மகளிர் மன்றம் – சிறுவர் மன்றம் – இளையோர் மன்றம் – மரியாயின் சேனை – சூசையப்பர் மன்றம் என்பன புதிதாக அமைக்கப்பட்டும் புதுமெருகூட்டப்பட்டும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

2014 ஆம் ஆண்டு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நரயாம்பிட்டி யாத்திரைத்தல ஆலயத்தை ஆசீர்வதித்து நேர்ந்தளித்தார். 2015 ஆம் ஆண்டு நரயாம்பிட்டி யாத்திரைத் தலத்தில் 45 அடி உயர கோபுரம் அமைக்கப்பட்டு பத்தரை அடி உயர ஆண்டவர் இயேசுவின் சொரூபம் அமைக்கப்பட்டது.

இந்த ஊரைக் கல்வியிலும் கட்டியெழுப்பும் விதமாக ரியூசன்வகுப்புக்கள் – கணினிமையம் – மாணவர்களுக்கான நூலகம் – சிறுவர் கழகத்துக்கான விளையாட்டு உபகரணங்கள் வசதி என்பன ஏற்படுத்தப்பட்டன.

நீண்டகாலத் தேவையாக இருந்து வந்த குடி தண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்கான அடிப்படை வசதி செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடப்பட வேண்டிய அம்சமாகும். சாட்டியில் தனியாக கிணறு ஒன்றை அமைத்து – கொமர்சல் வங்கியின் உதவியுடன் பவுசர் ஒன்றைப் பெற்று – தண்ணீரை அங்கிருந்து கொண்டு வருவதற்கான ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதோடு ஒரு இலட்சத்து 10 ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்ட தண்ணீர்த் தொட்டி கட்டப்பட்டு குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வை எட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மெலிஞ்சிமுனை கிறிஸ்து அரசர் ஆலயம் மேலும் வளரவும், இலங்கை அரசியலில் தமிழ் மக்களுக்கான நல்ல காலம் மலரவும் கிறிஸ்து அரசர் தம் அருள் வளங்களை அள்ளிப் பொழிவாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 223

# நலத்தை மேம்படுத்த உளத்தில் உறுதி கொள்வோம்

கடந்த வருடம்(2014) யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் மொத்தம் ஆயிரத்து எண்ணூற்று எண்பது பேர் (1880) டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகி உள்ளனர். இதில் இரண்டு இறப்புக்களும் உள்ளடக்கம். இளம் வயது மாணவர்கள் இருவரே இவ்வாறு டெங்கு நோயின் அரூபக் கரங்களால் சிதைக்கப்பட்டிருந்தனர். இந்த வருடம் வைகாசி மாதம் வரையிலும் நானூற்று தொண்ணூறு பேர் வரை டெங்குத் தாக்கத்துக்கு உள்ளாகி இருப்பதாக, யாழ்ப்பாண மாவட்ட தரவுகள் தெரிவிக்கின்றன.

டெங்கு நோய்த்தாக்கம் அதிகரித்துச் செல்லக் காரணங்கள் கீழ்க் கண்டவாறு அமைகின்றன. துரித நகரமயமாக்கல், அதிகரித்துள்ள கட்டுமானப்பணிகள், வடிகாலமைப்புக்கள் சீராக இல்லாமை, போர் இடரினால் பாதிக்கப்பட்டு தூர்ந்து போயுள்ள வடிகால் அமைப்புக்கள் இதுவரை ஆக்கபூர்வமாக திருத்தியமைக்கப்படாமை, புதிதாக அமைக்கப்பட்ட புகையிரத தண்டவாள இரும்புப் பாதையில் கீழ் அமைக்கப்பட்டுள்ளபாலங்களின்கீழ்வெள்ள நீர் தேங்கி நிற்றல், (சிறு மழையின் பின்னரும் பல நாள்களாக)

அன்றாட வாழ்க்கையில் அதிகரித்த பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனை, சுகாதார முறையற்ற விதத்தில் வீதிகளிலும் வளவுகளிலும் வீசியெறியப்பட்ட பியர்ரின்கள், மீன் ரின்கள், சோடா ரின்கள் அதிகளவில் சிதறிக் காணப்படுதல்.

மங்கல, அமங்கல நிகழ்வுகளிலும் அதிகரித்த பிளாஸ்ரிக் கப்(one day cups), ஐஸ்கிறீம் கப் பாவனையும், முறையற்ற விதத்தில் அவை சூழலிலும் வீசப்படுதலும்,

திண்மக் கழிவுகள் அகற்றப்படுவதிலும் அவற்றின் முகாமைத்துவத்திலும் யாழ். மாவட்டம் இன்றும் பாலகப் பருவத்திலேயே இருக்கின்ற துர்ப்பாக்கிய நிலை,

திண்மக்கழிவுகளை தரம் பிரித்து, மீள்சுழற்சிக்கு உட்படுத்தும் ஆரம்பக் கட்டச் செயற்பாடுகள் கூட முன்னெடுக்கப்படாத நிலைமை,

வீடுகளிலும் அதன் சுற்றுச் சூழலிலும் போதிய சுத்தம் பேணாத தன்மை குறிப்பாக, சமையலறையிலிருந்தும், குளியலறையிலிருந்தும், கிணற்றிலிருந்தும் வெளியேறும் கழிவுநீர் போதிய பரிகரிப்பின்றி, தேங்கி நிற்றல், நீர் தேங்கி நிற்குமிடங்களை சூழ்ந்து புற்கள் வளர்ந்து நுளம்பு பெருக வாய்ப்பாக இருத்தல்,

மக்கள் கூடுமிடங்கள், சந்தைகள், மயானங்கள், விளையாட்டுத்திடல்கள், பொதுநோக்கு நிகழ்விடங்களின் சுற்றுச்சூழல் போதிய பராமரிப்பு இன்றி, நீர் தேங்கி நிற்றலும், பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகள் அகற்றப்படாதிருத்தலும்,

மன அழுக்கை அகற்ற உதவிடும் வழிபாட்டிடங்களின் சுற்றுச்சூழல் அசுத்தமாகவும், அபிசேக நீர் தேங்கி நிற்றலும், அபிசேக நீர் சென்று வடியும் குழி மூடியற்று திறந்திருந்து நுளம்புகள் பெருக்கமடைய வாய்ப்பாக இருத்தலும், இளநீர்க் கோம்பைகள் உரிய முறையில் வெட்டிப் பிளந்து அகற்றப்படாது, வான் நோக்கி நீர் சேர்ந்து நுளம்பு பெருக வாய்ப்பளித்தல்,

இயந்திரத் தன்மையான வாழ்க்கை முறை, வேலை, படிப்பு, ரியுசன், சமையல், மெகா(நெடுந்) தொடர்கள் என்று நேர இறுக்கமான வாழ்க்கை, இதில் வீட்டுச் சுகாதாரம், சுற்றுச் சூழல் சுகாதாரம், பொது இடங்களின் சுகாதாரம் என்பவை குறித்து சிந்திக்க முடியாத வறட்சி நிலை.

டெங்குத்தாக்கத்தை சமூகப் பிரச்சினையாக நோக்காத அல்லது ஏற்காத தன்மையும், பொறுப்புக்களிலிருந்து விலகிச் செல்லும் தன்மையும். கல்வி, கட்டுமான, பெருந் தெருக்கள் அமைப்புக்களும், உள்ளூராட்சி மன்றங்களும் தத்தமது கூட்டுப் பொறுப்பை உணராத தன்மை,

சுகாதாரத்துறையினரின் தடுப்பு நடவடிக்கைகளுக்கு, பொதுமக்களினதும், கிராமமட்ட டெங்கு குழுக்களினதும் அலுவலகமட்ட டெங்கு கட்டுப்பாடு குழுக்களினதும் போதிய ஒத்துழைப்பு இல்லாமை,

செயல்திறன்மிக்க நிறுவனமட்ட டெங்குக்கட்டுப்பாட்டு குழுக்கள் இதுவரை, பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், அரச அலுவலகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் போன்ற அமைப்புகளில் உருவாக்கப்படாமை,

நகரை சுத்தப்படுத்தும் சுத்திகரிப்பு தொழிலாளர்கள் வினைத்திறனுடன் செயற்படாத தன்மை,

குடியிருப்பாளர்களின் நல்லெண்ணமற்ற ஆரோக்கியமற்ற செயற்பாடுகள் . உதாரணமாக: தமது வளவில் உள்ள பெரிய மரம் ஒன்றைத் தறித்ததன் பின்பு அதன் அலம்பல்களை அனைத்தையும் வீதி ஓரங்களில் போடுதல், மங்கலகரமான நிகழ்வுகளின் பின் ஏற்படும் கழிவுகள் அனைத்தையும், வாசலில் கட்டிய வாழைமரங்கள் உள்ளடங்கலாக வீதி ஓரங்களில் போடுதல். வீதி சுத்திகரிப்பில் ஈடுபடும் வாகனங்களையே வழமைக்குப்புறம்பான இப்பெரும் கழிவுகளையும் அகற்றுவதற்காக எதிர்பார்த்திருத்தல். இதன் காரணமாக அந்த வீதியில் அமைந்துள்ள ஏனைய வீடுகளின் சிறிதளவான சமையல் கழிவு களைக் கூட அகற்ற முடியாத நிலை ஏற்படடல். இந்த விடயங்களில் நுளம்புகள் தன்னிச்சையாக பெருக்கமடைவதை தடுக்க முடியாத நிலை, என்பவையாகும்.





மேற்கூறப்பட்ட பல காரணிகள் காரணமாக டெங்கு நோய் பரம்பல் முன்னெப்போதும் இல்லாத வகையில் மிக அதிகமாகிக் காணப்படுகின்றது. மேற்கூறப்பட்ட காரணிகளில் பலவற்றைப் பொதுமக்களின் (உள்ளார்ந்த) ஒத்துழைப்புடன் குறைத்திட முடியும் அல்லது இல்லாமல் செய்திட முடியும். சில காரணிகள் பொதுமக்களின் சக்திக்கு அப்பாற்பட்டதாகவே உள்ளன. எனவே பொது மக்கள் தமது சக்திக்கு உட்பட்ட காரணிகளையாவது ஆரோக்கியமான முறையில் மாற்றியமைக்க முன் வந்தால் மட்டுமே டெங்கு நோயின் பரம்பலைத் தடுத்திட முடியும். பொது மக்கள் தங்கள் பொறுப்புணர்ந்து செயற்பட்டு தமது பழக்கவழக்கங்களில் ஆரோக்கியமான மாற்றங்களை உள்வாங்கி வாழ்க்கை முறையைச் செப்பனிட்டால் மட்டுமே எம்மை நோக்கி வரும் அபாயத்திலிருந்து எம்மையும் வருங்கால சந்ததியினரையும் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

டெங்கு நுளம்பின் பறப்புத்தூரம் 500மீ சுற்றயல் பிரதேசமாக உள்ளது என்கிறது பூச்சியியலாளர்களின் அறிக்கைகள். எனவே இந்தத் தூரத்துக்குள் வசிப்பவர்கள் டெங்கு நோய் தொற்றிய நுளம்புகளினால் கடிபடும் வாய்ப்புக்கள் ஏற்படின் அவர்களுக்கும் டெங்கு நோய் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளன. எனவே தங்களின் வீடுகளைச் சுத்தமாக வைத்துக் கொண்டு அயலி லுள்ள வெறும் வளவுகளில் வெற்றுப் போத்தல்கள், சிரட்டைகள், கோம்பைகள், சொப்பிங் பைகள், பேணிகள் போன்றவற்றை வீசி எறிந்தாலும் அந்த வீட்டுச் சூழல் சுத்தம் அற்றதாகவே கருதப்படும். அவற்றில் நீர் தேங்கி அதன் காரணமாக பெருகும் நுளம்புகளினது முதல் இலக்கு அந்த வெற்றுப் பேணிகளை வீசிய அந்த அயல்வீட்டு குடியிருப்பாளரின் குடும்பமே என்பதை நாம் வசதியாக மறந்து விடுகின்றோம்.

மேலும் டெங்கு நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்திட நாம் முயல்கின்றபோது நுளம்புகளும் பல இயைவாக்கங்களை வெளிப்படுத்துகின்றன. அவ்வாறான இயைவாக்கங்களாவன: அவை பெருகுவதற்கு ஒரு ரூபா குத்தியின் தடிப்பளவு நீர் இருந்தால் கூட அவை முட்டைகளை இட்டுவிடுகின்றன. ஒருமுறை இடப்பட்ட முட்டைகள், சாதகமில்லாத சூழல் நிலைமைகளில் ஒரு வருடம் வரை பொரிக்கும் தகவுடன் இருந்து சாதகமான சூழல் வரும் போது பொரித்துக் கொள்கின்றன. முட்டைகள் மிகவும் ஒட்டும் தன்மை கொண்டவையாக இருப்பதனால் இலகுவாக பாத்திரங்களிலிருந்து அவற்றை அகற்ற முடிவதில்லை. அவற்றை அகற்ற வேண்டுமாயின் முட்டைகள் இருப்பதாக சந்தேகிக்கப்படும் இடங்களை கம்பியால் ஆனசுருள் (Wire woole) அல்லது தென்னம் பொச்சுமட்டை கொண்டு உரோஞ்சித் தேய்ப்பதன் மூலமே அவ்விடங்களிலிருந்து இந்த முட்டைகளை அகற்ற முடியும்.

இந்த நுளம்பொன்று, 100தொடக்கம் 200 வரையான முட்டைகளை இடுகின்றது. ஆரம்ப காலங்களில் இந்த நுளம்பானது தெளிந்த நீர் நிலைகள், மழைநீர் தேங்கி நிற்கும் இடங்கள் அல்லது வீடுகளின் உட்புறமும் வெளிப்புறமும் தெளிந்த நீர் தேங்கி நிற்கும் இடங்களிலே முட்டைகளை இட்டு இனம் பெருக்கியது. தற்போது அசுத்தமான நீர் நிலைகளிலும், சாக்கடை நீரிலும், ஆழம் குறைந்த கிணறுகளிலும் கூட முட்டைகளை இட்டு இனம் பெருக்கும் வல்லமையை பெற்றுள்ளது.

புதிதாகப் பொரித்த டெங்கு நுளம்புகள் தமது உமிழ்நீர்ச் சுரப்பிகளில் டெங்கு வைரசை, பொரிக்கும் போதே கொண்டிருந்து கடிக்கும் முதல் நோயாளிக்கே டெங்கு நோயைப் பரப்பும் வல்லமையைப் பெற்றுள்ளன. இதை எதிர்கொள்வது எமக்குப் பெரிய சவாலாகவே உள்ளது. ஏனெனில் ஆரம்ப காலங்களில் ஈடிஸ்(Ades) வகை டெங்கு நுளம்புகள், டெங்கு நோயுள்ள ஒருவரைக் கடித்து குருதியை எடுத்தால் மட்டுமே அவை டெங்கு வைரஸ் தொற்றுக்குள்ளாகி அடுத்தவருக்கு கடத்தப்படும் வாய்ப்புக்கள் இருந்தன. ஆனால் இப்போது புதிதாக பிறக்கும் நுளம்புகளின் உமிழ்நீர்ச் சுரப்பிகளே டெங்கு கிருமிகளை கொண்டுள்ளன. இதன் காரணமாக இனிவரும் காலங்களில் எமது தடுப்பு நடவடிக்கைகள் வினைத்திறனுடன் காணப்படாத விடத்து டெங்கு நோயின் தாக்கமும் பரம்பலும் அதிகரித்துச் செல்வதுடன் இறப்புக்களும் இழப்புக்களும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

கண்ணுக்குப் புலப்படாத போர்கள் இப்போதும் எமது பிர தேசத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றில் உக்கிரம் கூடியதானதாக, ஆறு அறிவு படைத்த மனிதர்களுக்கும், அற்ப பூச்சி இனத்துக்கும் இடையிலான பலப்பரீட்சையைச் சொல்லலாம். இதில் நாம் வெற்றி பெற வேண்டுமாயின், எமது செயற்பாடுகளில் உளத்தூய்மையும், சமூகப் பொறுப்புணர்வுடன் கூடிய அக்கறையும், நல்ல மனப்பாங்கும், ஆரோக்கியமான பழக்க வழக்கங்களும், பண்பட்ட மனமும், மற்றவர்கள் மீதும் அவர்களின் நலத்தின் மீதும் கொண்ட புரிந்துணர்வும் மிகமிக அவசியமாகும்.

உயிர்கொல்லி டெங்கு நோயை ஊரிலிருந்து ஒழித்துக்கட்டுவதற்கு முழுமனதுடன் விரும்பினால், நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் வீட்டுச் சுற்றாடலை சுத்தமாகப் பேணி டெங்கு நுளம்பு பரவும் இடங்களை துப்புரவு செய்தல் வேண்டும். எங்கள் குடும்பத்தவர்கள், நண்பர்கள் மற்றும் அயலவர்கள் மீது உண்மையான அக்கறை இருக்குமாயின் எங்கள் வீட்டுச் சூழலையும், நாங்கள் கல்வி கற்கும் சூழலையும், தொழில் புரியும் சூழலையும், ஒன்று கூடும் இடங்களின் சூழலையும் குறைந்த பட்சம் வாரத்திற்கு ஒரு தடவையாவது துப்புரவு செய்து நீர் தேங்குவதற்கு இடமளிக்காது, நீர் தேங்கக்கூடிய கொள்கலன்கள் அனைத்தையும் அப்புறப்படுத்த அல்லது அழித்திட வேண்டும். தேவையற்றபொருள்களை,கழிவுப்பொருள்களை உரியமுறையில் அகற்ற அல்லது விற்றுவிட அக்கறையுடன் செயற்பட வேண்டும். நலத்துடன் நாம் வாழ நல்ல சூழல் மிகமிக அவசியம். சுத்தமான சூழலே எமது சுகத்தை மேம்படுத்தும்.

அதிக நுளம்புகள் பெருகும் இடங்களை அடையாளம்காணும் திறனை எம்மில் வளர்த்துக்கொண் டால் மட்டுமே, டெங்கு நுளம்பின் பெருக்கத்தை அல்லது டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும், எமது செயற்பாடுகள் முழுமை பெறும். டெங்கு நுளம்புகள் அதிகமாக பெருகும் இடங்களை இலகுவாக அடையாளம் காண்பதற்காக எட்டுப் பிரிவுகளாக அவற்றை வகைப்படுத்தலாம். அவையாவன:

இலகுவில் உக்காத கழிவுப் பொருள்கள்; இதில் ரயர், கோப்பை, பிளாஸ்ரிக்பொருள்கள், விளையாட்டுப் பொருள்துண்டுகள், பொலித்தீன் துண்டுகள், மெழுகுசீலை, பொலித்தீன் பை, பீங்கான் கோப்பைத் துண்டுகள் போன்றவை அடங்கும்.

தாமதமாக உக்கும் கழிவுப் பொருள்கள்; இவ்வகையில் சிரட்டைகள், இளநீர்க் கோம்பை, விளாம்பழ, ஜெலிப்பழ வன்கோதுகள் போன்றவை அடங்கும்.

மழைநீர் தேங்கியிருக்கக் கூடிய இடங்கள்; இவ்வகையில் அடைபட்ட மழைநீர்ப் பீலி, அடைபட்ட சிமெந்துக் கான், நீரடைபட்ட கொங்கிறீட் கூரை போன்றவை அடங்கும்.

மூடப்படாத நீர் தேக்கி வைக்கப்படும் இடங்கள் அல்லது பாத்திரங்கள்; இவ்வகையில் சிமெந்து நீர்த் தொட்டி, உயரத்திலுள்ள நீர்த் தாங்கி, தகர உருளை பரல்கள், வாளிகள், பிளாஸ்டிக் நீர்க் கான், கிடாரம், பிளாஸ்டிக் பீப்பாய், சட்டி முட்டிகள், பாவனையற்ற கிணறுகள், ஆழம் குறைந்த கிணறுகள் போன்றவை அடங்கும்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வவுனியா குட்செட் வீதி, தோணிக்கல் ஸ்ரார் முன்பள்ளியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசா கலந்து கொண்டார். நிகழ்வின் போது விருந்தினர் களை மலர்மாலை அணிவித்து அழைத்து வருவதையும் மங்கல விளக்கு ஏற்றுவதையும் பரிசில்கள் வழங்குவதையும் படங்களில் காணலாம். (ஐ–402)




புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார சேவையினரும் , புதுக்குடியிருப்பு பொலிஸாரும், பாடசாலைகளின் மாணவர்களும் இணைந்து முல்லைத்தீவு – பரந்தன் வீதிவழியே விழிப்புணர்வுப் பேரணியொன்றை நடத்தினர். அதில் புகைத்தல். மது அருந்துதல், போதைப் பொருள் பாவனை மற்றும் வீதி விபத் துக்களினால் ஏற்படும் உயிரிழப்புக்களைத் தவிர்பது தொடர்பான பாதாகைகளைத் தாங்கிய வண்ணம் பேரணியாகச் சென்றனர். (ஐ–433)





வவுனியா தோணிக்கல் சிவாலய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் விருதினர்களாகக் கலந்து கொண்ட நாடளுமன்ற உறுப்பினர்கள் ந.சிவசக்திஆனந்தன். செல்வம்அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம் மற்றும் வடமாகாணசபை உறுப்பினர்கள் மயில்வாகனம் தியாகராசா, இ.இந்திரராசா, உள்ளிட்ட விருந்தினர்கள் வரவேற்கப்படு வதையும், வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்குவதையும் காணலாம். (ஐ–402)






எல்லப்பர் மருதங்குளம் கணேசா முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி. சிவமோகன் கலந்து கொண்டார். நிகழ்வின் போது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வையும் காணலாம்.(ஐ)







வரணி சுட்டிபுரம் அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா [illegible] தேர் மற்றும் தீர்த்தக் காட் சிகளைக் காணலாம்.(ஐ)

யாழ்ப்பாணம் கொட்டடி கிராம அபிவிருத்தி சங்கமும் கண்டி மலையக கலை கலாசார சங்கமமும் இணைந்து சான்றோர் கௌரவிப்பும் விருது வழங்கும் நிகழ்வும் அண்மையில் யாழ்ப்பாணம் கொட் டடி கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நடைபெற்றது. விழாவில் சமூக சேவையில் ஈடுபட்டு வரும் கிளி நொச்சி மாவட்ட தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரனுக்கு நிகழ்வில் கலந்து கொண்ட யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் இந்தியத் துணைத் தூதுவர் ஏ.நட [illegible] தீபம் எனும் [illegible] வழங்கிக் கௌரவித்தார். (ஐ–421)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற ஆரம்பப் பரிவு மாணவர்களுக்கான 'செயற்பட்டு மகிழ்வோம்' என்னும் குழு நிகழ்வில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டுள்ளது. இந்தப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவர்கள் தமது ஆசிரியாகளுடன் காணப்படுகின்றனர். (ஐ-86)



வவுனியா குருமன்காடு ஸ்ரீ காளியம்மன் தேர்த் திருவிழாவின் போது அம்பாள் தேரில் ஆரோ கணித்து வெளி வீதி வலம் வருவதைக் காணலாம். (ஐ)





வவுனியா பண்டாரிக்குளம் வானவில் விளையாட்டுக்கழகத்தினரின் அனுசரணையில், இ.புரட்சிமாறனின் எழுத்து – இசையமைப்பில் நவகம்புர கணேஷ் குரலில் உருவான 'வெளிநாட்டுக்காரர்' இறுவட்டு வெளியீட்டு விழா அண்மையில் பண்டாரிக்குளம் கிராம அபிவிருத்திச்சங்க கட்டடத்தில் நடைபெற்றது. (ஐ-402)





முல்லைத்தீவு மாவட்டம் வள்ளுவர்புரத்தில் கலாசார மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் கைத்தொழில், வணிக அமைச்சர் ரிசாட் பதியுதீன், மாகாணசபை உறுப்பினர் ஜெனோபர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மாவட்ட அமைப்பாளர் விஜிந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ)



வவுனியா கூமாங்குளம் ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்தில் அறநெறி பாடசாலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் ஆலய நிர்வாகத் தலைவர் கே. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. (ஐ)





திருகோணமலை சல்லியம்பதி ஸ்ரீ முத்தமாரியம்பாள் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் அண்மையில் நடைபெற்றது. அதன் போது தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றும் பொருட்டு திருகோணமலையில் பெரும்பாலான ஆலயங்களில் இருந்து கும்பம், கரகம், காவடி, பால்குடம், துலாக்காவடி என்பன பக்தர்களால் எடுத்துச் செல்லப்படுவதைக் காணலாம். (ஐ-40)



கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்த பெண்கள் சிரமதானம் மேற்கொண்ட போது. (ஐ-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலத்தை மேம்படுத்த உளத்தில் உறுதி கொள்வோம்

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அழகுப் பொருள்கள் அல்லது வளவை அலங்கரிக்கும் பொருள்கள்; இவ் வகையில் பறவைகள் நீராடும் தடாகம், நீர்க் குட்டைகள், மீன் இல்லாத நீர்த்தொட்டி, அழகுத் (தாமரைத்) தடாகங்கள், பாட சாலைகளுக்கு கம்பீரம் தரும் சரஸ் வதிதேவி தடாகங்கள், நீர் தங்கக் கூடிய சிலை வடிவங்கள், பூச்சாடி களும் கீழ்வைக்கப்படும் தட்டுக் களும், பூச்சாடிகள் போன்றவை அடங்கும்.

விசேட வீட்டு உபகரணங்கள்; இவ் வகையில் குளிரூட்டியிலுள்ள நீர் தேங்கித் தட்டு, அறை குளிராக்கி யிலுள்ள நீர்தேங்கித் தட்டு போன் றவை அடங்கும்.

வீட்டினுள்ளும் வெளியிலும் உள்ள நீர்தங்கு சிறு பாத்திரங்கள்; இந்த வகையில் மேசைக் கால் எறும்பு நீர்த்தட்டு, செல்லப் பிராணி களின் நீர் அல்லது உணவுப்பாத்திரம் போன் றவை அடங்கும். நாய், பூனை, பசு, ஆடு போன்ற வளர்ப்பு பிராணிகளின் நீர்த்தட்டுக் கள், பாத் திரங்களை பயன்பாட்டின் பின்பு மீதமுள்ள நீரை ஊற்றிவிட்டு கவிழ்த்து வைத்து விடவேண்டும். தேவையைப் பொறுத்து மீளவும் பாவித்துக் கொள்ளலாம்.

வீட்டினுள்ளும் வெளியிலும் உள்ள தாவரம் மற்றும் தாவரப் பகுதிகள்; இவ்வகையில் இலைகளுக்கிடை நீர் தங்கவல்ல அழகுத் தாவரக் கன்றுகள், பெரிய இலைத் தாவ ரங்கள், மரப்பொந்துகள், வெட்டிய மூங்கில் மரத்தின் அடிப்பாகம், நீர் தேங்கியிருக்கவல்ல வெட்டியமரத்துண்டுகள் அல்லது வாழைமரக் குற்றிகள் போன்றவை அடங்கும். இவற்றை விட, சேதமுற்ற அல்லது வெடிப்படைந்துள்ள மலக் கூடக் குழிகளும் நுளம்புபெருக்கத்துக்கு ஏதுவாக அமையலாம்.

எமது அன்றாடச் செயன்முறைகளி னால் மேற் கூறப்பட்ட எட்டு வகை யான பொருள்களும் சூழலில் சேராத வகையில் அக்கறையுடன் செயற் பட்டால் உயிர்கொல்லி நோயான டெங்குவை ஊரிலிருந்தே விரட்டி விட முடியும். சமூகம் உடனடியாக திருந்தி விடும் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே இப்பத் தியை வாசிக்கும் சிலரேனும் தத்தமது மட்டங்களில் திருந்திட முனைந் தால் அதுவே ஒரு வெற்றிதான்.

டெங்கு நோய்த்தடுப்பில் அல்லது டெங்கு நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்திட பங்களிப்பு செய் கின்ற ஒரே உயிரினம் மீன்கள் மட் டுமே. அவை டெங்கு நுளம்பின் வாழ்க்கை வட்டத்தில் உருவாகும் குடம்பி, கூட்டுப்புழுக்களை உண வாக உட்கொண்டு எம்மை அபா யத்திலிருந்து காக்கின்றன. இந்த மீனினங் களை உங்கள் பகுதி சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையிலோ அல்லது மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை யிலோ இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

மருந்துப் பொருள்கள், பாமா வகைகள், அன்பளிப் புப் பொருள்கள், அழகுசாதனப் பொருள்கள், பேபிItems,போட்டோக் கொப்பி, கலர் பிறிண்டிங், லெமினேற்றிங், பக்ஸ், றீலோட்ஸ், கிறகாட்ஸ், பாடசாலை உபகரணங்கள்.
இருபாலைச் சந்தி, இருபாலை.
தொ.பே.:021 223 1331
உரிமையாளர்: ச.சதீஸ்குமார்.

**நியூ லக்கி ஸ்ரோர்ஸ்**
அன்றாடப் பாவனைப் பொருள்கள், குளிர்பான மற்றும் ஐஸ்கிறீம் வகைகள், தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகள், பாட சாலை உபகரணங்கள்.
இல. 59,ஆசிர்வாதப்பர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**நியூ லக்கி ஹாட்வெயர்ஸ்**
இல.848,கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
தொ.பே.:021 373 4432
உரிமையாளர்: ரூபன்.

**ஸ்ரீ மாருதி அச்சகம்**
சகல விதமான அச்சக வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.
555,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
021 4545 044 0777 917 680
உரிமையாளர்:
T.தபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் ஹோல்டிங்ஸ் நிறுவனத்துக்கு ஆசியாவின் பொறுப்புமிக்க தொழில் முயற்சி விருது

வடமேல் மாகாணத்திலுள்ள சமூகங்களின் வாழ்வு வளம் பெறுவதற்கு ஹேலீஸ் அக்ரிக்கல்ச் சர் நிறுவனம் ஆற்றியுள்ள பங்களிப்புக்கான இனங்காணல் அங்கீகாரமாக அந்த நிறுவனம் சமூகத்தை ஆளுமைப்படுத்தும் துறையில் 2015 ஆம் ஆண்டிற்கான ஆசியாவின் பொறுப்புமிக்க தொழில் முயற்சிக்கான விருதுகள் 2015 இல் அந்த பெருமதிப்புமிக்க விருதை வென்றுள்ளது.

பணியில், வியாபாரத்தில் அல்லது சமூக வாழ்வு தொடர்பில் சமூகரீதியாக புறக்கணிக்கப்பட்ட அல்லது பாகுபாட்டினால் பாதிக்கப்படுகின்ற சமூகங்கள் அல்லது தனிநபர்களின் வாழ்வை ஆளுமைப்படுத்துவதை ஊக்குவிக்கும் வியாபார நிறுவனங்களை கௌரவிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்படுகின்றது. 2014ஆம் ஆண்டில் இலங்கை யின் வடமேல் கரையோர பிரதே சத்தில் ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் நிறு வனத்தால் முன்னெடுக்கப்பட்ட கடற்பாசி செயற்றிட்டம், அப்பிரதே சங்களில் வசிக்கும் மீன்பிடியில் ஈடுபட்டுள்ள குடும்பங்களுக்கு, சர்வதேச அளவில், குறிப்பாக உணவுத் தொழிற்துறையில் கிராக்கி அதிகரித்து வருகின்ற ஒரு குறிப்பிட்ட வகையான கடற்பாசியை இயற்கையான முறையில் அறுவடை செய்ய உதவிவருகின்றது. வலைப் பாடு, கிராஞ்சி, இரணை மாதா நகர் மற்றும் பள்ளிக்குடா ஆகிய கிராமங்களிலுள்ள வறியமீன்பிடிக்குடும்பங்களைச்சேர்ந்த பெண்களுக்கு தொழில் வாய்ப்புக்களை இச் செயற்றிட்டம் வழங்கியுள்ளது. நாரா மற்றும் என்.ஏ.கியூ.டி.ஏ நிறுவனங்களின் தொழில்நுட்ப உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட இச்செயற்றிட்டம் அவர்கள் தமது குடும்பங்களுக்கு மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கும் உதவுகின்றது.

ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், ஹேலீஸ் பீஎல்சி கூட்டு நிறுவனங்களின் பணிப்பாளருமான றிஸ்வி ஸஹீட் 2015 ஜூன் 19 அன்று மக்காவு பன்யன் ட்ரீ ஹோட்டலின் பன்யன் போல்றூமில் இடம்பெற்ற பெருமதிப்பு மிக்க சர்வதேச வர்த்தக சமூகப் பொறுப்புணர்வு மாநாடு 2015 நிகழ்வில் இவ்விருதைப் பெற்றுக்கொண்டார்.

---

## வன்முறையில்

இருந்து ஓகஸ்ட் 17 ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் முடி வடையும் வரை அரச சேவை மற்றும் பொலிஸ் துறையில் சகல இடமாற்றங்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (த)

## மஹிந்த,

கோத்தபாய மற்றும் பஸில் உள்ளிட்ட 42 பேருக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக, சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ[illegible] மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, இலங்கையின் இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் விசாரணைகளை நடத்தியது. இந்த அறிக்கை கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற அமர்வில் வெளியிடப்பட இருந்தபோதும், இலங்கை அரசு கேட்டுக் கொண்டதற்கு இணங்க அது செப்ரெம்பர் வரையில் ஒத்தி வைக்கப்பட்டது.

தற்போது இந்த விசாரணை அறிக்கையைத் தயாரிக்கும் பணி இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது எனவும், ஐ.நாவில் இந்த அறிக்கையை உத்தியோகபூர்வமாக வெ[illegible]ரியிடுவதற்கு முன்னர் அதன் பிரதி ஒன்றை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த விசாரணை அறிக்கையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் இராணுவத் தளபதியும் பீல்ட் மார்ஷலுமான சரத் பொன்சேகா ஆகியோர் உள்ளிட்ட 42 பேர் மீது போர்க் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## தண்ணீரில்

செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறையில் நேற்று இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி கலாநிதி பாலகுமார், யாழ்.மருத்துவர் சங்கத் தலைவர் மருத்துவர் முரளி வல்லிபுரநாதன் மற்றும் மருத்துவர் நொவில் விஜயசேகர, சமுதாய மருத்துவத்துறை தலைவர் மருத்துவர் சுரேந்திரகுமாரன், மருத்துவர் சிறிகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் இந்த விடயம் கூறப்பட்டது. மருத்துவர் நொவில் விஜயசேகரவால் அந்தப் பொறிமுறை வடிவமைக்கப்பட்டுள்ளது.

நீரிலுள்ள ஒயில், கிரீஸ் என்பனவற்றை அகற்றுவதற்கான இந்தப் பொறிமுறையானது குறைந்த செலவில் செய்யக்கூடிய ஒன்று. அதற்கு இயற்கையான பொருள்களைக் கொண்டே வடிகட்ட முடிகிறது. எனினும் ஒயில், கிரீஸ் என்பனவற்றை 100 வீதம் அகற்றுகிறதா என்பது பற்றிய பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. அதன் பின்னர் அதனை பயன்பாட்டுக்கு விட முடியும். அது முழுமையாக வெற்றியளிக்கும் என்று எதிர்பார்க் கப்படுகிறது. தவிர தண்ணீரில் உள்ள மாசுக்களையும் அகற்றுவதற் கான ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தண்ணீரில் உள்ள நுண்ணுயிர்களை அழிக்கக்கூடியதாகவும் உள்ளது. அதில் தப்பிவரக்கூடிய மாசுக்களையும் அழிக்கக்கூடியதாக மேலதிக பொறிமுறை அமைகிறது. நைத்திரேற் பசளைகள் அதிகளவு பயன்படுத் தப்படுவதால் தண்ணீர் அதிகளவு பாதிக்கிறது. அது அதிகளவில் இருக்கக் காரணம் விவசாயத்தில் அதிக ளவில் அதனைப் பயன்படுத்துவ தனாலேயே. அதனை இப்போது உணர்ந்திருக்கிறோம். அதனையும் அகற்றக்கூடியதாக இந்தப் பொறி முறையை மேன்மைப்படுத்த முற்படுகிறோம். அனைத்து மாசுக்களும் அகற்றப்பட்டு ஈகோலி பற்றீ ரியாவையும் அகற்றக்கூடிய வகை யில் யுவி கதிர்வீச்சு முறையையும் அந்தப் பொறிமுறையில் இணைத் துக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. சில ஆய்வுகளைச் செய்து பார்க்கவுள்ளோம் என்று அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-4)

## இன்புளுவன்சா

கூறப்பட்டது.

தற்போது நாளாந்தம் இன்புளுவன்சா வைரசினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலை விடுதியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பலர் வீடு திரும்பியுள்ளனர். வடக்கில் இதுவரை வவுனியா, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இந்த வைரஸ் தொற்று இருப்பது தொடர்பில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. (த-4)

## இரு கட்டங்களாக

நள்ளிரவு கலைக்கப்பட்டு அடுத்த தேர்தலுக்கான திகதியும் அறிவிக்கப்பட்டுள்ளதால் பரீட்சையில் மாற்றங்கள் மேற்கொண்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

பரீட்சைகள் திணைக்களம் முன்னர் வெளியிட்ட அறிக்கையின்படி, ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைகள் ஓகஸ்ட் 4 ஆம் திகதி ஆரம்பமாகி 28 ஆம் திகதிவரை நடைபெறவிருந்தன. பொதுத் தேர்தல் இடம்பெறவுள்ளதால், உயர்தரப் பரீட்சை முதற்கட்டமாக ஓகஸ்ட் 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 13 ஆம் திகதி வரைக்கும்– இரண்டாம் கட்டமாக ஓகஸ்ட் 24 ஆம் திகதி தொடக்கம் செப்ரம்பர் 8 ஆம் திகதி வரையும் நடைபெறும் என்றும் அறிவித்துள்ளார்.

எனினும் 5 ஆம் தரத்துக்கான புலமைப்பரிசில் பரீட்சைகள் ஏற்கனவே திட்டமிட்டவாறு ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி நடைபெறும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-4)

## பொதுத்

வேட்பாளர்கள் செலவு செய்யும் நிதியை விட இந்த நிதி குறைவானது எனவும் அவர் குறிப் பிட்டார்.

கொழும்பிலுள்ள தேர்தல்கள் செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மிகக் குறுகிய கால அறிவிப்பில் நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான வேட்பு மனு, ஜுலை 6 ஆம் திகதி தொடங்கி ஜுலை 13 ஆம் திகதி நண்பகல் வரையில் ஏற்றுக் கொள்ளப்படும். அத்துடன் புதிய நாடாளுமன்றம் செப்ரெம்பர் முதலாம் திகதி கூடும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் குறிப் பிட்டார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு 3 ஆயிரம் மில்லியன் ரூபா செலவு ஏற்பட்டது. தற்போதைய தேர்தலுக்கு 4 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் வேட்பாளர்கள் தேர்தலுக்கு செலவு செய்யும் நிதியை விட இது குறைவானது. தற்போது வரையில் 64 அரசியல் கட்சிகள் மாத்திரமே பதிவு செய்யப் பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் இதன் போது குறிப் பிட்டார். (த-5)

## ஓரணியில்

தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கு நீதியை எதிர் பார்த்து தமிழர்கள் இருக்கின்ற வேளையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இலங்கை மீதான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் விசாரணை அறிக்கை வெளிவருகின்றது. இந்த அறிக்கையை உலகத் தமிழர்கள் அனைவரும் எதிர்பார்த்து இருக்கின்றார்கள்.

இந்நிலையில், ஐ.நா. விசாரணை அறிக்கை வெளிவருவதற்கு முன்னர் அதாவது, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. தமிழர் உரிமைகளை வென்றெடுக்க – தமிழர் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க நாம் இந்தத் தேர்தலில் ஓரணியில் திரளவேண்டும். இதன் மூலம் தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் நாம் வரலாறு காணாத சாதனையைப் படைக்கவேண்டும். கடந்த வடக்கு மாகாணசபைத் தேர்தலில் ஓரணியில் எழுந்த மாபெரும் தமிழின எழுச்சி இந்த நாடாளுமன்றத் தேர்தலில் மேலும் அதிக ரிக்கவேண்டும்.

எமது கட்சிக்குள் சிறுசிறு பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால், தேர்தல் ஒன்று வரும்போது கட்சி என்ற ரீதியில் நாம் ஒற்றுமையாக செயற்பட்டு எமது பலத்தைக் காட்ட வேண்டும்.

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்தித்து நிரந்தர அரசியல் தீர்வு விடயம் தொடர்பிலும், [illegible] படைப் பிரச்சினை தொடர்பிலும் பேச்சு நடத்தியுள்ளது. இதன்போது, தீர்வு விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்ந்து பேச்சு நடத்துவேன் என்று ஜனாதிபதி எம்மிடம் வாக்குறுதியளித் துள்ளார்.

எனவே, நாம் பலமாக இருந்தால்தான் எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் எமது அதி உச்ச பலத்தை நாம் நிரூபிக்க வேண்டும். இதற்காக வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் மத்தியில் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளை நாம் ஒற்றுமையாக முன்னெடுக்கவேண்டும்–என்றார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராஜா, ஈ.சரவணபவன், பா.அரியநேத்திரன், எம்.ஏ.சுமந்திரன், சீ.யோகேஸ்வரன் உட்பட தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (த)

## 7 லட்சத்து

239 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திலிருந்து 7 பேர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். 10 பேர் வேட்பாளர்களாகப் போட்டியி டுவர்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கிய வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 2 லட்சத்து 53 ஆயிரத்து 58 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். வன்னித் தேர்தல் மாவட்டத்திலிருந்து 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெ டுக்கப்படவுள்ளதுடன், 9 பேர் வேட்பாளர்களாகப் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## ஜுலை 3 -14

திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாடாளுமன்றத் தேர்தல் ஓகஸ்ட் 17ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், அதற்கான வேட்பு மனுத் தாக்கல் ஜுலை 6ஆம் திகதியிலிருந்து ஜுலை 13ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## 32 வருடங்களின்

வெளிநாட்டில் காணாமல் போய் விட்டார் என்று அவரது குடும்பத்தினர் எண்ணியிருந்த நிலையில் அவர் கண்டறியப்பட்டுள்ளார்.

மன்னாரைச் சேர்ந்த குறித்த நபர் 1983 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றிருந்தார். 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவருக்கும் ஆவரது குடும்பத்தினருக்கும் இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது. காரணம் அவர் மீண்டும் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டு விட்டார். அதனை அவரது குடும்பத்தினர் அறிந்திருக்கவில்லை. வெளிநாட்டில் அவர் காணாமல் போய் விட்டார் என்றே அவரது குடும்பத்தினர் 25 வருடங்களாக – கடந்த ஏப்ரல் மாதம் வரை எண்ணிக் கொண்டிருந்தனர்.

ஆனால் அவர் 1990 ஆம் ஆண்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டிருந்தார். அது பற்றிய எந்த அறிவிப்பும் அவரது குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. 17 வருடங்களுக்கு முன்னர் அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பல சிறைச்சாலைகளுக்கு அவரை மாற்றி மாற்றித் தடுத்து வைத்திருந்துள்ளனர் பொலிஸார். அவருக்கு எதிராகக் கோட்டை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து நீதிமன்று, பொலிஸ் நிலையத்தில் கோப்பு உள்ளபோதும் அதனுள் எந்த ஆவணமும் இருக்கவில்லை என்றும் தற்போது கூறப்பட்டுள்ளது.

அவருக்கு எதிராக என்ன குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டிருந்தது என்பது அவருக்கும் இன்றுவரை தெரியவில்லை. அவர் வெளிநாட்டில் காணாமற்போய்விட்டார் என்று அவரது குடும்பத்தினர் பல வழிகளிலும் கண்டறிய முயற்சி மேற்கொண்டபோதும் அது பயனளித்திருக்கவில்லை.

இந்நிலையில் அவர் தேடுவார் அற்றுச் சிறைகளில் வருடக்கணக்கில் இருந்து வாடிய நிலையில் அவரது தகவலுக்கேற்ப (அதாவது மன்னாரிலிருந்து புறப்படும்போது 1983 ஆம் ஆண்டு அவர் தெரிந்திருந்த தகவல்) கடந்த டிசெம்பர் மாதம் அவரது சகோதரனுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பல வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் – அவரது சகோதரன் இந்தியாவில் வசித்து வரும் நிலையில் அந்தக் குடும்பஸ்தர் கூறிய முகவரியில் தற்போது எவரும் இல்லை. அதனால் அந்தக் கடிதம் திரும்பிவிட்டது. இந்நிலையில் சிறைச்சாலைக்குச் சென்றவர்களே அவரை அறிந்திருந்ததனால் அது பற்றி அவரது குடும்பத்தினருக்குத் தெரியப்படுத்தியிருந்தனர். அதன்படி அம்பாந் தோட்டைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவரது குடும்பத்தினர் அவரைச் சந்தித்து உறுதிப்படுத்திக் கொண்டனர்.

அதன் பின்னர் அவர் தொடர்பாக வழக்கு நிலைமையைப் பார்த்தபோதே அவருக்கு வழக்கு ஒன்று இருந்தாலும் அவருக்கு என்ன குற்றச்சாட்டு என்பது உள்ளிட்ட எந்தவொரு ஆவணமும் அந்த வழக்கேட்டில் இருக்கவில்லை என்பது தெரியவந்தது. அது பற்றி இன்று வரை நீதிமன்றுக்கோ பொலிஸாருக்கோ தெரியவில்லை என்று கூறப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே சட்டத்தரணி மூலமாக நீதிமன்றின் கவனத்துக்கு அந்த விடயம் கொண்டு செல்லப்பட்டு பின்னர் அவர் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டார். தற்போது அவருக்கு 75 வயதாகிவிட்டது. வெளிநாட்டில் காணாமற்போய் விட்டதாக எண்ணியிருந்தவர்களுக்கு இந்தச் சம்பவம் அதிர்ச்சியையும் கொடுத்துள்ளது. தற்போது அந்தக் குடும்பத்தினர் மகிழ்ச்சியுடன் உள்ளனர். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலின்ஸ் உதைபந்தாட்டத் தொடரில் இருதயராஜா, கலைமதி அடுத்த சுற்றுக்குள்

கரணவாய், ஜூன் 28
பரபரப்பான ஆட்டங்களில் வெற்றி பெற்று அடுத்தசுற்றுக்களுக்கு முன்னேறின மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகம் மற்றும் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் என்பன.

*இருதயராஜா எதிர் காந்திஜி*

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகமும் ஊர்காவற்றுறை காந்திஜீ விளையாட்டுக் கழகமும் மோதின.

ஆட்டத்தில் பார்வையாளருக்கும், விறுவிறுப்புக்கும், கூக்குரல்களுக்கும், கரகோசங்களுக்கும் பஞ்சம் இருக்கவில்லை. இந்தப்பதட்டமான சூழ்நிலைகளுக்கு அமைய பந்து அங்குமிங்கும் அல்லோலகல்லோலப் பட்டதுதான் மிச்சம் முதல் பாதியின் முடிவுவரை கோலெதுவும் பதிவாகவில்லை. இடைவேளையின் பின்னரும் இதே நிலைமை விடாப்பிடியாகத் தொடர ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.



இதனையடுத்து வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமனிலைத் தவிர்ப்பு உதையில் 3:2 என்ற அடிப்படையில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

*கலைமதி எதிர் யங்ஹென்றிஸ்*

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. இந்த ஆட்டத்திலும் போராட்ட குணத்துக்கு பஞ்சமே இருக்கவில்லை. இரு அணிகளதும் பின்வரிசை பலம்பெற்றிருக்க ஆட்டத்தின் முதல் பாதியில் கோலெதுவும் பதிவாகவில்லை.

இரண்டாவது பாதியிலும் இதே நிலைமை நீடிக்கும் என்று எதிர்பார்ப்புக்கள் இருந்தாலும் 15 ஆவது நிமிடத்தில் கலைமதி விளையாட்டுக்கழகம் தனக்கு கிடைத்த மூலை உதையினை கோலாக்க கலைமதியின் ஆதிக்கம் ஆரம்பமானது. இந்த பதட்டத்தில் இருந்து யங்ஹென்றிஸ் விடுபடுவதுக்குள் கலைமதி சார்பாக மற்றொரு கோல் விளாசப்பட 2:0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது கலைமதி விளையாட்டுக்கழகம்.

(ம-108)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 28
மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வளர்மதி விளையாட்டுக்கழகம் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் மென்பந்து துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்களில் முதலாவதாக இடம்பெறும் ஆட்டத்தில் நியூபவர் 'ஏ' அணியை எதிர்த்து கைதடி வளர்மதி அணியும் இரண்டாவது ஆட்டத்தில் கச்சாய் ஸ்ரீமுருகன் அணியை எதிர்த்து கைதடி சரஸ்வதி அணியும் மூன்றாவது ஆட்டத்தில் பாரதி அணியை எதிர்த்து அம்பிகை அணியும் நான்காவது ஆட்டத்தில் லிகோரியார் அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி அணியும் ஐந்தாவது ஆட்டத்தில் நவசக்தி 'ஏ' அணியை எதிர்த்து கதிரொளி அணியும் ஆறாவது ஆட்டத்தில் சாவகச்சேரி ஸ்ரீவிநாயகர் அணியை எதிர்த்து மின்னொளி அணியும் மோதவுள்ளன. (ம-23)

## கலைமதி, மைக்கல் அடுத்த சுற்றுக்குள்

கரணவாய், ஜூன் 28
தொண்டமனாறு கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும் அல்வாய் மைக்கல் விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தின் முழுப்பகுதியையும் தமதுகட்டுப்பாட்டில் வைத்திருந்த கலைமதி விளையாட்டுக் கழகம் 4:0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

இரண்டாவது ஆட்டத்தில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகமும் அல்வாய் மைக்கல் விளையாட்டுக் கழகமும் மோதவிருந்தன. இந்த ஆட்டத்தில் டைமன்ஸ் விளையாட்டுக் கழகம் குறித்த நேரத்துக்கு சமூகம்தராத காரணத்தினால் மைக்கல் விளையாட்டுக் கழகத்திற்கு வெற்றி வழங்கப்பட்டது.

(ம-108)

## இறுதியில் ஏஞ்சல்



யாழ்ப்பாணம், ஜூன் 28
யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் 17வயதுப்பிரிவு ஆண்களுக்கான அரையிறுதியாட்டங்கள் கடந்த வியாழக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்றன.

இதில் முதலில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதிக்கொண்டது. கடும்போராட்டத்துக்கு மத்தியில் முதல் சுற்றின் முடிவில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி 19:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. இரண்டாவது சுற்றிலும் முன்னிலை பெறத்தவறவில்லை மானிப்பாய் ஏஞ்சல். ஆட்டத்தின் முதல் பாதியின் முடிவில் மானிப்பாய் ஏஞ்சல் அணி 32:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. இரண்டாவது பாதியிலும் மானிப்பாய் ஏஞ்சலின் ஆதிக்கம் தடைப்படாமல் நீடித்தது. மத்தியின் வீரர்களால் மானிப்பாய் ஏஞ்சலினைக் கட்டுப்படுத்த முடியவில்லை முடிவில் 64:44 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிக்கு முன்னேறியது மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை.

(ம-23)

## இறுதிக்கு பறந்தது வைகறை

யாழ்ப்பாணம், ஜூன் 28
கடும் போரட்டத்தின் பின்னர் தாவடி காளி அம்பாள் அணியை வீழ்த்தி புதுமடம் வைகறை அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் மின்ஒளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத்தொடரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் புதுமடம் வைகறை அணியை எதிர்த்து தாவடி காளி அம்பாள் அணி மோதிக் கொண்டது.இதில்புது மடம் வைகறை அணி 5:2என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது. (23)

## ஏஞ்சல் - யாழ். மத்தி இறுதியில் மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 28
யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் 13 வயதுப்பிரிவு ஆண்களுக்கான அரையிறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்றன.

முதலாவது அரையிறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து யாழ்.இந்துக்கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் மானிப்பாய் ஏஞ்சல்சர்வதேச பாடசாலை அணி 35:33 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் யாழ். மத்திய கல்லூரி அணி 18:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது.

(ம-23)

## சென்.அன்ரனிஸ் வி.க. முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 28
மூன்றாம்பிட்டி சென்.அன்ரனிஸ் ஆலயத்தின் திருவிழாவை முன்னிட்டு மூன்றாம்பிட்டி சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மூன்றாம்பிட்டி சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு. பள்ளிமுனை சென்.லுட்சியா அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென்.ஜேம்ஸ் அணி மோதிக்கொண்ட ஆட்டத்தில் பள்ளிமுனை சென்.லுட்சியா அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இரணைமாதாநகர் சென். மேரிஸ் அணியை எதிர்த்து சந்திரபுரம் குறோஸ்ரார் அணி மோதிக் கொண்ட ஆட்டத்தில் சந்திரபுரம் குறோஸ்ரார் அணி 3:1என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. மாலை இடம் பெற்ற ஆட்டங்களில் சந்திரபுரம் குறோஸ்ரார்அணியைஎதிர்த்து பள்ளிமுனை சென்.லுட்சியா அணி மோதிக்கொண்ட ஆட்டத்தில் பள்ளிமுனை சென்.லுட்சியா அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. நாச்சிக்குடா சென். மேரிஸ் அணியை எதிர்த்து முருகன் பொதுசன அணி மோதிக்கொண்ட ஆட்டத்தில் முருகன் பொதுசன அணி 7:6 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. வலைப்பாடு சென். ஆன்ஸ் அணியை எதிர்த்து பெரிய பண்டிவிரிச்சான் மரிய கொறற்றி அணி மோதிக்கொண்ட ஆட்டத்தில் சென்.ஆன்ஸ் அணி 2:1என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## தேசியத்தில் சாதித்தது கேகாலை



26ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண்களுக்கான தேசிய மட்ட வலைப்பந்தாட்டத் தொடரில் கேகாலை மாவட்ட இளைஞர் அணி முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்ட சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உள்ளரங்கில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட இளைஞர் அணியை எதிர்த்து கேகாலை மாவட்ட இளைஞர் அணி மோதிக் கொண்டது. இதில் கேகாலை மாவட்ட இளைஞர் அணி 35:32 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

## யாழ்.மாவட்ட பாடசாலைகளின் கரப்பந்தாட்டத் தொடர்

வடக்கு மலையக விளையாட்டு ஒன்றியம் யாழ். மாவட்ட அணிகளுக்கிடையில் கரப்பந்தாட்டத் தொடரொன்றை நடத்தத்திட்டமிட்டுள்ளது.

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு இருபாலருக்குமிடையில் நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ள கரப்பந்தாட்ட தொடர் எதிர்வரும் 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. எனவே மேற்படி தொடரில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் வடக்கு மலையக விளையாட்டு ஒன்றியத்தின் தலைவர் தயாளபாலனுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ம-23)

## அரியாலை சனசமூக நிலைத்தின் மேசைப்பந்தாட்டத் தொடர்

அரியாலை சனசமூக நிலைத்தின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த சனசமூக நிலையத்தினர் மேசைப்பந்தாட்டத் தொடரொன்றினை நடத்தத் திட்டமிட்டுள்ளனர். வடமாகாண ரீதியாக இருபாலருக்குமிடையில் திறந்த தொடராக நடைபெறவுள்ள குறித்த தொடர் எதிர்வரும் நான்காம், ஐந்தாம் திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொடரில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள்எதிர்வரும்30 ஆம் திகதிக்குமுன்னர்அரியாலைசனசமூக நிலையத்தின் தலைவர் செந்தில் குமரனுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலுவான நிலையில் இலங்கை



இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாள் முடிவான நேற்று பாகிஸ்தான் இரண்டாவது இன்னிங்ஸிற்காக 2 இலக்குகள் இழப்புக்கு 171 ஓட்டங்களைக் குவித்துள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் மிஷ்பா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸிற்காக 138 ஓட்டங்களில் சுருண்டது.

பந்துவீச்சில் இலங்கை சார்பாக கௌசல் ஐந்து இலக்குகளையும் பிரசாத் மூன்று இலக்குகளையும் சமீர ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

139 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலை பெற்றுவிடலாம் என்ற முனைப்பில் களமிறங்கிய இலங்கையணி நேற்றுமுன்தினம் இரண்டாம் நாள் முடிவில் 304–9 என்ற நிலையில் இருந்தது. ஹேரத் 10 ஓட்டங்களுடனும் சமீர ஓட்டங்கள் எதனையும் பெறாமலும் தொடர்ந்து துடுப்பெடுத்தாடக் களமிறங்கினர். இரண்டே ஓட்டங்களுடன் சமீர பவிலியன் திரும்ப 315 ஓட்டங் களுடன் இலங்கையின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 177 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு அதன் ஆரம்ப வீரரான ஹபீஸ் எட்டே ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பி ஏமாற்றம் கொடுக்க இன்னிங்ஸ் தோல்வியை நோக்கிய இக்கட்டில் பாகிஸ்தான் தள்ளாடியது. செஷாட்டுடன் இணைந்தார் அஷார் அலி. சொல்லிக்கொள்ளும் படியான பலமான இணைப்பாட்டம். அணி படிப்படியாக பலம்பெற ஆரம்பித்தது. இன்னிங்ஸ் தோல்வி என்ற சங்கட நிலைமை பாகிஸ்தானை விட்டுப் பறந்தோடியது. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடக்க பாகிஸ்தான் மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் நூறு ஓட்டங்களை எட்டியது. இணைப்பாட்டமாக 120 ஓட்டங்கள் பகிரப்பட்டு அணியின் ஓட்டங்கள் 129ஆக இருந்த வேளையில் பாகிஸ்தானின் இரண்டாவது இலக்காக செஷாட் 69 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இடத்தை பக்காவாக நிரப்பினார் யுனிஸ்கான். பாகிஸ்தான் 171–2 என்ற நிலைமையில் இருந்த பொழுது மங்கலான வெளிச்சத்தின் காரணமாக ஆட்டம் தடைப்பட்டு அத்துடன் மூன்றாம் நாள் முடிவுக்கு வந்தது. களத்தில் அஷார் அலி 64 ஓட்டங்களுடனும் யுனிஸ்கான் 23 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)


# தொடர்ந்து விளையாட விரும்புகின்றேன்

தான் இன்னமும் டெஸ்ட் ஆட்டங்களில் விளையாட விரும்புவதாக மேற்கிந்தியத் தீவுகளின் அனுபவ வீரரான சந்தர்போல் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளின் அனுபவ வீரரான சந்தர்போல் டெஸ்ட் ஆட்டங்களில் மட்டும் விளையாடி வருகிறார். ஆனால், சமீபத்தில் நடைபெற்ற ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து கழற்றி விடப்பட்டார். சந்தர்போல் இன்னும் 87 ஓட்டங்கள் எடுத்தால் தீவுகளின் ஜாம்பவான் லாராவின் ஓட்டங்களை முந்தி விடுவார் என்பதால் நீக்கப்பட்டார் என்று சொல்லப்படுகிறது. இதனால் அவரது கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வந்துள்ளதாகவும் அவர் தனது ஓய்வு முடிவை அறிவிப்பார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தான் இன்னும் டெஸ்ட் ஆட்டங்களில் விளையாட விரும்புவதாக சந்தர்போல் தெரிவித்துள்ளார்.

ஓய்வு முடிவு தொடர்பாக சந்தர்போல் தெரிவித்ததாவது நான் தொடர்ந்து டெஸ்ட் ஆட்டங்களில் விளையாட விரும்புகிறேன். 2015 ஆம் ஆண்டு முடியும் வரை ஓய்வு பெறுவதை விரும்பவில்லை. அதே சமயம் லாராவின் சாதனையை முறியடிக்க வேண்டும் என்பதைப் பற்றி நினைக்கவில்லை. ஓய்வு எனது விருப்பம்போல இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றேன். எனது திருப்தியுடன் விடைபெற ஆவலாய் உள்ளேன் என்றார். (ம)

# மக்கலம் விலகல்



சிம்பாப்வே மற்றும் தென்னாபிரிக்க தொடர்களில் இருந்து நியூஸிலாந்து அணியின் தலைவர் பிரெண்டன் மக்கலம் விலகியுள்ளார்.

உலகக்கிண்ணத் தொடருக்குப் பின்னர் ஐ.பி.எல். தொடர், ஐ.சி.சி.யின் தொடர்கள் என்று தொடர்ச்சியாக விளையாடி வந்த மக்கலம் களைப்படைந்துள்ளதால் மேற்குறிப்பிட்ட இரண்டு தொடர்களிலும் இருந்து விலகியுள்ளதாகத் தெரிகிறது. குறித்த தொடர்களில் இருந்து மக்கலம் விலகியுள்ளது உறுதியானால் நியூஸிலாந்தின் இளம் வீரர் வில்லியம்சன் தலைவராக கடமையாற்றுவார் என்றும் சொல்லப்படுகிறது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111




## German Swiss Academy

ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகளில் (Deutsch) Mr.R. மயூரன் ஆசிரியரால் A1 பரீட்சைக்கு ஏற்றவாறு கற்பிக்கப் படுகின்றது.

Note:- இம்முறையும் எமது மாணவர்கள் 60-78 வரையான புள்ளிகளைப்பெற்று சித்தி அடைந்துள்ளனர்.

தொடர்புகளுக்கு: ஐயா கடையடி கண்டி வீதி, சாவகச்சேரி
077 645 4998

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

### af பிரெஞ்சு மொழி



கற்பதற்கு இலங்கையில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. (யாழில் 1976 முதல்). ஆசிரியர்கள் : யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் & ஆங்கில விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). இலங்கையில் AFமட்டுமே அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள்.

ஆரம்பம் விரைவில்... உடன் அழைத்து பதியுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

## LONDON METROPOLITAN COLLEGE

LONDON METROPOLITAN COLLEGE

சர்வதேச தரத்திலான ஆங்கிலகற்கை நெறிகளை நடத்தும் யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கிலகல்வி நிறுவனம்

### IELTS
Duration: 60 hours, Week/ Week end

- ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம்
- முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட கற்பித்தல வசதி
- IELTS 5.5-7.0 Band பெறுவதற்கான உத்தரவாதம்

### IELTS life skills A1,B1
(Speaking and Listening)
Duration: 48 hrs, Week/ Week ends

- UK settlement visa இற்கு அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது.
- UKBA இன் புதிய நடைமுறைக்கேற்ப Settlement விசாவிற்கான IELTS A1 வகுப்புக்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

### Certificate In SPOKEN ENGLISH WITH GRAMMAR
(Quick learning program)
Duration: 48hours, Week/ Week ends

- ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்து கொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி.
- ஆங்கில உரையாடல் புலமையை வளர்ப்பது தொடர்பான பூரண விளக்கங்களுடன் கூடிய கற்கைநெறி.

### DIPLOMA IN ENGLISH
Duration: 3 Months, Week/ Week ends
Writing -60Hrs Reading -48Hrs, Listening -48Hrs Speaking -48Hrs

- தொழில்தேடுவோர், தொழில்புரிவோர், A/L பரீட்சைக்கு தோற்றியோர் ஆங்கில புலமையை வளர்த்து கொள்வதற்கான கற்கைநெறி.
- Speaking, Reading, Listening, Writing ஆகியன விசேட செயன்முறை மூலம் விரிவாக கற்பிக்கப்படும்
- 2014 A/L எழுதிய மாணவர்களிற்கு தனிப்பட்ட ரீதியில் கற்கைநெறி ஒழுங்குசெய்யப்படு

Week days: 29.06.2015 | 06.07.2015
Week ends: 28.06.2015 | 05.07.2015

அனைத்து கற்கைநெறிகளிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம்.
தவணை அடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்

#197, Arasady Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் பொன்விழா அழைப்பு



காலம் : 28.06.2015 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப 2.30 மணி
இடம் : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான முன்றல்

### விசேட நிகழ்வுகள்

- நாட்டியாஞ்சலி (வேம்படி மகளிர் கல்லூரி மாணவி)
- காளிங்க நடனம் (நுண்கலைப்பீட மாணவி)
- நாட்டிய நாடகம் (வசாவிளான் மத்திய கல்லூரி மாணவர்கள்)
- சத்தியவான் சாவித்திரி இசை நாடகம் (யாழ்ப்பாண, நாட்டார் வழக்கியல் கழகம்)
- தென்னிந்திய இன்னிசை மாமணி டாக்டர் நித்திய ஸ்ரீ மகாதேவன் குழுவினர் வழங்கும் இசைச் சங்கமம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் பொன்விழாக் குழுவினர்.

## German Institute

Kajenthini ஆசிரியையால் Deutsch மொழி வகுப்புகள் பல வருட காலமாக தரம் வாய்ந்த Institute ஆக நடைபெற்று வருகிறது. 100% சித்தியடையும் வாய்ப்புகள் உண்டு.



10, Palaly Road, Jaffna.
T.P: 077 160 48 23 Mrs. P. Kajenthini





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பிதழ் 28.06.2015



# 2 லட்சம்

## வரிப் பணத்தில் கிடைத்த பயன் என்ன?

Digitized by Noolaham Foundation
noolaham.org

# 2 லட்சம் வரிப்பணத்தில் கிடைத்த பயன் என்ன?

தி.ராஜ்



கடந்த 23ஆம் திகதி வடக்கு மாகாண சபையின் அமர்வு ஒத்திவைக்கப்பட்டது. கூட்டத்திற்கென வந்திருந்த உறுப்பினர்கள் அனைவரும் சபை அமர்வில் கலந்துகொள்ள மறுத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் சிறப்புரிமையை வவுனியா அரச அதிபர் மீறிவிட்டார் என்று கூறி சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்தக் கோரியே அவர்கள் போராட்டம் செய்தார்கள்.

**நடந்தது என்ன ?**

அன்றைய தினம் ஆளும் மற்றும் எதிர்த் தரப்பு உறுப்பினர்கள் சபைக்கு வந்திருந்தனர். திடீரென வவுனியா மாவட்ட மாகாணசபை உறுப்பினர்கள், சபாமண்டபத்துக்குச் செல்லும் பிரதான வாயில் படியில் அமர்ந்து கொண்டனர். இதன் பின்னர் ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினர்களும் அதில் வந்து அமர்ந்து கொண்டார்கள்.

வடக்கு மாகாண சபையின் அமர்வை நடத்த அனுமதிக்கப் போவதில்லை என்று தெரிவித்த உறுப்பினர்கள், நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் வவுனியா மாவட்ட அரச அதிபரை மாற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரினர். இந்தப் போராட்டத்தில் மாகாண சபையின் எதிர்கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

**ஏன் போராட்டம் ?**

மார்ச் மாதம் 2ஆம் திகதி வவுனியா சிதம்பரபுரம் மக்கள் வவுனியா மாவட்டச் செயலகம் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். வீட்டுத்திட்டத்தில் இடம்பெற்றதாக அவர்கள் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்கள் மீது கவனத்தை ஈர்ப்பதே போராட்டக்காரர்களின் நோக்கம். போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் ஒரு கட்டத்தில் மாவட்டச் செயலகத்திற்குள் செல்வதற்கு முயன்றனர். பொலிஸார் அவர்களைத் தடுத்தனர். அப்போது அந்தப் பகுதியால் சென்று கொண்டிருந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனை பொலிஸ் அதிகாரி மறித்து, மக்களுடனும், அரச அதிபருடனும் பேசி நிலமையை சுமுகமாக்குமாறு கேட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னர், போராட்டத்தில் ஈடுபட்ட மக்களில் 5 பேரை அழைத்துக் கொண்டு மாகாணசபை உறுப்பினர் அரச அதிபரைச் சந்திக்கச் சென்றுள்ளார். அப்போது வவுனியா அரச அதிபர் அவரை வெளியேறுமாறு கூறி மாகாண சபை உறுப்பினரின் சிறப்புரிமையை மீறிவிட்டார் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

**சிறப்புரிமை மீறல்**

இந்தச் சம்பவத்தின் பின்னர் வடக்கு மாகாண சபை உறுப்பினர் லிங்கநாதன், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்துக் கொண்டு சென்று அரச அதிபரிடம் பேசிய போதும், அரச அதிபர் மக்கள் பிரதிநிதிகள் எல்லோரையும் அவமானப் படுத்தும் விதத்தில் செயற்பட்டார் என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இவ்வாறு மக்கள் பிரதிநிதிகளின் சிறப்புரிமையை மீறிய, அரச அதிபரை இடமாற்றம் செய்ய வேண்டும் என்று கோரி மார்ச் மாதம் 17ஆம் திகதி வடக்கு மாகாண சபையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களுக்கு வழக்கமாக நடப்பதைப் போன்றே, இந்தத் தீர்மானம் மீதும் நடவடிக்கை எடுக்கப் படவில்லை. இதனால் கடந்த 9 ஆம் திகதி சபை அமர்வு ஆரம்பமானதும், மாகாண சபை உறுப்பினர்கள் எல்லோரும் தமது இருக்கைகளை விட்டு எழுந்து சபா மண்டபத்தின் நடுவே வந்து நின்று, அவைத் தலைவர் முன்பாகப் போராட்டம் நடத்தினர். தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மூன்று மாதங்கள் கடந்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டிய அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கோரினர். இது தொடர்பில் உரிய தரப்புக்களுக்கு அறிவித்து நடவடிக்கை எடுப்பதாக அவைத் தலைவர் தெரிவித்ததும், மாகாணசபை உறுப்பினர்கள் கலைந்து சென்றனர்.

**கிளர்ந்தது மாகாணசபை**

23ஆம் திகதி இடம்பெற்ற அமர்வுக்கு முன்னதாக, வவுனியா அரச அதிபரை இடமாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இதுவே உறுப்பினர்கள் சபா மண்டபத்தின் வாயில் படியில் அமர்ந்திருந்து போராட்டம் நடத்தியதற்கான காரணம்.

எதிர்கட்சித் தலைவர் தவராசாவும் அமர்ந்திருந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் கோரிக்கையை நியாயப்படுத்திப் போராடினார். அடிக்கடி தனது அறைக்குள் செல்வதும், பின்னர் வந்து அமர்ந்திருந்து போராடுவதுமாக அவரது செயற்பாடு தொடர்ந்தது. இந்த விடயத்தில் கூட்டமைப்பின் தலைமை நடவடிக்கை எடுக்கவில்லை என்பதே மாகாண சபை உறுப்பினர்கள் பலரின் கருத்தாக இருந்ததை அங்கு நடந்த உரையாடல்களில் இருந்து அவதானிக்க முடிந்தது.

கூட்டமைப்புத் தலைவர்கள் பிரதமர், ஜனாதிபதியை பல தடவைகள் சந்தித்த போதும், இந்த விடயம் பற்றி பேசவில்லை என்று சுட்டிக்காட்டி அவர்கள் குறைப்பட்டுக் கொண்டனர். இதனைவிடக் குறைவான பெறுமதியுள்ள விடயங்களைப் பற்றியே பேசினர் என்றும் ஒரு சிலர் குற்றஞ் சாட்டினர்.

உறுப்பினர் சிவாஜிலிங்கம் வழக்கம் போன்றே இந்த விடயத்திலும் உணர்ச்சி மயமாக நின்றார். தமது போராட்டத்துக்கான தீர்வு சில மணித்தியாலங் களில் கிடைக்வேண்டும் என்று அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்திடம் ஆவேசம் காட்டினார். ஆனால் அவைத் தலைவர் உடன்பட மறுத்து விட்டார்.

சபையை ஆரம்பித்து பின்னர் இது பற்றிப் பேசுவோம் என்று அவைத் தலைவர் கோரினார். அதற்கு உறுப்பினர்கள் உடன்படவில்லை. அவையை நடத்தாமல் விட்டால், மீளவும் ஆளுநர் திகதி குறிப்பிட்டே சபையை நடத்த முடியும் என்று சட்ட ரீதியான சிக்கலை அவைத்தலைவர் விளக்கினார். அதற்கு உடனே "மாகாண சபையை கலைப்பதென்றால் கலையுங்கள்" என்று ஆவேசமாக சீறினார் சிவாஜிலிங்கம்.

முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், 23ஆம் திகதி கொழும்பில் நின்றிருந்தார் என்பதால் இந்தப் போராட்டச் சிக்கலில் மாட்டிக்கொள்ளவில்லை. கூட்டமைப்பின் கட்சித் தலைவர்களும் நாடாளுமன்றத்தில் இருந்தனர். இதனால் அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி, உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாகாணசபை உறுப்பினர்கள் வலியுறுத்தினர். இல்லாவிடின் சபையை நடத்த அனுமதிக்க மாட்டோம் என்றனர்.

"சுடுகுது மடியைப்பிடி" என்ற ரீதியில் உறுப்பினர்கள் நின்றதனால் பொறுமையிழந்த அவைத்தலைவர் ஒரு கட்டத்தில், ஒரு குறித்த கால எல்லையில் இந்தப் பிரச்சினையை நானே நேரடியாகப் பேசி தீர்த்து விடுவேன். இல்லையென்றால் பதவியிலிருந்து விலகுகின்றேன் என்றார்.

இதன் பின்னர் போராட்டம் நடத்திய உறுப்பினர்கள் இரண்டாகப் பிளவுபட்டனர். அவைத் தலைவரின் கருத்துக்கு மதிப்புக் கொடுத்து, அவையைக் கூடுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று ஒரு சாராரும், இல்லை போராட்டத்தை தொடர வேண்டும் என்று இன்னொரு சாராருமாக இழுபறிப்பட்டனர்.

இறுதியில் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூடிப் பேசி, அவையை ஆரம்பித்து இந்தப் பிரச்சினை தொடர்பில் மாத்திரம் பேசி ஒத்தி வைப்பது என்று தீர்மானித்தனர். அதற்கமைய அவை, இரண்டு மணி நேரம் தாமதமாக ஆரம்பமாகியது. அரச அதிபர் இடமாற்றம் பற்றி மாத்திரம் பேசப்பட்டது.

**கூட்டமைப்பு வேறு கட்சி**

அமர்வில் பேசிய மாகாணசபை உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேறு கட்சியினைச் சேர்ந்தவர்கள் போன்றும், தாங்கள் வேறு கட்சியைச் சேர்ந்த வர்கள் போன்றும் கேட்பவர்களுக்குத் தோன்றும் வகையில் பேசினர். போதாக் குறைக்கு எதிர்கட்சித் தலைவர் தனக்கு கிடைத்த வாய்ப்பை கவ்விக் கொண்டு, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை வெளுத்து வாங்கினார். குறிப்பாக தற்போதைய அரசுடன் எழுதப்படாத உடன்படிக்கை உண்டென்று கூறியபவர்களால் இந்தப் பிரச்சினையையே தீர்க்க முடியவில்லையே என்று கிண்டலடித்தார். பிறகெப்படி அரசியல் பிரச்சினைகளைத் தீர்பார்கள் என்றார்.

அன்றைய தினம் ஏற்கனவே திட்டமிடப் பட்ட நிகழ்சி நிரலில் குறிப்பிட்ட விடயங் கள் இடம் பெறவில்லை. பிரேரணைகளும் அவையில் எடுத்துக் கொள்ளப். படவில்லை. மாறாக மாகாண சபை உறுப்பினர்களின் சிறப்புரிமை பற்றிச் சிறப்பாக ஆராயும் அமர்வாக நடந்தது முடிந்தது.

தங்கள் சிறப்புரிமையை நிலைநாட்டுவதற்கு மாகாண சபை உறுப்பினர்கள் போராட்டம் நடத்துவதைப் பார்த்துச் சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. ஆனாலும் இந்தப் போராட்டம் ஒரு விடயத்தைச் சுருக்கென்று குற்றிய முள்ளாகத் தைக்கிறது. தமது உரிமையை நிலைநாட்ட இப்படிப் போராடிய மாகாண சபை உறுப்பினர்கள் மக்களின் உரிமைக்காகவும், தாம் நிறை வேற்றிய வேறு பல தீர்மானங் களை நிறைவேற்றக்கோரி யும் ஏன் இவ்வளவு தீவிரமாகப் போராட்டம் நடத்தாமல் விட் டார்கள் என்ற கேள்வியே சரக் கென்று குத்துகிறது.

வடக்கு மாகாண சபை வடக்கு மக்களுக்காக – அதுவும் போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மக்களுக் காக – அமைக்கப்பட்டது. அப்படிப்பட்ட ஒரு சபையைச் சேர்ந்த உறுப்பினர்கள் மக்கள் நலனை ஒதுக்கி வைத்துவிட்டு தமது சிறப்புரி மைக்காக சபை அமர்வு களை நடத்தாமல் விடுவது சரியா என்ற கேள்வியை ஒதுக்கிவிட முடியாது.

மாகாண சபை உறுப்பினர்களின் சிறப்புரிமையை நிலைநாட்டும் அதேவேளையில் மக்களின் நலன்களையும் புறந்தள்ளாமல் பார்த்துக்கொள்வது மாகாண சபை உறுப்பினர்களின் கடமை, பொறுப்பு.

**2 லட்சம் வீண்**

வடக்கு மாகாண சபையின் ஓர் அமர்வை நடத்துவதற்கு ஒரு நாளில் சுமார் இரண்டு லட்சம் ரூபா செலவிடப்படுகிறது. அவ்வளவும் மக்களின் வரிப்பணம். மக்களின் சேவைக்காகவே செலவிடப் படுகிறது. அப்படியிருக்கையில் இரண் டரை லட்சம் ரூபா செலவிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட ஓர் அமர்வு மக்களின் பிரச்சினைகளில் துளிகூட அக்கறை செலுத்தாமல் நடந்து முடிந்திருப்பது கவலையளிக்கிறது.

வடக்கு மாகாணசபையின் 23ஆம் திகதிய அமர்வின்போது காலைச் சிற்றுண்டி மற்றும் மதிய உணவுக்காக மாத்திரம் 65 ஆயிரம் ரூபாவும், மாகாண சபை உறுப்பினர்களின் மதிய உணவுக்கான மண்டப வாடகையாகப் 10 ஆயிரம் ரூபாவும், மாகாண சபையின் அன்றைய அமர்வுக்கான அழைப்பிதழ்கள் அனுப்பியமை உள்ளிட்ட இதர செலவுகளுக்காக சுமார் 10 ஆயிரம் ரூபாவுமாக 85 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

(22ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹெல உறுமய

## கூறுவது வெறும் அரசியல் தந்திரம்

### ஒற்றையாட்சி விடுவிப்பு மீதான பதில் வாதம்

நிரான் அன்கிற்றல்

கடந்த சூரியகாந்தியில் "ஒற்றையாட்சியை தாண்டி வருவாரா மைத்ரிபால?" எனும் தலைப்பின் கீழ் குமார வடிவேல் குருபரன் ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தார். தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் கருத்துக்களை மேற்கோள்காட்டி அந்தக் கட்டுரை வரையப்பட்டிருந்தது.

கட்டுரையிலே மைத்ரிபால சிறிசேன ஒற்றையாட்சியைத்தாண்டி வருவார் என சுமந்திரன் கூறியிருந்தார் என்று எழுதப்பட்டு இருந்தது. யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு அரசியல் கருத்துரையாடலில் சுமந்திரன் தெரிவித்த கருத்தின் ஒரு பகுதியே அந்தக் கட்டுரையில் எடுத்தாளப்பட்டிருந்தது. உண்மையில் அந்தக் கலந்துரையாடலில், இலங்கையின் அரசியல் தீர்வு தொடர்பாக சுமந்திரன் கூறிய கருத்துக்களின் சுருக்கத்தினை பகிர்தல் வாசகர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறேன்.

மைத்திரிபால சிறிசேனவுக்கு தேர்தலில் ஆதரவளிக்க முன், தமிழர் பிரச்சினைக்கு எவ்வாறான ஓர் அரசியல் தீர்வு எட்டப்படலாம் என்ற இணக்கத்தை மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்ரமசிங்க மற்றும் சந்திரிகா குமாரதுங்க ஆகிய மூவருடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எட்டியதாக சுமந்திரன் அந்தக் கருத்துரையாடலில் குறிப்பிடுகிறார். பொதுத் தேர்தலுக்குப் பின்பாக அது தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இரு தரப்பினரும் இணங்கியிருந்தனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த இணக்கப்பாட்டினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஞாபகப்படுத்தியதன் விளைவாகவே ஒற்றை ஆட்சி என்ற சொற்பதத்தினை ஜாதிக ஹெல உறுமயவின் செல்வாக்கினையும் மீறி தனது தேர்தல் அறிக்கையில் இருந்து ஜனாதிபதி சிறிசேன நீக்கியிருந்தார் என்றும் சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமிழ் மக்கள், தாமாகவே தம்மை ஆளும் அதிகாரங்களை உடையவர்களாகக் – கொழும்பின் தலையீடு அவசியமானது தவிர்ந்த ஏனைய அதிகாரங்களை – தமது வாழ்க்கையினைக் கொண்டு நடத்தக்கூடிய ஒரு தீர்வினையே வலியுறுத்துகின்றனர் என்று தெரிவித்திருந்தார்.

அத்தோடு, தீர்வுக்கான ஒரு திறவு அல்லது வெளி இப்போது காணப்படுகின்றது என்றும், அது ஒரு சந்தர்ப்பம் மாத்திரமே என்பதுடன் அது நிறைவேறுமா இல்லையா என்பதனை யாரும் உறுதிப்படுத்த முடியாது என்றும் தெரிவித்திருந்தார். நிறைவேறுமா இல்லையா என்ற சந்தேகம் நிலவுகிறது என்பதற்காக கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தாது விடுவது முட்டாள் தனம் என்றும் விளக்கியிருந்தார்.

சுமந்திரன் கூறிய முழுமையான விவரங்கள் இவை தான். எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பொதுபல சேனா போன்ற கட்சியினரும் ஒற்றையாட்சியைக் கைவிட ஒப்புக்கொண்டனர் என்ற விதத்தில் மட்டுமே சுமந்திரனிக் கருத்தை வியாக்கியானிக்க முடியுமா என்பது கேள்விக்குரியது. சுமந்திரன் கூறிய கருத்தான, அரசியல் தீர்வு தொடர்பான இணக்கப்பாட்டிற்கும்; (இது வாய்க்குமா இல்லையா என்று ஒருவராலும் உறுதியாக கூற முடியாது என சுமந்திரனே கூறியபொழுதும்) கட்டுரையாளர் சுமந்திரன் தெரிவித்தார் எனக்கூறும் ஒற்றை ஆட்சியைத் தாண்டி சிறிசேன வருவார் என்ற கருத்திற்கும் இடையில் இருக்கும் பெரும் இடைவெளியினை வாசகர்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினேன்.

ஜாதிக ஹெல உறுமயவின் ஆலோசகர்களுள் ஒருவரான அசோகா அபேகுணவர்தன அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தை மேற்கோள் காட்டியே குருபரனின் வாதங்கள் கட்டுரையில் முன்வைக்கப்பட்டிருந்தன. ஜனாதிபதி சிறிசேனவின் தேர்தல் அறிக்கையில் இருந்து ஒற்றை ஆட்சி என்ற பதம் நீக்கப்பட்டமை குறித்து சுமந்திரன் கூறிய கருத்தோடு, அபேகுணவர்த்தனவின் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் "பொது வாக்கெடுப்பு தேவைப்படும் எந்தவொரு அரசமைப்புப் பிரிவையும் சிறிசேன மாற்ற மாட்டார் என்ற வாசகம் சேர்க்கப்பட்டது – இதன் மூலமாக ஒற்றையாட்சி என்ற வாசகத்தை எம்மால் மறைத்து வைக்க முடிந்தது" என்ற பகுதியை ஒப்பிட்டு கட்டுரையாளர் தனது கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். தமிழ் மக்களுக்கு உண்மைக்கு புறம்பான கருத்தினை சுமந்திரன் தெரிவித்திருக்கிறார் என்கிற குற்றச்சாட்டு கட்டுரையில் இழையோடுகிறது.

கட்டுரையாளர் மேற்கோள் காட்டும், அபேகுணவர்த்தனவின் புத்தகம், ஜனவரி 2015இல் ஆட்சியை மாற்றி அமைக்க ஜாதிக ஹெல உறுமய எவ்வாறு பங்களிப்புச் செய்தது என்பதனை வெளிப்படுத்த எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாகும். இந்தப் புத்தகம் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர்களை வீரர்களாகச் சித்தரித்திருப்பதை வாசிக்கும் எவரும் அவதானிக்காமல் விடமுடியாது. அதேநேரத்தில் ஆட்சி மாற்றத்தில் ஏனைய கட்சிகளின் பங்களிப்பைப் குறைவுபடுத்தியும் காண்பித்திருக்கிறது அந்தப் புத்தகம். இலங்கையில் எப்போதுமே காணப்படும் சாதாரண அரசியல் தந்திரம் இது.

அப்படியிருக்கையில், ஜாதிக ஹெல உறுமயவின் கருத்துக்களை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியுமா? அதுவும் அரசியல் ஆய்வு ஒன்றை மேற்கொள்ளும் போது, ஓர் அரசியல் தரப்புச் சொல்கின்ற விடயங்களில் உள்ள நீக்குப் போக்குகளைக் கவனத்தில் எடுக்காமல் அதனை முழுமையாக நம்பி கருத்திட முடியுமா? துரதிஷ்டவசமாக ஜாதிக ஹெல உறுமயவின் பரப்புரையை அப்படியே ஏற்றுக்கொள்ளும் கட்டுரை அந்தப் புத்தகத்தின் குறை நிறைகளை ஆராயத் தவறி விட்டது.

அந்தப் புத்தகத்தில் அபேகுணவர்தன, ஒற்றையாட்சி தொடர்பில் தெரிவித்திருக்கும் கருத்துக்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில் ஜனாதிபதி சிறிசேனவின் தேர்தல் அறிக்கை உள்ளது.

இந்தத் தேர்தல் அறிக்கையில் முதலாம் அதிகாரம் ஓர் அரசமைப்புச் சீர்திருத்தம் குறித்து விளக்குகிறது. அதிலே மிக முக்கியமான மூன்று கருத்துக்கள் பகிரப்படுகின்றன. 1. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையினை ஒழித்தல், 2. தேர்தல் முறை சீர்திருத்தம், 3. சுதந்திரமாக இயங்கும் ஆணைக் குழுக்களை மீளக் கொண்டு வருதல் என்பனவே அந்த மூன்றும். அதாவது 19ஆம், 20ஆம் அரசமைப்புச் சீர்திருத்தங்கள் பற்றியே அந்த மூன்று விடயங்களும் குறிப்பிடுகின்றன. கட்டுரையாளர் குறிப்பிடும் பொது வாக்கெடுப்பு குறித்தான பகுதி தேர்தல் அறிக்கையின் ஆங்கிலப் பிரதியில் 14ஆம் பக்கத்தில் எல்லையற்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையினை ஒழித்தல் என்ற பகுதியிலேயே பேசப்படுகின்றது. (அது 19ஆம் அரசமைப்பு சீர்திருத்தத்தை பற்றியது)

அதிலே கூறப்பட்டிருப்பதாவது:

*புதிய அரசியல் கட்டமைப்பானது, தற்போது இருக்கும் சர்வாதிகார நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாற்றி, அமைச்சரவையூடாக நாடாளுமன்றத்துடன் ஒன்றித்துச் செல்லும் நிறைவேற்றதிகார முறைமையை நிலைநாட்டும். இந்த அமைப்பில் ஜனாதிபதியும் சட்டத்தின் முன் ஏனைய பொது மக்களுக்கு நிகராகவே இருப்பார். முன்மொழியப்பட்ட இந்த அரசமைப்புச் சீர்திருத்தத்தில் பொது வாக்கெடுப்பு தேவைப்படும் எந்தவொரு அரசமைப்புப் பிரிவையும்நான்தொடவேமாட்டேன் என்ற உறுதிமொழியினை வழங்குகின்றேன்* – என்றுள்ளது.

இந்தத் தேர்தல் அறிக்கையின்படி, பொது வாக்கெடுப்புத் தேவைப்படும் எந்தவொரு அரசமைப்புப் பிரிவையும் தான் மாற்ற மாட்டேன் என்கின்ற ஜனாதிபதியின் கூற்று ஜனாதிபதி முறைமை தொடர்பான சீர்திருத்தத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதை இங்கு அவதானிக்க முடியும். ஜாதிக ஹெல உறுமய தங்களை சிங்கள பௌத்த வீரர்களாகக் காட்டிக்கொள்வதற்கு எதைச் சொன்னாலும், பொது வாக்கெடுப்பு தேவைப்படும் இடங்களை அகற்றுவதில்லை என்ற ஜனாதிபதியின் உறுதிமொழி ஜாதிக ஹெல உறுமயவினால் மறைமுகமாகக் கொண்டுவரப்பட்ட ஒன்றல்ல. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக மைத்திரியின் வெற்றிக்குப் பங்களித்த அனைத்துக் கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டே அந்தக் கருத்து தேர்தல் அறிக்கையில் சேர்க்கப்பட்டது. இதனாலேயே 19ஆவது திருத்தச்சட்டத்தின் சில பகுதிகளுக்கு பொது வாக்கெடுப்பு தேவை என உச்ச நீதிமன்றம் நிர்ப்பந்தித்தபோது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அவ்வாறு பொது வாக்கெடுப்பு தேவைப்படும் அம்சங்களை அகற்றுவதாகப் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச மற்றும் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் நாடாளுமன்றத்திலும், பத்திரிகைகளிலும் தொடர்ச்சியாக இந்த 19ஆவது திருத்தமானது ஓர் ஆரம்பம் மாத்திரமே என்றும் பொதுத் தேர்தலின் பின் புதியதொரு அரசமைப்பு கொண்டு வரப்பட வேண்டும் எனவும் தெரிவித்து வந்திருந்தனர். அந்த புதிய சட்ட வரைபானது 19ஆம் திருத்த சட்டம் போலல்லாது பொது வாக்கெடுப்பின் மூலமே நிறைவேற்றப்படவேண்டும் என்பதும் தெளிவாகச் சொல்லப்படுகின்றது.

அவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர்கள் பல தடவைகள் வலியுறுத்திய விடயத்தை ஜனாதிபதி சிறிசேன நிராகரித்தார் என்பதற்கான அறிகுறிகள் இதுவரையில் இல்லை.

இவற்றின் பின்னணியில் இங்கு இரண்டு விடயங்கள் கருத்தில் கொள்ளப்படவேண்டும். முதலாவது, ஜாதிக ஹெல உறுமயவின் ஆலோசகர்களுள் ஒருவரான அசோகா அபேகுணவர்தனவின் புத்தகமானது ஒற்றையாட்சி என்ற சொற்பதத்தினை நீக்க கூட்டமைப்பு அழுத்தம் கொடுத்தது என்று சுமந்திரன் கூறிய விடயத்தை உறுதிப்படுத்துகிறது. அதாவது தேர்தல் அறிக்கையில் ஒற்றையாட்சி என்ற சொற்பதம் ஏற்கனவே இருந்ததையும் பின்பு சுமந்திரனின் தலையீட்டினால் அது நீக்கப்பட்டதையும் ஜாதிக ஹெல உறுமயகூட பகிரங்கமாக ஒத்துக்கொண்டுள்ளது.

இரண்டாவது, பொது வாக்கெடுப்புத் தேவைப்படும் எந்தவொரு அரசமைப்புப் பிரிவும் மாற்றப்படாது என்ற கூற்று ஜனாதிபதியின் அதிகாரங்கள் தொடர்பான விடயங்களுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

இதற்கு மேலாக, தமிழ் அரசியல் விவாதங்கள் மீது ஜாதிக ஹெல உறுமயவின் துரதிஷ்டவசமான செல்வாக்கு, தமிழ் மக்களுக்கு ஏதேனும் வகையில் நன்மை பயக்குமா என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இறுதியில், ஒரு விடயத்தில் குருபரனுடன் நான் உடன்படுகின்றேன் என்பதையும் சொல்லியே ஆகவேண்டும். "எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு" என்ற வள்ளுவன் குறளை இறுகப் பற்றி இந்தத் தேர்தலையும் நாம் கடந்து வர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கு தீர்வே முதன்மையானது

■ அதிரன்



தமிழ் மக்களின் நிரந்தர அரசியல் தீர்வு குறித்தும், உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோருக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம் பந்தன் தலைமையிலான கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக்குமிடையில் கடந்த புதன்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் பேச்சு இடம்பெற்றுள்ளது. ஜனவரி – 8 ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணி வேட்பாளராக அன்னம் சின்னத்தில் போட்டியிட்டார் மைத்திரிபால சிறிசேன. அவருக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கிய கூட்டமைப்பு, முதல் தடவையாக இத்தகைய முக்கியமான சந்திப்பு ஒன்றை தற்போது நடத்தியுள்ளது. வடக்கு–கிழக்குத் தமிழ் மக்களும் ஏனைய மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்று கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்து வாக்களித்தனர். புதிய அரசு பதவியேற்ற பின்னர் உடனடிப் பிரச்சினைகள் சிலவற்றுக்கு – அதாவது மஹிந்த ஆட்சியில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்குத் தீர்வாக சில நடவடிக்கைகளை எடுத்தபோதிலும், நீண்ட காலமாகப் புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு ஒன்றை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால் கூட்டமைப்பு சமீப காலமாக கடுமையான விமர்சனங்களை எதிர்நோக்கி வந்தது. அதேசமயம் புதிய அரசு வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஒரு பொதுத்தேர்தலை எதிர்நோக்கியுள்ளது. இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்கள் நிச்சயம் ஆட்சியாளர்களுக்கு எதிர்விளைவுகளை ஏற்படுத்தலாம். இதனை ஒரு சவாலாக எடுத்துள்ளார் ஜனாதிபதி.

இந்தப் பேச்சுகளை இத்தோடு நிறுத்தி விடக்கூடாது. தொடர்ந்து நடத்தி பேச்சுக்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டால் மட்டுமே எதிர்வரும் பொதுத்தேர்தலிலும் வடக்கு – கிழக்குக்கு வெளியே உள்ள தமிழ் வாக்காளர் தொடர்பில் கூட்டமைப்பு சில முக்கியமான முடிவுகளை எடுக்கமுடியும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் வேளையில் மஹிந்த ஆட்சி மீது தமிழ் மக்கள் வெறுப்புற்றிருந்தனர். மைத்திரிக்கு நிபந்தனையற்ற ஆதரவைக் கூட்டமைப்பு அறிவித்த போது தமிழ் மக்கள் அதனை முழுமையாக ஏற்று ஆதரவு வழங்கினர். ஆனால், எதிர்வரும் பொதுத்தேர்தலிலும் மைத்திரி அணி இதனைச் சுலபமாக எதிர்பார்க்க முடியாது.

பொதுத்தேர்தலுக்கு முன் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கக்கூடிய நடவடிக்கைகளை அரசு எடுப்பது அவசியமாகும். தமிழ் மக்களின் ஆதரவுடன் வென்றதால் அது அரசினது தார்மீகக் கடமையும் கூட.

புலம்பெயர் தமிழர் அமைப்புகளுடன் சமரசம் செய்து கொள்வதில் இந்த அரசு காட்டும் அதீத ஆர்வம் இனப் பிரச்சினைத் தீர்வில் இல்லை என்பது மிகவும் தெளிவானது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல், யுத்தக் குற்றமிழைத்தோரை நீதிமன்றத்தில் ஏற்றித் தண்டனை வழங்காமல், புலம்பெயர் தமிழர் அமைப்புகளுடன் சமரசம் செய்துகொள்வது சாத்தியப்படமாட்டாது என்பதை ஆட்சியாளர்கள் புரிந்துகொண்டிருப்பதாகத் தெரியவில்லை. டிசெம்பரில் புலம்பெயர் தமிழர்கள் விழாவை வெறுமனே இலங்கையில் நடத்துவதன் மூலம் புலம்பெயர் தமிழர்களின் மனங்களை வென்றுவிட முடியாது. இந்த விழாவுக்கு முன்னர் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முக்கிய முடிவுகள் எட்டப்பட்டு இணக்கம் காணப்பட வேண்டும். போர்க் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

> **புலம்பெயர் தமிழர்கள் விழாவை வெறுமனே இலங்கையில் நடத்துவதன் மூலம் புலம்பெயர் தமிழர்களின் மனதை வென்றுவிட முடியாது. இந்த விழாவுக்கு முன்னர் இனப்பிரச்சினைத் தீர்வில் முக்கிய முடிவுகள் எட்டப்பட்டு இணக்கம் காணப் படவேண்டும். போர்க் குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்.**



2009இல் யுத்தம் முடிவடைந்த பின்னர், தமிழ் மக்கள் நம்பியிருந்த ஆயுதப் போராட்டம் மிகப் பயங்கரமான முறையில் அடக்கி ஒடுக்கப்பட்டபின்னர், தமிழ் மக்களிடம் எஞ்சியிருக்கும் ஒரே ஆயுதம் இந்தப் புலம்பெயர் தமிழர் அமைப்புகள்தான். மஹிந்த அரசுக்கு இந்த அமைப்புகள் பெரும் சவாலாக இருந்தன. அவற்றுடன் பேச்சு நடத்தவும், இவற்றின் எதிர்ப்பைக் கைவிடச் செய்யவும் அப்பொழுது கடும் பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டன. முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் தென்னாபிரிக்கப் பிரதிநிதிகள் சிலர் லண்டனில் உள்ள புலம்பெயர் தமிழர் அமைப்புகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர். எனினும் அதில் சிறிய முன்னேற்றம் தானும் ஏற்படவில்லை.

இதனைத்தான் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தற்பொழுது அரங்கேற்ற முயற்சிசெய்து வருகிறார். இதன் முதற் படியாக டிசெம்பரில் இலங்கையில் புலம் பெயர் தமிழர் விழாவை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த விழாவை நடத்துவதை எதிர்க்கவேண்டியதில்லையாயினும், இந்த விழாவுக்கு முன்னர் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முக்கிய முடிவுகள் எட்டப்பட்டு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதும், போர்க் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதும் அவசியமாகும். வெற்று வாக்குறுதிகளை நம்பி புலம்பெயர் தமிழர் அமைப்புகள் ஏமாந்துவிடக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
ஞாயிறு சிறப்பிதழ்

# வேற்று மொழிகளை அறிந்திருப்பதன் நன்மை

ரம்யன்



> வடக்கில் உரிமைப் போராட்டம் சூடுபிடித்திருந்த காலத்தில் மலைநாட்டில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு தப்பி வந்த ஒரு நண்பர் கூறினார், சிங்களப் பத்திரிகையொன்றை மடித்துக் கையில் வைத்துக்கொண்டு சிங்கள வர்களோடு சரளமாகச் சிங்களத்தில் கதைத்துக் கொண்டு வந்ததால் பாதுகாப்பாக யாழ்ப்பாணம் வந்துசேர முடிந்தது என்று.

பல மொழிகளைப் பேசப்பழகியிருப்பதன் நன்மை குறித்து விளக்க விரும்பிய பேச்சாளர் ஒருவர் பின்வரும் கதையைச் சொன்னார்.

ஓர் இடத்தில் பூனையொன்று தன் குட்டியோடு வாழ்ந்து வந்தது. அந்தப் பகுதியில் இருந்த நாயொன்று அந்தப் பூனையையும் குட்டியையும் அங்கிருந்து போய் விடும்படி கூறி அச்சுறுத்தியதோடு அவைகளை அங்கிருந்து துரத்தவும் ஆரம்பித்தது. குட்டியையும் கூட்டிக்கொண்டு தொலைதூரம் ஓடிய பூனை இனி மேலும் ஓட முடியாது என்று கண்டதும் சடுதியாக நின்று பின்னால் திரும்பி "லொல் லொல்" என்று கோபத்துடன் கத்தத் தொடங்கியது. நாயும் சடுதியாக துரத்துவதைக் கைவிட்டுவிட்டு இது என்ன பூனை மியாவ் என்று தானே கத்தமுடியும். இது என் பாசையில் கத்துகிறதே என்று யோசித்தது. பின்னர் இதில் ஏதோ மர்மம் இருக்க வேண்டும் என்று எண்ணி அச்சம்கொண்டு தான் வந்த வழியே திரும்பி ஓடிவிட்டது.



ஏனம்மா நாய் திரும்பி ஓடுகிறது என்று குட்டிப் பூனை கேட்டது. அதற்குத் தாய்ப்பூனை சொன்னது, வேற்றுப் பாசையொன்றைக் கற்றிருந்தது நல்லதாய்ப்போச்சு. நாயிடம் அதன் பாசையில் பேசினேன். அது பயந்து ஓடிவிட்டது.

பிறமொழிகளைக் கற்பதனால் பிறரின் கருத்தை விளங்கிக்கொள்ள மட்டுமல்ல நம் கருத்தைப் பிறருக்கு புரிய வைக்கவும் அது பயன்படுவதாய் இருக்கும்.

வடக்கில் உரிமைப் போராட்டம் சூடுபிடித்திருந்த காலத்தில் மலைநாட்டில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு தப்பி வந்த ஒரு நண்பர் கூறினார், சிங்களப் பத்திரிகையொன்றை மடித்துக் கையில் வைத்துக்கொண்டு சிங்களவர்களோடு சரளமாகச் சிங்களத்தில் கதைத்துக்கொண்டு வந்ததால் பாதுகாப்பாக யாழ்ப்பாணம் வந்துசேர முடிந்தது என்று.

இன்னொருவர் கூறிய தகவல் வருமாறு:

மிகவும் நெருக்கடியான நேரமது. மலையகத்தில் வாழ்ந்த எனது சகோதரன் வீட்டுக்குச் சென்றிருந்தேன். நான் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்திருப்பது எப்படியோ சுற்றுவட்டாரத்தில் தெரியவந்துவிட்டது. அன்று மாலையில் எனது அண்ணர் அவசரமாக வீட்டுக்கு வந்து அடுத்தநாள் காலையிலேயே என்னைப் புறப்பட்டு விடும்படி கவலையுடன் தெரிவித்தார். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. அண்ணரின் பிள்ளைகளும் மற்றவர்களும் கவலைப்பட்டார்கள். அதிகாலையில் அண்ணர் அருகில் உள்ள நகருக்குச் சென்று கார் ஒன்றை ஏற்பாடு செய்து கொண்டு வந்திருந்தார். உறவினர்களிடம் சொல்லிக் கொண்டு காரில் புறப்பட்டேன். கார் நகரிலுள்ள பஸ் நிலையத்துக்குப் போக வேண்டும் என்பதுதான் ஏற்பாடு. ஆனால் கார்க்காரர் பஸ் நிலையத்தைத் தவிர்த்து அதற்கு அப்பால் உள்ள ஓர் இடத்துக்குக் காரைச் செலுத்திச் சென்றார். அங்கு காரை நிறுத்தியவர், என்னைப் பார்த்து இவ்வளவு நன்றாகச் சிங்களம் பேசும் உம்மை யாழ்ப்பாணத்தவர் என்று சொன்னார்களே! என்றார். யாழ்ப்பாணத்தவர் என்றால் சிங்களம் பேசக்கூடாதா என்று மனதில் நினைத்துக்கொண்டு யார் சொன்னார்கள் என்று விவரம் கேட்டேன். பஸ்ஸில் நீர் திருப்பிப்போக வந்தால் நகரத்தில் வைத்து உமக்கு பிரச்சினை கொடுக்கவும் உடமைகளை அபகரிக்கவும் திட்டமிட்டிருக்கிறார்கள். அதனால்தான் காரை பஸ் நிலையத்துக்குக் கொண்டுபோகாமல் இங்கு கொண்டுவந்தேன் என்றார். கார்க்காரருடன் நானும் சகோதரரும் சரளமாக சிங்களம் பேசிக்கொண்டு வந்ததால் அன்று அந்த மனிதர் என்னைக் காப்பாற்றினார் என்றார் நண்பர்.



### மொழி பெயர்ப்பு பற்றிய ஒரு குறிப்பு

ஆங்கிலத்தில் இருந்து விடயங்களை மொழி பெயர்க்கும் போது சிலர் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்க முனைந்து பிழைவிடுகிறார்கள். பெரும்பாலும் மரபுச் சொற்றொடர்களை மொழி பெயர்க்கையில் இந்தத் தவறு ஏற்பட்டுவிடுகின்றது. மரபுச் சொற்றொடர்களுக்கு தனித்துவமான கருத்து உண்டு.

உதாரணமாக ஒருவர் தன் நண்பரைப் பார்த்து "ஹவ் டு யு டு?" (How do you do?) என்கிறார் என்று வைத்துக் கொள்வோம். இது மரபுத் தொடர்தான். எப்படிச் சுகம்?, அல்லது எப்படி இருக்கிறீர்? என்பது இதன் கருத்து. ஆனால் இதில் உள்ள சொற்களை எடுத்துக் கொண்டு எப்படி நீ செய்கிறாய் என்று எழுதினால் பகிடியாகிவிடும். "டோன்ட் பிளக்மெயில்" (Don't black mail) என்பதை எடுத்துக் கொள்வோம். "டோன்ட்" என்றால் வேண்டாம் "பிளாக்மெயில்" என்றால் கறுப்புத் தபால். எனவே இதை கறுப்புத்தபால் வேண்டாம் என்று மொழி பெயர்த்தால் எப்படியிருக்கும்!

இதன் கருத்து ஏதாகிலும் காரியம் சாதித்துக் கொள்வதற்கான அச்சுறுத்தல் என்பதுதான். இவ்வாறு மரபுத்தொடர்கள் ஏராளம் ஆங்கிலத்தில் உண்டு. மொழி பெயர்ப்பில் ஈடுபட விரும்புகிறவர்கள் இந்த மரபுத்தொடர்களில் பலவற்றையும் அறிந்திருப்பது அவசியம்.

### ஜனாதிபதி கூறிய ஒரு சிறுசம்பவம்

இப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன அண்மையில் அவருடைய சொந்த ஊரில் செயலகத்தில் நடந்த மாநாடொன்றில் கலந்து கொண்டார். மாநாடு முடிவடைந்த பின்னர் வெளியில் வந்தவர் தமது பழைய ஞாபகங்களில் சற்று மூழ்கிப்போனார். பின்னர் இந்த சம்பவத்தை அங்கு சூழ்ந்திருந்த வர்களிடம் கூறினார்.



அப்பொழுது நான் இந்தப் பகுதியில் கிராம அலுவலராகப் பணி புரிந்து கொண்டிருந்தேன். 1977 தேர்தல் முடிந்திருந்த காலம். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அவ்வளவாக சோபித்திருக்கவில்லை. எனக்குரிய ஒரு கொடுப்பனவை பெற்றுக் கொள்வதற்காகக் கச்சேரிக்கு வந்திருந்தேன். அங்கு ஒரு கூட்டம் என்னைத் தாக்குவதற்கு பொல்லு தடிகளுடன் காத்திருப்பதாக நண்பர்கள் அவ சரமாக வந்து கூறினார்கள். நான் அதற்கு மேல் ஏன் நிற்கப்போகிறேன்? எனது மிதிவண்டியில் ஏறி ஓடித் தப்பிவிட்டேன் என்றார். கூடி நின்றவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

### சேர்ச்சிலின் பகிடி

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் அப்போதைய பிரதமர் வின்சன்ட் சேர்ச்சில் பேசிக் கொண் டிருந்தார்.

எதிர்க்கட்சியில் இருந்த பெண் உறுப்பினர் ஒருவர் குறுக்கிட்டு நான் உமது மனைவியாய் இருந்தால் உமக்கு கோப்பியில் நஞ்சு கலந்து கொடுத்து கொன்று விடுவேன் என்று கோபத் துடன் கூறினார்.

அதற்கு பிரதமர் சேர்ச்சில் மிக நிதானத்துடன் அப்படி நான் உமக்கு கணவனாய் இருக்க நேர்ந்தால் நீர் தரும் நஞ்சு கலந்த கோப்பியை நிச்சயம் குடித்துச் செத்துவிடுவேன் என்றார். சபை வெகுநேரம் கலகலப்பில் அமிழ்ந்து போயிற்று.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேர் பதிக்கும் விழுதுகள்

மலரன்னை

"பிள்ளையார் சுழிபோட்டு நீ நல்லதைத் தொடங்கி விடு." அதிகாலை வேளை, அந்தக் கிராமத்தைச் சூழ்ந்திருந்த கும்மிருளைக் கிழித்துக்கொண்டு ஓங்கி ஒலித்த பக்திப் பாடலின் வரிகள் மக்களைத் துயிலெழுப்பின. மாவிட்டபுரத் துக் கந்தனுக்கு தேர்த்திருவிழா என்று பாடல் கட்டியங்கூறியது. ஊர் மெல்ல மெல்ல விழித்துக்கொண்டு ஆரவாரப்பட ஆரம்பித்தது. ஏற்கனவே விழாக்கோலம் பூண்டிருந் தது. ஆழ்ந்த உறக்கத் தில் அமிழ்ந்து போயிருந்த பாக்கியம் பாடல் கேட்டதும் விழித்துக் கொண்டாள். "விடிஞ்சிட்டுது" என்று வாய்க்குள் சொல்லிக்கொண்டே வாரிச்சுருட்டிக்கொண்டு எழும்பினாள். பிள்ளைகள் அமுதாவையும் கவிதாவையும் எழுப்பிவிட்டாள். கோயிலுக்குப் போய் நேர்த்திக்கடன் செய்யவேண்டும் என்ற அவசரம் அவளுடையது. பத்தே நிமிடத்துக்குள் குளித்து முழுகி கோயிலுக்குப் புறப்படத் தயாராகி விட்டாள். "அமுதா! கவிதா! நேரத்துக்குச் சமைத்து வைத்துவிட்டு நீங்களும் கோயிலுக்கு வாங்கோ. என்ன!" அவசரமாகத் தெருவில் இறங்கி நடந்தவளின் குரல் தேய்ந்து போனது.

அமுதாவும் கவிதாவும் குளித்துவிட்டு வந்து சமையலைத் தொடங்கினார்கள். அண்ணாவும் அண்ணியும் இன்னும் வேலையால் வந்து சேரவில்லை. இருவருக்கும் இன்று இரவு டியூட்டி. ஆகையால் இருவரும் ஒன்றாகத்தான் வருவார்கள். சமையல் முடியும் தறுவாயில் அண்ணாவும் அண்ணியும் வந்து சேர்ந்தார்கள். அவர்களும்' குளித்து முடித்து புறப்பட்டு வர எல்லோருமாக கோயிலுக்கு நடந்தே போனார்கள். அப்பா, தான் வீட்டுக்குக் காவலாய் இருக்கப் போவதாகச் சொல்லி இருந்து விட்டார். மாலையில் போய் கந்தனைத் தரிசிக்கிறேன் என்று விளக்கம் வேறு சொன்னார்.

வீதி கொள்ளாத சனக்கூட்டத்துக்கு மத்தியில் மாவைக் கந்தன் தேரில் ஆரோகணித்து பக்தர்களின் அரோகரா கோஷங்களுடன் ஊரத் தொடங்கியிருந்தான். பஜனைப் பாடல்கள், பாற்செம்பு, கர்ப்பூரச்சட்டி, காவடி, அங்கப் பிரதிஷ்டைஎன்று நேர்த்திகளுக்குக் குறைவில்லை. தேரில் வீற்றிருக்கும் கந்தனை ஒரு தரம் கண்களில் ஒற்றிக்கொள்ள பக்தர்கள் அலைமோத வேண்டியதாயிற்று.

ஏறக்குறைய இருபத்தைந்து வருடங் களின் பின் மக்கள் சுயமாக நின்று தங்கள் இல் இடங்களுக்கு வந்துவிட்ட நிம்மதியோடு கந்தனை ஆராதித்த உணர்ச்சி கரை புரண்டோடியது. ஒருவாறு தேர் இருப்புக்கு வந்துவிட்டது. நேர்த்திக்கடனை முறையாகச் செய்துவிட்ட திருப்தியுடன் பாக்கியம் நுழைமண்டபத்தின் ஓர் ஓரத்தில் வந்து அமர்ந்து கொண்டாள். சன வெள்ளத்தில் மூச்சுத் திணறியதால் சற்று ஓய் வெடுத்துவிட்டு வீடு திரும்பலாம் என எண்ணியவளாய் சற்றே திரும்பிப் பார்த்தாள். அருகில் நன்கு பரிச்சயமான முகம் ஒன்று தெரிந்தது. "நீ....ங்கள் மனோன் அன்ரிதானே?" அவளை விநோதமாகத் திரும்பிப் பார்த்த மனோன் பதிலேதும் சொல்லாமல் தலையை மட்டும் ஆட்டினாள். "நாங்கள் உங்கட வீட்டில வாடகைக்கு இருந்தனாங்கள். மறந்து போனியளே? அதுவும் இப்ப இரு பது வருஷத்துக்கு மேல ஆச்சு தெல்லே!" மனோன்மணிக்கு மின்னல்



கீற்றாக நினைவு பொறிதட்டியது. "உங்கடை அவர்... கச்சேரியில வேலை செய்தவர் என்ன?" என்று கேட்டு அடையாளங்கண்டுகொண்டாள். பாக்கியம் இடப்பெயர்வு தங்களுக்கு தந்த சோதனையையும் வேதனையையும் ஒரு கணம் நினைவில் நிறுத்திப் பார்த்தாள். உள்ளத்தில் ஆறிப்போயிருந்த ரணம் கிளறிவிடப்பட்டதாக ஓர் உறுத்தல்.

"இப்ப எங்க இருக்கிறியள்?" மனோன் தொடுத்த கேள்வி அவளது நினைவைத் துண்டித்தது. "உதிலை கிட்டத்தான். எங்கட சொந்த வீட்டுக்கு வந்திட்டம்." சற்று அழுத்தமாகவே வந்தது பதில். மனோனுக்கும் நெஞ்சில் குறுகுறுப்பும் இருக்கத்தான் செய்தது. அவர்களுக்குத் தான் கொடுத்த இம்சைகளை நினைக்க நெஞ் சுக்குள் ஏதோ இனம் புரியாத நெருடல் தோன்றாமலா இருக்கும். "மனோன்! சரியான சனமாய்க் கிடக்கு. இப்போதைக்கு சரிவராது" சொல்லிக்கொண்டே வந்தார் சிவராமன். அவர்தான் மனோன் மணியின் வீட்டுக்காரர். அவர் அன்னதான மடப்பக்கம் போய் வருவது பாக்கியத்துக்கு விளங்கிவிட்டது. "அன்ரி! நீங்கள் அங்கிளையும் கூட்டிக்கொண்டு எங்கட வீட்டுக்கு வாங்கோ. இத்தினை வருஷத்துக்குப் பிறகு சந்திக்கிறம்! கட்டாயம் வந்து சாப்பிட்டுட்டுத்தான் போகவேணும்!" மனோன்மணிக்கு உறுத்தலாயிருந்தது. அவர்கள் தங்கள் வளவுக்குள் இருந்த சின்ன வீட்டில்தான் வாடகைக்கு குடியிருந்தார்கள். ஒரு நாள் பார்த்து அவர்களுக்கு ஏதும் உணவுவகை கொடுத்து வாங்கியதாக ஞாபகமில்லை. அவர்கள் அந்தச் சமயத்தில் மூன்று பிள்ளைகளையும் வைத்துக் கொண்டு, வாடகையும் கொடுத்து வாழ்வாதா ரத்துக்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததை அவள் நன்கு அறிவாள். இருந்தும் அவர்களை உதாசீனப்படுத்த வேண்டும் என்ற போக்கு அவளுடையதாய் இருந்தது. அவர்கள் அதனைக் கண்டு கொள்ளவில்லை. இரண்டு வருடங்கள் வரை இருந்துவிட்டு வேறு வீடு பார்த்துப் போய் விட்டார் கள்.

பாக்கியம் கட்டாயப் படுத்தி அவர்களை வீட்டுக்கு அழைத்து வந்தாள். பிள்ளைகள் அனைவரும் வீடு திரும்பியிருந்தனர். அவர்களைக் கண்டதும் பாக்கியத்தின் கணவர்தான் முதலில் அடையாளங் கண்டு கொண்டார். மூத்தவன் சரவணனுக்கு சிவராமன் மீது நல்ல அபிப்பிராயம் இருந்தது. பாவம் மனிதன் ஓர் அப்பிராணி. மனைவி மனோன் கீறிய கோட்டைத் தாண்ட மாட்டார். மனோன் அவர்களது வீட்டையும், பசுஞ்சோலையாகவிருந்த வளவையும் பார்த்து பிரமித்துப் போனாள். விடுத்து விடுத்து கேள்விகள் கேட்கத் தொடங்கினாள். "நீங்கள் வரும்போது வீடு ஒரு பாதிப்புமில்லாமல் இருந்ததா?" பாக்கியம் எல்லாவற்றையும் விளக்கினாள். "நாங்கள் வரும்போது வளவெல்லாம் மரங்கள், செடிகள் வளர்ந்து பற்றையாய்த்தான் கிடந்தது. வீட்டில கூரையெல்லாம் சேதப்பட்டு, கதவுகள் ஒன்றுமே இருக்கேல்லை. பிறகு நாங்கள் வந்து முதலில வளவு துப்புரவாக்கி, கிணறு மட்டும் ஏழு தரம் இறைச்சதெண்டா பாருங்கோவன்!" "எண்டாலும் இப்ப பார்க்கிறதுக்கு நல்ல வடிவாய் இருக்கு. வளவையும் பச்சைப் பசேலென்று சோலையாக்கிப் போட்டியள்."

"பிள்ளையள் மூன்று பேரையும் படிப்பிச்சுப்போட்டம். ஊருக்கு விடுகினம் என்ற உடன தம்பி வந்து பாத்திட்டு பிள்ளைதான் பாங்கில லோன் எடுத்துத் தந்தவன். அதிலதான் வீடு திருத்தினனாங்கள். கடைசி நேரத்தில காசு பத்தாமல் போயிட்டுது. பேந்து...... அமுதா தன்ரை சம்பளத்தில லோன் போட்டுத் தந்தவள். அதிலதான் மிச்ச வேலையும் முடிச்சு மதில்கட்டி கேற்றும் போட்டனாங்கள். பிள்ளையளை வாயை வயித்தைக் கட்டிப் படிப்பிச்சம். அதுகள் தகுந்த சமயத்தில கைகுடுத்துதுகள். இப்ப... மூன்று வருஷமாய் எங்கட சொந்த வீட்டில நிம்மதியாய் இருக்கிறம்."

"பெருமையுடன் சொல்லிக் கொண்டவளை, மனோன் இடைமறித்தாள். பிள்ளையள் என்ன வேலை செய்யினம் என்று நீங்கள் சொல்லவில்லையே!" "மூத்தவன் சரவணன் யாழ்ப்பாண ஆஸ்பத்திரி யிலதான் டொக்டராயிருக்கிறான். அமுதா படிப்பிக்கிறாள். இளையவள் கவிதா இன்னும் கம்பஸ் முடிக்கேல்ல." இதற்கிடையில் அமுதா வந்து அவர்களைச் சாப்பிட அழைத்தாள். சந்தியா அனைவருக்கும் பரிமாறினாள். பசித்துக் களைத்தவர்களுக்கு அறுசுவை உணவு தேவாமிர் தமாக இருந்தது. ருசித்துச் சாப்பிட் டனர். பாக்கியம் அவர்களுக்கு மருமகளை அறிமுகப்படுத்தி வைத்தாள். "இவதான் என்னுடைய மருமகள். சரவணனின் மனைவி சந்தியா. இவவும் யாழ்ப்பாண ஆஸ்பத் திரியிலதான் டொக்டராயிருக்கிறா." மனோன்மணிக்கு மூக்கில் கைவைத்து வியப்பதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. ஒன்றுக்கும் வழியில்லாதவர்கள் என்று அலட்சியப்படுத்திய இவர்கள் இன்று சகல வசதிகளுடன் மேலோங்கி நிற்கிறார்கள். அகம்பாவம் பிடித்து அலைந்த நான் இன்று... பிள்ளைகளால் உதா சீனப்படுத்தப்பட்டவளாய் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இதயத்தைப் பிழிந்த சோகம் தொண்டை வரை வந்து அடைத்துக் கொண்டது. சாப்பாடு முடிந்ததும் கவிதா நறுக்கிய பப்பாசிப் பழத்துண்டங்களைக் கொண்டு வந்து வைத்தாள். "அன்ரி! பப்பாப்பழம் எனக்கு உங்களை அடிக்கடி நினைவுபடுத்தும்" மனோன்மணிக்கு சுருக்கென்றது. முன்பு அவர்கள் அவளது வீட்டில் வாழ்ந்த காலத்தில், பாத்திரங்களை வைத்துக் கழுவும் இடத்தில் தானாக ஒரு பப்பாசிக்கன்று முளைத்து ஓங்கி வளர்ந்தது. அதைக் கண்ணுற்ற மனோன்மணி ஒரு நாள் அந்த மரத்தை வெட்டித் தறித்துவிட்டாள். "மண்ணில உள்ள சத்தையெல்லாம் இது உறிஞ்சிவிடும்" எனச் சொல்லி தன் செய்கைக்கு வக்காளத்தும் வாங்கினாள். இப்போது நினைத்துப் பார்க்க அவளுக்கு வெட்கமாய் இருந்தது. பாக்கியம் அவளை அழைத்துப் போய் வளவைச் சுற்றிக் காட்டினாள். "எல் லாமாய் பதினைஞ்சு பரப்புக் காணி. வீட்டோடை இருக்கிறதை அமுதா பேரிலேயே எழுதி வைச்சிட்டம். மற்றதில அஞ்சு பரப்பு கவிதாவுக்கு. இதில வீடு கட்டிக் கொண்டிருக்கிற அஞ்சு பரப்பும் சரவணனுக்கு எழுதிக் குடுத்திட் டம்." "மருமகள் சீதனம் கொண்டு வந்தவவோ!"

"அதுதானே இல்லை. அவையும் எங்களைப் போல பலாலியில இருந்து இடம்பெயர்ந்து வந்தவைதான். சந்தியாவின்ரை அப்பாவும் கச்சேரியிலதான் பியோனாய் இருந்தவர். தற்செயலாய் ஒரு நாள் இவரைச் சந்திச்சாப்போல நான் பெரிய கஷ்டப்பட்டு என்ரை பிள்ளையை டொக்டருக்குப் படிக்க வச்சிட்டு இப்ப.... என்னசெய்யிறதெண்டு தெரியாம முளிச்சுக் கொண்டிருக்கிறன். அவளுடைய வேலைக்கு ஏற்றாற்போல் சம் மந்தம் செய்யிறதெண்டால், யாழ்ப்பாணத்தில அல்லது கொழும் பில வீடு வளவு வேணுமாம். பத்தாக் குறைச்சலுக்கு மாப்பிளையை படிப்பிச்ச காசை இனாமாய்த்தா எண்டெல்லே கேக்கினம். இடப்பெயர்வு எங்களுக்குத் தந்த வேதனை உங்களுக்குத்தானே தெரியும் என்று சொல்லிக் கவலைப்பட்டிருக்கிறார். நாங்கள் எல்லோருமாய்க்கூடி யோசிச்சு சந்தியாவை எங்கட வீட்டு மருமகளாக்கிக் கொண்டம். இப்ப.... அவைதான் லோன் எடுத்து வீடு கட்டுகினம்." அவர்களின் செயலை எண்ணி மனோன்மணி வியந்து போனாள். தான் பெற்றுவளர்த்த பிள்ளைகளை ஒருதரம் நினைத்துப் பார்த்தாள். அவள் உள்ளம் வேம்பாகக் கசந்தது. மகள் மீனுவுக்கு வெளிநாட்டு மாப்பிள்ளை தேடி அவர்கள் வீடுவளவு வேண்டாம், ரொக்கமாகத் தரச்சொல்லி நின்றதால், கையில் கிடந்த காசெல்லாவற்றையும் அள்ளிக்கொடுத்து கலியாணமும் செய்து பிரான்ஸ்ஸுக்கு அனுப்பி வைத்தாள். ஓரிரு வருடங்கள் அவளுடன் தொடர்பாயிருந்த மீனு பின்னர் போனில் கதைப்பதையும் குறைத்து இப்போ....... முற்றாகவே தொடர்பு அற்றுவிட்டது. நன்றாக இருப்பதாக யாரோ சொல்லக் கேள்வி. அவ்வளவுதான்.

இளையவன் ஜீவன் படிப்பைக் குழப்பிவிட்டு வெளிநாடு போக வேண்டுமென ஒற்றைக் காலில் நின்று அவர்கள் இருந்த பெரிய வீடு வளவை அடமானம் வைத்துவிட்டு ஜேர்மனுக்குப் போனான். இரண்டு வருடங்களில் மீட்பதாக எழுதிக் கொடுத்த உறுதி ஈட்டுக் காரனுக்கே அறுதியானதுதான் மிச்சம். போனவன் போனவன் தான். ஒரு பதிலும் இல்லை.

(08பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் தேசிய பூங்காக்கள் பிரகடனம்!

ஸ்டோ ஸ்வாமி

வடபிராந்தியத்தின் சில பிரதேசங்களை தேசிய ஒதுக்கிடம் மற்றும் தேசிய பூங்காவாக அறிவிக்கும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த 22ஆம் திகதி வெளியிடப்பட்டிருக்கிறது.

சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நவீன் திசநாயக்கவின் கட்டளைக்கு அமைவாக வெளியிடப்பட்டிருக்கும் இந்த அறிவித்தலின் மூலம் பின்வரும் பிரதேசங்கள் தேசிய ஒதுக்கிடம் மற்றும் தேசிய பூங்காவாக அறிவிக்கப்படுகிறது.

1. சுண்டிக்குளம் தேசிய பூங்கா என அழைக்கப்படக் கூடிய சுண்டிக்குளம் தேசிய ஒதுக்கிடம் (National Reserve)
2. நெடுந்தீவு தேசிய பூங்கா என அழைக்கப்படக்கூடிய நெடுந்தீவு தேசிய ஒதுக்கிடம் (National Reserve)
3. மடுவீதி தேசிய பூங்கா என அழைக்கப்படக்கூடிய மடுவீதி தேசிய ஒதுக்கிடம் (National Reserve)
4. ஆதாம் பால (Adam's Bridge) கடல்சார் தேசிய பூங்கா என அழைக்கப்படக் கூடிய ஆதாம் பால தேசிய ஒதுக்கிடம் (National Reserve)

தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவுக்கு அமைவாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மேற்படி பிரதேசங்களில், சுண்டிக்குளம் மற்றும் மடுவீதி என்பன சரணாலய தரத்திலிருந்து தேசிய ஒதுக்கிடம் அல்லது தேசிய பூங்கா மட்டத்தை அடைய, மற்றைய இரண்டும் நேரடியாகவே தேசிய ஒதுக்கிடம் அல்லது தேசிய பூங்காவாகப் பெயரிடப்பட்டுள்ளன.

இலங்கையின் வனஜீவராசிகள் பாதுகாப்புத்திணைக்களத் தகவல்களின்படி, பாதுகாக்கப்பட்ட பிரதேசங்க ளானவை சரணாலயங்கள், இயற்கை ஒதுக்கிடங்கள், கண்டிப்பான இயற்கை ஒதுக்கிடங்கள், தேசிய பூங்காக்கள் என நான்காக வகைப்படுத்தப்படுகின்றன.

சரணாலயங்கள் என்பவை ஜீவராசிகளின் வாழ்விடங்களைப் பாதுகாக்கும் அதேவேளை மனித நடவடிக்கைகளுக்கு அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களாகும். இது அரச நிலங்களுடன் தனியார் காணிகளையும் கொண்டிருக்கலாம். சரணாலயத்திற்குள் நுழைவதற்கென விசேட அனுமதி எதனையும் பெறத்தேவையில்லை.

இயற்கை ஒதுக்கிடங்கள், வனஜீவராசிகளைப் பார்ப்பதற்காகவோ கல்வித் தேவைகளுக்காகவோ பொதுமக்கள் அனுமதிக்கப்படாத பிரதேசங்களாகும். பாரம்பரிய மனித நடவடிக்கைகள் இந்தப் பிரதேசத்தில் அனுமதிக்கப்படுகின்ற அதேவேளை வனஜீவராசிகள் திணைக்களத்தின் மேற்பார்வையில் ஜீவராசிகள் பற்றிய அறிவுபூர்வ ஆராய்ச்சிகளும் இந்தப் பிரதேசங்களில் ஊக்குவிக்கப்படுகின்றன.

அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் தாவர மற்றும் விலங்கு இனங்களின் நிலவுகை அவற்றின் இயற்கை வாழிடங்களில் நீடிப்பதை உறுதிபடுத்தும் வகையில் அமைந்த தூய இயற்கை பிரதேசங்களே கண்டிப்பான இயற்கைப் ஒதுக்கிடங்கள் ஆகும். எந்தவித மனித நடவடிக்கைகளுக்கும் இந்தப் பிரதேசங்களில் அனுமதி கிடையாது. வனஜீவராசிகள் திணைக்கள நேரடி மேற்பார்வையின் கீழ் ஆய்வு செயன்முறை களை மட்டுமே இங்கு மேற்கொள்ள முடியும்.



முன்பு சரணாலயங்களாக இருந்து தற்போது தேசிய பூங்காக்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இரு பிரதேசங்களின் விஸ்தீரணம் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத் தரப்பு தகவல்களுக்கும் புதிய வர்த்தமானி அறிவித்தலுக்கும் இடையே அதிக முரண்பாடு நிலவுகின்றது. குறிப்பாக மடுவீதி தேசிய பூங்காவில் அதிக நிலப்பரப்பு தேசிய பூங்காவுக்கான பிரதேசமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தேசிய பூங்காக்கள் பொதுமக்களால் பார்வையிடப்படுவதற்கும் வனஜீவராசிகள் பற்றிக் கற்றுக்கொள்வதற்கும் அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களாகும். எனினும் இப்பிரதேசத்தில் வனஜீவராசிகள் மற்றும் அவற்றின் வாழிடங்கள் என்பவற்றுக்கு உயர்மட்டப் பாதுகாப்பு கிடைக்கும் வகையில் கட்டுப்பாடுகள் மற்றும் விதிகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. இலங்கையில் இதுவரையில் 22 பிரதேசப் பரப்புகள் தேசிய பூங்காக்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.

### சுண்டிக்குளம் தேசிய பூங்கா

வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு நிர்வாக மாவட்டங்களில் உள்ள பச்சிலைப்பள்ளி, கரைச்சி, கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைந்துள்ள சுண்டிக்குளம் தேசிய ஒதுக்கிடம், 19565.33 ஹெக்டயர் பிரதேசத்தை கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 1938ஆம் ஆண்டு மாசி மாதத்தில் அதி சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் மூலம் சுண்டிக்குளம், 11149.1 ஹெக்டயர் விசாலமான சரணாலயமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

பறவைகள் சரணாலயமாக அறிவிக்கப்பட்ட சுண்டிக்குளம், யாழ். தீபகற்பத்தின் வடமேற்கு கரையோரமாக சுமார 50 கி.மீ. தூரத்திற்கு விரிந்து கிடக்கிறது. இலங்கையில் குமண பறவைகள் சரணாலயத்திற்கு அடுத்ததாக விளங்கும் சுண்டிக்குளம், உள்நாட்டு பறவையினங்களுக்கு மட்டுமன்றி வலசைப் பறவைகளுக்கும் புகலிடமாக விளங்கி வருகின்றது.

### நெடுந்தீவு தேசிய பூங்கா

யாழ். மாவட்ட நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவின் ஆளுகையின் கீழ் வரும் 1846.28 ஹெக்டயர் பிரதேசம் தேசிய ஒதுக்கிடம் அல்லது தேசிய பூங்காவாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறது. வைல்ட் பொனிஸ் (Wild ponies) எனப்படும் மட்டக் குதிரைகளுக்கு பிரசித்தி பெற்ற இலங்கையின் பெரிய தீவாகிய நெடுந்தீவை சரணாலயமாக பிரகடனப்படுத்த வேண்டும் என்னும் கோரிக்கை பலராலும் முன்வைக்கப்பட்டு வந்தது. இதனை ஆராயும் பொருட்டு முன்னாள் வனவிலங்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்ஸா 2013ஆம் ஆண்டின் இறுதியில் நெடுந்தீவிற்கு நேரடியாகப் பயணம் செய்திருந்தார். வடமாகாணத்திற்கான ஒருங்கிணைந்த மூலோபாய சூழல் மதிப்பீட்டுத் திட்டத்திலும் இதற்கு விதப்புரை செய்யப்பட்டிருந்தது.

### மடுவீதி தேசிய பூங்கா

1968ஆம் ஆண்டு ஆனி மாதம் 14ஆம் திகதி,858 இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் சரணாலயமாக பிரகடனம் செய்யப்பட்ட 26,677 ஹெக்டயர் விஸ்தீரண முடைய மடுவீதி சரணாலயம், 63,067.39 ஹெக்டயர் பிரதேசமாக தேசிய ஒதுக்கிடம் அல்லது பூங்காவாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. வவுனியா மாவட்டத்தின் வவுனியா தெற்கு (தமிழ்) மற்றும் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவுகளினதும் மன்னார் மாவட்ட மாந்தை கிழக்கு, முல்லைத்தீவுமாவட்ட மாந்தைமேற்குபிரதேச செயலாளர் பிரிவுகளினதும் ஆளுகைக்குள் வரும் மடுவீதி தேசிய பூங்கா, தாவர விலங்குகளுக்கு புகலிடம் தரும் மற்றொரு காட்டுப் பிரதேசமாகும்.

### ஆதாம் பால கடல்சார் தேசிய பூங்கா

மன்னார் மாவட்டத்தின் தலைமன்னார் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் வரும் நிலப்பகுதியையும் கடற்பகுதியையும் உள்ளடக்கிய சுமார் 18,990 ஹெக்டயர் பிரதேசம், ஆதாம்பால தேசிய பூங்காவின்பிரதேசப்பரப்பாககுறிப்பிடப்படுகிறது.

கடல்சார் தாவர விலங்குப் பல்வகைமையின் இருப்பிடமாக விளங்கும் இப்பிரதேசம் பாதுகாக்கப்படவேண்டும் என்னும் கோரிக்கை பலராலும் முன்வைக்கப்பட்டு வந்தது.

21 தீவுக் கூட்டங்களை உள்ளடக்கிய தமிழ்நாட்டுக் கரையோர பிரதேசம் 1986இல் ஏலவே மன்னார் வளைகுடா தேசிய பூங்காவாக பிரகடனப்படுத்தப்பட்டமை இங்கு நோக்கத்தக்கது.

நாடுகளில் இத்தகைய விடயங்கள் சாதாரணமானவை என்கின்றபோதும் நிலப்பரப்புக்கள் தேசிய பூங்காவாக பிரகடனப்படுத்தப்படுவது வடபிராந்தியத்துக்கு புதிய விடயம் ஆகும். தேசியப் பூங்காக்களை பிரகடனப்படுத்துவது மாத்திரமன்றி அது தொடர்பாக பிரயோகிக்கப்படும் சட்டக்கட்டுப்பாடுகள் பற்றியும் பொதுமக்கள் அறிவூட்டப்படவேண்டும். குறிப்பாக 2009 ஆண்டின் 22ஆம் இலக்க தாவர, விலங்கின பாதுகாப்பு திருத்தச்சட்டம் தொடர்பில் தெளிவூட்டவேண்டும்.

ஏற்கெனவே வில்பத்து தொடர்பான விலங்கம் தீர்ந்தபாடாகத் தெரியவில்லை. ஆடுகள் நனைவது தொடர்பில் அக்கறைப்படும் ஓநாய்கள், வடக்கில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள புதிய தேசிய பூங்காக்களுக்காகக் கண்ணீர் சிந்துவதற்கு தமது கண்ணீர்ச் சுரப்பிகளை தயார்படுத்தத் தயங்கப்போவதில்லை. அதனால் புதிய சர்ச்சைகளும் முரண்பாடுகளும் எழும் என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

முன்பு சரணாலயங்களாக இருந்து தற்போது தேசிய பூங்காக்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இரு பிரதேசங்களின் விஸ்தீரணம் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத் தரப்பு தகவல்களுக்கும் புதிய வர்த்தமானி அறிவித்தலுக்கும் இடையே அதிக் முரண்பாடு நிலவுகின்றது. குறிப்பாக மடுவீதி தேசிய பூங்காவில் அதிக நிலப்பரப்பு தேசிய பூங்காவுக்கான பிரதேசமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

போர்க்காலங்களின் போதும் காடுகளை காத்த வரலாறு நமக்குரியது. வடக்கில் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் புதிய தேசிய பூங்காக்கள், விலங்கு மற்றும் தாவரங்களின் நலனுக்காக மனிதரை குடிபெயர்த்தும் நடவடிக்கைகளுக்கு கால்கோள் இடாது என்று நம்புகிறோம். காணிச் சண்டையாக அது மாறாதிருக்கும் என்றும் நம்புவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

28.06.2015 முதல் 04.07.2015 வரை



### மேடம்

வாழ்வில் வளம் பெற, புதிய வாய்ப்பு தேடி வரும். உங்களுக்கு எதிராகப் பேசுபவர்களையும் நேசிப்பீர்கள். வீட்டில் மகிழ்ச்சி நிரம்பி இருக்கும். புத்திரர்களின் செயல்திறன் வளர உதவுவீர்கள். எதிரிகள் இடம் மாறுகிற நிலை உண்டு. இல்லறத்துணை உங்களுடன் இணக்கமாக இருப்பார். தொழில், வியாபாரத்தில் போட்டி கடுமையாக இருக்கும். பணியாளர்களுக்கு வேலைப்பளு கூடும்.பெண்கள், ஆடை, அணிகலன் வாங்க யோகம் உண்டு. மாணவர்கள் படிப்பில் கவனம் கொள்வர்.



### இடபம்

முக்கிய செயல்களை விரைந்து முடிப்பீர்கள். குடும்ப உறுப்பினர்களிடம் பாசம் அதிகரிக்கும். பயணங்களை முக்கியத்துவம் கருதி மேற்கொள்ளலாம். வீடு, வாகனத்தில் பராமரிப்பு செலவு கூடும். புத்திரர்கள் தங்கள் செயல்களில் கவனக்குறைவாக இருக்கலாம். அதை எடுத்துச் சொல்லி சரி செய்யுங்கள். இல்லறத்துணை உங்கள் செயல்பாடுகளை பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். பணியாளர்கள் பொறுப்புணர்ந்து பணிபுரிந்து சலுகை பெறுவர்.



### மிதுனம்

தேவையற்றதைப் பேசுபவர்களிடம் இருந்து விலகி இருக்கவும். புதிய வேலைகள் உருவாகி நெருக்குதல் ஏற்படுத்தும். அவற்றைச் சமாளித்தால் தான் இருப்பதைத் தக்க வைக்க முடியும். தாய்வழி உறவினர்களிடம் கருத்து வேறுபாடு வரலாம். புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள். இல்லறத்துணை வழங்கும் ஆலோசனை, வாழ்வில் முன்னேற்றத்தை உருவாக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும்.



### கடகம்

பேச்சிலும், செயலிலும் உற்சாகம் பிறக்கும். புதியவர்களின் உதவி கிடைத்து மனம் நெகிழ்வீர்கள். உடன் பிறந்தவர்கள் பாசத்தைக் கொட்டுவர். வீடு, வாகன வகையில் அபிவிருத்திப் பணி செய்வீர்கள். புத்திரர்களின் செயல்களை ஒழுங்குபடுத்துவது நன்மை தரும். கடனில் ஒருபகுதியை செலுத்துவீர்கள். இல்லறத்துணை உங்கள் எண்ணங்களுக்கு ஏற்ப நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும்.



### சிம்மம்

மனதில் தைரியம் வளரும். விலகிய உறவினர்கள் தேடி வருவர். குடும்பத்தில் மங்கள நிகழ்ச்சி நடந்தேறும். புதிய வீடு, வாகனம் வாங்க, யோகம் உண்டு. புத்திரர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். பசு, பால் பாக்கிய யோகம் உருவாகி, செல்வவளம் பெருகும். எதிர்ப்பாளரால் உருவான சிரமங்கள் பலமிழக்கும். இல்லறத்துணையின் அன்பில் மனம் மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், இலாபம் அதிகரிக்கும்.



### கன்னி

குடும்ப வாழ்வுமுறை, சீரான பாதையில் செல்லும். முயற்சிகள் சிறப்பாக நிறைவேறும். பணவரவு சுமார் என்பதால், முக்கிய செலவுகளை மட்டும் செய்வீர்கள். தம்பி, தங்கைகளுடன் கருத்து வேறுபாடு வரலாம். வீடு, வாகன பராமரிப்பு செலவு குறையும். புத்திரர்கள், உங்கள் சொல்லை மதிப்பர். இல்லறத்துணை வழிசார்ந்த உறவினர்கள் உதவுவர். தொழில், வியாபாரத்தில், அபிவிருத்தி பணிகள் சிறப்பாக நிறைவேறும்.



### துலாம்

செயல்களில் முன்யோசனை வேண்டும். பயணங்களில் உரிய பாதுகாப்பு முறையைப் பின்பற்றவும். உறவினர்கள் வகையில் செலவு செய்ய நேரிடலாம். இஷ்டதெய்வ அருள்பலம் துணை நிற்கும். புத்திரர்களின் செயல், பெருமை தேடித்தரும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். இல்லறத்துணை வழிசார்ந்த உறவினர்களுடன் பிரச்சினை வரலாம். தொழிலில், உற்பத்தி, விற்பனை, அளவுடன் இருக்கும். பணியாளர்கள் பணியிடத்தில், தேவையற்றதை பேசி, வம்பில் சிக்க வேண்டாம்.



### விருச்சிகம்

மனம் மகிழ்வாக இருக்கும். பணிகள் நேர்த்தியாக நிறைவேறும். பணவரவும், நன்மையும் கூடும். நம்பகத்தன்மை இல்லாதவர்களுக்கு வீடு, வாகனத்தில் இடம் கொடுக்க வேண்டாம். புத்திரர்களின் செயல்பாடு சிறப்பாக அமைய, ஆலோசனை வழங்குவீர்கள். உடல் நலத்துக்கு சிகிச்சை தேவைப்படலாம். இல்லறத்துணை, உங்கள் இன்ப, துன்பத்தில் பங்கு கொள்வார். தொழில், வியாபாரத்தில் இருந்த, சிரமமான நிலை சரியாகும். பணியாளர்களுக்கு வேலைப்பளு கூடும்.



### தனுசு

குடும்பத்தில் ஒற்றுமை வளரும். உறவினர்களின் உதவி கிடைக்கும். முன்னேற்ற பாதையில் நடைபோடுவீர்கள். வாகனங்களில், மிதவேகமாகச் செல்லவும். புத்திரர்கள் அடம் பிடிக்கிறார்கள் என்பதற்காக, கேட்ட உணவு வகைகளைக் கொடுக்காதீர்கள். எதிர்ப்பாளர்களால் இருந்த தொந்தரவு விலகும். குடும்ப நலன் சிறக்க, இல்லறத்துணை, ஒத்துழைப்பு தருவார். தொழில், வியாபாரத்தில், சிரமம் இருக்கும். அவற்றுக்குரிய தீர்வை உடனே செய்வது நல்லது. செலவுகளை தவிர்ப்பர். மாணவர்கள் நண்பரால் உதவி பெறுவர்.



### மகரம்

வேற்றுமை பாராமல் எல்லாருக்கும் உதவுவீர்கள். உழைப்பிற்குரிய பலன் நிச்சயம் கிடைக்கும். குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். பயணங்கள் இனிதாக அமையும். புத்திரர்களின் மனக்குறையைப் போக்கி மகிழச் செய்வீர்கள். வழக்குகளில் சாதகமான தீர்வு கிடைக்கும். இல்லறத்துணையின் உடல்நலத்தில், அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும்.




### கும்பம்

புதிய முதலீடு செய்வதில் நிதானம் வேண்டும். உடன் பிறந்தவர்களால் நன்மை ஏற்படும். வீடு, வாகன வகையில், பாதுகாப்பு அவசியம். பராமரிப்பு செலவு கூடும். புத்திரர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பூர்வீக சொத்தில் வளர்ச்சியும், வருமானமும் கூடும். இல்லறத்துணையின் பேச்சு, செயல், மனவருத்தம் தருவதாக இருக்கும். பொறுமை தேவை. தொழில், வியாபாரத்தில், கடும் உழைப்பால் மட்டுமே லாபம் பெற முடியும். பணியாளர்களுக்கு சலுகை பெற தாமதமாகும். ஞாபகசக்தி அதிகரிக்கும்.



### மீனம்

புகழ்ந்து பேசுபவர்கள், குழி பறிக்க நினைப்பார்கள். கவனம். குடும்பத்தில் மங்கள நிகழ்வு ஏற்படும். பொது இடங்களில் நின்று, தேவையற்றதைப் பேச வேண்டாம். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும், புத்திரர்களின் சொல்லும், செயல்திறனும் மேம்படும். சீரான ஓய்வு, உடல் நலனை பாதுகாக்கும். இல்லறத்துணையின் ஆறுதல் வார்த்தை ஊக்கம் தரும். தொழில், வியாபாரம் செழித்து, பணவரவு கூடும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்களுக்கு சேமிக்கும் அளவு வருமானம் இருக்கும்.



## அநாதை

நீ மட்டுமல்ல நிலவே!
நானும் அநாதைதான்....
இல்லை இல்லை....
உனக்காவது வானத்தில்
நட்சத்திரக் குடிமக்கள்
இருக்கின்றார்கள்.....
எனக்குத் துணையாய்
வெறுமையும்
தனிமையும் தவிர
வேறில்லை......

எஸ்.தர்சி, சுண்டுக்குளி



## வன்முறை ஒழித்து மீள்வாய்

வன்முறையால்
வாள்வெட்டால்
கண்டதென்ன
சோதரரே!
மீண்டும் எதற்காய்
இரத்த சரித்திரங்கள்!
போதும்!
சித்தம் தெளிந்திடுவோம்
வாரும்!
புறமுதுகிடா
வீரத்தின் பரம்பரைகள்
வாழ்ந்த மண்ணில்
இன்று நீர் செய்வதென்ன?
நீர் அழிப்பது
உம் இனத்தையே!
உம் முறை
புரிந்து வாழ்வாய்!
வன்முறை ஒழித்து
மீள்வாய்!
நாளைய தலைமுறை
உன்னை வாழ்த்த
நம் இனப் பெருமை காப்பாய்!

- புலோலியூர்
வேல்நந்தன்.

# வேர் பதிக்கும் விழுதுகள்...

(6 பக்கத் தொடர்ச்சி)

அங்கேயே ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டுவிட்டதாக அறிந்தார்கள்.

இப்போது சிவராமனும், மனோன்மணியும் பாக்கியத்துக்கு வாடகைக்குக் கொடுத்திருந்த சின்ன வீட்டில்தான் இருக்கிறார்கள். அதுவும் தனிமையும்தான் அவர்களுக்கென்று இருக்கும் சொத்து. அவளையறியாமலே ஏக்கப்பெருமூச்சொன்று அவளது அடிவயிற்றிலிருந்து புரண்டெழுந்து வந்து வெளியேறி காற்றுடன் கலந்து சங்கமமாகியது.

"அது சரி! அன்ரி உங்களுடைய பிள்ளைகள் ரெண்டுபேரும் என்ன செய்யினம்?" பாக்கியத்தின் கேள்விக்கணையை எப்படிச் சமாளிப்பதென்று புரியாமல் ஒரு கணம் தவித்துப் போனாள் மனோன்மணி. மறு கணமே தன்னைச் சுதாகரித்துக் கொண்டவளாய்,

"ரெண்டு பேரும் வெளிநாட்டிலதான். ஒவ்வொரு நாளும் போனில கதைப்பினம். அடிக்கடி ஸ்கைப்புக்கு வருவினம்."

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்று சொல்வார்கள். சுருங்கிப்போயிருந்த மனோன்மணியின் முகத்தைப் பார்த்து எடைபோட்டுக்கொண்டாள் பாக்கியம். அத்துடன் அவர்களைப் பற்றி துலாவுவதை நிறுத்திக் கொண்டாள். மற்றவர்களின் மனதைக் கொத்திப் பார்க்கும் பழக்கம் அவளிடம் எப்போதும் குடிகொண்டிருந்ததில்லை.

எல்லோரும் கூடி அளவளாவி விட்டு சிவராமனும். மனோன்மணியும் புறப்படத் தயாரானார்கள். சரவணன் மனோன்மணியிடம் ஒரு பார்சலைக் கொண்டு வந்து கொடுத்தான். "அன்ரி! முந்தி நான் உங்களுக்கு மாங்காய் பிடுங்கித்தாறனான். ஞாபகமிருக்கே. இதில கொஞ்ச மாம்பழமும் இருக்கு. எங்களை நினைச்சு சாப்பிடுங்கோ" சிவராமனுக்கு அவனது செய்கை மனதில் உறுத்தியது. முன்பு..... சரவணன் சிறுவனாய் இருந்த காலத்தில் மனோன்மணி அவனை மரத்தில் ஏற்றி மாங்காய் பறிப்பிப்பாள். பறித்ததும் முழுவதையும் அள்ளிக்கட்டிக்கொண்டு வீட்டுக்கு வந்து விடுவாள். ஒரு பிஞ்சைக் கூட அவனுக்கு கொடுக்க மாட்டாள். சிவராமன் இவற்றைக் கண்டும் காணாதவராக இருந்துவிடுவார். ஆனால் மனம் வருந்திக்கொண்டேயிருக்கும். வாயைத் திறந்து மனைவியிடம் எதுவும் சொல்ல அவருக்குப் பயம். மற்றவர்களுக்கு முன்பாகவே அவரை அவமானப்படுத்தவும் தயங்கமாட்டாள் மனோன்மணி.

பிள்ளைகள் மூவரும் அவர்கள் இருவரையும் பஸ்தரிப்பு வரை அழைத்து வந்து ஏற்றி விட்டனர். மனோன் கணவனைப் பார்த்துச் சொன்னாள். பாத்தியளே அந்தப் பிள்ளையளின்ரை பண்பான குணத்தை.

"ம்!.... எங்களுக்கெண்டும் வந்து பிறந்துதுகளே!" நாடியில் இடித்துக் கொண்டாள்.

"இஞ்சரும் மனோன்! நான் சொல்லுறதைக் வடிவாய்க்கேளும். நீர் எங்கட பிள்ளையளுக்கு உம்முடைய அதிகாரம் செய்யிற பழக்கத்தையும் சுயநலத்தையும்தான் பழக்கி வைச்சனீர். ஆனால்... அவையின்ரை பிள்ளையள் அப்பிடியில்ல. விழுதுகள் வேர் பதிச்சால்தான் தாய்மரத்துக்கு பலம் என்ற சீரிய நோக்கத்தோட வளர்க்கப்பட்டதுகள். நான் சொல்லுறது உமக்கு விளங்குதோ?" மனோன்மணி வாழ்க்கையில் முதன் முறையாக கணவனின் பேச்சுக்கு எதிர் வார்த்தை கூறாமல் தலை குனிந்தாள். "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே. அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்க்கையிலே." இப்போதுதான் தத்துவம் புரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைப் பக்கம்



## பாருங்க இந்த கடவுளை...

**கடவுள்:** மனிதா, உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்?

**மனிதன்:** இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு வீதியைப் போட் டுக் கொடு சாமி!

**கடவுள்:** அது கஷ்டமாச்சே... கடல்ல எப்பிடிப்பா வீதி போட முடியும், வேறு ஏதாவது கேள்.

**மனிதன்:** அப்ப என் மனைவி பேச்சைக் குறைக்கணும், நான் சொல்றதை மட்டும்தான் கேட்கணும், எதிர்த்து பேசக்கூடாது...!!! அப்படி செய்யுங்க ... சாமி...!!!

**கடவுள்:** அமெரிக்காவுக்கு வீதி சிங்கிளா, டபுளா...?

சிலருடன் பேச முடியவில்லை என்றாலும் அவர்களை நினைத்திட்டு இருப்பதே ஒரு வித சந்தோஷம் தான்...!!!

மன்னிப்பு கேட்பதற்கு மன்னிப்பு கொடுப்பதற்கும் அதிகம் யோசிக்கிறோம்.

**இதயம்**
கோவில் சன்னதியில் பணக்காரன், கோவில் வாசலில் ஏழை...!!! இருவரும் வேண்டுவது பிச்சை.

அன்பை நிரூபிக்க ஏதேனும் வாங்கிக் கொடுக்கும்போது அன்பு விற்கப்படுகிறது.

கடவுள் ஆணையும் பெண்ணையும் மட்டும் தான் படைத்தார். ஆனால் நம் மனிதர்கள் அன்பு, ஏமாற்றம், சூது, பொறாமை, வேற்றுமை, பிரிவு எல்லாவற்றையுமே படைத்துவிட்டனர்.

அனைவரிடமும் புன்னகையுடன் பழகு. ஒருவேளைஅவர்களுக்குஉன்புன்னகை தேவைப்படக்கூடிய, வலுவூட்டக்கூடிய ஒன்றாகவும் இருக்கலாம்.

காலங்களும் சில மனிதர்கள் குணங்களும் ஒருநாளும் உனக்காக மாறாதவைகள். உன்னை நீ மாற்றி கரையேறி முன்னேறு...!

## காதல் தத்துவம்

காதல் பண்ணுறவனுக்கு காதலிதான் அழகு...
காதல் பண்ணாதவனுக்கு அழகானவ எல்லாம் காதலி...


காதலிக்கிற பொண்ணையே கல்யாணம்
பண்ணிக்க முடியும்னு சொல்ல முடியாது..
கல்யாணம் பண்ணினவன் எல்லாம்
பொண்டாட்டியத்தான் காதலிப்பான்னு
சொல்ல முடியாது..

எல்லா பொண்ணும் அழகா தெரிஞ்சா
அது ஜொள்ளுடா...
ஒரு பொண்ணு மட்டும்
அழகா தெரிஞ்சா அது காதல்டா...

பொண்டாட்டிய மட்டும் காதலிக்கனும்னு
நெனைக்கறது பொம்பள புத்தி...
காதலிக்கிற எல்லாரையும் பொண்டாட்டியா
நெனைக்கிறது ஆம்பளை புத்தி..



## காதலில் தோற்பது எப்படி?



காதலில் தோற்பது என்பது சாதாரண விடயமில்லை. கழட்டி விடுவது என்பதும் சாதாரண விடயமில்லை. அதுக்காக எவ்வளவு பாடுபடனும், எவ்வளவு தியாகம் பண்ணனும். இதைவிட முக்கியம் இதை உங்கள் ஆளும் உங்களைக் கழட்டிவிட உபயோகப்படுத்தலாம், கவனம்!

முதல்ல போனில் இந்த ம்ம்ம் போடுவதை விடுங்கள். பத்து நிமிடம் எதுவும் பேசலேன்னா ரொம்ப போர் அடிக்குதா? கேள்வி வரும், உடனே ஆமான்னு பதில் சொல்லனும்.

எதுக்கு இவ்வளோ அழகா இருக்க! உன்னை பார்த்துகிட்டே இருக்கலாம் போலிருக்கு இப்படி எல்லாம் கொஞ்சுவதை நிறுத்துங்கள். உன் டிரஸ் அழகா இருக்கு, ஆனா அதை நீ போட்டு கெடுத்திட்டே இப்படி சொல்லிப் பழகுங்கள். (சில நேரங்களில் அடி விழலாம்! என்ன செய்ய தோற்பது என்பது சாதாரண விடயமில்லை!)

ஒன்னே ஒன்னு கொடேன். ப்ளீஸ்! இப்படியெல்லாம் தப்பித்தவறிக்கூட கேட்டுவிட வேண்டாம். பிறகு பிரிவது கடினம்.

தோழிகளுடன் இருக்கும்போது, அவர்களையே பார்த்துக் கொண்டி ருக்கவும். அவர்களுடனேயே பேசிக்கொண்டிருக்கவும். (யார் கண்டது வருங் காலத்தில் பிக் அப் ஆனாலும் ஆகலாம்!) ஆளுக்கு தனது; அழகின் மீதே சந்தேகம் வரும். வரட்டும்! அப்புறம் எப்படி பிரிவது.

சும்மா சும்மா பரிசு வாங்கிக் கொடுத்து அசத்த வேண்டாம்! கேட்டாலும் கூட நானே உனக்கொரு பரிசு பிறகெதற்கு இன்னொன்னு என்று சமாளிக்கவும்!

எந்த இடத்துக்கும் சொன்ன நேரத்துக்கும் போய் அரிச்சந்திரன் என்று நிரூபிக்க வேண்டாம். ஒரு மணி நேரம் கழித்து போகவும் அல்லது போகாமல் தவிர்த்து கடுப்பேற்றவும்.

உடன் போகும்போதும் சரி, பேசும்போதும் சரி வழியில் வரும் பெண்களை வர்ணிக்கவும்! அப்புறம் அன்று முழுவதும் ஓர் இம்சையிலிருந்து உங்களுக்கு விடுதலை!

பிறந்த நாளுக்கு இரவு 12 வரை கண்விழித்திருந்து ஹாப்பி பர்த்டே சொல்லுவதையெல்லாம் விட்டுவிடவும். மதியம் கூப்பிட்டு உனக்கு இன்னிக்கு பிறந்த நாளில்ல! மறந்தே போய்விட்டேன்! ஹாப்பி பர்த்டே! பிறகு நீங்கள் பிரிவதற்கு முயற்சியே செய்ய வேண்டியதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கணவன் மனைவி குடும்பம்

புதுமணத் தம்பதிக்குள் அதிக ளவு அன்னியோன்யம், நெருக்கம் இருக்கும்..! முதல் குழந்தை பெற்றெடுத்த பின்பும் அதே அளவு அன்பு இருக்கும் ஆனால் பொறுப்புகள் தடுக்கும். கணவன்–மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்படும் முக்கியமான சூழல்களில் இதுவும் ஒன்று.

குழந்தை பெற்றெடுத்ததும் இளம் தம்பதி என்ற நிலைமாறி பெற்றோர் என்ற புது அந்தஸ்து கிடைக்கும். புது மையான உலகமும் தம்பதிகளை சூழ்ந்து கொள்ளும். இப்போது இரு வருக்குள்ளும் சிந்தனைகள் மாறத் தொடங்கும். பொறுப்பும், அக்கறை யும் கூடுவது போலவே, கவலையும், பயமும் தொற்றிக் கொள்ளும். அது வரை கணவரையே நம்பியிருந்த மனைவி, இப்போது குழந்தையே உலகமென மாறிவிடுவாள். இங்கு தான் பிரச்சினை ஆரம்பம்.

ஆண் இப்படித்தான் இருப்பான் என்று பெண்ணும், பெண் இப்படித்தான் இருப்பாள் என்று ஆணும் அறிந்து கொண்டால் பிரச்சினைகள் எழுந் தாலும் எளிதில் அடங்கி விடும். பெண் ணுக்கு அரவணைக்கும் குணம் அதி கம். கருத்து வேறுபாடு ஏற்பட்டபின் நீங்கள் ஒருபடி இறங்கி வந்தால் அவள் பத்து படி இறங்கி வரும் அளவுக்கு இரக்கமும், அரவணைக்கும் பண்பும் கொண்டவளாக இருப்பாள். ஆனால் யார் முதலில் இறங்கி வருவது என்ப துதான் பிரச்சினை பெரிதாக காரணம். பெண் இயல்பாகவே பெற்றோர், கணவர், குழந்தை என்று சார்ந்து வாழ பழக்கப்பட்டவள். எனவே நேசிக்க வும், நேசிக்கப்படவும் விரும்புவாள். அவளை நீங்கள் ஏதோ ஒன்றை கார ணம் காட்டி வெறுக்கும்போது அவள் நிலை அடியோடு மாறும். குழப்பத்தில் அவள் எந்த முடிவு எடுக்கவும் துணிந்து விடுவாள். தாம்பத்யம் அவசியம் என்ற நிலையிலும் தவிர்ப்பாள். இதிலும் பிரச்சினைகள் எழும்.

திறமை வாய்ந்த வெற்றிகரமான ஆணை விரும்புவது பெண்களின் அடிப்படை குணம். உங்கள் தோற்றத் தில் மயங்கி உங்களை ஏற்றுக் கொண்ட பின் தனது எதிர்பார்ப்பில் ஏமாற் றங்களை கண்டால் மனம் உடைந்து போவாள். இதனாலும் குடும்பத்துக் குள் பிரச்சினை வரலாம். குழப்பத் தையும், முரண்பாடுகளையும் தவிர்க்க விரும்புகிறவர்கள் பேசிப் பார்த்தாலே அனேக விடயங்களுக்கு தீர்வு கண்டுவிட முடியும்.

**ஆண் இப்படித்தான் இருப்பான் என்று பெண்ணும், பெண் இப்படித் தான் இருப்பாள் என்று ஆணும் அறிந்து கொண்டால் பிரச்சினைகள் எழுந் தாலும் எளிதில் அடங்கி விடும். பெண்ணுக்கு அரவணைக்கும் குணம் அதிகம். கருத்து வேறுபாடு ஏற்பட்டபின் நீங்கள் ஒருபடி இறங்கி வந்தால் அவள் பத்து படி இறங்கி வரும் அளவுக்கு இரக்கமும், அரவணைக்கும் பண்பும் கொண்டவளாக இருப்பாள்.**

ஆணின் அடிப்படைப் பண்பே போராட்ட குணம் தான். பெண்களை கவர விரும்புவதும் அவர்கள் இயல்பு. எப் போதும் வெற்றியை நோக்கி விரட்டப் பட்டுக் கொண்டிருப்பார்கள். ஒருபுறம் இயல்பும், இன்னொருபுறம் இயலாமை யும் விரட்ட, போராட்டம் அவர்களின் வாழ்வில் நிரந்தரமாகி விடுகின்றன. அதனால்தான் அவர்கள் தலையை பிய்த் துக் கொண்டு, கல்யாணம் முடிக்காமலே இருக்கலாம் என்று ஆலோசனை சொல்லி விலகி விடுகிறார்கள். வீறாப்பால் விட்டுக் கொடுக்காததாலும் பிரச்சினைகள் நீளும்! குழந்தை பிறந்த பின்னர் தனக்கு நேரம் ஒதுக்குவதில்லை என்பதுதான் பெரும் பாலான கணவர்களின் குற்றச்சாட்டு. இப்போதைய நிலையில் உலகத்தைப் பற்றிய புதிய பார்வை இருவருக்கும் வேறுவேறாக இருப்பதால், ஒருவர் மீது ஒருவர் நிறை கண்ட நிலை மாறி, குறை காண ஆரம்பிப்பார்கள். தாம்பத்யம் உட்பட பிற விடயங் களில் இருந்த நெருக்கம் குறைய ஆரம் பிக் கலாம். கருத்து வேறு பாடுகள் எழலாம். வாழ்வில் ஒருவித சலிப்பு தோன்றும்.

பிறந்த குழந்தை தம்பதிக்கு கூடுதல் பொறுப்புகளைத் தரும். குடும்பத்திலும், வெளியிலும் பிரச்சினைகள் ஆணின் மனதை அதிகமாக உறுத்தும். தேவை களை நோக்கி ஓடத் தொடங்குவான். மனைவியோ பொறுப்புகளை கணவன் பகிர்ந்து கொள்வாரா? என்று எதிர் பார்ப்பாள். சம உரிமை கோரி நிற்பாள். ஏற்கனவே தன்னை முன்போல் கவனிப்பதில்லை என்ற ஆதங்கத்திலும், நிதிச்சுமையிலும் தடுமாறிக் கொண்டி ருக்கும் ஆண், எதிர்பாராத இந்த உரிமை கோரலால் குழப்பமடைவான். மோதல் ஆரம்பமாவது இங்கு தான்.

கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதும் இருவரும் தங்கள் பலத்தைக் காட்டு வார்கள், பலவீனங்களை சுட்டிக்காட்டி குறைகூறத் தொடங்குவார்கள். அந் தரங்கங்கள் மூன்றாம் மனிதர் நுழை யும் அளவுக்கு போகும். இருவரும் சுமூக முடிவுக்கு வராத நிலையில், பிரச் சினை விவாகரத்து வரை கூட செல்ல லாம். தலை தூக்கும் முரண்பாடுகளைத் தவிர்க்கவும், காலம் முழுவதும் கண வன்–மனைவி சேர்ந்து வாழவும் சில குணநலன்களை புரிந்து நடக்க வேண்டும். ஆண்கள் எப்போதும் உறவுகளில் மிக நெருக்கமாக இருப்பதை தவிர்ப்பார் கள். தனக்கு பலம் அதிகம் என்றெண்ணி உடல் நலத்தை கெடுத்துக் கொள்வதும் உண்டு. போராட்டம், விரக்தி இவற்றால் விரட்டப்பட்டு அடிக்கடி மாறிக் கொண்டே இருப்பார்கள். ஆனால் வீறாப்பு குணம் விட்டுக் கொடுப்பதை விரும்பாது. இதை பெண்கள் புரிந்து கொண்டாலும் பிரச்சினைகளை தவிர்க்கலாம்.

ஆணானாலும், பெண்ணானாலும் அடிப் படை குணங்களைவிட்டு வெளியே வரா விட்டால் பிரச்சினை தான். நான் இப்படித்தான் என்ற கோட்பாட்டை தகர்த்து ஒருவருக்குள் ஒருவர் ஐக்கியமாகி விடும்போது வேறுபாடுகள் நீங்கும். இன்பம் பெருக்கெடுக்கும். திருமணத் தோடு, குழந்தை பிறப்போடு எல்லாமே முடிந்து விடுவதில்லை. எப்போதும் முதன்முதலாகச் சந்திக்கும் ஆவலோடு நேசம் கொள்ளுங்கள், பிரச்சினை களை சிறுபிள்ளையின் தவறாக மன்னிக்கப் பழகுங்கள். மணவாழ்க்கை மகிழ்வும், நிறைவும் பெறும்.

# தாய்மை பெண்களுக்கு வரம்

தவமாய் தவமிருந்து குழந்தை பெற்றுக் கொள்ள காத்திருக்கும் பெண்களை அதிகமாக கொண்ட நமது நாட்டில், பிள்ளை பெற்றுக் கொள்வதை தள்ளிப் போட நினைக்கும் நவநாகரிக பெண்களும் அதிகரித்து வருகிறார்கள்.

குழந்தை பெற்றுக் கொள்ள பெண்கள் ஆசைப்பட்ட காலம் மலையேறிக் கொண்டிருக்கிறது. தற்போது பெண்கள் அதுவும் நகரவாசிகள் குழந்தை பெற்றுக் கொள்ளவே தயங்குகின்றனர். நாம் இருவர் நமக்கேன் இன்னும் ஒருவர் என்ற புதுமொழியை உருவாக்கும் பெண்கள் அதிகரிக்க ஆரம்பித்து விட்டனராம்.

முன்பெல்லாம் குழந்தை பெறுவதில் கணக்கே இருக்காது. உடம்பு தாங்கும் வரை பிள்ளை பெற்றுக் கொள்வார்கள் அந்தக் காலத்துப் பெண்மணிகள். இதனால் ஒவ்வொரு குடும்பத்திலும் பல குழந்தைகள் அன்று இருந்தனர். ஆனால் இன்று கூட்டமே இல்லாத குடும்பங்கள்தான் அதிகமாக உள்ளது. குழந்தை பெற்றுக் கொள்ள இந்தக் காலத்துப் பெண்கள் யோசிக்க, தயங்க பல காரணங்கள். வேலைக்குப் போகும் பெண்களாக இன்றைய மகளிர் அதிகளவில் இருப்பதால் வேலைக்கும் போய்க் கொண்டு குழந்தையையும் பார்த்துக் கொள்ள சிரமப்படுகின்றனர். குழந்தை பெற்றால் நிறை அதிகரித்து அழகு போய் விடும். உடல் தளர்ந்து விடும், உடல் கட்டுக் குலைந்து விடும். குழந்தைக்காகவே முழு நேரத்தையும் செலவிட வேண்டும். நினைத்தபடி நினைத்த இடத்துக்கு எல்லாம் செல்ல முடியாது. கணவரை முன்பு போல் கவனிக்க முடியாது. இதெல்லாம் குழந்தை பெறத் தயங்கும் பெண்கள் கூறும் சில காரணங்கள்.

கஷ்டப்பட்டு உழைத்து அலுவலகத்தில் நல்ல பெயர் எடுத்திருப்போம். பதவி உயர்வு கிடைக்கும் நேரத்தில் பிரசவ லீவு போட்டால் பதவி உயர்வு போய் விடும். இப்படிப் பல காரணங்களை வைத்திருக்கிறார்கள் இந்தப்பிள்ளை விரும்பாத பெண்கள். இதனால் வேலைக்குப் போகும் பெண்கள் முடிந்த அளவுக்கு குழந்தை பெறுவதை தள்ளிப் போடுகின்றனர்.

உனக்கு கல்யாணமாகி 4 ஆண்டுகளாகிவிட்டதே, குழந்தை பெறும் எண்ணமே இல்லையா என்றால், அதுக்கென்ன அவசரம், அப்புறம் பார்க்கலாம் என்கிறார்கள் பலர். நமது பாட்டிமார்கள் 12,13 குழந்தைகள் பெற்றனர். நமது அம்மாமார் கள் 2 முதல் 5 வரை பெற்றனர். தற்போதுள்ள தலைமுறை குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டுமா என்று யோசிக்கிறது. குழந்தை பெற்றுக்கொள்வது சுமையல்ல அதுவும் ஒரு சுகம் தான் என்பதை இந்தப் பெண்கள் உணர வேண்டும். தாய்மைப் பேறு என்பது எல்லோருக்கும் கிடைக்காதது. எத்தனையோ பெண்கள் குழந்தைப் பேறுக்கு வழியில்லாமல் மனதுக்குள் ஒடிந்து புழுங்கிக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் கிடைக்காத பேறு கிடைக்கும்போது அதை தட்டிக் கழிப்பது நிச்சயம் தவறு. காலம் போன பின்னர் குழந்தை குறித்து யோசித்து, அப்போது நமது உடல் அதற்கேற்ற தகுதியைத் தாண்டி போகும்போது வருத்தப்படுவதற்குப் பதில், முடிந்தவரை சீக்கிரமே ஒன்றோ அல்லது இரண்டோ பெற்றுக் கொண்டு முழுமை அடைவது புத்திசாலித்தனம் இல்லையா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (ே) பாதைகள்

## சரிசெய்யப்பட்டேயாக வேண்டும்

கே.எஸ்.சிவஞானராஜா

ஆன்மிகத்தை ஆதார சுருதியாகப் போற்றிய எமது பாரம்பரிய சமூகம், இன்று தன்னிலை குலைந்து தவித்திடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. தாராளமான பொருளாதாரக் கொள்கை, வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வருகை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, கடல் சார்ந்த வர்த்தகம், அளவு கணக்கில்லாத பணவரவுகள், நவீன தொழில்நுட்ப வசதி வாய்ப்புக்கள், பெற்றோர் பிள்ளைகள் இடைவெளி, சமூக அரசியல் பொருளாதார முரண்பாடுகள், பாடசாலை இடைவிலகல், விவாக முறிவுகள், தாய் தந்தை பிள்ளைகள் தூரத்தூர தனியாகப் பிரித்தும், பிரிந்தும் தொடர் பற்றிருத்தல், விபச்சாரம், தன்னினச் சேர்க்கைகள், சர்வதேச விளையாட்டுப் போட்டிகள், களியாட்ட விடுதிகள், ஒரு சில போலி மசாஜ் நிலையங்கள், போலியான கலாசார ஆபாசக் காதல் வாழ்வு ஆகிய முக்கிய காரணிகளால் இன்றைய எமது சமுதாயம், பலவீனமாகி மிகமிக இலகுவாகப் போதைப் பொருள்களுக்கு அடிமையாகி, அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறது.

இதிலிருந்து மீள்வதற்குச் சகலருமே பாடுபடவேண்டியவர்களாகத் தேவைப்படுத்தப் பட்டுள்ளோம். இது தொடர்பான விழிப்புணர்வு சகலமட்டங்களிலும் முன்னெடுக்கப்படவேண்டும்.

ஒவ்வொரு வருடந்தோறும் ஜுன் மாதம் 26ஆம் திகதியன்று போதைப்பொருள் எதிர்ப்பு தினம் கொண்டாடப்படுகிறது. போதையானது பாவிப்பவர்களை மட்டுமல்ல, பக்கத்திலிருப்பவர்களையும், குடும்பத்தையும், சமூகத்தையும், நாட்டையுமே முற்று முழுதாக அழிக்கவல்லது. அல்லாமலும் அடுத்துவரும் சந்ததியையும் வலுவிழக்கச் செய்துவிடும். எனவே இந்தப் பாவனைக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படவேண்டும்.

இனிப் போதை என்றால் என்ன என்பதற்கு, மனநிலையில், உணர்வுகளில், நடத்தையில், பேச்சினில், நடமாட்டத்தில், பார்வையில், பழகுவதில், ஒருவரையோ, பலரையோ அசாதாரண மாற்றத்துக்கு எது கொண்டு வருகிறதோ அதை போதை என்று கூறலாம்.

இந்த நிலையில், ஒருவன் தன்னைஅதியுச்ச நிலையில் மறக்க, கட்டுப்பாட்டை மீற, அல்லாத பாஷைகளைத் துவைத்துப் பேசிட, காமவெறியைக் கண்டபடி தீர்த்துப் பசியாறிட, எதிராளி என பழிசுமத்தி பழிக்குப் பழி தீர்த்திட, கொலைவெறியாடிட, விபத்துக்களை ஏற்படுத்த, தற்கொலை செய்திட, அடுத்தவருடன் முறைகேடாக நடந்திட முனைவான்.

அபின், கஞ்சா, ஹெரோயின், பிறவுண் சுகர், லேகியம், ஹொகேன், மெதாமெபட்டமைன்தூள், மெத்தடோன் ஜின், பியர், விஸ்கி, பிராண்டி, கள்ளு, சாராயம், சிகரெட், சுருட்டு, பீடி, புகையிலை ஆகிய அத்தனையுமே போதையை ஊட்டக்கூடியனவே.

2012ஆம் ஆண்டு தரப்பட்ட புள்ளி விவரத்தின்படி இலங்கையில் 234,019,903 லீற்றர் மது சம்பந்தப்பட்ட மக்களால் அருந்தப் பட்டுள்ளது. இதில்

**ஜின் 1,515,439 லீற்றர்,**
**பியர் 123,556,624 லீற்றர்,**
**விஸ்கி 1,114,000 லீற்றர்,**
**பிறாண்டி 6,794,382 லீற்றர்,**
**கள்ளு 17,325,918 லீற்றர்,**
**சாராயம் 82,169,059 லீற்றர்**

மேற்தரப்பட்ட 2012ஆம் ஆண்டு தரவுகளின் பிரகாரம் அந்த ஆண்டில் 23 கோடியே 40 லட்சத்து 19 ஆயிரத்து 903 லீற்றர் மது, எமது நாட்டில் அருந்தப்பட்டுள்ளது. குடித்துத் தள்ளப்பட்டுள்ளது. 2012ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இந்த நாட்டின் சனத்தொகை 2கோடியே 26 லட்சத்து 3ஆயிரத்து எழுநூற்றி இருபத்து மூன்று(2026,3723) என இருக்கும் போது, 23, 40, 19, 903 லீற்றர் மது பாவனை ஒவ்வொரு குடிமகனையும் போதையின் வசம் ஈர்த்தாகும் என்பது திண்ணமே!






பின்வரும் போதைப் பொருள்களை ஒருமுறை பாவிப்பதனால், ஒருவன் தன் ஆயுளில் பல நிமிடங்களை இழந்து இறப்பை நெருங்குகின்றான்.

ஒருமுறை ஹெரோயின் – 1320 நிமிடங்கள் இழப்பு
ஒருமுறை மெத்தடோன் (மாத்திரை) – 720 நிமிடங்கள் இழப்பு
ஒருமுறை மெதாமெபட்ட(தூள்) – 132 நிமிடங்கள் இழப்பு
ஒருமுறைமது(சாராயம்) – 72 நிமிடங்கள் இழப்பு
ஒருமுறைகொஹேன் –60நிமிடங்கள் இழப்பு
ஒருமுறைசிகரட், பீடி, சுருட்டு – 13 நிமிடங்கள் இழப்பு
ஒருமுறைகஞ்சா, அபின் – 50 நிமிடங்கள் இழப்பு
ஒருமுறைபீடா, இருமல் பாணி (போதையூட்டிய)– 15 நிமிடங்கள் இழப்பு
ஒருமுறைசோடா, இனிப்புப் பண்டம் (வெளிநாட்டு) – நிமிடங்கள் இழப்பு

இப்படி வாழ்க்கை இழக்கப்பட்டாலும்கூட மேலே சொல்லப்பட்ட அத்தனை விடயதானங்களிலும் இன்றைய எமது சமுதாயம், குறிப்பாக இளந்தலைமுறையினர் மூழ்கியுள்ளமையை அறியக்கூடியதாக உள்ளது.

கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் ஒரு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையிலே எதிரிக் கூண்டில் எதிரிகளாக நின்றிருந்த இருவர், எல்லோருக்கும் முன்னாலேயே கஞ்சாப் பொதியைப் பரிமாறிய சம்பவம், மன்றின் கவனத்துக் கொண்டுவரப்பட்டுத் தண்டனையும் வழங்கப்பட்டது.

இவ்வாறான செய்திகளைச் சமூகமானது பெரியதொரு பிரச்சினையாக அலட்டிக் கொள்வதேயில்லை. காரணம் இன்றைய சமூகத்தில் பெரும்பாலானவர்களை ஏதோ ஒரு வகையில் போதையின் [illegible] அடையாளப்படுத்த [illegible] வைத்திய நிபுணர் சி.சிவசுதன், "நின்று கொல்லும் சோடா" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில், "எங்கும் எதற்கும் சோடா கொடுக்கும் பழக்கத்தைப் பார்க்கும் போது வைதீஸ் கொலை வெறி? என்னும் பாடல் தான் ஞாபகத்துக்கு வருகிறது" என்று எடுத்தியம்புவதிலிருந்து, யாம் அறிந்து கொள்வது யாதெனில், சுடலை வரைக்கும் சோடா, வெறியூட்டக் கூடிய அத்தனையையும் சர்வசாதாரணமாக உபயோகிப்பதில் நாம் வெற்றியுடனான வெறி கொண்டுள்ளோம்.

சுவையூட்டிகள், நிறமூட்டிகள், இரசாயன சேர்க்கைகள் யாவுமே போதையைத் தூண்டிவிடக்கூடியன. வடிவாகத் தரப்படும் நுகர்வுப் பொருள்கள் அத்தனையிலும் அங்கீகரிக்கப்படாத வேதியல் பதார்த்தங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இதனாலன்றோ தற்போதைய வயது வந்தவர்கள் வரை (எல்லோருமல்ல) பாலியல் உணர்வுகளால் தூண்டப்படுகின்றனர்.

இத்தகு நிலையினால் பால்வேறுபாடின்றி, பலாத்காரமும், பாலியல் முறைகேடுகளும் அளவு கணக்கின்றி நடைபெறுகின்றன. பயமது இன்றி கொலை வேறு, வன்புணர்வுகள் வேறு நடக்கின்றன. யாழ்ப்பாணத்தில் மட்டும் நாளொன்றுக்கு 15,000 லீற்றருக்கும் அதிகமாக மது நுகரப்படுகிறது. காரணம் மதுபாவனையில் இளைஞர்கள் பெருமளவு ஈர்க்கப்படுவது தான். 2007இல் இருந்து 2014வரை நாளொன்றுக்கான மதுபாவனை(லீற்றரில்) நிற்காமல் அதிகரித்துக் கொண்டே போகிறது. கடல் வளங்களைக் கொள்ளையடிக்கும் தோறணையில் கஞ்சா, அபின், ஹெரோயின், கொஹேன், மெதாமெபட்டமைன் தூள், மெத்தடோன் மாத்திரை, இருமலுக்கான திரவமருந்து, ஊசி மருந்து யாவுமே கடற்கரையோரங்களில் தீவிரமாக வர்த்தகம் செய்யப்படுகிறது. மாதகல் மட்டுமல்ல, கரையோரப் பகுதிகள் முழுவதுமாக நடைபெறுகிறது.

கஞ்சா, ஹெரோயின் இரண்டும் பெரிய அளவில் வாலிப, நடுத்தர வயதுடையோரால் கொள்முதல் செய்யப்படுகிறது. முகவர்கள், தரகர்களால் மற்றும் வியாபாரிகள், பாலியல் உழைப்பாளிகளினால் கஞ்சா, அபின், ஹெரோயின், சோடா, பீடா, சொக்லற், மது பானங்கள் கனகச்சிதமாக சமூக மட்டத்தில் விநியோகிக்கப்படுகின்றன. கிரிக்கெட் போட்டியில், திருவிழாக் காலங்களில், பாட சாலை இடைவேளை நேரத்தில், தனிப்பட்ட அங்கீகரிக்கப்படாத விடுதிகளில், ரயில் பயணங்களில், குறிப்பிட்ட சில வீடுகளில் என்று இவை பரிமாறிப் பகிரப்படுகின்றன. இந்தப் பாவனை மூலம் உறவுமுறை என்றில்லாமல், உடல்மொழி ஊடாக, வயது வேறுபாடின்றி காமம் காதலாகிக் கசிந்து, பசியாறுவதற்கு எமது சமூகம், பல வழிகளுக்கு குறுக்குவழி சமைத்து இடங்கொடுத்துள்ளது. டெங்கு ஒழிப்புக்கு வீடுவீடாய் ஆக்கிரமித்தது போல, போதைப் பொருள் தடுப்பும் அமைதல் வேண்டும். மற்றும் நிந்தனையைச் சொந்தமாக்கி, கெடுகிறேன் பந்தயம் பிடி என்றவாறு வளர்கின்ற சமூகம் உலகெங்கணும் தோன்றிவிட்டது. தக்கதோர் பரிகாரம் செய்யப்படாவிட்டால் பாதைகள் போதையாகிவிடும். அதற்கு நாம் செய்யவேண்டியது நிறைய உள்ளது. இன்றே தயாராவோம்! போதைப் பொருள்களின் தாக்கம் சமூகத்தில் ஓங்கியே விட்டது. இவற்றைத் திருத்த முடியாதென்று கருதுவது தவறானதே.



"எங்கும் எதற்கும் சோடா கொடுக்கும் பழக்கத்தைப் பார்க்கும்போது வைதீஸ் கொலை வெறி? என்னும் பாடல் தான் ஞாபகத்துக்கு வருகிறது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாட்சி

ஆண்டாண்டு காலமாய்
மாண்டு போகும் பரம்பரைதான்
நாமோ.......? திடமாய்
சொல்லத் தெரியவில்லை எனக்கு
ஆனாலும்
நடந்தவற்றை மீள ஒரு முறை
கடந்து போய்ப் பார்க்கிறேன்
என்னால் இயன்றவரை
சொன்னால் மிகும் சோகம்
முன்னால் பார்த்தவற்றை
பின்னாள் நினைக்கையிலே
இந்நாள் இக்கவி
நான் எழுதுகையில்
நினைத்ததில் தவறில்லை நாம்
அன்றும் இன்றும்
மாண்டு கொண்டுதான்
இருக்கிறோம்
மரண பூமிதனில்

தேர்தல் வரும் ஆட்சித்
தேர்வும் நடக்கும்
கதிரைகள் மாறும்
குதிரைகள் பாயும்
சில காலம் நம் வாழ்வில்
சில்மிசம் அரங்கேறும்
மீண்டும் படிப்படியாய்
மாண்டு போன நம் பழம்வாழ்வு
ஆண்டு கொள்ளும் புது
ஆட்சி ஏறியே
எம்மை
தமிழனின் விடிவுக்கு
தலை நிமிர்வின் முடிவுக்கு
தன்னிகரில்லா புகழுக்கு
அடிமை வாழ்விற்கு
நடுநிலைமை காணத்தான்
எடுப்பார் யார்?
தேர்தலொன்று?

அபிவிருத்தி அடையாளம்
வீதியுடன் நிற்கிறது நம்
பாதுகாப்புகள் யாவும்
பாழடைந்து போகிறது
பெண்ணியம் என்ற பேச்சுக்கள்
கண்ணியம் காத்து நின்ற
காலங்கள் எல்லாம் போச்சு
அடுப்பூதி வாழ்ந்த பெண்ணை
அடுக்களையிலிருந்து
வெளியேற்றி
மிடுக்காக இவ்வுலகில்
துடிப்புள்ள மலராக்கி
மௌனித்த பாரதியும்
இந்நாள் இருந்திருந்தால்
என்னதான் செய்திருப்பான்?
தன்மானம் காத்து நின்ற
பெண்மானம் இன்று
பெட்டியில் போகிறது பரதேசம்

வான் வெளி எங்கெணும்
வானூர்திகள் வட்டமிட்ட
காலங்கள் கடக்கையில்
கண்களுக்கு மெலிதாய் ஆனந்தம்
அது
கணப் பொழுதேனும்
தரிக்கவில்லை
வல்லூறுகள் வலைவிரித்து
வல்லுறவு பண்ணும் காலம்
வந்தாச்சு நம் வாழ்வில்
வீட்டுக்கு மறைவாய்
போட்ட முற்றத்து வேலியை
மூடிப் படர்ந்த கொடியொன்று
ஆடிப்பாடி அசைத்து வேலியை
நாடிப் போட்டது நித்திலத்தில்
இப்படித்தான்
போனாள் நம் அன்புச் சகோதரி.....
நல்லுறவை பிரித்தெடுக்கும்
வல்லுறவுப் பேய்களின்
அராஜகப் போக்கதை வடிக்க
சொல்லுறவு கொள்ளவில்லை
எந்தனுக்கு
என்ன செய்வேன்? ஏது செய்வேன்

போதையால் செப்பனிட்ட
பாதைத் தொகுதிகள்
அபிவிருத்தியின் அடையாளச்
சின்னமாச்சு
காமக் களியாட்டங்கள்
வேகம் பெற்றிடவே
சோகங்கள் எம்மை
சேர்ந்தே வாட்டுதே.
இன்னும் தான் நாம்
மூலையிலே முடங்கிவிட்டால்
மூளையும் செத்துவிடும்.
சிலந்தி வலையிலும்
ஒழிந்து வாழும் நம் உடலோரம்
அணிதிரளும் ஊர்களும்
பவனிவரும் ஊர்வலங்களும்
பத்திரிகை எங்கெணும்
பக்கம் பக்கமாய் வெளிவரும்
கண்டன உரைகளும்
பகிஷ்கரிப்புகளும்
கடையடைப்புகளும்
மட்டுமல்ல நம் பலம்........
இன்னும் இன்னும்
எழுவோம் நாம் எல்லோரும்
அறிவாய் நீ!

நேற்று கிருஷாந்தி
இன்று வித்தியா
நாளை உதிரப்போகும்
தோழியவளை காக்கவென
தோள்கொடுக்க வாரீர் நம்
தோழர்களே!
இனியும் நாம் வீட்டிலோரம்
பெண்ணியம் காக்கப்
புறப்படுவோம்
உதிர்ந்த பூக்களின்
உதிரம் சாட்சியாய்.............

*மல்லாவிக்* கஜன்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 375

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ✿ | 4 | | 5 |
| 6 | | | ✿ | 7 | | ✿ | |
| 8 | | | 9 | | ✿ | 10 | |
| | ✿ | 11 | | ✿ | 12 | | |
| ✿ | 13 | | | | | | ✿ |
| 14 | | | | ✿ | | ✿ | 15 |
| 16 | | | ✿ | 17 | | 18 | |
| 19 | | ✿ | 20 | | ✿ | 21 | |

அனுப்புபவர் பெயர்:...........................................
பூரணமான தபால் விலாசம்: ...........................................
...........................................
கையொப்பம்:...........................................

### இடமிருந்து வலம்

1. ஒருவரின் போக்கு
4. வெட்டும் ஆயுதம்
6. நீரின்மையால் பயிர்களுக்கு நேர்வது
7. தண்ணீர் பொங்கி எழும்போது தோன்றுவது
8. கூடிக் குலாவி மகிழ்தல்
10. ஒரே மாதிரியான/ ஒரே அளவான
11. செல்வம்
12. சிந்தனை செய்
13. இரண்டாவது மேலதிகமான மனைவி
14. தாங்கிச் செல்லுதல்
16. ஒரு நட்சத்திரம்
17. மன அமைதி
19. ஏத்துதல்
20. ஓர் வாத்தியம்
21. உயர் அதிகாரியை இப்படியும் அழைப்பர்.

### மேலிருந்து கீழ்

1. இது நின்றால் உயிர் பிரிந்துவிடும்
2. தேவாரம்
3. உலக நாடுகள் மீது அமெரிக்கா செலுத்துவது
4. கடலின் எல்லையில் இருப்பது
5. திருமணமான பெண்ணுக்கான அடைமொழி
7. உமது
9. அருந்துதல்
10. பல தெருக்கள் கூடும் இடம்
12. உள்ளம்/மூளை/ எண்ணம்
13. செய்தி/புதினம்/ தகவல்
14. தங்களது
15. நாற்காலி போன்ற இருக்கை
17. எடை
18. போதை தருவது

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 373 இற்கான
சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)சுதந்திரம் (6) வாகு (7) கவி (8) தண்
(9)சதிபதி (11)கரடி (12) மாரி (13) முடவன்
(15) உன் (16) அருணன் (17) காடு (18) நாகம்
(19) சிலம்பு (21) தின் (22)வலம்புரி

### மேலிருந்து கீழ்

(1) சுவாசம் (2)தகுதி (3)திகதி (4) ரவி
(5) பண்டிதன் (8) தர (10) பட்டணம் (11)கரி
(12) மான் (13)முருகன் (14) வன் (15) உடும்பு
(16) அநாதி (17) காலம் (19) சில (20) புரி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.375
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிகேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(08.07.2015 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.375 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 12.07.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 373 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
இ.நிறோஜினி,
உடுத்துறை வடக்கு,
தாளையடி.

**2 ஆம் பரிசு**
ஆ.கதிர்காமலிங்கம்
இல. 99, அரசடி வீதி, புலோலி
வடக்கு,பருத்தித்துறை.

**3 ஆம் பரிசு**
அரியநேசன் சௌந்தர்யா
முருக மூர்த்தி கோவில் வீதி,
நவாலி கிழக்கு, மானிப்பாய்.

**4 ஆம் பரிசு**
அ.அருளரசி,
இல.758 வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
ஜெ.ஜொய் மிதுனன்
இல.38, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

வை.தனபாலசிங்கம்,
இல. 324, ஏ-9 வீதி
நுணாவில்மேற்கு,
சாவகச்சேரி.

ரூ.கிருஷ்ணபாலா,
இல. 406, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

இ.ராஜசந்திரன்,
கண்ணபுரம், நாவாந்துறை தெற்கு,
யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம் போட்டி 373இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
cmyk

(மூலம்: தி கார்டியன்)



> குழந்தை அப்படியே பிறக்கட்டுமா அல்லது கருவைக் கலைத்து விடலாமா சொல்லுங் கள் என்று மருத்துவமனையில் கேட் டார்கள். ஒரு நாள் முழுக்க முடிவுக்கு வர முடியாமல் தவித்த ஸ்டெபானி, கடவுள் ஏதோ ஒரு காரணத்துக்காக இந்த ஜீவனை எனக்குள் அனுப்பியிருக்கிறார்.

# மீண்டும் பிறப்பு

மனைவி ஸ்டெபானி, கைக் குழந்தை வயாத்தை ஆகியோரை அந்த மருத்துவமனையில் நடுநிசியில் விட்டுவிட்டு மனமில்லாமல் பிரிந்தார் ஆஸ்டின் பிளாகர்.

இந்தத் தம்பதிக்கு வயாத் மூன்றாவது குழந்தை. குழந்தையின் இதயத் தில் இடது பகுதி இல்லை என்பது வயிற் றிலிருந்த கருவை 'ஸ்கேன்' செய்த ஆறாவது மாதத்தில் தெரிந்தது.

பொதுவாக, இப்படிப் பிறக்கும் குழந்தைகளுக்கு வலி மறப்பு மருந்துகளைக் கொடுத்து, இயற்கை அதைத் தன்னுடன் சேர்த்துக் கொள்ளும்வரை பராமரிப்பார்கள். குழந்தை அப்படியே பிறக்கட்டுமா அல்லது கருவைக் கலைத்துவிடலாமா சொல்லுங்கள் என்று மருத்துவமனையில் கேட்டார்கள். ஒரு நாள் முழுக்க முடிவுக்கு வர முடியாமல் தவித்த ஸ்டெபானி, கடவுள் ஏதோ ஒரு காரணத்துக்காக இந்த ஜீவனை எனக்குள் அனுப்பியிருக்கிறார்.

அது பிறக்கட்டும், பார்த்துக்கொள்ளலாம் என்றார். மருத்துவர்களும் சரியென்று கரு நன்கு வளர சிகிச்சை அளித்தார்கள்.

குழந்தை பிறந்த 3ஆவது மாதத்தில் மருத்துவமனைக்கு வரச் சொல்லி, அதன் வலது 'வென்டிரிக்கிள்' வழியாகவே உடல் முழுவதற்கும் குருதி அனுப்பப்படும் வகையில் நார்வூட் அறுவைச் சிகிச்சையைச் செய்தனர். 2 மாதங்களுக்குப் பிறகு வயாத் மீண்டும் மருத்துவமனைக்குக் கொ[illegible]டு வரப்பட்டான். செயற்கை சுவ[illegible]க் கருவியைப் பொருத்திய ம[illegible]து வர்கள், நிறைய மருந்துகளை[illegible]ம் உட்செலுத்தினார்கள்.

அவனது உடல் எடை 10 பவுண்[illegible] இல்லை. இனி இதய அறுவைச்சிகி[illegible] மூலம் அவனைப் பிழைக்க வை[illegible]க முடியாது. புதிய இதயம்தான் வே[illegible]ண்டும் என்ற முடிவுக்கு வந்[illegible]ர். ஆனால், அதனாலும் பிரச்சினை[illegible]ள் தீர்ந்துவிடாது. புதிய இதயத்தை ஏற்காமல் உடல் மறுக்கவும் வாய்ப்பு உண்டு. குழந்தை பிறக்கட்டும் என்று முடிவு செய்த ஸ்டெபானி, அதன் பிறகு ஒவ்வொரு முறையும் ஏதாவதொரு கடினமான முடிவை எடுக்க வேண்டிய நிலைக்கு ஆளாகிக்கொண்டிருந்தார்.

இவ்வளவு சிறிய சிசுவுக்கு மாற்று இதயம் எப்படிக் கிடைக்கும், அதற்கான வாய்ப்புகள் என்ன என்று சிந்தித்ததில் வாய்ப்பு மிகமிகக் குறைவு என்பது புரிந்தது. இந்தக் குழந்தைக்கு இதயம் வேண்டும் என்றால், இன்னொரு குழந்தையின் வாயிலாகத் தான் சாத்தியம். அதுவும் இந்த மருத்து வமனை இருக்கும் இடத்திலிருந்து 1,000 மைல் தொலைவுக்குள் இருக்கும் குழந் தையின் இதயம் கிடைத்தால்தான், அதை அந்த உடலிலிருந்து அகற்றி 4 மணி நேரத்துக்குள் விமானத்தில் கொண்டுவந்து வயாத்துக்குப் பொருத்த முடியும். 4 மணி நேரம் கடந்துவிட்டால் அந்த இதயமும் செயலற்றுவிடும்.

வயாத் போன்ற குழந்தையின் குருதி வகை, உடல் நிலை, இதயக் கோளாறின் தன்மை, தேவைப்படும் இதயத்தில் இருக்க வேண்டிய அளவு, அம்சம் போன்ற அனைத்தும் கணினியில் பதிவுசெய்யப்பட்டிருப்பதால், விபத்து அல்லது வேறு வகையில் இதே வயதுக் குழந்தை இறந்தால் அதன் இதயம் இந்தக் குழந்தைக்குப் பொருந்துமா, பொருந்தாதா என்று சில நிமிடங்களில் தீர்மானித்துவிட முடியும். இதற்காக அமெரிக்கா முழுவதற்கும் பயன்படக்கூடிய தேசிய தகவல் இணைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது.

2 அல்லது 4 மாதங்கள் மாற்று இதயத்துக்காகக் காத்திருக்க வேண்டும் என்று மருத்துவர்கள் கூறினர்.

வழக்கமாக இந்தக் காலத்தில் பெற்றோர்கள் தங்களுடைய நம்பிக்கையையும் பொறுமையையும் ஒருசேர இழந்துவிடுகிறார்கள். அப்படிக் கிடைக்காவிட்டால் என்ன செய்வது? காலம் பூராவும் செயற்கை சுவாசக்கருவி உள்ளிட்ட சாதனங்களுடன் செயற்கையாகவே வாழவைப்பதா என்ற முடிவைப் பெற்றோர் எடுத்தாக வேண்டும்.

இந்த நிலையில்தான் மாற்று இதயத்தைப் பொருத்துவதற்காக மருத்துவமனையில் வயாத் சேர்க்கப்பட்டான். ஆஸ்டின் பிளாகர் மற்ற இரு குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள வீட்டில் தங்கிவிட்டார். மருத்துவமனையில் ஸ்டெபானி செய்வதற்கு ஏதுமில்லை. சிறிது நேரம் உட்கார்ந்து மகனுடன் பேசிக்கொண்டிருப்பார். அவனைத் தாங்கள் நேசிப்பதையும் அவன் நலமுடன் திரும்பப் போவதையும் கூறி. நம்பிக்கை ஊட்டிக்கொண்டிருப்பார். அவனுடைய உடல்நிலை எப்படி இருக்கிறது என்று தினசரி குறிப்புகள் எழுதிவைப்பார். பூரண சுகம்பெற ஜெபமாலை உருட்டி பிரார்த்தனைகள் செய்வார். இப்படியே தான் நாள்கள் கழிந்துகொண்டிருந்தன.

ஒரு நாள் ஸ்டெப்பானியிடம் அந்த நல்ல செய்தியை மருந்துவர்கள் சொன்னார்கள். ஆம், வயாத்துக்கு ஒரு மாற்று இதயம் கிடைக்கப்போகிறது. சிரிக்கக்கூட முடியாமல் அழுதார் ஸ்டெபானி. எங்கிருந்தோ ஹெலிக்கொப்டரில் வந்தது அந்த இதயம். மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவமனைப் பணியாளர்கள், விமானப் போக்குவரத்துத் துறையினர், காவல் துறை, விமான நிலையக் கட்டுப்பாட்டு அறை ஊழியர்கள் என்று எவ்வளவோ பேரின் உதவி, ஒத்துழைப்பின் விளைவாக அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. மாற்று இதயம் பெற்று வயாத் சுவாசிக்கத் தொடங்கினான். அன்றலர்ந்த ரோஜாபோல இருந்த அவனை ஸ்டெபானி இரு வாரங்களுக்குப் பின் தூக்கிக்கொண்டு வீடு திரும்பினார்.

எனினும், கதை இத்துடன் முடியவில்லை. குழந்தைகளுக்குப் பொருத்தப்படும் மாற்று இதயம் அதிகபட்சம் 20 ஆண்டுகளுக்குத்தான் வேலை செய்யும். அதற்குப் பிறகு வளர்ந்த மனிதர்களின் இதயம் பொருத்தப்பட வேண்டும்.

இது அடுத்து, வயாத் எதிர்கொள்ளவிருக்கும் பெரிய சவால். அதற்குள் இன்னும் நிறைய சவால்கள் இருக்கின்றன. அவனுடைய உடல்நிலையை ஒவ்வொரு நாளும் ஸ்டெபானி தம்பதி கவனிக்க வேண்டும். மருத்துவர்கள் சொல்படி ஒவ்வொரு நாளையும் அவன் நகர்த்த வேண்டும். என்றாலும் இதெல்லாம் சாத்தியம் தான். அன்பே உருவான ஒரு பெற்றோர் அவனுக்கு இருக்கின்றனர்.

உலகில் தங்கள் உயிருக்கு இணையானவர்கள் இறப்பை நெருங்கினாலும், ஏதேனும் ஒருவகையில் அவர்கள் இந்த பூமியில் வாழ வழி வகை செய்யும், இன்னொரு உயிருக்கு வாழ்வளிக்கும் பெருந்தன்மையாளர்கள் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள். உலகை அன்பு ஆளும்போது வயாத்துகள், ஸ்டெபானிகள் நீண்ட காலம் கண்ணீர்விட வேண்டியதில்லை!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மேட்டு நிலத்து ஊற்று

தொடர்கதை

தேவி பரமலிங்கம்

பாமா, சங்கீதப் பாடத்துக்கு போயிருந்தாள்! கந்தையர் வேலை முடிந்து வந்திருந்த சற்று வேளைக்குள் கல்பொத்தைச் சந்தியில் சுருட்டுக் கடை வைத்திருக்கும் பொன்னம்பலம் வந்திருந்தார்.

பொன்னம்பலத்துக்கு கந்தையர் குடும்பத்தைத் தெரிந்திருந்தது. வீட்டுக்குத் தேவையான பொருள்களைக் கந்தையர் அவரது கடையில் வாங்குவதாலும், இருவருக்கும் பரிச்சயம் இருந்தது.

பொன்னம்பலம் இதுவரையில் கந்தையரைத் தேடி வீட்டுக்கு வந்ததில்லை. கடையில் நிலுவை இருந்தாலும் அவர் அப்படி வீட்டுக்குப் போனது கிடையாது.

பொன்னம்பலம் தேடிவரும் அளவுக்கு கந்தையர் வைத்துக் கொள்வதும் இல்லை. மாதா மாதம் சம்பளம் எடுத்ததும் முதல் வேலையாய் கடைக்காரருக்கு நிலுவையைச் செலுத்தி விடும் வழக்கம் உடையவர் கந்தையர்.

அதனால் அவர் தேடி வந்திருப்பது வேறேதும் விடயமாகத்தான் இருக்குமென எண்ணிக் கொண்டார். ஏனெனில் நாணயஸ்தனாக ஏனையோர் கருத வேண்டும் என்பதற்காக வளைந்து கொடுத்து வாழ்ந்து வருபவர் அவர். அப்படி ஏதும் நிகழ்ந்து விடக்கூடாதென நடைமுறைகளை அமைத்து வாழ்பவர்.

கடைக்காரர் பொன்னம்பலம் தேடி வந்துள்ளதால் சகலதையும் ஞாபகப் படுத்திக் கொண்டார் கந்தையர்.

"என்ன முதலாளி... இங்கால் பக்கம்...?"

மனதில் வெறுப்பு இருந்தாலும், வெளியாகச் சிரித்தவாறே பொன்னம்பலத்தாரை வரவேற்றார் கந்தையர். அதற்குக் காரணம் தெருவில் எவராவது பொன்னம்பலம் கந்தையர் வீட்டுள் நுழைவதைக் கண்டிருந்தால் அவருக்கு கொடுக்குமதி இருப்பதாக கருதிக் கொள்வரல்லவா?

சரளமாய் வந்து போறவரெண்டால் சங்கடம் எதுவும் இருந்திராது. இன்றைக்குத்தானே பொன்னம்பலம் கந்தையர் வீட்டுக்கும் போயிருக்கிறார். கொடுக்குமதி இல்லாவிட்டாலும் காண்பவர் கொடுக்குமதி இருக்கெண்டே நினைக்கக்கூடும். அதனால் அவரது வருகை வெறுப்பையும் விதைத்து இருந்தது.

"அம்மான் உம்மட்டை ஒரு அலுவலா வந்தனான்..."

பொன்னம்பலத்தின் கோலம் அவரிடம் ஏதோ எதிர்பார்த்து வந்திருப்பதாகக் கந்தையருக்குப்பட்டது. பெடியனுக்கு வேலை றைபண்ணுற அலுவலா இருக்குமோ எண்டும் நினைத்துக் கொண்டார்.

"அப்புடியா...! வாரும் ..! வாரும்..! இப்புடி இரும்..!"

"உனக்கேன் அந்த நாயோடை கதை? நாங்க முதல்ல புளை விட்டிட்டம். தெரிஞ்சதும் அனுப்பி விட்டிட்டமே..! பின்னுமேன் கதைச்சுக் கொண்டு றோட்டில வாற.... இனிமேல் அவனோடை எந்தக் கதையும் வைச்சுக் கொள்ளக்கூடாது." அறுத்துறுத்துக் கூறினார் கந்தையர். "அது மட்டும் என்னால முடியாதப்பா..." தைரியத்தை மனதில் வரவழைத்து பாமா சொன்னாள். "என்ன சொன்னாய்..? எதிர்த்துக் கதைக்கவும் துணிஞ்சிட்டியா... போதும் சங்கீதம் எல்லாம். ஒண்டும் வேண்டாம் நாளேல இருந்து. வீட்டை விட்டு வெளிக்கிடக்கூடாது...."

அழைத்துக் கதிரையில் இருத்தியவர் தானும் இருந்தார்.

"சொல்லுங்க..! என்ன விசயம்..?"

பொன்னம்பலத்தைத் தூண்டி விட்டு நிலவிய மௌனத்தைக் கலைத்தார் கந்தையர்.

"ஒண்டுமில்லை... சொல்லுறதையிட்டு குறைவிளங்கிக் கொள்ளக்கூடாது. ஏனெண்டா உங்களில அக்கறையாலதான் இதைச் சொல்ல வேணுமெண்டும் வந்தன்..."

சொல்வதற்கு ஆலாவர்ணம் செய்தார் பொன்னம்பலம். அதைக் கேட்டுக் கொண்டிருந்த கந்தையருக்கு என்னென்று அறியும் ஆவல் பிறந்தது.

"இல்லை... இல்லை... ! நீர் சொல்லும்..!"

பொன்னம்பலத்தைத் தட்டிக்கொடுத்தார். அனுசரணையைப் பயன்படுத்திச் சொல்ல வந்த விசயத்தைக் காதில் போட்டுவிட ஆர்வம் காட்டினார் பொன்னம்பலம்.

"உங்கட மகளெல்லோ எங்கட றோட்டால போய்வாறது?" கந்தையரிடம் பொன்னம்பலம் விசாரித்தார். விசாலாட்சி பேச்சுக்களை கவனித்துக் கொண்டே கதவு நிலையுடன் சாய்ந்து நின்றாள்.

"ஓமோம்! சங்கீதம் படிக்கப் போறவ..." ஆமோதித்தார் கந்தையர்.

"நானும் கவனிக்கிறன்... பெட்டை ஆரம்ப நாள்ள இப்புடி இல்ல... இப்ப..." நிதானமாகப் பொன்னம்பலம் சொல்லி வந்தார்.

"என்னது? சொல்லும்.... சொல்லும்..." துரிதப்படுத்திய கந்தையர், கேட்டமட்டிலும் துடித்துப் போயிருந்தார். கூடவே நின்றிருக்கும் விசாலாட்சிக்கு அடித்துக் கொண்டது.

"வேறை ஒண்டுமில்லை... ஒரு பெடியனோடை நல்லா சிரிச்சுக் கதைச்சுக் கொண்டே வாறா... ஏன் சொல்றனெண்டால் நீங்க எனக்குத் தெரிஞ்சனீங்க... கண்டதைச் சொன்னாத்தானே... புள்ளையளைத் திருத்த முடியும்...."

பொன்னம்பலம் சொல்லிக்கொண்டிருந்தார். கேட்டிருந்த கந்தையரும் விசாலாட்சியும் அதிர்ந்தே போயினர்.

"ஓமோம்! அதுசரி முதலாளி, பொடியன் என்ன மாதிரி இருப்பான்..? அடையாளங்களேதும்..?" கந்தையர் பொன்னம்பலத்திடம் கேட்டார். ஒரு டம்பிளரில் விசாலாட்சி தேநீர் கொணர்ந்து அவரிடம் கொடுத்தாள்.

"சிவலைப் பொடியன். யாழ்ப்பாணப் பொடியன் போலதான் விளங்குது. ஓ..." தேநீரை வாங்கிய பொன்னம்பலம் அடையாளம் கூறிப்படம் பிடித்துக் காட்டினார்.

"சொல்றதைப் பார்த்தால் கணேசனாத்தான் இருக்க வேணும்..." சந்தேகத்தை உறுதிப் படுத்தினார் கந்தையர்.

வகுப்பு முடிந்து வந்த பாமாவும் அப்பொழுது விறாந்தையில் நுழைந்து வீட்டினுள்ளே போனாள். கடைக்காரர் பொன்னம்பலமும் காரியம் முடிந்து விடைபெற்றுச் சென்றார்.

அறையுள் நுழைந்து உடைகளை மாற்றிக் கொண்டு நின்ற பாமாவின் நினைவில் விறாந்தையில் கதைத்துக் கொண்டிருந்த கடைக்காரருடைய உருவம் விழுந்தது. கணேசனுடன் வருகையில் உற்றுக் கவனிப்பதைக் கண்டுள்ளாள்.

அவர் எங்கட வீட்டை வரக்காரணம் என்னவாக இருக்கும்? அவளுக்கு நெஞ்சு திக்கெண்டது. எங்களைப் பற்றிச் சொல்லவே வந்திருக்க வேண்டும். பொன்னம்பலம் இருவரையும் முழி பிதுங்க வெறித்து பார்ப்பது ஞாபகத்தில் தோன்றிக் கிலியை ஊட்டியது.

"பிள்ளை பாமா...! இங்கால வா ஒரு அலுவல்..."

கந்தையர் நடு அறையில் இருந்து பாமாவை அழைத்தது, ஆடைகளை மாற்றிவிட்டு நின்ற அவளது செவிப்பறைகளில் கணீரென்று ஒலித்தது.

"என்னப்பா..?" உணர்ச்சிகளை வலிந்து மறைத்தவளாய் சுறுசுறுப்பைக்காட்டி கேட்டவாறே நடு அறைக்கு வந்தாள் பாமா.

"எனக்கு ஒளிக்காமல் சொல்லவேணும்! ஆரோடை நெடுகக் கதைச்சுக் கொண்டு வாறியாம்! ஆரது... ஆ... கணேசன் தானே...!"

எடுத்த எடுப்பிலே கந்தையர் இப்பிடிக் கேட்டபோது, அவளால் சுற்றிவளைத்துக் கதைக்கேலாமல் போய்விட்டது. அந்தப்படியே சொல்லிப் போயிருக்கிறான் கடைக்காரன், மனதுள் பொன்னம்பலத்தை நினைத்து எரிந்தாள். "ஓமப்பா..." சில வினாடிகள் யோசித்து உண்மையை ஒப்புக் கொண்டாள் பாமா.

"உனக்கேன் அந்த நாயோடை கதை? நாங்க முதல்ல புளை விட்டிட்டம். தெரிஞ்சதும் அனுப்பி விட்டிட்டமே..! பின்னுமேன் கதைச்சுக் கொண்டு றோட்டில வாற.... இனிமேல் அவனோடை எந்தக் கதையும் வைச்சுக் கொள்ளக்கூடாது." அறுத்துறுத்துக் கூறினார் கந்தையர்.

"அது மட்டும் என்னால முடியாதப்பா..." தைரியத்தை மனதில் வரவழைத்து பாமா சொன்னாள்.

"என்ன சொன்னாய்..? எதிர்த்துக் கதைக்கவும் துணிஞ்சிட்டியா... போதும் சங்கீதம் எல்லாம். ஒண்டும் வேண்டாம் நாளேல இருந்து. வீட்டை விட்டு வெளிக்கிடக்கூடாது..."

இரைந்த கந்தையர், பாமாவின் மிருதுவான கன்னங்களில் மாறி மாறி அறைந்தார். அத்தோடு படுக்கையில் வீழ்ந்தவள் குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தாள். சன்னதம் அடைந்த கந்தையர் நடு அறையில் அரற்றிக் கொண்டு நீண்ட நேரமாக நின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழங்கை கருமையை போக்க...



பெண்கள் உடலை அழகாக வைத்துக் கொள்ள அழகு நிலையங்களுக்கு செல்வார்கள். ஆனால் முகம், கை, கால் போன்றவற்றுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை முழங்கைகளுக்கு கொடுப்பதில்லை. சிலருக்கு முகம், கை, கால்கள் நிறமாக இருக்கும். ஆனால் முழங்கை கறுப்பாக இருக்கும். அதற்கு காரணம் அவர்கள் அந்த இடத்துக்கு முறையான பராமரிப்பு தருவதில்லை. இத்தகைய கறுப்பை நீக்க சில வழிகள்:

ஒரு கரண்டி மஞ்சள் தூளுடன் மூன்று கறிவேப்பிலையை சேர்த்து அரைத்து தண்ணீர் விட்டு பேஸ்ட் செய்து, முழங்கையில் தடவி 30 நிமிடம் ஊற வைக்கவும். பின்னர் வெதுவெதுப்பான நீரால் அதனை துடைத்து எடுத்து விடவேண்டும். இதனை தினமும் குளிப்பதற்கு முன்னர்; செய்தால் கருமை நீங்கி விடும்.

100 கிராம் துளசி இலையைப் பொடி செய்து, அத்துடன் 1 கரண்டி; வேப்பெண்ணெய், 1 கரண்டி; ரோஸ் வாட்டர் மற்றும் அரைத்த புதினா இலை சேர்த்து பேஸ்ட் செய்து, முழங்கையில் தடவி 20 நிமிடம் ஊற வைத்த பின்னர் வெதுவெதுப்பான நீரில் கழுவவும்.

தினமும் கடுகு எண்ணெய் வைத்து 15 நிமிடம் முழங்கையில் மசாஜ் செய்த பிறகு கழுவி விடவும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால் அந்த இடத்தில் உள்ள அழுக்கானது படிப்படியாக போய்விடும்.

தேங்காய் எண்ணெயுடன் சிறிது தேனை விட்டு, எலுமிச்சை தோல் வைத்து முழங்கையில் 20 நிமிடம் மசாஜ் செய்து, பின் பஞ்சினால் துடைத்து எடுக்கவும். இதனால் அந்த இடத்தில் இருக்கும் அழுக்குகள் நீங்கி விடும்.

மேற்கூறிய அனைத்தையும் முழங்கைக்கு மட்டும் பயன்படுத்தாமல், கழுத்து, கணுக்கால் போன்ற இடங்களிலும் பயன்படுத்தலாம்.

# கருவளையம் இருக்கிறதா? கவலையை விடுங்க



கண்கள்தான் நமது உடலில் ஜன்னல்கள். ஆனால் அந்தக் கண்களின் அழகைக் கெடுக்கும் விதமாக ஆண், பெண் பேதமின்றி பலருக்கும் கருவளையப் பிரச்சினை உள்ளது. வேலைப்பளு, மன அழுத்தம் என இதற்கான காரணங்கள் விரிந்தாலும், இதை சரிசெய்துகொள்ளக் கூடிய வழிகள் இருக்கின்றன.

இரவு உறங்குவதற்கு முன்பாக பஞ்சை ரோஸ் வாட்டரில் நனைத்து மூடிய இமைகளின் மீது 10 முதல் 15 நிமிடங்கள் வைக்கலாம்.

எலுமிச்சை மற்றும் தக்காளிச் சாற்றை சம அளவு எடுத்துக் கலந்து, இரவு உறங்குவதற்கு முன்பு சிறிது நேரம் கருவளையங்களில் பூசி, கழுவிவிட்டுத் தூங்குங்கள்.

உருளைக்கிழங்கை அரைத்து சாறெடுத்து, பஞ்சில் நனைத்து, கண்களைச் சுற்றித் தடவி 10 நிமிடங்கள் ஊற வைத்து, பின்னர் குளிர்ந்த நீரில் கழுவலாம்.

சிறிது புதினா இலையை பேஸ்ட் செய்து, கண்களைச் சுற்றி தடவ, களைப்பு நீங்கி, கண்கள் புத்துணர்ச்சி பெறும்.

வெள்ளரிக்காய் சாறில் பஞ்சை தோய்த்து கருவளையங்களின் மேல் வைக்கலாம். வெள்ளரிச் சாறும் உருளைக்கிழங்கு சாறும் கலந்து பஞ்சைத் தோய்த்து மூடிய இமைகளின் மேல் வைக்கலாம். வெள்ளரிக்காயை மெல்லிசாக வட்ட வட்டமாக வெட்டி மூடிய இமைகளின் மேல் வைக்கலாம்.

# கடலை மா பேஷியல்

ஒரு கிண்ணத்தில் 2கரண்டி கடலைமாவை எடுத்துக் கொண்டு ஒரு சிட்டிகை மஞ்சள்தூள் சேர்த்து கலக்கவும். சிறிதளவு தண்ணீர் ஊற்றி கலந்து முகத்தில் பூசி அரைமணி நேரம் கழித்து வெது வெதுப்பான நீரில் முகம் கழுகி வந்தால் சருமம் மென்மையாகும்.

இரண்டு ஸ்பூன் கடலை மாவில் சிறிதளவு தண்ணீர் விட்டு கெட்டியாக பிசைந்து கொள்ளவும். பின்னர் முகத்தில் நன்றாக தடவி ஊறவிடவும். நன்றாக உலர்ந்த பின்னர் குளிர்ந்த நீரில் முகம் கழுவினால் பளிச் என்று இருக்கும். அதேபோல் குளிக்கும் போது கடலைமாவைப் பூசிக் குளித்தால் சருமம் வழுவழுப்பாகும். சுருக்கமின்றி இளமையோடு காட்சியளிக்கலாம்.

இரண்டு கரண்டி கடலைமாவுடன், 4 கரண்டி பால், 2 கரண்டி ரோஸ் வாட்டர் சேர்த்து கலக்கவும். பின்னர் கலவையை நன்றாக முகத்தில் பூசவும். பத்து நிமிடம் கழித்து இதனை குளிர்ந்த நீரில் கழுவ சருமம் மென்மையாகும் இளமையோடு காட்சி தரும்.

சருமம் எண்ணெய் வழிந்து பிசுபிசுப்பாக இருந்தால் அதற்கு கடலைமாவுடன் தயிர் சேர்த்து பேஷியல் போடுவது முகத்தை பொலிவாக்கும். ஒரு கிண்ணத்தில் கடலைமாவு எடுத்து அதில் தயிர், எலுமிச்சை சாறு ஊற்றி நன்றாக கலந்து முகத்தில் அப்ளை செய்யவும். சில நிமிடங்கள் ஊறவைத்து வெதுவெதுப்பான நீரில் கழுவவும். இதனால் எண்ணெய் பசை நீங்கி முகம் பொழிவுபெறும்.





# வாழைக்காய் சிப்ஸ்



## செய்முறை:

வாழைக்காயை மெல்லிய கீறுகளாக வெட்டவும். பின்னர் அடுப்பில் சட்டியை வைத்து, எண்ணெய் ஊற்றி, காய்ந்ததும் வெட்டிய வாழைக்காயை நேரடியாக சட்டியில் போட்டு பொரிக்கவும். ஒரு கப்பில் மஞ்சள்தூள், உப்பு, மிளகாய்த்தூள், பெருங்காயத்தூள் ஆகியவற்றை சேர்த்துக் கலக்கி வைக்கவும் (விருப்பப்பட்டால் சிறிதளவு கறுப்பு உப்பு, சாட் மசாலாவை சேர்க்கலாம்). ஒவ்வொரு முறை சிப்ஸ் பொரித்தெடுக்கும் போதும் இந்தப் பொடியை தூவவும். கடைசியாக கறிவேப்பிலை வறுத்துப் போட்டு பரிமாறவும்.

## தேவையானவை

வாழைக்காய் – 2
(தோல் சீவி வைக்கவும்)
மஞ்சள்தூள் – சிறிதளவு
மிளகாய்த்தூள் – ஒரு கரண்டி
பெருங்காயத்தூள்– சிறிதளவு
கறிவேப்பிலை – சிறிதளவு
எண்ணெய், உப்பு –
தேவையான அளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயக் குதிரை






கிருஷ்ண தேவராயரின் படைகளுள் குதிரைப் படையும் ஒன்று. குதிரைப்படையும் வலிமையுள்ளதாக இருந்தது. சண்டை இல்லாத காலங்களில் குதிரைகளைப் பராமரிக்க மந்திரிகளில் ஒருவர் ஒரு யோசனை சொன்னர். அதாவது ஒரு வீட்டுக்கு ஒரு குதிரையையும் அதற்குத் தீனி போடுவதற்கு ஒரு குறிப்பிட்ட தொகையும் கொடுக்கப்பட்டு வந்தது. அந்தத் தொகையைப் பெற்றுக்கொண்டு குதிரையை நன்கு உணவளித்து வளர்த்தனர். அதே போன்று தெனாலிராமனுக்கும் ஒரு குதிரை கொடுக்கப்பட்டது. ஆனால் தெனாலிராமனோ ஒரு சிறிய கொட்டகையில் குதிரையை அடைத்து வைத்து புல் போடுவதற்கு மட்டுமே ஒரு சிறிய தூவாரம் வைத்திருந்தான். அந்த துவாரத்தின் வழியாக புல்லை நீட்டியவுடன் குதிரை வெடுக்கென வாயால் கௌவிக் கொள்ளும். மிகவும் சிறிதளவு புல் மட்டுமே தினமும் போட்டு வந்தான். அதனால் அந்தக் குதிரை எலும்பும்



தோலுமாக நோஞ்சானாக இருந்தது.
குதிரைக்குத் தீனி வாங்கிப்போடும் பணத்தில் தெனாலிராமன் நன்கு உண்டு கொழுத்தான். ஒரு நாள் குதிரைகள் எப்படி இருக்கின்றன என்று காண அனைவருக்கும் செய்தி அனுப்பி குதிரைகளை அரண்மனைக்கு கொண்டு வர அழைப்பு விடுத்தார் மன்னர். அதன்படி குதிரைகள் அனைத்தும் அரண்மனைக்குக் கொண்டு வரப்பட்டன. மன்னர் குதிரைகளைப் பார் வையிட்டார். குதிரைகள் அனைத்தும் மிக திருப்தி கரமாக இருந்ததால் மன்னர் மகிழ்ச்சியடைந்தார்.
அங்கிருந்த தெனாலிராமனை அழைத்து உனது குதிரையை ஏன் கொண்டு வரவில்லை என மன்னர் கேட்டார். அதற்கு தெனாலிராமனோ எனது குதிரை மிகவும் முரட்டுத்தனமாக இருக்கிறது. அதை என்னால் அடக்க முடியவில்லை. அதனால் தான் இங்கே கொண்டு வரவில்லை–என்றான். குதி ரைப் படைத் தலைவரை என்னுடன் அனுப்புங்கள். அவரிடம் கொடுத்தனுப்புகிறேன் என்றான். இதை உண்மையென்று நம்பிய மன்னர் குதிரைப் படைத் தலைவனை தெனாலிராமனுடன் அனுப்பினார்.
குதிரைப்படைத்தலைவருக்கு நீண்ட தாடியுண்டு குதிரைப் படைத்தலைவரும் அந்த துவாரத்தின் வழியாக குதிரையை எட்டிப் பார்த்தார். உடனே குதிரை அது புல்தான் என்று நினைத்து அவரது தாடியைக் கவ்விப் பிடித்துக் கொண்டது. வலி பொறுக்கமாட்டாத குதிரைப் படைத்தலைவர் எவ்வளவோ முயன்றும் தாடியை குதிரையிடமிருந்து விடுவிக்க முடியவில்லை. இந்தச் செய்தி மன்னருக்கு எட்டியது. மன்னரும் உண்மையிலேயே இது முரட்டுக் குதிரையாகத் தான் இருக்கும் என்று எண்ணி தெனாலிராமன் வீட்டுக்கு விரைந்தார். அங்கு குதிரையின் வாயில் குதிரைப் படைத் தலைவரின் தாடி சிக்கி இருப்பதை அறிந்து அந்தக் கொட்டகையைப் பிரிக்கச் செய்தார். பின்னர் குதிரையைப் பார்த்தால் குதிரை எலும்பும், தோலுமாக நிற்பதற்குக் கூட சக்தியற்று இருந்ததைக் கண்டு மன்னர் கோபங் கொண்டு அதன் காரணத்தைத் தெனாலிராமனிடம் கேட்டார். அதற்குத் தெனாலிராமன் இவ்வாறு சக்தியற்று இருக்கும் போதே குதிரைப் படைத் தலைவரின் தாடியை கவ்விக்கொண்டு விடமாட்டேன் என்கிறது. நன்கு உணவு ஊட்டி வளர்த்திருந்தால் குதிரைப் படைத் தலைவரின் கதி அதோகதிதான் ஆகி இருக்கும் என்றான்.
இதைக் கேட்ட மன்னன் கோபத்திலும் சிரித்து விட்டார். பின்னர் தெனாலிராமனை மன்னித்து விட்டார் அரசர்.

## தொந்தி மாமா

*தொந்தி மாமா*
*வந்தாராம்*
*தொப்பியைக்*
*கழட்டிப் போட்டாராம்*
*சாக்குப் பையை*
*எடுத்தாராம்*
*சந்தைக் கடைக்குப்*
*போனாராம்*
*சறுக்கிக் கீழே*
*விழுந்தாராம்*
*பார்த்தோரெல்லாம்*
*சிரித்தாராம்*
*சீனி மிட்டாய்*
*வாங்கினாராம்*
*சிரித்தோர்க்கெல்லாம்*
*கொடுத்தாராம்.*




## கலிலியோ கலிலி

கலிலியோ வானவியல் அறிஞர், வேதியியல் வல்லுநர், கணிதவியலாளர், தத்துவஞானி, கண்டுபிடிப்பாளர் என பன்முக ஆற்றல் பெற்றவர். தொலைநோக்கி, கொம்பாஸ், தெர்மாமீற்றர் ஆகியவை இவரது கண்டுபிடிப்புகளில் முக்கியமானவை. இயற்பியலின் தந்தை, நவீன அறிவியலின் தந்தை, நவீன வானியலின் தந்தை என்றெல்லாம் அழைக்கப்படுகிறார். நவீன விஞ்ஞானத்தை உருவாக்கியதில் அவரது பங்கு மகத்தானது. வானவியல், இயற்பியல் மற்றும் கணிதவியலில் அவரது கண்டுபிடிப்புக்கள். ஒரு அறிவியல் புரட்சியையே அவர் ஏற்படுத்தியிருந்தார்.



[illegible]
கொக்குவில் இந்துக்
கல்லூரி



ந.யோகப்பிரியா,
சென்பெனடிற்
வித்தியாலயம்





கி.முகுந்தனா
புற்றளை மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தீவிரவாத ஒழிப்பின் பின்னரான நடவடிக்கைகள்

சி. யக்ஞன்

வடக்கில் மதுபாவனை அதிகரிப்பு, வாள்வெட்டு, கொலை, களவு, கற்பழிப்பு, போதைப்பொருள் பாவனை என்பன மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக அமைவது போல் தோன்றுகின்றது. இவை யாவும் திட்டமிட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட வழிகாட்டலில் நடைபெறும் சமூகப் பிறழ்வுகளாகும்.

தீவிரவாதத்துக்குப் பின்பான சமூகத்தின் வன்முறைகள் மூன்று மட்டங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப நிலையில் கட்டுப்பாடற்ற வன்முறைகளின் தொடக்கமாக சமூகச் சீர்குலைவுகள் பரிணமிக்கும். இதில் பியர், சாராயம், கசிப்பு போதைப் பாக்கு, போதைப்பொருள் என்பனவற்றின் பயன்பாடுகள் காணப்படும். இவை யாவும் திட்டமிட்ட அதிகார மைய பயங்கரவாத நடவடிக்கைகள் ஆகும்.

அடுத்து இணையப்பாவனை, தொலைபேசிப்பாவனை, பாலியல் சீர்கேடுகள். இவையும் தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்தப் பிரயோகிக்கப்படும் ஆயுதங்களாகும். இவையே வடபகுதியில் சமூகச்சீர்கேடுகள் உருவாகவும், அதிகரிக்கவும் காரணமாக அமைந்தன. இவை 2009ஆம் ஆண்டிலிருந்து 2013ஆம் ஆண்டு வரையான காலத்தில் நிகழ்ந்தன.

2014–2015ஆம் ஆண்டுகள் தமிழ்ச் சமூகம் தனது கட்டுப்பாட்டை வன்முறைக்குள் இழந்த காலமாகின. இதன் பின் 2015இல் பாதுகாப்புப் படைகளும், நீதிச்சேவைகளும் தமது கட்டுப்பாட்டில் சமூகத்தை எடுத்துள்ளன. இது அரச பயங்கரவாதத்தை அரசு கட்டுப்படுத்தும் பொறிமுறையாகும். அதாவது இறால் வளர்த்து அறுவடை செய்யும் முறைமையாகும். இதனால் தீவிரவாதம் உருவாகாது கட்டுப்படுத்தப்படுவதுடன், அரச நிர்வாகப் பொறிமுறைக்கு மக்களதும், ஊடகங்களினதும், சர்வதேசத்தினதும் ஆதரவு கிடைக்கும்.

இத்தகைய கருத்துக்கள் பத்திரிகை ஒன்றின் பத்தி எழுத்துக்களிலும், ஆசிரிய தலையங்கத்திலும் வலம்புரிவதையும் காணலாம்.

அடுத்து ஒரு மருத்துவர் வல்லை வெளியில் பாதுகாப்பு காவலரண் அமைக்க வேண்டுமென்று கூறியுள் ளார். இவை யாவும் அதிகாரமையப் பயங்கரவாதத்தின் மறைமுக நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான கைங்கரியங்களே ஆகும்.

தீவிரவாதத்தை அழித்த பின், அதன் மீள் எழுச்சியைத் தடுக்க, சமூகத்தின் நுண்ணிலை அலகான கிராமங்கள் அல்லது ஊர்கள் மீள்எழுச்சி அடைவதைத் தடுத்தலும் அதிகார மையப் பயங்கரவாதத்தின் ஓர் இலக்காகும். இதனாலே மீள்குடியமர்வுகளை முற்றாகச் செய்யாமல் இழுத்தடிக்கிறார்கள்.

தமிழ் மக்களை மட்டுமல்ல, தமிழ்ப் கிராமங்களையும் பயங்கரவாதிகளாகவே கருதுகின்றார்கள் என்பது வெளிப்படை. அதனாலேயே உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மயிலிட்டி முதல் சம்பூர் வரை தமிழ்க் கிராமங்களும் பயங்கரவாதிகள் போல் சிறைப்பிடித்து வைக்கப்பட்டுள்ளன.



உலகெங்கும் உள்ள நாடுகளில் தமிழன் அகதி. ஆனால் அவன் தாயகத்தில் தமிழ் ஊர்கள் சிறைவைப்பு.

உரிமைகளுக்கான மீள் எழுச்சியைத் தடுப்பதற்கு கிராமத்தின் பாரம்பரியக் கட்டமைப்பைச் சிதைக்க வேண்டும். அதிகார மைய பயங்கரவாதம் அதனை நோக்கியே நகர்கிறது. வடக்கின் அசாதாரண நிலைகளை நாம் இந்தப் பின்னணியிலேயே நோக்கவேண்டும். வடக்கின் இதயமான வலிகாமத்தில் நிலத்தடி நீருக்குள் கழிவு எண்ணெய்யைச் செலுத்தியமையும், சமூகச் சிதைப்புக்கும் ஓர் அடையாளத்தை அழிப்பதற்குமான நடவடிக்கையாகும்.

தீவிரவாத ஒழிப்பிற்கு பின்பான அரசியலைக் கட்டுப்படுத்த பெருமளவு கறுப்புப்பணம் வாரி வழங்கப்படுகிறது. கீழ்நிலை உணர்ச்சி அரசியலுடன் மக்களை ஏமாற்றும் அரசியலை, வழமையான அரசியல் கட்சிகள் நடத்துகின்றன. இதுவே அதிகார மைய பயங்கரவாதம் வெற்றிகர மாகத் தனது செயற்பாடுகளை முன்னெ டுப்பதற்கான ஏது நிலையை வழங்கு கின்றது.

இன்றுள்ள அரசியல்வாதிகள் சமூக வன்முறைகள், சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் தேர்தலைப் பெருமளவு பாதிக்காதவாறு புலிகளை மீள நினைவுபடுத்தி பரப்புரை செய்து, பின் வழமையான தமது சுயநல அரசியலைச் செய்வர்.

தீவிரவாதத்துக்குப் பின்பான இன அடக்குமுறை என்பது ஒரு நவீன செயற்பாடாகும். இதற்கு சர்வதேசத்தின் ஆதரவு முழுமையாக உண்டு. இதற்குச் சர்வதேசம் சூட்டும் பெயர் நல்லிணக்கம் என்பதாகும். ஆனால் இது உண்மையில் எதிர்மறைச் சமாதானத்திற்கான பயங்கர வாதமாகும். இலங்கையில் நிகழ்ந்த இன அழிப்பிற்காக 2009ஆம் ஆண்டில் இலங்கை அரசினைப் பாராட்டிய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை தொடர்ந்தும் காலத்தைக் கடத்துவது போல் செயற்படு கின்றது. இது பயங்கரவாத செயல்கள் மூலம் தீவிரவாதத்தைச் செயல் இழக்கச் செய்யும் இலங்கை அரசின் நடவடிக்கைகளுக்கான ஒத்துழைப்பே ஆகும். சமாதானம், நல்லிணக்கம் என்ற சொல்லாடல்கள் சர்வதேசத்தினால் அரச அனுசரணையிலான சிறுபான்மைச் சமூகத்தின் மீதான இன ஒடுக்கல்களுக்குப் பயன்படுகின்றது. இங்கு இன ஒடுக்கல் செயல்கள் உருமறைக்கப்பட்ட அதிகார மையப் பயங்கரவாதமாக மேற்கொள் ளப்படுகின்றது.




கரம் குவிக்கிறோம்
கர்த்தாவே சரணம்

அடிமைத் தளையில்
அல்லாடும் மக்கள்.
விடியல் காலத்தை
விடுவிப்பாய் யேசுவே!

கொடுமை கண்டு
கொதித்தெழும் மக்கள்!
கடுமை வாழ்வு
கர்த்தருக்கே அர்ப்பணம்

சுடும் வாழ்வுகூட
சுகமாய் தெரிகிறது!
[illegible]
பரிசுத்தர் பாதம்
வைத்ததால்

ஆட்சியைத்
தக்கவைப்பதில்
அரசு கவனம்!
மாட்சிமை யேசுவே
மக்களைக் காரும்

ஆயுத கரங்கள்
அலைகின்றன
நாயாய்!
மாயும் வாழ்வு
மனுமகனுக்கே
அர்ப்பணம்

கொடுப்பதை ஏற்றால்
சிறந்தவர் தமிழர்!
தடுத்துக் கேட்டதால்
தணலானது பூமி

மக்களை அழிக்க
மறைமுக திட்டம்!
துக்கமும் துயரமும்
தூய ஆவிக்கே

அஹிம்சை அழிந்தது!
ஆயுதம் அழிக்கப்பட்டது
துவம்சமாடும் எதிரியை
தூய ஆவியே அழியும்

தீண்டும் தீபோல
தெற்கின் ஆட்சி!
வேண்டுவதை தவிர
வேறுவழியில்லை
யேசுவே!

ச.சிவநாதன் தும்பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீ பெட்டி



கே.எஸ்.சிவஞானராஜா

இது ஒவ்வொரு வீடுகளிலும் மிகவும் அத்தியாவசியமான ஒரு பொருளாக உபயோகிக்கப் பட்டு வருகின்றது. இது இல்லாத வீடும் இல்லை. இதைச் சிக்கனமாகப் பாவிக்கத் தெரிந்த மனிதனும் தற்போது இல்லை.

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற ஐம்பூதங்களில் தீயினுடைய பங்களிப்பு மனிதனுடைய வாழ்வில் பல்வேறு படிப்பினைகளைக் கவனத்தில் எடுக்குமாறு பணித்தது. அதுவே முன்னேற்றத்தையும் தந்தது. அந்த வகையில் மிக எளிதாக எல்லோர் வாழ்விலும் நுழைந்துவிடக்கூடிய கையடக்கமான சாதனம் தீப்பெட்டியாகும். இதனுடைய விலையோ ஐந்து ரூபா மாத்திரமே. இதற்குள் ஐம்பது தீக்குச்சிகள் உண்டென்பர். தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டாம். குச்சி குறைந்தால் சன்னதம் கொள்ள வேண்டாம். நாம் வேண்டும் பொருள்களுள் மிகவும் விலைகுறைந்த பொருள் இதுவாகும்.

நீரோடும், நெருப்போடும் விளையாடக் கூடாதென்பர் எமது மூதாதையர். இரண்டுமே உயிரை மாய்த்து விடக்கூடியன. தற்காலத்தில் எது, எதில் விளையாடக் கூடாதென்று தடை விதித்திருக்கிறோமோ அது, அதில் எல்லை மீறி விளையாடுகிறார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் விதி தனது விளையாட்டை மிகக் கச்சிதமாக நிறைவேற்றி வருகிறது. இதனையே விதி விளையாடுகிறது என்று சொல்லுகின்றோம்.

எந்தவொரு பொருளையும் நாம் இரண்டு விதமாகப் பார்க்கலாம், பாவிக்கலாம். நல்லதையும் செய்யலாம் கெட்டதையும் செய்யலாம். கத்தியால் காய்கறிகளையும் வெட்டலாம். ஓர் உயிரையும் பறிக்கலாம். அதேபோல தீப்பெட்டியால் விளக்கேற்றவும் முடியும். ஒரு பெரிய காட்டை அழிக்கவும் முடியும். ஆதலால் நாம் ஆக்க வழியில் எதையும் சிந்திப்போமாக இருந்தால் உலகம் உருப்பட்டே தீரும். இல்லாவிடின் அதன் பலாபலன்களை அனுபவித்தேயாக வேண்டும்.

## வீடு

எந்த வீட்டிலேயும் சாமி அறை பிரதானமாக விளங்குகின்றது. தாயறையென்றும், பெரிய அறை என்றும் மூலஸ்தானம் என்றும் பலவாறாக இதனை அழைப்பர். இந்தத் தாயறை சரியான முறையில் அனுகூலம் பெற வேண்டுமாயின் தினமும் விளக்கேற்றப்படவேண்டும். அதற்கு மட்டும் பாவிப்பதற்கென ஒரு தீப்பெட்டி சாமியறையில் பேணப்படவேண்டும். சாமியறைத் தீப்பெட்டியால் குப்பையையோ, குக்கர்களையோ, சிகரெட், பீடிகளையோ பற்றவைக்கக்கூடாது. மாறாக இரவல் கொடுத்தலோ ஆகாது. இது இறை அருளுக்குப் பாத்திரமானது. மற்றும் ஒரு நாளைக்கு காலையோ அல்லது மாலையோ விளக்கேற்றும் போது, முதல் முறையே தீக்குச்சியால் நூராது விளக்குப் பற்றவைக்கப்படுமாயின் அன்றைய தினம் எடுத்த காரியமும் தொடுத்த முயற்சியும் பலிதமாகும். எனவேதான் முன்னோர்கள் தீப்பெட்டியை மடியில் சூடாகவே வைத்திருப்பார்கள். இப்போது மடியில் தொலைபேசியே உடலை வருடிக்கொண்டிருக்கும். தீப்பெட்டியானது வாழ்வுக்கு வரப்பிரசாதமாக அமைந்திருந்தது. அவ்வாறு அதற்கு மகத்துவம் இருந்தது. இப்போது வீடு முழுவதுமாகத் தீப்பெட்டி படாத பாடுபட்டிருக்கும். குப்பை எரிக்கிற இடத்தில் ஒரு தீப்பெட்டி தன்னிலை குலைந்திருக்கும், குளிக்கிற இடத்தில் ஒரு தீப்பெட்டி நனைந்து போய் காலாவதியாகி இருக்கும். பிள்ளைகள் விளையாடுகின்ற இடத்தில் ஒரு தீப்பெட்டி அலங்கோலமாக அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிப் போயிருக்கும். கிட்டத்தட்ட ஒரு டசின் தீப்பெட்டி வீட்டின் நாலாபக்கங்களிலும் வாழ்விழந்துபோய் இருக்கும்.

ஒவ்வொரு வீட்டிலும் தீப்பெட்டியின் பெறுமதி போற்றப்படுமாயின் ஒரு வருடத்திற்கு ஒருடசின் தீப்பெட்டி போதுமானது. நாமோ ஒரு நாளைக்கு ஒரு தீப்பெட்டி வீதம் மாதத்திற்கு முப்பது தீப்பெட்டி வீதம் வருடத்துக்கு முந்நூற்றி அறுபது என்ற விதத்தில் தீப்பெட்டிச் செலவாக (5X360=1800.00) ஆயிரத்தெண்ணூறு ரூபாவை அநியாயமாகச் செலவழிக்கின்றோம். இது தேவைதானா? இதற்குச் சிக்கனமாகப் பாவிக்க வேண்டுமென்று யாராவது சொல்லித்தரத்தான் ஆசைப்படுகிறோமா? சரி அப்படிச் சொன்னதைச் செய்திருக்கிறோமா?

எனது அம்மாவின் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள் ஒரு தீப்பெட்டியை வைத்துக் கொண்டு, ஒரு வருடத்தையே சமாளித்தவர்கள் இருக்கிறார்கள் நம்புவீர்களா? நம்புங்கள். எப்படி? காலையில் ஓர் அடுப்பு அடுக்களையில் தீப்பெட்டியால் மூட்டப்படுமாயின், அந்த அடுப்பு மூன்று நேரமும் சமைக்கப்பட்டு, நூர்க்கப்படாது விடியும் வரை நீறுபூத்த நெருப்பாகத் தணலோடு விழித்திருக்கும். அந்தத் தணலில் இருந்து மீண்டும் அடுத்த நாளுக்கான நெருப்பு கொள்முதல் செய்யப்பட்டு, அந்த அடுப்பு சாணியால் மெழுகப்பட்டு, மீண்டும் புதிதாகத் தொடங்கப்படும். இதனால் அடுப்புகள் துயில்வதில்லை. தற்போது அப்படி இல்லையே! பெரும்பாலான வீடுகளில் அடுப்புகள் நிரந்தரமாகவே துயின்று விட்டன. வாயு அடுப்புக்கள் வாஸ்து சாஸ்திரத்திற்கு வடிவைக் கொடுத்தும் விட்டன. வடிவைக் கெடுத்தும் விட்டன.

தீப்பெட்டிகளுக்கு உரிய வேலை இனியென்னதான் இருக்கு? லைற்றர்கள் வந்து விட்டன. சாமி அறைக்கும் தாயறைக்கும் சாத்திரப்படிக்கு ஒரு தீப்பெட்டி பீடத்தில் உட்கார்ந்து இருக்கும். உண்மையான சைவசமய யதார்த்தவாதிகள் தீப்பெட்டி சாம்ராஜ்ஜியத்தைப் பேணி வருகிறார்கள். தேங்காய் எண்ணெய் மணங்கமழ, ஊது பத்திகள் வாசம் செறிய, ஏகாந்த, திரியார்ந்த, பஞ்சார்ந்த விளக்குகள் பரிபாலிக்க, கற்பூர தீபங்கள் ஆயுளை அதிகரிக்க, வாஸ்து சாஸ்திரத்தைத் தீப்பெட்டிகள் வலுவூட்டுகின்றன. இவற்றையெல்லாம் கவனத்திற்கொள்ளாது, மின்சார விளக்குகள் சாமி அறைக்கு வருகை தந்து, தீப்பெட்டிகளுக்கு விடுமுறை அளித்துவிட்டன. முன்னொரு காலத்தில் தீப்பெட்டிகள்கூட பங்கீட்டு அட்டைக்கு மட்டும் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் வரலாறாக உள்ளன.

## யானைத் தீப்பெட்டி

கால் நூற்றாண்டு காலமாக 'யானை மார்க்' தீப்பெட்டிதான் இலங்கையில் ஒவ்வொரு வீட்டையும் ஆட்சிப்படுத்தியதெனலாம். அதற்கு அப்படியொரு மதிப்பு இருந்தது. மெல்லியதாக, இலேசாகக் குச்சியினால் பெட்டியின் மருந்தாம் கந்தகப்பகுதியில் தட்டினால், உரசினால் நெருப்பு முளாசி எரியும். பிரபல்யமான ஒரு வர்த்தகரின் விற்பனை தொடர்பான விசித்திரமான வழக்கு. இலங்கையைப் பொறுத்த வரையில், பொருள்கள் தட்டுப்பாடு என்ற நிலைக்குத் தள்ளப்படுமாயின் விலைகள் எக்கச்செக்கமாக ஏறிவிடும். நாம் சிறுவயதில் இருந்தபோது நடைபெற்ற தீப்பெட்டி வழக்கொன்று வாதப்பிரதிவாதங்களினால் எப்படி வெல்லப்பட்டதென்பதை இப்போது பாருங்கள்.

ஐந்து சதம் என்று விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்யப்படவேண்டிய ஒரு தீப்பெட்டியை, பிரபல்யமான ஒரு வர்த்தகர் பத்து சதமாகத் தனது வாடிக்கையாளருக்கு விற்பனை செய்து விட்டமை, வாடிக்கையாளரால் வழக்கிற்கு கொண்டு செல்லப்பட்டது. அழகான இரண்டு யானைகளை வர்த்தகச் சின்னங்களாக கொண்ட யானைத் தீப்பெட்டியே அப்போதைய காலத்தில் பாவனையிலிருந்த ஒரேயொரு தீப்பெட்டியாகும். இதோ வழக்கிலிடப்பட்ட வழக்காளியின் குற்றச்சாட்டு தமிழ் மொழியின் சிறப்பினால் வெல்லப்படுகிறது. "ஒரு யானைத் தீப்பெட்டியைப் பத்து சதமாக? விற்பனை செய்த இந்த வர்த்தகர் பெரும் குற்றவாளியே!"

இதற்கு அமரர் ஜி.ஜி.பொன்னம்பலமே வர்த்தகர் சார்பாக வழக்கில் ஆஜரானார்.

தீப்பெட்டியைப் பொதுவாக ஒரு பெண்ணுக்கு ஒப்பாக மதிப்பிடுவர். பெண்ணும் தீப்பெட்டி போன்று நெருப்பாகவும் மாறக் கூடியவள். நெருப்பினால் நல்லதையே எமக்கு ஆக்கித் தருகிறாள். வீட்டிற்கு விளக்கேற்றி விடிய வைப்பவளும் பெண்ணேதான். தூண்டா மணியாகவும் இருப்பாள். குத்துவிளக்காகவும் இருப் பாள். கிட்டப்போனவர்களை நெருப்பாகச் சுட்டெரித்த சம்பவங்களும் இல்லாமலில்லை. தீப்பெட்டியும் சுடும். பெண்ணும் சுடும்.

ஜி.ஜி. பிரபல்யமான சட்டத்தரணி. வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஜி.ஜி வாதாடுகிறார். யானைகளை வைத்து வென்றுவிடுகின்றார். எப்படி?

"கௌரவ நீதிபதி அவர்களே! ஒரு யானைத் தீப்பெட்டி ஐந்து சதம். அதை எல்லோரும் ஒப்புக்கொண்டுள்ளார். விற்பனை செய்த தீப்பெட்டியில் இரண்டு யானைகள் உள்ளபடியால் வியாபாரி அதனை பத்துசதத்துக்கு விற்பனை செய்தமை சரியானதே."

நீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய்து வர்த்தகரை விடுதலை செய்தார். ஜி.ஜி வெற்றி பெற்றார்.

தீப்பெட்டியைப் பொதுவாக ஒரு பெண்ணுக்கு ஒப்பாக மதிப்பிடுவர். பெண்ணும் தீப்பெட்டி போன்று நெருப்பாகவும் மாறக் கூடியவள். நெருப்பினால் நல்லதையே எமக்கு ஆக்கித் தருகிறாள். வீட்டிற்கு விளக்கேற்றி விடிய வைப்பவளும் பெண்ணேதான். தூண்டா மணியாகவும் இருப்பாள். குத்துவிளக்காகவும் இருப்பாள். கிட்டப்போனவர்களை நெருப்பாகச் சுட்டெரித்த சம்பவங்களும் இல்லாமலில்லை. 'தீப்பெட்டியும் சுடும். பெண்ணும் சுடும்.

தீப்பெட்டியும் அடக்கமாகவே இருக்க வேண்டும். தீப்பெட்டியைச் சீண்டினால் நெருப்பு உண்டாகும். பெண்ணைத் தீண்டினாலும் நெருப்புண்டாகும். ஆகவே தீப்பெட்டியையும் பாதுகாப்போம். பெண்ணையும் பாதுகாப்போம். இரண்டுமே வாழ்க்கைக்கு வரம் சேர்ப்பன. இனி இரண்டுமே உங்கள் கைகளில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 2000 வருடங்களுக்கு முன்னரே செக்கைக் கண்டுபிடித்த நாகர்கள்:

## களுவாஞ்சிக்குடியில் அதன் எச்சங்கள்









பேராசிரியர் சி.பத்மநாதன் வேந்தர்,
யாழ். பல்கலைக்கழகம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் தேர்தல் தொகுதிகளில் ஒன்று பட்டிருப்பு. அங்குள்ள பிரசித்தமான பகுதிகளிலொன்று களுவாஞ்சிக்குடி. கிழக்கிலங்கையிலுள்ள ஊர்கள் மிகவும் புராதனமான வரலாறு கொண்டவை என்பதையும் அந்த வரலாறு இருபது நூற்றாண்டுகளுக்கு மேற்பட்டது என்பதையும் வாசகர்கள் அறியக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அது கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்தில் ஏற்பட்ட தமிழர் குடியிருப்புகளோடு ஆரம்பமாகியது.

கிழக்கிலங்கைத் தமிழர் பற்றிய ஆதிகால வரலாற்றுக்கு அடிப்படையான ஆதாரங்கள் சென்ற வருட பிற்பகுதிவரை அறியப்படாதவையாக இருந்தன. ஆர்வலர்கள் சிலரின் ஆர்வ மிகுதியாலும் முன்மாதிரியான முயற்சிகளினாலும் மிகப் புராதனமான, அதி முக்கியத்துவம் வாய்ந்த தொல்பொருள்களும் வரலாற்றுச் சின்னங்களும் வெளிவருகின்றன.

கலாசார அலுவலர்கள் முதலாக மேலதிக அரச அதிபர் வரையிலான நிர்வாகக் கட்டமைப்பில் உள்ளவர்களும் வேறு சிலரும் இந்த முயற்சியில் ஈடுபடுகின்றமை பாராட்டுக்குரிய விடயமாகும். எழுவான்கரையிலும் படுவான்கரையிலும் வடக்கிலிருந்து தெற்கு வரையிலும் பரந்துள்ள மிக விசாலமான நிலப்பரப்பில் அடங்கியுள்ள பல ஊர்களிலும் வயல்வெளிகளிலும் மேற்கிலே மலைச்சாரல்களிலும் இங்கே குறிக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்கள் கிடைக்கின்றன.

அவை கல்வெட்டுகள், வழிபாட்டுச் சின்னங்கள், உலோகப் பொருள்கள், கல்லில் அமைக்கப்பட்ட பாவனைப் பொருள்கள், வாசகம் பொறித்த கலவோடுகள், செங்கற்கள், சுடுமண் உருவங்கள் எனப் பலவகைப்படும். இப்பொழுது ஓர் அருங்காட்சியகத்தை நிரப்பக்கூடிய அளவிற்குப் பொருள்கள் கிடைக்கின்றன. ஆனால் அத்தகைய நிறுவனம் ஒன்றை யார் விரைவில் அமைப்பார்கள்? பல்கலைக்கழகம் இந்த விடயம் தொடர்பில் ஆர்வங் கொள்ளாத நிலையில் மாகாணசபைதான் அதைச் செய்யவேண்டும். ஆனால் அங்கும் மேலிடத்திலிருந்து அனுசரணை பெறவேண்டும்.

சந்திரகாந்தன் முதலமைச்சராகவிருந்த காலத்தில் மாகாணசபையின் நிர்வாக ஆலோசகராக இருந்த கலாநிதி விக்னேஸ்வரன் அருங்காட்சியகம் ஒன்றை அமைப்பதற்கு முனைப்புக் காட்டினார். அனுமதி பெறுவதற்காக ஓர் அறிக்கையினையும் உருவாக்கினார். அந்த நாள்களில் பதவியிலிருந்த மாகாண ஆளுநர் அதற்கு அனுசரணை வழங்கவில்லை என்று விக்னேஸ்வரன் சொன்னார். அதே காலமளவில் இரத்தினபுரி மாவட்டத்து எம்பிலிப்பிட்டியவில் ரஞ்சமடம என்ற இடத்திலே பொருங்கற் காலத்து ஈமக் கல்லறைகளை அகழ்வு செய்த இடத்தில், அதனைச் சுற்றி பெருங்கட்டடம் ஒன்றை அமைத்து அதை அருங்காட்சியகம் என்று பிரகடனப்படுத்தியுள்ளனர். பின்பு அதனை ஊவா மாகாண சபையிடம் வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. அங்கொரு நீதி, இங்கொரு நீதி என்றவாறு ஆணைச்சக்கரம் சுழன்றது.

ஆனால் இப்பொழுதுள்ள ஜனாதிபதி வேறுபாடுகளின்றிப் பொதுவான கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் தகுதி வாய்ந்தவராக விளங்குவதால், கிழக்கு மாகாணசபை அருங்காட்சியகம் தொடர்பான பொறுப்புகளை அவரால் அல்லது அவரது பிரதிநிதியான ஆளுநரால் தட்டிக் கழிக்க இயலாது. மாகாணத்தில் வாழும் சமூகங்களின் பண்பாட்டுச் சின்னங்களைப் பேணிப் பாதுகாப்பது அவசிய தேவையாகிவிட்டது.

### நாகக் கல்

களுவான்சிக்குடியிலுள்ள சிறப்பு மிக்க வரலாற்றுச் சின்னங்கள் – இங்கு விவரிக்கப்படும் பொருள்கள் – பற்றிக் கலாசார அலுவலரான எழில்வாணி பத்மகுமார் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது. சென்ற மாதம் எட்டாம் திகதி (08.05.2015) மாலை வேளையில் எமது பழைய மாணவரும் கல்வி அதிகாரிகளில் ஒருவருமான நடேசானந்தம் எம்மைக் களுவாஞ்சிக்குடிக்கு அழைத்துச் சென்றார்.

அங்கு, முதலாவதாக, கண்ணகை அம்மன் கோயிலின் வெளி வீதியில் வைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான நாகக் கல்லினைப் பார்த்தோம்.

அங்குள்ள நாகக்கல் வேறிடங்களில் நாம் பார்த்தவற்றைக் காட்டிலும் மிகப்பெரியது. மிகப் புராதனமானது என்றும் சொல்லாம். மண் அரிப்பின் காரணமாகவும் கல்லின் இயல்பான தன்மையினாலும் நாகவடிவம் ஒளிரும் தோற்றத்தை இழந்துவிட்டது. அது வழமை போல ஐந்து தலைநாகம். நாகர் நாகத்தை வழிபடும் வழக்க முடைய வர்கள். அவர்கள் நாக தேவனை மணிணாகன் என்று குறிப்பிட்டனர். நாகக்கற்கள் எல்லாவற்றிலும் இந்தப் பெயர் எழுதப் பட்டிருக்கும். வன்னி வரலாறும் பண்பாடும் என்ற நூலில் பேராசிரியர் செகிருஷ்ணராஜா எழுதிய கட்டுரை யொன்றில் நாகக் கல் ஒன்றின் புகைப்படம் வெளியிடப்பட்டி ருந்தது. அதனைச் சற்று அவதானமாகப் பார்த்த பொழுது அதில் மணிணாகன் என்ற பெயர் இருப்பதைக் கண்டோம். இதனை முன்னர் எவரும் அவதானிக்கவில்லை. மட்டக்களப்பு மாவட்டத் தில் காணப்படும் நாகக் கற்கள் எல்லா வற்றிலும் மணிணாகன் என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் சிலவற்றிலே மணிணாகன் என்ற பெயர் எழுதப்பட் டுள்ளது வேறு சிலவற்றில் மணிணாகன் பள்ளி என்ற பெயர் காணப்படுகின்றது.

களுவாஞ்சிக்குடியிலுள்ள நாகக் கல்லில் மணிணாகன் பள்ளி என்ற பெயரே காணப்படுகின்றது. மணிணாகன் மணிணாகன் பள்ளி என்றபவற்றுக்கு இடையிலான வேறுபாடு ஆராய்வதற்குரியது.

நாகர் பௌத்தம், சமணம் ஆகிய சமயங்களை ஒப்புக்கொண்டு, அவற்றைப் பின்பற்றிய காலத்தில் நாகவழிபாட்டு அம்சங்கள் அச்சமயங்களோடு இணைத்துவிட்டன. கிழக்கிலங்கையிலே பௌத்தரும் சமணரும் மணிநாகனைக் காவல்தெய்வமாகக் கொண்டனர். பௌத்த பள்ளிகள் அமைந்த குசலான் மலையிலே குகைகளுக்கு அண்மையில் நாகக் கல்லொன்று காணப்படுகின்றது. அதில் மணிணாகன் என்ற பெயர் தமிழ் மொழியிலும் தமிழ்ப் பிராமி வடிவங்களிலும் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வெல்லாவெளியிலுள்ள மலையொன்றில் அமைந்திருந்த சமணப் பள்ளியின் வளாகத்திலே இதே அம்சங்களைக் கொண்ட நாகக் கல் காணப்படுகின்றது.



மட்டக்களப்புக் கச்சேரியில் வைக்கப்பட்டுள்ள உடைந்த கோலத்திலுள்ள நாகக் கல்லிற் களுவாஞ்சிக்குடியில் உள்ளதைப் போன்று மணிணாகன் பள்ளி என்ற பெயர் எழுதப்பட்டுள்ளது.

அதில் வேள் ணாகன் மகன் வேள் கண்ணன் 'மகன் வேள் கண்ணன் மகன் வேள் ணாகன்' என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளது. இதில் மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த வேளிர்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. அவர்களிற் கடைசியில் வரும் வேள் ணாகன் என்பவனே நாகக் கல்லினைச் செய்வித்தான் என்று கருதலாம். களுவாஞ்சிக்குடியிலுள்ள நாகக் கல்லிலும் வேளர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருக்கலாம். ஆனால் சிதைவின் காரணமாக அதைத் குறிப்பிடும் எழுத்துகள் முற்றாக அழிந்துவிட்டன.

கண்ணகை அம்மன் கோவில் அமைந்துள்ள இடம் ஆதியில் நாகரின் வழிபாட்டுத் தலம் மணிணாகன் பள்ளி அமைந்திருந்த தலம் என்று கருதலாம். ஒரு வரலாற்று பண்பாட்டுச் சின்னம் என்ற வகையில் களுவாஞ்சிக்குடியிலுள்ள நாகக்கல் சிறப்புமிக்க ஓர் உருப்படியாகும். அது அருங்காட்சியகம் ஒன்றில் வைத்துப் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியது.

### செக்கடித் தெரிவிலுள்ள கற்செக்கு

செக்கடித்தெரு என்னும் பெயரால் வழங்கும் சிறிய வீதியொன்று கண்ணகை அம்மன் கோயிலுக்கு 200 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. அந்தத் தெருவிலுள்ள வீடொன்றின் முற்றத்திலே, தெருவோரமான மூலையில் ஒரு பிரமாண்டமான கல்லுருவம் காணப்படுகின்றது. அது பெரும் பாறையொன்றை வெட்டிச் செதுக்கப்பட்ட உருவம். தலைப்பாகம் ஆழமாகவும் அகலமாகவும் குடையப்பட்டுள்ளது. அடிப்பாகம் பீடம் போன்ற சதுரமான வடிவம். அதன்மேல், வெளிப்புறத்திலே உள்நோக்கிய கோலத்தில் வெட்டி கருவியொன்று சுற்றி ஆடிவரக்கூடிய நிலையிற் சீராகச் செதுக்கி உள்ளனர்.

### செக்காட்டிய நாகர்கள்

இந்தக் கல்லுருவம் இன்றும் யாழ்ப்பாணத்தில் வழக்கிலுள்ள எண்ணெய் வடிக்கும் செக்கினைப் போன்றது. அதற்கு மூலமான வடிவம் என்றும் சொல்லலாம்.

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணப்படிதான் வாழ்வு!



மட்டமாய் ஓடுவது தான் இன்றைய வாழ்க்கை முறை. எதற்கு இந்த ஓட்டம்? வெற்றியைத் தேடித்தான்! படிப்பில் முதல் இடம், நல்ல வேலை, வாகன வசதி, காதலில் சுபம், வீடு வாங்கிய பின் கல்யாணம், வெளி நாட்டு வாய்ப்பு, சொத்து, முழு ஆரோக்கியம், பிள்ளைகளால் சுகம்... பிறகு, பிள்ளைகளின் படிப்பு, வேலை, கல்யாணம்...இந்த ஓட்டம்தான் வாழ்க்கையா?

### மன அமைப்பு

நினைப்பது கிடைப்பதுதான் வெற்றி. ஆசைப்பட்டதை அடைய வேண்டும். அதற்கு எதையும் செய்யத் தயாராக உள்ளனர் மக்கள். நவீன சந்தைப் பொருளாதாரமும் அதை ஊக்குவிக் கிறது.
உங்கள் பிள்ளைக்கு படிப்பில் கவனமில்லையா? இதைச் சாப்பிடக் கொடுங்கள், திருமணத் தடையா? இந்தக் கோயிலுக்குச் செல்லுங்கள், இடுப்பு வலியா எங்கள் ஆச்சிரமம் நடத்தும் யோகா வகுப்புக்கு வாருங்கள்,
மன அசதியா? இந்தப் புத்தகத்தைப் படியுங்கள், அதிர்ஷ்டம் வேண்டுமா? இந்தக் கல்லில் மோதிரம் போடுங்கள்! எனும் குரல்களை நாடிப் போகிறவர்கள் அனைவருக்கும் கேட்டது கிடைக்கிறதா? நிச்சயம் இல்லை.
என்ன காரணம்? தருகிறவர் மன அமைப்பைவிடப் பெறுகிறவர் மன அமைப்பு இங்கு முக்கியமாகிறது.

### பெரும் கண்டுபிடிப்பு

கிராமங்களில் அம்மனுக்காகத் தீ மிதிப்பு நடத்துவது இன்றும் நடக்கிறது. தீ மிதிப்பவர்கள் காயம் படாமல் வருவது எப்படி முடிகிறது? தீக்குச்சி நுனி பட்டால் விரல் தீய்ந்து போகுமே! இது பக்தி அல்ல ஆழ்மனச் சக்தி என்று சொல்லும் ஆண்டனி ராப்பின்ஸ் போன்றோர் அமெரிக்காவில் நடத்தும் என்.எல்.பி. (Neuro Linguistic Programming) பயிற்சியில் கலந்து கொள்ளும் பங்கேற்பாளர்கள் அனைவரும் நெருப்பில் நடக்கிறார்கள்.

கடவுள் சக்தியோ மனித ஆற்றலோ நம்பிக்கையால் பெரிய மாற்றத்தை நிகழ்த்த முடியும் என்றால் ஏன் இதை இளைஞர்களுக்குப் பாடசாலைப் பருவத் திலிருந்தே சொல்லித்தரக்கூடாது? உண்மை என்னவென்றால் படித்தவர்கள்தான் படிக்காதவர்களைவிட நம்பிக்கை குலைந்து கிடக்கிறார்கள் இங்கு.
மனித குலத்தின் மிகப் பெரிய கண்டுபிடிப்புகளில் மிக முக்கியமானது: நம் எண்ணத்தை மாற்றினால் நம் வாழ்க்கையை மாற்றலாம் என்பதுதான். மனித மனம் ஒன்றை நினைக்க முடிந்தால் அதைச் சாதிக்க முடியும் என்பதுதான் மனித குல வரலாறு. வேளாண்மை முதல் வாட்ஸ் அப் வரை யாரோ ஒருவர் நினைத்து இல்லாததை உருவாக்கியது தான்.

### இரண்டும் உண்மைகள்

பிளேடைத் தின்பது, விமானத்தைப் பற்களால் இழுப்பது, தேனீக்களை முகத்தில் வளர்ப்பது, அரிசிக்குள் சித்திரம் வரைவது, பார்வையற்றோர் மலை ஏறுவது, என நிறையச் செய்திகள் படிக்கிறோம். இவை அனைத்தும் எண்ணம் செயலாகிய சாதனைகள்தான்.
இது தவிர சாவை மனப் பலத்தால் வென்றவர்கள் கதைகள் நிறைய நமக்குத் தெரியும். வாழ்க்கையில் சகலதையும் இழந்து பின் தன்னம்பிக்கையோடு போராடி வென்ற பலரின் வரலாற்றைப் பாடமாகவே படித்திருக்கிறோம். இருந்தும் எண்ணம் தான் வாழ்க்கை என்பதை நமக்குப் பிரச்சினை வரும் போதெல்லாம் மறந்து விடுகிறோம். என்னால் முடியும் என்று சொன்னாலும் என்னால் முடியாது என்று சொன்னாலும் இரண்டும் தனி நபர்களின் உண்மைகளே. இரண்டுமே பலிக்கும்.

### எண்ணமே வாழ்வு

நம் உள்ளே உள்ள நோக்கமே நம் வாழ்வின் சகல நிகழ்வுக்கும் விதை என்கின்றன நவீன ஆராய்ச்சிகள். அனைத்து மதங்களும் அனைத்துக் கோட்பாடுகளும் இதையே வலியுறுத்துகின்றன.
என் வாழ்க்கை தந்த அனுபவத்தில் வந்தவைதான் இந்த எண்ணங்கள். அதை எப்படி மாற்றுவது? என்று கேட்கலாம். உங்கள் எண்ணங்கள்தான் வாழ்க்கை அனுபவங்களையே ஏற்படுத்துகின்றன என்று சொன்னால் நம்புவீர்களா?
நம் எண்ணம் எப்படி நம் செயற்பாட்டை மாற்றும் என்பதற்கு ஒரு கிரிக்கெட் உதாரணம் சொல்லலாம். தோற்கக்கூடாது என்ற எண்ணத்தில் ஆடுவதும் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணத்தில் ஆடுவதும் வேறு வேறு முடிவைத்தரும்! எல்லோருக்கும் வெற்றி வேண்டும். ஆனால் உங்கள் மனதில் தோல்வியைத் தடுக்கும் வழி முறைகளை யோசிக்கிறீர்களா? அல்லது வெற்றி பெறும் உத்திகளை யோசிக்கிறீர்களா?
உங்கள் படிப்பு, வேலை, காதல், திருமணம், தொழில், செல்வம், குடும்ப வாழ்க்கை என அனைத்தையும் உறுதிப் படுத்துவது உங்கள் எண்ணங்கள்.
கவிஞர் கண்ணதாசன் அனாயசமாக இவை அனைத்தையும் ஒரு சினிமாப் பாடல் வரியில் சொல்லிவிட்டார்:
பூமியில் இருப்பதும் வானத்தில் பறப்பதும் அவரவர் எண்ணங்களே!

# 2000 வருடங்களுக்கு முன்னரே

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)
களுவாஞ்சிக்குடியிலுள்ள கல்லுருவத்தைச் செக்கு என்று உடனடியாகவே அடையாளம் காண முடிகின்றது. இந்தக் காலத்து மரச் செக்குகளும் அதை இயக்கும் முறையும் ஒரே விதமானது. இருவிதமான உருப்படிகளும் கிட்டத்தட்டச் சமமான அளவிலே தானியங்களைக் கொள்ளக்கூடிய குழிவுகளைக் கொண்டுள்ளன. இன்றுவரை பாவனையிலுள்ள மரச் செக்குகள் நாகர் உருவாக்கிய கற்செக்கினையே முன்மாதிரியாகக் கொண்டவை. செக்கினை இயக்குவதற்கு உலக்கை, அச்சுலக்கை ஆகிய உறுப்புகளை செக்குடன் இணைத்துக் கொள்வது அத்தியாவசியமாகும். உலக்கை மூலம் செக்கினுட் போடப்படும் தானியம் அரைக்கப்படும். உலக்கையைச் சுழற்றுவதன் மூலமே தானியம் அரைக்கப்படும். அச்சுலக்கை என்பது மற்றுமொரு தவிர்க்க முடியாத உபகரணம். நன்கு முற்றிய இலுப்பை மரத்தை வெட்டி அது உருவாக்கப்படும். அது ஒரு பக்கத்தில் அரை வட்டமான கோலத்தில் வெட்டிச் செதுக்கப்பட்டு செக்கின் வெளிப்புறத்து ஒடுக்கமாகச் செதுக்கப்பட்ட பகுதியிற் பொருத்தி இருக்கும் உலக்கையும் அச்சுலக்கையும் வேறொரு, கொழுக்கி போன்ற மரத்தினால் இணைக்கப்பட்டிருப்பதால் அவை நிலைமாறாது உரியஇடத்திலே பொருந்திய வண்ணமாயிருக்கும். அச்சுலக்கையில் மாடுகளைப் பூட்டி அவற்றைச் செக்கினைச் சுற்றி வட்டவமாக வளைத்து ஓட்டுவதன் மூலம் செக்கு இயக்கம் பெறும். உலக்கை வேகமாக உருளுமிடத்து தானியம் அரைக்கப்பட்டு சக்கையிலிருந்து எண்ணெய் வேறாகும். சக்கை இறுகிப் பிண்ணாக்காகி விடும். எண்ணெய் முழுவதும் அடியில் அமைந்துள்ள துவாரத்தின் மூலம் வெளியேறும். இவ்விதமாக நாகரும் 2000ஆம் வருடங்களுக்கு முன் எண்ணெய் வடித்தனர் என்பதை களுவாஞ்சிகுடியிலுள்ள செக்கின் வடிவமைப்பின் மூலம் உணர முடிகின்றது.
இந்தச் செக்கினைச் சுற்றி எல்லாப் பகுதிகளிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. வேள் ணாகன் பள்ளி என்ற பெயரும் வேள் ணாகன் மகன் வேள் கண்ணன் வேள் கண்ணன் மகன் வேள ணாகன் என்ற வசனமும் இதில் எழுதப்பட்டுள்ளன. எழுத்துக்கள் தமிழ்ப் பிராமி வடிவங்கள். எழுத்தமைதி கொண்டு இச்செக்கு 2100 வருடங்களுக்கு முற்பட்டதென்று கூறலாம். அதில் வேள் ணாகன் பள்ளி என்ற பெயர் காணப்படுவதனால் இச்செக்கு நாகர்குல வேளிரன் அரண்மனைக்குரிய ஒன்றாக இருக்கலாம். அவ்வாறாகில் வேளிர் தங்கள் உடையான நிலங்களில் விளைந்த தானியத்தையோ தமக்கு ஊரவர் திறையாக வழங்கிய தானியத்தையோ செக்கில் அரைத்து எணணெய் வடித்திருக்கலாம். கரும்பாலையாகவும் அது பயன்படுத்தப்பட்டிருக்கலாம். எவ்வாறாயினும் நாகான் ஆட்சியில் விளைநிலங்களும் தானிய உற்பத்தியும் வழமையாகி விட்டது என்பதனை இச்செக்கின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. பெரும்பாணாற்றுப் படையில் முல்லைநில உழவான் கரும்பாலைகள் பற்றிய விவரங்களைக் காணமுடிகின்றமை குறிப்பிடற்கரியது.
இந்தச் செக்கின் வெளிப்புறத்திலே வேள் ணாகன் மகன் வேள் கண்ணன் வேள் கண்ணன் மகன் வேள் ணாகன் என்ற வசனம் மீண்டும் மீண்டும் பல இடங்களில் எழுதப்பட்டுள்ளது. எனவே வேள் ணாகன் என்ற பட்டம் பெற்ற குறுநில அரசனொருவன் இந்தச் செக்கை உருவாக்கினான் என்பது புலனாகின்றது. களுவாஞ்சிக்குடி நாகான் ஆட்சியின் கீழமைந்த சிற்றரசொன்றில் அடங்கியிருந்தமை செக்கிலும் எழில்வாணியின் வீட்டிற்குரிய வளவிலுள்ள கல்லொன்றிலும் களுவாஞ்சிகுடி சந்தையிற் காணப்படும் மிகப் புராதனமான ஆட்டுக்கல்லிலும் எழுதப்பட்ட சாசனங்கள் மூலம் தெளிவாகின்றது. நாகர் குல அரசன் காலத்துப் பாவனைப் பொருள்களுள் மற்றொன்று களுவாஞ்சிக்குடி சந்தையிலுள்ள ஆட்டுக்கல்லாகும். அதில் வேள் ணாகன் பள்ளி என்ற பெயரும் வேள் ணாகன் மகன் வேள் கண்ணன் வேள் கண்ணன் மகன் வேள் ணாகன் என்ற வசனமும் எழுதப்பட்டுள்ளன. இதனைப் போன்ற உருப்படிகள் ஏறாவூர் விஷ்ணு கோவில் வளாகத்திலும் வந்தாறுமூலையிலுள்ள வீடொன்றின் காணியிலும் காணப்படுகின்றன. அவற்றிலும் வேள் ணாகன் பள்ளி என்ற பெயரும் காணப்படுகின்றது. இவையும் 2000 வருடங்களுக்கு முற்பட்டவை என்பது அவற்றிலுள்ள எழுத்துக்களின் வரிவடிவம் வளர்ச்சி நிலையின் அடிப்படையின் மூலம் தெளிவாகின்றது.
களுவாஞ்சிக்குடியிலுள்ள, நாகார் தொல்பொருட் சின்னங்கள் பற்றிய விளக்கவுரை நிறைவு பெறுவதற்கு எழில்வாணி பேணி வைத்திருக்கும் இரண்டு உருப்படிகளைப் பற்றி இங்கு குறிப்பிடுவது அவசியமாகும். அவற்றிலொன்று அவரது வீட்டு வளவில் நெடுங்காலமாகக் கிடந்த துண்டமான கல், அவரது மூதாக்களில் ஒருவரான குலசேகர வன்னியனார் காலம் முதலாக இக்கல்லின் சிறப்பினை ஏதோவிதமாக உணர்ந்து, அதனை பேணி வருகின்றனர். இது வரை காலமும் அது மருந்தரைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. வட்ட வடிவமான தூணொன்றின் துண்டம் போன்ற இந்தக் கல் 9 அங்குல அகலமும் 10 அங்குல நீளமும் 1 அடி 5 அங்குல உயரமும் கொண்டது. அதன் பக்கங்களில் வேள் ணாகன் மகன் வேள் கண்ணன் என்று எழுதப்பட்டுள்ளது. புராதன காலத்தில் நாகான் வழிபாட்டுத் தலமொன்று அந்த இடத்தில் அமைந்திருந்தமைக்கு இந்தக் கல் ஓர் அடையாளமாகலாம். எழில்வாணி வீட்டில் இருக்கும் இரண்டாவது சின்னம் ஒரு செங்கல். அது வெல்லாவெளியிலிருந்து கொண்டு வரப்பட்டதால் அதற்கும் களுவாஞ்சிக்குடியின் வரலாற்றிற்கும் எதுவிதமான தொடர்பும் இல்லை.
இதுவரை கவனித்தவற்றின் மூலம் இலங்கைத் தமிழர் வாழும் பகுதிகளில் உள்ள மிகவும் புராதனமான ஊர்களிற் களுவாஞ்சிக்குடியும் ஒன்றாகும் என்பதும் அது நாகான் குடியிருப்புக்களோடு உற்பத்தியானது என்பதும் தெளிவாகின்றன. அன்றாடத் தேவைக்குரிய பாவனைப் பொருள்கள் அங்குள்ளமை ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### படவிளக்கங்கள்

ஆட்டுக்கல்லு, களுவாஞ்சிக்குடிச் சந்தையில் உள்ளது.
கற் செக்கு, செக்கடித்தெரு, களுவாஞ்சிக்குடி
நாகக்கல், கண்ணகை அம்மன் கோவில், களுவாஞ்சிக்குடி
ஆட்டுக்கல், ஏறாவூர்
நாகக்கல், கச்சோ, மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரங்கில் ஏற்றப்படும் புலம்பெயர் அரசியல்

சந்திரசேகர ஆசாத்

அண்மையில் லண்டன் மாநகரில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுகளின்போது அனுசரணையாளராகச் செயற்பட்ட எரிக்சொல்ஹெய்ம், தென்னாபிரிக்க அரசின் பிரதிநிதியான இப்ராஹிம் இப்ராஹிம் ஆகியோர் லண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் உலகத் தமிழ் பேரவையினருடன் ஒரு கலந்துரையாடலை நடத்தியிருந்தனர். இது மிகவும் இரகசியமான முறையில் நடத்தப்பட்டாலும்கூட, எப்படியோ வெளியே கசிந்துவிட்ட நிலையில் சர்ச்சைக்குரிய பிரச்சினையாக உருவெடுத்துவிட்டது.

கடந்த அரசால் தடைசெய்யப்பட்ட அமைப்பாகப் பிரகடனப்படுத்தப்பட்ட உலகத் தமிழர் பேரவையுடன் இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேச்சு நடத்தியமை, புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடனான அணுகுமுறையில் கொழும்பு மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான அறிகுறிகளை வெளிப்படுத்தியுள்ளமை உண்மைதான். ஆனால் இவர்கள் என்ன பேசினார்கள், என்ன நோக்கத்துடன் இந்தப் பேச்சுகள் நடத்தப்பட்டன என்பது வெளிவராத நிலையில் பல தரப்பினரும் இது தொடர்பாகப் பல்வேறு வியாக்கியானங்களை முன்வைத்து பல்வேறு எதிர்க் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், தமிழ் மக்களின் புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் என்பன தொடர்பாக புலம்பெயர் தமிழர்களின் ஒத்துழைப்பைப் பெறும் வகையிலேயே இந்தப் பேச்சு நடத்தப்பட்டதாகவும் இதை இனவாதிகள் வேறு விதமாகப் பயன்படுத்திவிடக்கூடாது என்பதற்காகவே அது இரகசியமாக நடத்தப்பட்டதாகவும் தெரிவித்திருக்கிறார். இந்த விளக்கம் நிச்சயமாக எதிர்த்தரப்பினரைத் திருப்திப்படுத்திவிடும் அளவுக்கு இல்லை என்பது தெளிவு. அதேவேளையில் தமிழர் தரப்பிலும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழ் மக்கள் தொடர்பான ஒரு முக்கிய விடயம் பேசப்படும்போது அது வெளிப்படையாக நடத்தப்பட்டிருக்க வேண்டும் எனத் தனது அதிருப்தியை வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கருத்து வெளியிட்டிருக்கையில், அது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய பேச்சு நடத்தப்பட்டது எனவும் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பை பெறும் நோக்கத்துடனேயே மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறியிருந்தார். மேலும் இந்த வருட இறுதியில் புலம்பெயர் தமிழர்களால் ஒரு விழா கொழும்பில் நடத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

இத்தகைய கருத்துக்கள் எவையும் இனவாதிகளின் காதில் ஏறவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா, இந்த முயற்சி மீண்டும் புலிகளை அணிதிரள வழி வகுக்கும் எனவும் இது பற்றி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப் போவதாகவும் தெரிவித்தார். அதேவேளை ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் கொழும்பில் இடம்பெறும் விழாவுக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு 3.2 மில்லியன் டொலர் நிதி வழங்கியதாக வும் இந்தப் பேச்சுக்களின் பின்னால் புலிகளை மீள் எழுச்சி பெற வைக்கும் முயற்சிகள் இருப்பதாகவும் கருத்து வெளியிட்டிருந்தார். அதாவது வெறும் வாயைச் சப்பிக் கொண்டிருந்த இனவாதிகளுக்கு அவல் கொடுத்த கதையாக மாறியுள்ளது இந்தப் பேச்சு. எப்படியிருப்பினும் புலிப்பூச்சாண்டி காட்டி தமிழ் மக்கள் விரோத அரசியலைத் தலைமையேற்றிருக்கும் மஹிந்த தரப்பினர், இதை ஓர் ஆயுதமாகக் கையிலெடுத்துக் கொண்டுள்ளனர்.

இப்படிப் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ள இந்தப் பேச்சு பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்திய போதும் இதற்கு ஏதோ ஓர் அடிப்படையான ஆழமான உள்நோக்கம் இருப்பதாகவே கருத வேண்டியுள்ளது.

குறிப்பாக எரிக்சொல்ஹெய்ம், இப்ராஹிம் இப்ராஹிம் ஆகியோர் ஒரு சாதாரண விடயத்துக்காகவோ, விழா ஒன்றைக் கொழும்பில் நடத்துவதற்கான இணக்கப்பாட்டை எட்டவோ இதில் கலந்து கொண்டிருக்க முடியாது. நிச்சயமாக இதன் பின்னால் வலுவான கரங்களும் ஆழமான நோக்கமும் இருக்க வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர்களால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் அறிக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஜெனிவா அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. ஏற்கனவே இது கடந்த மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்படவிருந்த போதிலும் இலங்கை அரசின் வேண்டுகோளுக்கு அமைய அது ஒத்திவைக்கப்பட்டது. அது இன்னொரு முறை ஒத்திவைக்கப்பட மாட்டாது என்பதை ஆணையாளர் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார். எனவே செப்ரெம்பரில் இந்த விசாரணை அறிக்கை வெளியிடப்படுவது நிச்சயமான நிலையிலேயே இந்த லண்டன் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. எனவே இதன் நோக்கம் எப்படி இருக்கும் என்பது தொடர்பாக தமிழ் மக்கள் சிந்திக்காமல் இருக்க முடியாது. இப்படியான சந்திப்புக்கள், விழாக்கள் என்பவற்றை இலங்கை அரசு இரு வகைகளில் பயன்படுத்த முனையும் என்பதிலும் எவ்வித சந்தேகத் துக்கும் இடமில்லை.

முதலாவதாக, இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கும், புலம்பெயர் தமிழ் மக்களுக்கும் இலங்கை அரசுடன் ஒரு நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பி வருகின்றனர் என்ற பரந்த ஒரு தோற்றப்பாட்டை இந்தப் பேச்சு ஏற்படுத்துகிறது. இராணுவத்தால் கைப்[illegible] சில பகுதிகளை [illegible] உள்ளூர் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டன, மேலும் மஹிந்தவின் கொடுங்கோன்மை ஆட்சியை வீழ்த்த தமிழ் மக்கள் மைத்திரியின் வெற்றிக்கு ஆதரவு வழங்கியமை என்பவற்றைக் காட்டி தமிழ் மக்கள் இன்றைய அரசுக்கு ஆதரவாகவே இருக்கிறார்கள் என்று காட்ட முயல்வார்கள். இதன் மூலம் பிரச்சினைகளை உள்ளூரிலேயே பேசித் தீர்க்க முடியும் என்ற மாயையை உருவாக்கி அதன் மூலம் சர்வதேச அழுத்தங்களையும் குறைக்க முயல்வார்கள்.

மேலும், போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைகளை அனுமதிக்கப்போவதில்லையென அரசு தொடர்ந்து கூறிவரும் நிலையில், இங்கு ஒரு நல்லிணக்கம் நிலவுவதால் உள்ளக விசாரணைகள் மூலமே மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை சுட்டிக்காட்டும் குற்றங்களை விசாரிக்கும் ஒரு பொறிமுறையை சர்வதேசம் அனுமதிக்கும் வகையில் முன்னெடுக்கிறோம் என்று கூறி நகர்வுகள் முன்னெடுக்கப்படலாம்.

இரண்டாவது,போர்க்குற்றங்கள், மனித உரிமைகள் மீறல் தொடர்பான ஐ.நா. விசாரணை அறிக்கை செப்ரெம்பரில் இலங்கைக்கு எதிராக மிகவும் கடுமையான முறையில் வரும் என்றே கருதப்படுகிறது. கடந்த காலங்களில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் பல வலிமையான சக்திகள் இலங்கையைக் காப்பாற்ற முயன்றபோதெல்லாம் சர்வதேச மனித உரிமை நிறுவனங்களும், புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும் கொடுத்த அழுத்தங்கள் காரணமாகவே அவை வெற்றி பெற முடியாமல் போயின. அவற்றில் உலகத் தமிழர் பேரவையும் ஒன்று.

தற்சமயம் உலகத் தமிழர் பேரவையைக் கைக்குள் போடுவதன் மூலம் ஏனைய சில புலம் பெயர் தமிழர் அமைப்புக்களையும், மனித உரிமை அமைப்புக்களையும் வழிக்குக் கொண்டு வரலாம் என இலங்கை அரசு நம்புகிறது. அதன்மூலம் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையால் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் கொடுக்கும் அழுத்தங்களைக் குறைக்கவோ அல்லது மழுங்கடிக்கப்படவோ முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம். ஆனால் இந்த நோக்கம் சாத்தியப்படுவதற்கான சூழ்நிலை மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

உலகத் தமிழர் பேரவை நடத்திய பேச்சுக்கள் தொடர் பாக வும் உத்தேச விழா தொடர்பாகவும் பல புலம் பெயர் அமைப்[illegible]ளையும், விமர்சனங்களையும் முன்வைத்து வருகின்றன. எப்படியிருப்பினும் மேற்படி சந்திப்பும், இடம்பெறவுள்ள நிகழ்வும் தமிழ் மக்களின் நலன்களுக்கும், நீதியையும் நியாயங்களையும் பெறுவதற்கான கோரிக்கைகளுக்கும் எதிராக இலங்கை அரசால் முழுமையாகப் பயன்படுத்தப்படும் என்ப தில் எவ்வித சந்தேகத்துக்கும் இடமில்லை. இந்தக் கோணத்தில் பார்க்கும் போது தமிழ் மக்களைப் பொறுத்தவரை எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் சாத்தியமே அதிகமாயுள்ளது.

அதேவேளையில் இந்தப் பேச்சு மூலம் மஹிந்த அரசு, புலம்பெயர் அமைப்புக்கள் மீது விதித்த தடை சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதில் முக்கியமான விடயம் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களுள் உலகத் தமிழர் பேரவையும் உள்ளடங்கியிருக்கிறது என்பதாகும். எனவே புலம்பெயர் அமைப்புக்களுக்கும் தாயக மக்களுக்கும் இடையே உறவுகளைப் பேணவும் வளர்க்கவும் வாய்ப்புக்கள் உருவாகுவதற்கான வழிகளும் திறக்கக்கூடும். ஆனால் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு போன்ற நடவடிக்கைகளில் சுமந்திரன் குறிப்பிட்டது போன்று உலகத் தமிழர் பேரவை பங்களிப்பது பற்றி பேசப்பட்டிருந்தால் அது எப்படி நடக்கும் என்பது இன்னுமொரு கேள்வி. அதாவது இந்த நடவடிக்கைகள் மத்திய அரசு மூலமாக நடக்குமா அல்லது மாகாண அரசு மூலமாக நடக்குமா என்பதுதான் கேள்வி.

மத்திய அரசு மூலம் இடம்பெற்றால் அது முழுமையாக மக்களைச் சென்றடையுமா என்பது ஒரு புறமிருக்க, மாகாண சபையின் அதிகாரங்களை மேலும் பலவீனப்படுத்திவிடும் நிலையும் உருவாகும். இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், உலகத் தமிழர் பேரவையும் எப்படியான முடிவை எடுக்கப் போகின்றன என்பதும் மிகவும் முக்கியமான விடயமாகும்.

எனவே தற்சமயம் எடுக்கப்படும் இந்த முயற்சி மிகவும் எச்சரிக்கையாகத் தொடரப்பட வேண்டும். இதை அரசு தனது நலன்களின் அடிப்படையில் மட்டுமே பயன்படுத்துவதற்கு விட்டு விடக்கூடாது. அதேவேளை புலம்பெயர் அமைப்புக்கள் இந்தச் சந்தர்ப்பத்தைத் தமிழ் மக்களின் நலன்கள் சார்ந்த வகையில் பாவிக்க வேண்டும். அடிப்படையில் இது சினேகபூர்வப் போர்வையில் இடம்பெறும் ஒரு மௌனப்போர்.

இதில் எவர் வெல்லப் போகின்றனர் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். புலம்பெயர் தமிழ் மக்களின் அரசியல் என்பது, தீவிரவாத நடைமுறைச் சாத்தியமற்ற பாதையிலிருந்து வெளியேறுவது என்ற பெயரில் சரணடைவு அரசியலுக்குள் விழுந்து விடக்கூடாது என்பதுதான் தமிழ் மக்களின் கவலை. அப்படியான போக்கு தமிழ் மக்களால் முற்றாக நிராகரிக்கப் படும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பாட்டுக்கு மத்தியிலும் அமெரிக்கா – சீனா பேச்சு ஆரம்பம்

- செப்ரெம்பரில் உச்சிமாநாடு
- தென்சீனக்கடலில் யு.எஸ்., ஜப் படைகள்
- பிலிப்பைன்ஸுடன் இணைந்து பயிற்சி
- தலிபான் முன்னேற்றம் முறியடிப்பு முக்கியநகரம் ஆப்கான் படைகள் வசம்



அமெரிக்காவும் சீனாவும் தங்களுக் கிடையிலான பொருளாதார இரு தரப்பு கலந்துரையாடலின் 7ஆவது மூலோபாய மாநாட்டை கடந்த வாரம் திங்கட்கிழமை வொஷிங்ரனில் ஆரம்பித்தன.

அதேநேரம் தென்சீனக்கடல் பகுதியில் சீனா கடல் நீரை மேடாக்கி இராணுவ முகாம்கள் அமைப்பதற்கு எதிராகப் பிலிப்பைன்ஸ் நாடு எடுத்துவரும் முயற்சிகளுக்கு ஆதரவாக அந்த நாட்டுடன் இணைந்து கூட்டுப்போர் ஒத்திகைகளிலும் அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது.

வொஷிங்ரனில் ஆரம்பமாகியுள்ள பேச்சில் இரண்டு நாடுகளும் தங்களுக்கிடையிலான வர்த்தகம் முதற்கொண்டு பயங்கரவாதம் வரையிலான விடயங்களை விவாதிக்கப் போவதாகத் தெரியவந்துள்ளது. ஆனால் எந்த விடயத்தில் இரு தரப்புக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்படும் என்பது கூறமுடியாமலேயே இருக்கிறது.

இந்தப் பேச்சு ஆரம்பமாகியுள்ள சூழ்நிலை அவ்வளவு சுமுகமானதாகத் தென்படவில்லை என்கிறார்கள் பார்வையாளர்கள். ஏனென்றால் சீனாவைப் புறக்கணித்துவிட்டு ஆசிய – பசிபிக் வர்த்தக உடன்பாடு ஒன்றை செய்து கொள்ள அமெரிக்கா முயற்சி செய்துவரும் அதேசமயம், சீனா மாற்றீடான நிதி நிறுவனங்களை நிறுவுவதிலும் அமெரிக்க பணியாளர்கள் தொடர்பான இணையத் திருட்டுக்களில் ஈடுபடுவதில் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் கூறப்படும் ஒரு காலப் பகுதியில் இந்தப் பேச்சு ஆரம்பமாகியுள்ளது. சீனாவைப் பற்றிய ஆத்திரங்கொள்ளக்கூடிய ஒரு நீண்ட பட்டியல் முறைபாடுகள் அமெரிக்காவிடம் இருப்பதாக 1972ஆம் ஆண்டு றிச்சார்ட் நிக்ஸன் சீனாவுக்குச் சென்றபோது அவருடன் சென்றிருந்த மொழிபெயர்ப்பாளர் குழுவின் தலைமை அதிகாரி சாஸ்பிரிமன் என்பவர் கூறியிருக்கிறார்.

இவைகளைவிடப் பிரச்சினைக்குரிய தென்சீனக் கடற்பகுதியில் சீனா சில தீவுகளை உருவாக்கி முடித்திருப்பதும் 2016இல் தாய்வானில் தேர்தலை நடத்த முடிவெடுக்கப்பட்டிருப்பதும்கூட அமெரிக்காவுக்கு நெருடல்களைத்தரும் விடயங்கள்.

**செப்ரெம்பரில் உச்சி மாநாடு**

இந்த வருடப் பேச்சானது வரும் செப்ரெம்பரில் அதிபர் பராக் ஒபாமாவுக்கும் சீன அதிபர் ஸி ஜின் பிங்கிக்கும் இடையில் நடைபெறவிருக்கும் சந்திப்புக்கு முன்னோடியான ஏற்பாடுகளைச் செய்வதையே நோக்கமாகக் கொண்டிருக்கும் என்று தெரிகிறது.

இருதரப்புக்களுக்கும் இடையிலான மிகக் கடினமான மிகவும் உணர்ச்சிகரமான மற்றும் மிகச் சிக்கலான பாதுகாப்பு விடயங்களில் ஒரு நிலைப்பாட்டை உருவாக்கிக்கொள்ள வொஷிங்டனிலுள்ள சீனத் தூதரும் பீஜிங்கிலுள்ள அமெரிக்கத் தூதரும் முயன்று வருகின்றார்கள்.

இவைகளில் முக்கியமாக பெருங்கடல்கள், வான்பரப்புகள், கணினித்துறைகள் மற்றும் விண்வெளிகள் போன்ற விடயங்களில் இவர்கள் எவ்வாறு இணங்கிச் செயற்படப் போகிறார்கள் என்பது முக்கியமான விடயம். பேச்சு ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கையில், அவைபற்றி அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறுகையில், சிக்கலுக்குள்ளாகியுள்ள பிரச்சினைகள் குறித்து வெளிப்படையாகப் பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருப்பதானது வேறுபாடுகளின் அகலத்தைச் சுருக்கிக் கொள்ள உதவியாக இருக்கும் என்றார்.

வர்த்தக இரகசியங்கள் உட்பட எந்தவிதமான ஒட்டுக்கேட்டலுக்கும் தாங்கள் தொடர்ச்சியாக எதிர்ப்புத் தெரிவித்து வருவதுடன் சிலவற்றின் மீது நடவடிக்கை எடுத்தும் வருவதாக சீன அதிகாரி ஒருவர் கூறினார்.

உலக நடப்பு
ரெங்கன்



**பிலிப்பைன்ஸுடன் இணைந்து சீனாவுக்கு எதிரான பயிற்சிகள்**

தென்சீனக் கடற்பகுதியில் பிரச்சினைக்குள்ளாகியுள்ள சில பாறைகள் அடர்ந்த தீவுகளில் கடலை மேடுறுத்தி புதிய தீவுகளை சீனா உருவாக்கி வருவது அந்தப் பகுதியில் பதற்றத்தைத் தோற்றுவித்துள்ளது. அதனால் பிலிப்பைன்ஸ் நாடு அந்தப் பகுதிக்கான தனது பிரதேசங்களைத் தற்காத்துக் கொள்ளும் முயற்சிகளில் இறங்கியுள்ளது. அந்த வகையில் பிலிப்பைன்ஸ் நாட்டின் பாதுகாப்புக்கு ஆதரவு வழங்குவதை உறுதி செய்வதற்கு ஜப்பானும் அமெரிக்காவும் பிலிப்பைன்ஸ் நாட்டுடன் இணைந்து தனித்தனித்தனியாக படைகளின் ஒத்திகைகளை நடத்தி வருகின்றன.

வருடந்தோறும் பிலிப்பைன்ஸ் படைகளுடன் இணைந்து அமெரிக்கப் படைகள் நடத்தும் பயிற்சிகள் பலவான் தீவுகளுக்கு கிழக்கில் கடந்த திங்களன்று ஆரம்பமாகின. பயிற்சிகள் ஜுன் 26ஆம் திகதி வரை நீடித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதே பலவான் தீவுகளுக்கு அருகில் ஜப்பானியக் கடற்படையினரும் பிலிப்பைன்ஸ் படைகளுடன் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

தென்சீனக் கடற்பகுதியில் சீனாவுக்கும் அந்தப் பகுதியிலுள்ள ஏனைய நாடுகளுக்கும் இடையில் தீவுகளின் உரிமை குறித்து சிக்கலும் முரண்பாடுகளும் தோன்றியுள்ளன. இவை அதிகரித்துவரும் நிலையில் சீனாவுக்கு எதிராக ஏனைய நாடுகளை அமெரிக்கா ஆதரித்து வருகின்றது. பிலிப்பைன்ஸ் எல்லைக்காவல் படைகளுக்கு ஜப்பான் ரோந்துப் படகுகளை வழங்கி உதவுகின்றது. சீனா கடல் எல்லைப் பகுதியில் 80 வீதத்தைத் தன்வசமாக்கிக்கொள்ள எடுத்துவரும் முயற்சிகளுக்கு எதிராக உத்வேகமாகக் கிளர்ந்தெழும்படியாக அண்டைநாடுகளுக்கு பிலிப்பைன்ஸ் அதிபர் வெனிக்னோ அகினோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜப்பானிய படைகளின் பிலிப்பைன்ஸுடனான பயிற்சிகள் ஸப்ராட்லி தீவுகளையடுத் துள்ள பகுதிகளில் நடை பெறும். இந்த இடத்தில் பிலிப்பைன்ஸ் தனக்குச் சொந்தம் எனக் கூறும் பகுதியில்தான் சீனா 2000 ஏக்கர் நிலத்தை கடல் நீரின் மீது கட்டியெழுப்பி யுள்ளது. இந்தப் பகுதியை வியட்னாம், புருணை, தாய்வான் மற்றும் மலேசியாவும் தமக்குரியவையாகச் சொந்தம் பாராட்டுகின்றன. இந்தப் பகுதிக்கு பி.30 நீர்மூழ்கி எதிர்ப்புக் கப்பல் ஒன்றையும் கடல் பிரதேசக் கண்காணிப்பு விமானத்தையும் 20 படையினரையும் அனுப்ப ஜப்பான் உத்தேசித்துள்ளது.

இந்தப் பகுதிகளில் காணப்படும் தீவுகளில் பெருமளவு எரிவாயுக்களும் வேறு கனிமப் பொருள்களும் கிடைக்கும் என்பது போக, இந்தப்பகுதியில் பெருமளவில் ஏனைய கடல் வளங்களும் தாராளமாகக் கிடைக்கும் வாய்ப்பிருப்பதாகக் கருதப்படுகின்றது. அதனாலேயே அந்தப் பிராந்தியத்தில் உள்ள நாடுகள் பலவும் அந்தப் பகுதியின் மீது அளவுக்கு அதிகமாக நாட்டம் கொண்டுள்ளன.

# 2 லட்சம் வரிப்பணத்தில் கிடைத்த பயன் என்ன?

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதனை விட ஓர் அமர்வுக்காக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட் டங்களிலிருந்து வருகை தரும் 13 உறுப்பினர்களுக்கும் போக்குவரத்துப் படியாக 7 ஆயிரம் ரூபா வீதம் 91 ஆயிரம் ரூபாவும், கிளிநொச்சி – யாழ்ப்பாணம் மாவட்டங்களிலிருந்து வருகை தரும் உறுப்பினர்கள் 17 பேருக்கு போக்கு வரத்து படியாக 3 ஆயிரம் ரூபா வீதம் 51 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும். இதற்கு மேலாக அமர்வில் கலந்து கொண்ட ஒவ்வொரு உறுப்பினருக்கும் அமர்வுக் கொடுப்பனவாக 250 ரூபா வீதம் 7 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்படும். இதன் மூலம் ஒரு லட்சத்து 49 ஆயிரத்து 500 ரூபா பணம் ஒரு அமர்வில் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவாகச் செலவிடப்படும்.

இதனை விட, மாகாணசபையில் பணியாற்றும் ஊழியர்களின் அன்றைய ஒரு நாள் கொடுப்பனவுகளையும் சேர்த்துக் கணக்கிட்டுப் பார்த்தால் நேரடியாகவும் – மறைமுகவும் மாகாண சபையின் ஓர் அமர்வுக்குக் கிட்டத்தட்ட 2 லட்சத்து 35 ஆயிரம் ரூபா வரையிலான மக்கள் பணம் செல விடப்படுகின்றது. இத்தனை செலவுகளுடன்கூடிய 23ஆம் திகதி அமர்வினால் மக்களுக்கு ஏற்பட்ட பயன் என்ன?

இந்தக் கேள்விக்கு விடையளிப்பது கடினம். இதைவிடப் பல லட்சங்களைச் செலவிட்டு நடத்தப்படும் இலங்கை நாடாளுமன்றத்திலும் இப்படி அமர்வுகள் அடிக்கடி ஒத்திவைக்கப்படவில்லையா என்று ஒருவர் கேள்வி எழுப்ப முடியும். போரால் நலிந்து கிடக்கும் வடபகுதிக்கு இவ்வாறு வரிபணத்தை மக்கள் நலனுக் காகவன்றி வீணடிப்பதுதான் உடனடித் தேவையா என்ற கேள்வியையே பதிலாக எழுப்ப முடியும். வடக்கு மாகாண சபை அமைக்கப்பட்டபோதும், அதற்குத் தன் னெழுச்சியாக மக்கள் பெருமெடுப்பில் வாக்களித்தபோதும், இதனைத்தான் அதனிடமிருந்து மக்கள் எதிர்பார்த் தார்களா? என்பதும் மற்றொரு பதில் கேள்வியாக அமையலாம்.

**கடமையும் பொறுப்பும் முக்கியம்**

மக்கள் பிரதிநிதிகளின் சிறப்புரிமைகள் எவ்வளவு தூரம் முக்கியமோ அதே போன்று, மக்களின் வரிப்பணமும் வீண் விரயம் செய்யப்படக் கூடாது என்பதும் முக்கியம். மாகாண சபை உறுப்பினர்கள் போராட்டம் நடத்தியது தவறல்ல. ஆனால், தமது நலன்களுக்காக மக்களின் நலனைப் புறக்கணிக்க அவர்கள் எடுத்த முடிவுதான் கவலை கொள்ள வைக்கிறது.

மக்களின் எத்தனையோ பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அப்படியே கிடக்கின்றன. போரில் உயிரிழந்த மக்களுக்கான நினைவிடம் அமைப்பது தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அவற்றில் உணர்ச்சிகரமான ஒன்று. அதற்கான ஓர் அடிகூட இதுவரையில் எடுத்து வைக்கப்பட்டதாக மாகாண சபையால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. அப்படியிருக்கையில் அதற்காக போராட்டம் எதுவும் நடந்ததாகவும் தெரியவில்லை. எனவே மாகாண சபை உறுப்பினர்கள் எப்போதும் போல மக்கள் நலனில் கூடிய அக்கறை காட்டுவதையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அதுவே அவர்களின் கடமையும் பொறுப்பும் கூட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயன் தரும் பண்பாட்டால் விளைபவை

# அழகுக் கோலங்கள்



அறிவுநம்பி

ஒரு பேருந்துப் பயணத்தின் போது முன் இருக்கையில் அமர்ந்திருந்த இருவரின் உரத்த உரையாடல் நான் விரும்பாமலேயே என் காதுகளில் படர்ந்து நின்றது. தன் ஊரில் மிதமான மழை பொழிந்ததை ஒருவர் கூறினார். மற்றவர் ஊரில் மழையில்லை என்றார். எங்க நல்லவங்க இருக்காங்களோ அங்கு மழையிருக்கும் என்ற மரபுத் தொடர் உச்சரிக்கப் பெற்றது. மண் வளத்துக்கு மழை சரி, மன வளத்துக்கு எது? என்ற வினா என்னிடம் பூத்தது. அப்போது வள்ளுவம் மின்னியது. பண்புடையார் பட்டுண்டு உலகம் என்ற விடையும் கிடைத்தது. பண்பாட்டுக் கூறுகளின் அகல நீளங்களை அளந்து பார்க்க வேண்டியது தேவையானது.

பண்பாட்டை வெளிப்படுத்தும்போது புறக்கூறுகள் மாறியிருக்கலாம். பண்பாட்டின் மூலக்கூறு மாறாது, மாறக் கூடாது. சில காலத்திற்கு முன்னர் எங்கள் ஊரில் நடந்த ஒரு திருமண நிகழ்வில், எழுத்தாளர் ஒருவரின் அருகில் அமர்ந்து உணவு உண்ண நேர்ந்தது. நான் உண்டு முடிப்பதற்கு ஐந்து மணித் துளிகளுக்கு முன் அவர் உண்டு முடித்துவிட்டார். ஆனால், நான் உண்டு முடித்ததும் அவர், "தம்பி! எழும்புவமா?" என்றார். எனக்காகத் தான் அதுவரை காத்திருந்தார் என்பது அப்போதுதான் புரிந்தது. பந்தியில்கூட சக மனிதனை மதிக்கும் ஓர் ஒழுங்கை நேசிக்கும் இப்பண்பாடு இன்று மெல்ல மெல்ல மறைகின்றது.

பந்திக்கு முந்து என்ற பழமொழியின் பொருளைப் பிழையாகக் கருதியவர்கள், முதல் பந்தியில் இடம்பெற முந்துகின்றனர். உணவுப் பந்தி நிகழுமிடத்தில் தெரிந்தவர், தெரியாதவர் யாராக இருந்தாலும், உண்பவர்களுக்கு நேர்முன்பாக – முந்தியிருந்து – உண்பவர்களை உபசரிக்க வேண்டும். என்ன தேவை என்று கேட்டு உண்பிக்க வேண்டும். இந்தப் பண்பாட்டு மரபு இன்று காணாமல் போய்விட்டது.

கிருபானந்த வாரியார் தன் சொற்பொழிவில், வைக்கோலை எடுத்துத் தொழுவத்தில் கட்டியுள்ள மாட்டுக்குப் போடுவதும் பந்தியில் மனிதர்கட்குப் பரிமாறுவதும் ஒன்று போலாகி விட்டது என்பார். மாடு உண்பதை நாம் கவனிக்க வேண்டியதில்லை. ஆனால், விருந்தினராக வந்தவர்களின் எதிரே நின்று இன்னும் கொஞ்சம் பாயாசம் சாப்பிடுகிறீர்களா எனக் கவனிக்கும் போதுதான் இரண்டு தரப்பிலேயும் அன்பு மலரும் என்று கூறுவார். இயந்திரத்தனமான விருந்து உபசரிப்பில் மனிதம் இல்லை. ஆனால் அதுதான் இன்று நடக்கிறது.

ஒரு மேடை. பக்கத்தில் அமர்ந்திருந்தவர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற ஒரு மூத்த பேராசிரியர். என் பக்கம் தலையைச் சாய்த்தபடி மெதுவாகச் சொன்னார், "முதல் வரிசையிலே நான்காவதா இருக்கிறானே, அவன் என்னிடம் படித்தவன். இன்றைக்கு எனக்கு முன்னால் கால்மேல் கால் போட்டு மரியாதையில்லாமல் அமர்ந்திருக்கிறான் பாருங்கள்" என்றார். அப்படி அமர்வது ஒரு காலத்தில் மரியாதைக் குறைவாகக் கருதப் பட்டது. இன்று யாரும் அதனைக் கருத்திலெடுப்பது இல்லை. முறைமைகள் மாறி விட்டன. குருகுலக் கல்வி முறையில் ஆசான் மட்டும் நடுநாயகமாக அமர்ந்திருப்பார். சீடர்கள் அவரருகே நின்று கொண்டு அல்லது கீழே தரையில் அமர்ந்து பணிவாகப் பாடங்கேட்பர். இப்போதோ மாணவர்கள் அனைவரும் அமர்ந்திருக்க ஆசிரியர் நின்று கொண்டு பாடம் நடத்துவதே நிகழ்முறை. சூழலுக்கேற்பச் செயல்பாடுகள் மாறும். ஆனாலும், பண்பாட்டின் உயிரைப் பறிக்கலாகாது.

எழுத்தறிவித்தவன் இறைவன் என்பது பயில்மொழி. அந்த இறைக்கு முன்பாகப் பணிவுடன் தோன்றுவதுதானே ஒழுங்கு. அப்படி இருக்கும்போது, அவர்களின் மனத்திரையில் ஒரு தொடர் தானாகவே ஒளிரும். அது, "பணியுமாம் என்றும் பெருமை". இது கற்றோர் பண்பாடு.

காலச் சூழல் நடைமுறைக் கூறுகளை மாற்றலாம். பழங்காலத்தில் ஒரு பெண் தன் கணவருடைய பெயரைச் சொல்லுவதில்லை. சொல்லுவது மகா குற்றம். இன்றைக்கு, ஊடகங்களில் செய்தி வாசிப்பவர்கள் அனைவரும் ஊரறிய, உலகமறியத் தன் பெயருடன் தன் கணவரின் பெயரையும் உரத்து அறிவிப்பது மரபாகிவிட்டது.

பல வீடுகளில் கணவரைப் பெயர் சொல்லி மனைவி அழைக்கும் வழக்கமும் வந்துவிட்டது. கேட்டால், கூப்பிடுவதற்குத்தானே அவரது (கணவரின்) பெற்றோர் பெயர் வைத்துள்ளனர் – இது மனைவியின் பதில். பின் தூங்கி முன் எழும் மரபும், கணவர் உண்ட எச்சில் இலையில் அல்லது தட்டில் மனைவி உண்ணும் பழக்கமும் மாறிவிட்டன. அவை பொருளற்றவை எனக் கருதப் பெற்று மாற்றங்களை இவ்வுலகம் பெற்றுவிட்டது.

பழங்காலத் திரைப்படங்களில் வைகறையில் துயில் எழும் நங்கை தன் மணவாளனின் கால்களைத் தொட்டு வணங்கிய பிறகு அன்றாடப் பணிகளை மேற்கொள்வதாக வரும் காட்சி இன்றைய தலைமுறையினருக்கு நகைச்சுவைக் காட்சியாகிப்போனது. இத்தகு பழக்க வழக்கங்களை ஊடகங்களும், காலப் பின்னணியும், வாழ்க்கை வேகமும் மாற்றின. இதில் பிழையில்லை. ஆனால், புது நாகரிகம் என்ற பெயரால் உண்டாகும் பண்பாட்டுச் சரிவுகளை எதில் சேர்ப்பது?

ஓர் ஆடவன் பல பெண்களோடு திரிகிறான் என்றால், அவனைத் திருத்துவதே சரியான தாயிருக்குமே அல்லாமல் ஆணும் பெண்ணும் சமம் என்ற முழக்கத்துடன் ஆடவர்கள் பலருடன் ஒரு பெண்ணும் திரிவது அறமாகுமா என்போரின் வினா அழுத்தமானது. இதில், ஆண், பெண் இருவருக்குமே மிகப் பெரிய பொறுப்புண்டு. முறையாக யாவும் நடந்தால் அஃது இல்லறப் பண்பாடு.

ஒரே இடம், ஒரே நபர், ஒரே செயல்பாடு. ஆனாலும், ஒன்றைச் செய்வது போல மற்றொன்றைச் செய்ய இயலாது. குறுக்கே தடுப்பது பண்பாடு என்ற உயரிய தடைச் சுவராகும்.

திருமண மன்றம் போன்ற ஒரு பொது இடத்தில் இருபது வயது இளைஞன் ஒருவன் ஒரு வயதுக் குழந்தையை முத்தமிடலாம். அதே இடத்தில் அதே நபர் பதினாறு வயதுப் பெண்ணிடம் அப்படி நடக்க இயலாது. முன்னது கனிவான அன்பின் பரிமாற்றம், பின்னது காமத்தின் களியாட்டமென்றே கருதப் பெறும்.

ஆணும், பெண்ணும் நான்கு சுவர்களுக்குள் எவ்வளவு நெருக்கமாகவும் இருக்கலாம். பலர் நடுவில் இவ்வாறு இருத்தல் மரபு இல்லை. ஆனால், திரைப்படங்களும், இணையங்களும் புகுத்திய புதுப் போக்குகளின் மயக்கத்தில் இன்று இளைஞர்களும், இளம் பெண்களும் பயணங்களின்போது பேருந்தில், தொடர்வண்டியில் அமர்ந்துள்ள கோலங்கள் எப்படி எனக் கூற வேண்டியதில்லை.

இன்றைய காதல் இணையர்களின் இருப்பு தலைகீழானது. சுற்றியிருப்பவர்கள் தாம் வெட்கப்பட்டுக் கொண்டு வேறு திசைகளில் பார்வையைச் செலுத்துகின்றனர். மேனிக் காதலாக அல்லாமல் மேன்மைக் காதலாக இருக்கும்போதுதான் அது அகப் பண்பாடு.

பழைய காலத்து உடை இன்றில்லை. உணவுப் பழக்கங்களும் அப்படியே. போக்குவரத்து வசதிகள் மாறி விட்டன. அறிவியல் வளர்ச்சிக்கேற்ப வீடுகளின் அமைப்பும் பிறவும் வேறாகிவிட்டன.

இவை போன்றதன்று பண்பாடு என்பது. பத்தாண்டுகளுக்கு முன்பு வரை எல்லாத் திருமண மண்டபங்களிலும் மண்டபத்துக்கு வெளியில்தான் காலணிகளை விட்டிருந்தனர். ஆனால் இப்போதோ, மணமக்களுக்கு வாழ்த்துக் கூறவும், பரிசு கொடுக்கவும் மணமேடைக்குவரும்போது காலணிகளுடனே வருவது பல இடங்களில் நடக்கிறது.

தீபமேற்றப்பட்டு, அக்கினி வளர்க்கப் பெற்று, சில இடங்களில் இறையுரு வைக்கப்பட்டுள்ள மேடையைப் பலரும் கோயில் போன்றே எண்ணுவர். அந்த மேடையைப் புனிதமாகக் கருதுவர். ஏனெனில், விபூதி பூசியும், அட்சதை தூவியும் வாழ்த்துமிடம் வழிபாட்டிடம் போன்றது என்ற நினைவு இறுக்கமாயிருந்தது. குறைந்தபட்சம் மேடையிலாவது காலணி அணியாதிருக்கலாமே என்பது மூத்த குடிமக்கள் வழிகாட்டல்.

ஒரு பாடசாலைப் பரிசளிப்பு விழாவில் ஒரு நாடகம் நடந்தது. சாலமோன் கதைதான். மேடை நடுவில் சாலமோன். எதிரில் ஒரு பச்சிளங் குழந்தை. இடதுபுறம் இருந்த வந்த நங்கை அந்தக் குழந்தை தன்னுடையது என்கிறாள். வலதுபுறமிருந்து வருபவளும் அந்தக் குழந்தை தன்னுடையது என்பாள்.

உண்மையறிய அந்த மன்னன் வாளையுருவி அந்தக் குழந்தையை வெட்டப் போவதாகக் கூற உண்மையான தாய் பதறிப் போய், அரசே வெட்டாதீர்கள், அவளிடமே குழந்தையைத் கொடுங்கள் என்பாள். இஃது உலகறிந்த கதை.

அன்றைய நாடகத்தில் காட்சிகள் மாறின. அரசனின் எதிரே குழந்தை. இருபுறமிருந்தும் வந்த பெண்கள் இருவருமே அந்தக் குழந்தை தங்களுடையதில்லை என்று வாதிடுகின்றனர். காவலர்களை அரசன் நோக்க, "குப்பைத் தொட்டியில் அழுதபடி கிடந்தது இந்தக் குழந்தை. அருகினில் இவர்கள் நின்று கொண்டிருந்தனர். மூவரையும் இங்கே கொணர்ந்தோம்" என்றனர்.

உண்மையான தாயைக் கண்டறியும் நோக்கில் வேகமாக வாளைத் தூக்குவார் மன்னர், இடதுபுறம் நின்ற பெண், வெட்டு ஒன்று துண்டு ரெண்டாக வேண்டும் என்று கூறிச் சிரிப்பாள். வலதுபுறப் பெண்ணோ, அரசே சன்னம் சன்னமாக வேண்டுமானாலும் அறுத்துக் கொள்க என்று கூறிப் புன்னகைப்பாள்.

ஒன்றும் புரியாத அரசர், உள்நுழையும் அமைச்சரிடம் "என்ன இது?" என்பார். அமைச்சர் தலைகவிழ்ந்தபடியே, "மன்னியுங்கள் அரசே! தாங்கள் இப்போது வடமாகாணத்திலே இருக்கிறீர்கள்?" என்று பதில் தருவார். கதை யாருடையது என்பதைவிடக் கருத்துக்கு மதிப்புத் தரவேண்டிய பகுதி இது.

மாற்றங்கள் தேவைதான். ஆனால், மூலத்துவம் மாறக் கூடாது. நீங்கள் கையில் ஏந்திக் கொண்டிருப்பது தங்கத் தட்டாக இருக்கலாம், வெள்ளிப் பேழையாக இருக்கலாம், வைரம் பதித்த கலயமாக இருக்கலாம், அவை முக்கியமில்லை. அவற்றில் பரிமாறப் பெறும் உணவு கெட்டுப் போயிருந்தால் எப்படி உண்ண முடியும்? வளைந்து நெளிந்து போன தகரத் தட்டில் கூடத் தரமான உணவை உண்ண முடியும். வெளி நாகரிக நடைமுறைகள் யாவும் பாத்திரக் கலங்கள். பண்பாடுதான் உணவு.

தனக்கும், பிறருக்கும் பயன் தரும் பண்பாடுகளால் விளையக் கூடியவை அழகுக் கோலங்கள். மற்றவையெல்லாம் வெறும் அலங்கோலங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்றால் இந்தியாவின் வெற்றி தோற்றால் டோனியின் தோல்வியா?

பிரகாஷ்




கிரிக்கெட் உலகில் தற்போதைக்கு பிரபலமாகப் பேசப்பட்டுவரும் விடயங்களில் ஒன்று டோனியின் தலைமைத்துவம் தொடர்பான விவாதங்கள். இந்தியா பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஒருநாள் தொடரினை 2–1 என்ற அடிப்படையில் பங்களாதேஷ் கைப்பற்றியது தான் தாமதம் உடனே டோனியை தலைமைப் பதவியில் இருந்து மாற்ற வேண்டும் என்று எதிர்ப்புக் குரல்கள் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்துவிட்டன. ஒரு தொடரின் செயல்பாட்டை வைத்து ஒரு தலைவரை மாற்ற வேண்டும் என்று குரல் கொடுப்பவர்கள் தோல்வியின் பின்னால் இருக்கும் காரணங்களைப் பற்றி அலசி ஆராய மறந்துவிடுகிறார்கள் என்பதே வேதனைக்குரிய விடயம். இந்த வகையில் இந்திய அணியின் இந்த அதிர்ச்சித் தோல்விக்குப் பின்னால் தவிர்க்க முடியாததும் ஏற்றுக் கொள்ளக்கூடியதுமான இரண்டு பெரிய காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஒன்று மோடியின் பங்களாதேஷ் பயணம். இரண்டாவது பயிற்சியாளர் இல்லாமல் களமிறங்கிய இந்திய அணி.

**மோடியின் பங்களாதேஷ் பயணம்**

இந்தியா– பங்களாதேஷ் அணிகளின் தொடர் ஆரம்பமானது ஜுன் 10ஆம் திகதி. இந்திய அணி பங்களாதேஷிற்கு சுற்றுப்பயணம் செய் யத்திட்டமிட்டது ஜுன் 6ஆம் திகதி. ஆனால் இந்தியப் பிரதமர் மோடி பங்களாதேஷிற்கு திடீர் பயணம் ஒன்றை ஜுன் 7ஆம், 8ஆம் திகதி களில் மேற்கொண்டிருந்தார். இதனால் இந்திய அணி பங்களாதேஷிற்குச் சென்றால் மோடி, இந்திய அணி என்று இருவேறு விதமான உயர் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வது கடினம் என்று பங்களாதேஷ் கிரிக் கெட் கட்டுப்பாட்டுச்சபை இந்தியாவை பங்களாதேஷிற்கு இரண்டு நாள்கள் தாமதமாக வருமாறு தெரிவித்தது. இதனை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் ஏற்றுக் கொண்டது. இதனால் ஜுன் 9ஆம் திகதியே இந்திய அணி பங்களாதேஷிற்குச் சென்று பத்தாம் திகதி தொடரில் பங்கேற்றது.

எவ்வளவு பெரிய ஜாம்பவானாக இருந்தாலும் ஓர் அணி அன்னிய மண்ணிலுள்ள ஆடுகளத்தைப் பற்றி பார்வையால் அறிந்து கொள்ள முடியாது. இந்திய அணியும் இதற்கு விதிவிலக்கல்ல. இந்த நிலையில் ஒரு மணிநேரம் காலையில் பயிற்சியெடுத்து விட்டு ஓர் அணியை வீழ்த்துவதென்பது எப்படிச் சாத்தியமாகும். போதிய அவகாசமும் இக்கட்டான சுழ்நிலைகளும் நிறைந்த இந்தத்தோல்விக்கும் டோனிக்கும் என்ன சம்பந்தம்?

**பயிற்சியாளர் அற்ற இந்திய அணி**

இந்தியாவின் இந்தத்தோல்விக்கான இரண்டாவது காரணம் அந்த அணி பயிற்சியாளர் இல்லாமல் களமிறங்கியமையே ஆகும். ஓர் அணி எழுச்சி காணுவதிலும், வீழ்ச்சி காணுவதிலும் அந்த அணியின் பயிற்சியாளர் அளப்பெரும் பங்கு வகிக்கிறார். மட்டுமல்லாது காலை, மாலை நேரத் தயார்ப்படுத்தல்களுக்கு வீரர்களை அழைத்துச் செல்லுவதும் நுட்பங்களை அறியச் செய்வதும் எதிரணிகளின் பலவீனங்களை பகிரங்கப் படுத்துவதிலும் சர்வதேச பயிற்சியாளர்களுக்கு நிகர் அவர்களே. உதாரணமாக இலங்கையின் களத்தடுப்பு மேலும் மெருகேற்றப்பட வேண்டுமென்று தென்னாபிரிக்காவின் களத்தடுப்பு ஜாம்பவானான ஜோண்டி ரூட்ஸை அண்மையில் இலங்கைக்கு அழைத்து களத்தடுப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டன. இலங்கை போன்ற ஒரு பலமான அணிக்கு ஏற்கனவே பயிற்சியாளர்கள் மூவர் இருக்கின்ற போதிலும் அவர்களின் பயிற்சி போதாது என்று குறுகிய காலத்துக்கு மேலதிக பயிற்றுவிப்பாளர் ஒருவர் தேவைப்படும் போது இந்திய அணி பயிற்றுவிப்பாளர் இல்லாமலே பங்களாதேஷிற்கு எதிரான தொடரில் பங்கேற்றது.

டங்கன் பிளட்சரின் பதவிக்காலம் முடிவடைந்து புதிய ஒரு பயிற்றுவிப்பாளர் இன்று வரையில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் இந்திய அணிக்கு கொடுக்கப்படவில்லை. வீரர்களே தமது பயிற்சிகளையும், தமது பலங்களையும், நுட்பங்களையும், எதிரணிகளின் பலவீனங்களையும் கவனத்தில் கொண்டு தொடரில் பங்கேற்றார்கள். இந்த நிலையில் பயிற்சியாளர் அற்ற ஓர் அணியின் தோல்விக்கு டோனி எந்த வகையில் பொறுப்பாக முடியும்?

டோனி தொடர்பான விமர்சனங்களையெல்லாம் பார்க்கின்ற பொழுது பழமொழியொன்று நினைவுக்கு வருகிறது. அதாவது "காய்கின்ற மரத்துக்குத்தான் கல்லெறி" விழும்.

## துளித்துளியாய் விளையாட்டு

* சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தரப்படுத்தல்களில் நீண்டகாலமாக கிட்டத்தட்ட சில வீரர்களே மாறிமாறி ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருந்த நிலையில் சகலதுறை வீரர்களுக்கான தரப்படுத்தல்களில் மத்தியூஸின் ஆதிக்கத்தை தகர்த்தெறிந்து முதலிடத்தைப் பிடித்து ஆச்சரியத்துக்கு உள்ளாக்கியுள்ளார் கிப் அல் ஹசன்.

* ரென்னிஸ் உலகமே ஆவலுடன் காத்திருக்கும் விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் நாளை ஆரம்பமாகிறது. கடந்த சில தொடர்களாக சொதப்பிவரும் நடால் இந்தத்தொடரிலாவது தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவாரா என்று ரசிகர்கள் எதிர்பார்த்துக் காத்துக்கிடக்கின்றனர்.

* சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவராக இருந்த பிளாட்டர் பதவி விலகியதைத் தொடர்ந்து தலைவர் பதவிக்கு போட்டியிடப் போவதாக மரடோனா தெரிவித்துள்ளார்.

* பங்களாதேஷ் அணிக்கு எதிரான தோல்விக்கும் டோனிக்கும் சம்பந்தமில்லையென்று டோனிக்கு ஆதரவு தெரிவித்துள்ளார் பாகிஸ்தானின் நட்சத்திர வீரர் அப்ரிடி.

* நோர்வே செஸ் தொடரில் கிண்ணம் வென்று அசத்தியுள்ளார் பல்கேரிய வீரர் வசெலின் டோபலோவ். இந்தியாவின் ஆனந்த் இரண்டாவது இடத்தைப் பெற்றார்.

* தென்னமெரிக்க காலிபந்துத் தொடரின் காலிறுதியாட்டம் ஒன்றில் கொலம்பியாவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது ஆர்ஜென்ரினா.

* இந்தியா – சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடரின் இந்திய அணி வீரர்கள் பற்றி நாளை அறிவிக்கப்படவுள்ளது.

* சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை துடுப்பாட்ட வீரர்களின் ஆதிக்கத்தைக் குறைக்கும் பொருட்டும் பந்துவீச்சாளர்களின் ஆதிக்கத்தை அதிகரிக்கும் பொருட்டும் விதிமுறைகளில் சில மாற்றங்களைச் செய்துள்ளது.



## களத்தடுப்பு விதிமுறைகளில் மீண்டும் மாற்றம்

பந்துவீச்சாளர்களுக்கு நன்மை ஏற்படுத்தக்கூடிய வகையிலும் களத்தடுப்பில் சில மாற்றங்களை கொண்டு வந்துள்ளது ஐ.சி.சி.

நடப்பு வருடத்தில் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடருடன் களத்தடுப்பில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டுவந்தது சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை. இந்த மாற்றங்கள் துடுப்பாட்ட வீரர்களின் ஆதிக்கத்தினை அதிகரிக்கும் விதமாகவும் பந்துவீச்சாளர்களின் ஆதிக்கத்தினை இல்லாமல் செய்யும் விதமாகவும் அமைந்திருந்தன. துடுப்பாட்ட வீரர்களின் ஆதிக்கத்தினை அதிகரித்துள்ள இந்த விதிமுறையை இல்லாமல் செய்ய வேண்டும். இதனால் சிறந்த பந்துவீச்சாளர்களும் பாதிக்கப்படுகிறார்கள் என்று சங்கா, டோனி, வில்லியர்ஸ் உட்ளிட்ட பல பிரபலங்கள் குரல்கொடுத்தனர். இவர்கள் அனைவரினதும் கருத்துக்களை ஆராய்ந்த ஐ.சி.சி., விதிமுறைகளில் மேலும் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

புதிய மாற்றங்கள் வருமாறு

15 – 40 வரையான பந்துப்பரிமாற்றங்கள் வரை பவர்பிளே கிடையாது.

41 – 50 பந்துப்பரிமாற்றங்கள் வரை 5 களத்தடுப்பாளர்களை உள் வட்டத்திற்கு வெளியே நிறுத்த முடியும்.

1 – 10 பந்துப்பரிமாற்றங்கள் வரை களத்தடுப்பாளர்களை மிக அருகில் நிறுத்துவது கட்டாயம் இல்லை.

இவற்றுடன் அனைத்துவகை முறையற்ற பந்துகளுக்கும் பிரீஹிட் கொடுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org